தஞ்சை சரஸ்வதி மஹால் வெளியீடு-132

கும்பகோணப் புராணம்

தஞ்சாவூர்

மகாராஜா சரபோஜியின் சரஸ்வதி மஹால்

நூல்நிலையம்

T.4001

கி. பி. 1971]

[விலை 8--50

தஞ்சை சரஸ்வதி மஹால் வெளியீடு-132

சொக்கப்பப் புலவர் இயற்றிய

கும்பகோணப் புராணம்

பதிப்பாசிரியர் :

வித்துவான் திரு. மு. சடகோபராமானுஜர் பிள்ளை,

(ஓய்வு பெற்ற தமிழாசிரியர், கரந்தைப் புலவர் கல்லூரி)

பள்ளியக்கிரகாரம்.

தஞ்சை சரஸ்வதி மஹால் நிர்வாகக் குழுவிற்காக

கௌரவக் காரியதரிசி

நீ. கந்தசாமிப் பிள்ளை அவர்களால்

வெளியிடப்பட்டது.

கி. பி. 1971]

விலை ரூ. 8-50

வெற்றிவேல் பிரஸ்,
தஞ்சாவூர்.

பொருளடக்கம்

	ஆங்கில முன்னுரை			I-IV
	பதிப்பாசிரியர் முகவுரை			I–VIII
	வரலாற்றுச் சுருக்கம்		....	1-31
	கும்பகோணப் புராணம்		....	1-260
1.	நைமிசாரணியச் சிறப்புரைத்த அத்தியாயம்			1-5
2.	திருக்கயிலாயச் சிறப்புரைத்த	,,	...	6-9
3.	கும்பகோணச் சிறப்புரைத்த	,,	....	10-24
4.	சிவபூசை யுபகரணங் கூறிய	,,	....	25-53
5.	சிவபுண்ணியம் உரைத்த	,,	....	54-56
6.	கிருதகம்பள விதி கூறிய	,,	....	57-65
7.	சீதகும்பமுந் திலபூசையு முரைத்த		....	66-71
8.	சிவதும மகிமை உரைத்த	,,	....	72-83
9.	வாணலிங்க மகிமை உரைத்த	,,	....	84-93
10.	வேடன் கதிபெற்ற	,,	....	94-109
11.	வாணலிங்க மகிமை கூறிய	,,	....	110-112
12.	பதி நிர்ணயங் கூறிய	,,	...	113-133
13.	வாணலிங்கத் தரிசனம் உரைத்த	,,	....	134-145
14.	சிவயோக விரதம் உரைத்த	,,	....	146-163
15.	சிவசரிதம் கூறிய	,,	....	164-166
16.	அபராதங் கூறிய	,,	...	167-173
17.	விபூதி மகிமை கூறிய	,,	....	174-190
18.	கலிவிடம்பன்	,,	....	191-208
19.	காசியின் சிறப்புரைத்த	,,	....	209-213
20.	கும்பகோணச் சிறப்புரைத்த	,,	....	214-225
21.	பிரமன் மாயனைக் கண்ட	,,	....	226-227
22.	மாயன் சிவபூசை மகிமை கூறிய	,,	—	228-232
23.	சிவபத்தர் மகிமை கூறிய	,,	....	233-237

24.	சிவயோகியைக் கண்ட ,,	....	238-243
25.	சிவபூசை விதி கூறிய அத்தியாயம்	...	244-245
26.	பிரதக்கண விதி கூறிய	...	246-249
27.	பூசைக் குபகரணங் கூறிய	....	250-254
28.	காப்புச் செய்யுள்களெனக் கருதத்தக்கவை		255-260
	அருஞ்சொற்பொருள்	....	261-284
	செய்யுள் முதற் குறிப்பகராதி	...	285-305
	பிழை திருத்தம்	....	306-307

PUBLISHER'S PREFACE

South India, far from the onslaught of frequent foreign invasions, has enjoyed a relatively calm and peaceful atmosphere, which has been congenial to the development and growth of art and culture. In this congenial atmosphere, Religion and Literature, Sculpture and Architecture, Music and Dance blossomed forth into a fullness of development which stands forth as a proud achievement of South India in general and Tamil Nadu in particular. Numerous temples with their lofty sky-scraping towers which are rare specimens of architectural beauty adorn Tamil Nadu and the religious festivals connected with these temples attract a large number of devotees every year, making Tamil Nadu a regular land of pilgrimage. These temples, on account of the mythological backgrounds of the deities enshrined therein, have developed, in course of time, traditions and legends peculiar to themselves. The more ancient the temple, the more hallowed are their legends. These local legends constitute a species of literature known as *Sthalapurana*. These puranas, cast in the metre and style of the great epics, expound the glory of the deity concerned, which is invariably the Supreme Being and of the feasts and fasts prescribed to win His or Her grace. They set forth also the holiness of the locality, which is usually presumed to guarantee salvation for the

inhabitants and the sanctity of tanks and the rivers there, a sacred bath in which ensures the washing away of all sins. Several episodes illustrating the miracles performed by the presiding God and Goddess of the temples for saving their devotees from distress and for showering properity on them find a place in these Sthalapuranas. Some of these are found in the standard Puranas and Itihasas, some are developed on the skeleton episodes present there and many more are assigned to such sources.

There is a fairly large volume of literature of Sthalapuranas in Tamil, most of them belonging to the post-medieval times. Though stray works on many holy places have been written by different poets in earlier centuries, it was Mahavidvan Minakshisundaram Pillai of Tiruchirapalli who enriched this variety of literature by composing a regular cycle of Sthalpuranas on almost every holy place in Tamil Land.

The present publication, Kumbakona Puranam or Kudanthai Thalapuranam, is a work of the poet Chokkappa Pulavar who appears to have been a protege of Maharaja Shahaji of the Tanjore Maratta Dynasty who ruled during the years. 1684 to 1714 AD. There are a large number of Saivite and Vaishnavite temples in Kumbakonam and in this work, the author expounds the glory and religious greatness of Kumbakonam from the Saivite point of view, focussing the narrative and thelogical centre round Lord Sri Kumbhesvara,

whose presiding presence accounts for the name of the place.

The publication is based on the palm-leaf manuscript No. D 489/ M 283, preserved in the Tamil Section of our Library. The manuscript proper ends with Verse 944 in page 225 of this edition. The transcribed copy (Vol. No. 126) in our library, however, contains a few more chapters beyond this, presumably copied from another manuscript whose identity is now untraceable. With a view to preserve this supplementary portion and also to give the readers the benefit of studying it, we have included it in our publication. The last few stray stanzas (*1060—1075*) belonging to this part appear, from their subject matter, to have been intended by the author to be prefixed to this work as benedictory (*Kappu*) stanzas. Besides this, there is another version of Kumbakona Thalapuranam in Tamil by Aghora Madhavar preserved in this Library.

As the publication is the result of the generous interest taken by the Commissioner of H.R. & C.E. Board of the Government of Tamil Nadu and by the Deputy Commissioner of H.R. & C.E. Board, for Thanjavur in the printing and publication of the unpublished Sthalapuranas in Tamil, it is our pleasant duty to record here our gratitude to him. At the direction of the Commissioner, Sri Manthrapurisvarar Devasthanam, Kovilur, P. O. Muthupettai, Sri Swaminathaswami Devasthanam, Swamimalai, Sri Hirudayakamalanathaswami

Devasthanam, Valivalam, P. O. Nagapattinam, Sri Soundareswaraswami Devasthanam, Pettai P. O., Muthuppettai have donated RS. 500/- each and Sri Navanitheswaraswamy Temple, Sikkal has donated RS. 400/- towards the cost of the publication of this book. We record here the profound gratitude of the Library to the H. R. & C. E. Board and to the donating Devasthanams for their generous help. We earnestly hope that these Devasthanams will serve as a source of emulation to other similar institutions to come forward to help the Library financially to bring out in print the other manuscripts in this library containing Sthalapuranams of their respective places.

Our thanks are due to Thiru M. Satakopa Ramanujam Pillai, Retired Professor of Tamil, Pulavar Kalloori, Karanthai for having taken the pains to edit this work for this Library and also to our Librarian, Prof. V. Gopala Iyengar, M. A, for his general supervision of our publication work. The proprietor of Messrs. Vetrivel Press, Thanjavur, deserves our thanks for the neat and quick execution of this Work.

Thanjavur,
28—1—71

N. KANDASWAMY,
Honorary Secretary
T. M. S. S. M. Library.

உ

கணபதி துணை

முகவுரை.

தன்றே ஞான்கி றென்று கைம்மிகூஉம்
களிறு வளர்பெருங் காடாயினும்
ஒளி பெரிது சிறந்தன் றளியவென் னெஞ்சே.

'புராணம்' என்றால் பழங்கதை யென்பது பொதுவான ஒரு கருத்து. வடமொழி இலக்கண வாயிலாக நோக்கும் பொழுது வேறு பொருள்படும். புராணம்: புராதனஞ்ச—தத்—நவஞ்ச—புராதனநவம் என்பது மருவி புராண மென்றாயது. பழமைக்குப் பழமையாகவும், புதுமைக்குப் புதுமையாகவும் உள்ளது புராணம். இது அதன் உறுப்புப் பொருள். பழமையாகவுள்ளவற்றைப் புதுக் கருத்துக்களோடு சேர்த்துச் சொல்வ தென்பது இதன் கருத்து. "முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம்பொருளே பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே" என மணிவாசகர் மலர்ந்த திருவாசகத் தேன்துளியோடு ஒருபுடை யொப்புமையுடையது.

வடமொழியில் நூல்களை மூன்று வகையாகப் பிரித்துள்ளனர். அவை: தலைவன் ஆணையிடுவது போல வேதங்களையும், நண்பன் அறிவுரை கூறுவதுபோல புராண இதிகாசங்களையும், மனைவி, கணவன் அருகிருந்து அவன் உவப்புறுமாறு இதமாக நல்லுரைகளை வழங்கி நல்வழிப்படுத்துமாறு போலக் காவியங்களையும் வகுத்துள்ளனர். புராணங்கள் இவ்வாறமைந்ததால் ஊர்தோறும் ஒவ்வொரு புராணங்கள் ஏற்பட்டன.

இந்நூல், கும்பகோணச் சிறப்பையெடுத்து விரிவாகக் கூறுவது. சிறப்பியல்பாகவமைந்தவை, கும்பேசர்கோயில், நாகேசர்கோயில், மகாமகக்குளம்-என்ற மூன்றுமேயாம். குடமூக்கென்பது திரிந்து கும்பகோணமாயிற்றென்கின்றனர் யாகம் செய்தபோது, யாகத்தில் வைத்திருந்த கும்பம் சாய்ந்ததால் 'கும்பகோணம்' என்றபெயர் வந்ததென்பதனை இந்நூலாலறியலாம். இவ்வாறே ஒவ்வொரு பொருளுக்கு முள்ள பெயர்க்காரணத்தை இதனுள் காணலாம். சங்ரன் என்ற சொல் மங்களத்தைச் செய்பவன்-என்ற பொருளில் வழங்குகிறது.

இந் நூலாசிரியர், சின காஞ்சி சென்று கிருத கம்பளப் பூசை செய்தால் பயனுண்டென்று கூறுவதாலும், தொண்டைநாட்டு அரசூர் சொக்கன் என்று தன்னைக் கூறிக் கொள்வதாலும், இவர் தன்னுட்டுப்பற்று மிக்கவர் என்பது தெரிகின்றது. இப்படி இரண்டொரு குறிப்புகள் கிடைக்கின்றனவே யன்றி, இவர் வரலாறு முழுவதும் தெரிந்து கொள்ள இயலவில்லை. இக்குறை ஏறக்குறைய நம் நாட்டுப் புலவர்கள் எல்லாரைப் பற்றியுமே அமைந்தது. மேனுட்டவர் அனைவரும், தங்கள் நாட்டுக் கண்மணி போன்ற புலவர்களது நூல்களைப் படித்து மகிழ்வதோடல் லாமல், அவர்களது வரலாறுகளைப் பல வகையில் ஆய்ந்து, நூல்கள் வாயிலாக வெளியிட்டுப் போற்றுவதனை நாம் கண்கூடாக் காண்கிறோமன்றோ? நல்ல புலவர்களைப் பல வகையில் ஆய்ந்து வெளியிடுவதால், அவர்கள் பால் நமக்குள்ள மதிப்பு வெளியாவதோடு, அவ்வரலாறு, பின்னுள்ளார்கட்கு எவ்வளவு உதவியாக இருக்கு மென்பதனை நாமுணர வேண்டும்; ஆனால் பழைய ஆசிரியர் கள் வரலாறுகளைத் தெரிந்து கொள்வதில் முற்றுங் கவலை கொள்ளாதிருந்தார்கள் என்று சொல்லுவதற்கில்லை. ஆக்கியோன் பெயர் முதலிய பதினொன்றையும் வகுத்துக் காட்டுகின்ற பாயிரம் ஒவ்வொரு நூன் முகத்தும் வேண்டு மென்று கூறியிராரன்றோ? அவ்வளவு தானா! நூல் கேட்கப்

புகுவோன், அந் நூல் கேட்கப் புகுவதற்கு முன், பாயிரங் கேட்டல் இன்றியமையாத தென்றும், அது கேளாக்கால் நூல் கேட்டற்கண் மனவூக்கம் செல்லாதெனவும், "ஆயிர முகத்தா னகன்றதாயினும், பாயிர மில்லது பனுவலன்றே" என்றும், அவர்கள் கூறியிருப்பதனைக் கொண்டு நாமறியலா மன்றோ? 'திருவாய் மொழி' யென்றவொரு பெரு நூலையே பாயிரமாகக் கொண்டு படிக்க வேண்டுமென்ற கருத்தினைக் கம்பர் பெருமான், "அருந் தமிழ்க்குப் பாயிரம்" எனக் கூறிப் போந்தார்.

இந் நூலாசிரியர் சைவ சித்தாந்தத்தில் உறுதி வாய்ந் தவர். இவர் பாடியது தல புராணமாக விருந்தாலும் அதன் வாயிலாகச் சித்தாந்தக் கருத்துக்கள் பலவற்றை விரிவாக கூறியிருக்கிறார்; ஒவ்வோரிடத்தில், நிர்க்குணப் பிரமத்தைப் பற்றியும் பேசியிருக்கின்றார்.

இந்நூலுள், இவரால் வற்புறுத்திப் பேசப்படுவன : திருநீறு, உருத்திராக்கம், வில்வம், இலிங்க வழிபாடு ஆகிய வையேயாம். கும்பகோணச் சிறப்புரைத்த வத்தியாயம், வாணலிங்கமகிமை கூறியவத்தியாயம், என்னும் இருவத்தி யாயங்களின் தலைப்புக்கள் இரட்டித்துக் கூறப்பட்டுள்ளன. ஆனால் அவற்றுள் சொல்லப்பட்ட செய்திகள் வெவ்வேறாக வுள்ளன.

இவரது செய்யுள் நடை, மேலும் படிக்கவேண்டுமென்ற அவாவைத் தூண்டுவதாகச் சரளமாகவமைந்துளது. இதனை, நைடத நடையோடு ஒப்பிடலாம். இவர்க்கு 'வடமொழிப் பயிற்சி மிகவும் உண்டு' என்பதனை, இவர் கையாளும் சொற் களிலிருந்தும், தொடர்களிலிருந்தும் நாமறியலாம்.

இப்புலவர் பெருமானுக்கு, ஆசிரியர், "குட்டித் தொல் காப்பியர்" என்று பேசப்பட்டு வருகிற "இலக்கண விளக்க" நூலாசிரியராகிய, 'திருவாரூர் வைத்தியநாத தேசிக ரென்

பாராவார். அவரை இந்நூலாசிரியர் தாம் செய்த நூலுள் சிறப்பித்து,

" அவமொழித் தென்னுள்ளத் தமுத மூறுதீஞ்
சுவையெனத் தமிழ்வளஞ் சுரந்து நல்குமே
தவமெனக் கமலையி லிருந்த தேசிகன்
தவவணை வயித்திய நாதன் றுள்களே "

எனக் கூறுகின்றார். மேலும், சொக்கநாதப் புலவர் இயற்றியதாக "அம்பலவா பின்னொருகால் ஆடினல் தாழ்வாமோ" என்ற செய்யுள் ஒன்று, மகாமகோபாத்தியாயர் டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் அவர்கள் எழுதியுள்ள " நல்லுரைக் கோவை"யுள் காணப்படுகின்றது. இந்த சொக்கப்பப் புலவரும், இச்செய்யுள்செய்த சொக்கநாதப் புலவரும் ஒருவரோ? வேறோ? அறியக் கூடவில்லை.

சில கருத்துக்களை விளக்குதற்குச் சில கதைகளை கையாளுகின்ற முறை நன்ருகவுள்ளது. இலிங்கம், நாவற்பழம் போன்றிருக்க வேண்டும். அது 'நருமதை ஆற்றில்தான் கிடைக்கும் என்கிறார். "பன்னகேசர் கதிர்களைத் தீண்டு நாளும்" என்றும், இன்னும் பலவிடங்கள் சோதிட சம்பந்தமாகக் கூறுவதால் வான நூலில் வல்லவரென்று தெரிகின்றது. பொதுவாக மக்கள் கோயிலுக்குச் சென்று வழிபாடு செய்யும் முறை ஒன்று. இவர் சோமசூத்திர வழிபாட்டு முறையென்ற ஒன்றையும் கூறுகிறார். அது மிகவும் கடுமையான வழிபாடாகத் தெரிகின்றது. அந்தமுறை புதியதன்று; பழமையானதுதான். இச்சோமசூத்திர முறையை பிரதக்கண விதி கூறிய அத்தியாயத்தில் கூறுகின்றார். அது கடுமையானதாக இருப்பினும் பின்பற்றவேண்டியதவசியம். ஏனெனில் அதன் பயன் நமக்கு நல்லதாக முடிகின்றது.

மேலும், இவர் புதிய முறையொன்றைக் கையாண்டுள்ளார். அது, எல்லா நூலாசிரியரும் விநயக வணக்கம், நால்வர் துதி முதலியன நூன்முகத்துரைத்துப் போயினர்;

இவர், நூலின் இறுதியிற் கூறுகின்றார். அங்ஙனம் அமைத்தது யாது காரணத்தாலோ தெரியவில்லை. அவ்வணக்கத்துள் சுந்தரமூர்த்தி சுவாமிகளை "செந்தமிழ்ப் பெருமை காட்டும் செல்வனைச் சிந்தை செய்வாம்" எனச் சிறப்பாகக் கூறுவது போற்றத்தக்கது. இவர் தமிழ்மீது ஆராக் காதலுடையார் என்பது நன்கு புலனாகிறது. ஓர் எடுத்துக்காட்டு "அகத்தியன் பயந்த செஞ்சொல்", "தழற்புரை நிறக்கடவுள் தந்த தமிழ் தந்தான்" என்று முன்னோர்கள் கூறியாங்கு "உலவா, வைப்பெனப் பொதியத்தினித்த முத்தமிழை மன்பதைக் கமிழ்தென வளித்தான்" (பாட்டு 1021) எனக் கூறுவதா லறியலாம். ஆக இவர் சிவபெருமான் போல, தமிழ், வடமொழி, சமயம் இவற்றை மூன்று கண்களாகக் கொண்டார்.

இவர், இந்நூலை, இருபத்தேழத்தியாயங்களாகப் பகுத்துள்ளார். தொல்காப்பியர், தாம் செய்த நூலை அதிகாரத்துக் கொன்பதாகப் பகுத்து இருபத்தேழு இயலாக்கினார். நட்சத்திரங்களை இருபத்தேழாகக் கொண்டனர். ஆகத் தமிழ் மக்கள், ஏழு ஒன்பது இருபத்தேழு என்ற எண்களில் பெருமதிப்புள்ளவர்கள் என்பது தெரியவருகிறது.

இவர் கையாளும் உவமைகள் மிகப் பொருத்தமானவை என்பதனுக் கிரண்டொரு மேற்கோள்கள்: "ஒப்பாரும் மிக்காருமில்லாத மாமாய." என்பது போல, இறைவனுக்கு ஒப்பாக எதனையுங் கூற இயலாது என்பதற்கு இவர் கையாண்ட உவமை, "ஆகாயத்துக் கொப்புண்டாகிலன்றே இறைவனுக்கு ஒப்பாகக் கூற வேறு பொருளிருக்கும்" என்ற இவர் வாதம் மிகவும் போற்றத்தக்கது. இறைவனை உருவத்தில் வைத்துத்தான் வழிபாடு செய்ய வேண்டும். இறைவன் அவ்வுருவத்தில்தான் இருக்கிறான் என்பது நமது சித்தாந்தம். இராம கிருட்டிணாதி அவதாரங்களெல்லாம் ஆற்றுவெள்ளம் போன்றன, அர்ச்சாவதாரம், ஆற்றில் தேங்கிய மடுக்கள் போன்றது - என்றுங் கூறுவர்

வைணவர். அதுபோல இவர், உருவத்தில்தான் இருக்கின்றுன் இறைவன் என்பதற்கு, "இந்தனமின்றித் தோன்ருவெரியது போல" என்றும். "காட்டத்தையின்றித் தோன்ருக்கனலென, இலிங்கமாதி திருவுருவன்றித் தோன்ருன் இறைவன்" என்கிருர். இவ்வுவமை, "விறகிற்றீயினன்" என்ற தேவாரத்துக்கு விளக்கவுரை போல விளங்குகின்றது. வேதம் பொதுவாகச் சொல்லிக்கொண்டு போகிறதேயொழிய இவன்தான் இறைவன் என்று இறை நிலேயைச் சுட்டிக் காட்டவில்லேயே என்பார்கள். அதற்கு இவர் கூறுவன: ஒரு பேரவையில் இருக்கும் அரசனே ஒருவன், இவன்தான் அரசன் எனச் சுட்டிக் காட்ட எங்ஙனம் இயலாதோ, அங்ஙனமே இறைவனேச் சுட்டிக்காட்ட இயலாதென்று கூறுகின்றது வேதம் என்கின்ருர். "அவையிலரசன் தன்னேக், கதுமெனவொருவன் சுட்டிக்காட்டொணுதது கடுப்ப, விதுவனிவானேச் சுட்டியிவனெனக் காட்டா வேதம்" என உவமை முகத்தான் விளக்கிப் போந்தார். இவர் திறம் விரிப்பிற் பெருகும்.

தென்னக மராத்திய மன்னர்கட்குத் தஞ்சைதான் தலே நகரம் என்ருலும் இவர்கட்குத் திருவிடைமருதூர், திருவாரூர், கும்பகோணம் முதலிய ஊர்களிலும் அரண்மனேகள் இருந்தன. 'சகசி' என்ற அரசர் கும்பகோணத்திலேயே தன் வாழ்நாளில் பெரும்பகுதியைக் கழித்திருக்கின்ருரென்று தெரிகின்றது. இவர் கும்பேசனிடத்தும், நாகேசனிடத்தும் பேரன்பு பூண்டொழுகி வந்திருக்கின்ருர். சகசி மன்னர் தமிழ் தெலுங்கு மராத்தி மொழிகளில் நூல்கள் இயற்றியுள்ளார் என்று தெரிகின்றது.

இவர் கும்பகோணத்தில் பற்றுடையவரா யிருந்ததால் கும்பகோணப் புராணம் என்ற நூலே ஆக்குவித்திருக்கலாம் என்று எண்ண இடமிருக்கிறது. இன்னும் இவ்வூருக்கு வேறு புராணங்களுமுண்டு. இவர் தஞ்சை மராத்திய மன்னர் பரம்பரையில் இரண்டாவதாவார். இவரது காலம் கி. பி. 1684 முதல் 1714 வரை ஆகும். ஆக அரசர் காலம் தெற்றென

விளங்கவே, இந்நூலியற்றிய புலவர் காலமும் நன்கு விளங்குகிறது. இந்நூலின் இறுதியில்,

" கொண்டல் கண்துயிலுஞ் சோலைக் குடந்தையிற் பலருமேவத்
தண்டமிழ்ப் புலவன்வெற்றித் தாரைவேற் றுணைமன்னன்
மண்டலம் புரக்குஞ் செங்கோன் மனுநிகர் சகசிவாழ்நாள்
தொண்டை நாட்டரைசு சொக்கன் னரசவை சொற்றதன்றே "

என்ற பாடல் காணப்படுகின்றது. இதனால் நாமறிவன: அரசன் மிகுந்த நீதிமான் என்பதும், புலவர்களிடத்து மிக்க பற்றுள்ளவன் என்பதும், இப்புலவரது நாடு தொண்டைநாடு என்பதும், புலவர்க்குத் தலைமையானவர் என்பதும், சகசி அவைக்களத் தரங்கேற்றிய திந்தப்புராணம் என்பதும், இந்நூலுக்கு இவர் வைத்த பெயர் 'குடந்தைப் புராணம்' என்பதும் விளங்குகின்றன. கம்ப இராமாயணத்துக்குக் கம்பர் வைத்த பெயர் " இராமாவதாரம் " என்பதாகும். அப்பெயர் வழங்காமல் 'கம்பராமாயணம்' என்ற பெயர் வழங்குவது போல.

இக்கும்பகோணப் புராணம் எழுதிய சுவடி பழமையானது பூச்சிகள் அரித்துச் சிதைந்துள்ளது. ஒப்புநோக்கற்குச் சுவடி வேறு இல்லாததால் இதன் காப்பீடு நூலை வைத்துக்கொண்டு சரிசெய்யப் பெற்றது. இந்நூலிலுள்ள பாடங்கள், எழுத்துப் பிழையாக விருக்குமென்று கருதியவற்றைத் திருத்தப் பாடமாக வமைத்தும், பிழையான பாடங்களை அடிக்குறிப்பிற் கொடுத்தும், கூடியவரையில் சிதைந்த பகுதிகளை இருநகக்குறிக்குள் அமைத்தும், படிப்பவர்கள் செய்திகளைத் தொரிந்துகொள்ளுவதற் கேற்றவகையில் வரலாற்றுச் சுருக்கம் கொடுத்தும் பதிப்பிக்கப்பட்டுள்ளது,

இந்நூலை அச்சிடுமாறு பணித்தவர்கள், நூல் நிலையக் கௌரவக் காரியதரிசியும், முதுபெரும் புலவரும், நுண்மாண் நுழைபுலம் மிக்க பேராறிஞருமான திருவாளர் நீ. கந்தசாமிப் பிள்ளை அவர்கள் ஆவார்கள். அவர்கட்கும், நூல் நிலையக் காப்பாளரும், வடமொழி வல்லுநருமான திரு வே. கோபாலையங்கார் அவர்கட்கும், இந்நூலை ஒப்புநோக்குதல் முதலியவற்றிற்கு உதவிய புலவர் திரு வீ. சொக்கலிங்கம் அவர்கட்கும் நன்றி செலுத்துங் கடப்பாடுடையேன்.

எனக்குள்ள குறைகள் பலவற்றால் இப்பதிப்பில் பிழைகள் நேர்ந்திருத்தல் கூடும். அன்பர்கள் அவற்றைப் பொறுத்துக்கொண்டு, அல்லன களைந்து நல்லன கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறேன். தோன்றாத் துணையாக நின்று இதனை நிறைவேற்றி வைத்த திருமகள்கேள்வன் திருவடிகளை வழுத்தி வாழ்த்துகின்றேன்.

ஆழ்வாரில்லம்,
பள்ளியக்கிரகாரம்,
15—11—70.

மு. சடகோபராமாநுஜம் பிள்ளை.

கும்பகோணப் புராணம்

வறலாற்றுச் சுருக்கம்

1. நைமிசாரணிய வத்தியாயம்

நைமிசாரணியச் சிறப்பு

நைமிச வனம், சிவபெருமான் தன் அருளாய பெட்டகத்தைத் திறந்தாற் போன்றது; அருந்தவ முனிவர்கட்கு உறைவிடமாயது; தவ சிரேட்டர்கள் வசிப்பதால் அது ஞான பூமியாக விளங்குவது ; முப்பொருளை யாய்ந்தவர்கள் உறைவதுமாய சிறப்புடையது.

அவ்வனம், மறையை ஆய்ந்து பொருள் கூறுபவர், சிவ இரகசியத்தின் சிறப்பியல்புகளை ஆய்பவர், சிவ வழிபாடு செய்பவர்கள் முதலாய பெரியோர்களை யுடையது. முனிச் சிறுர்கள் செய்கின்ற வேள்விக்குக் காட்டுள்ள நதிகள், தருப்பை முதலிய வுபகரணப் பொருள்களைக் கொண்டு கொடுக்கின்றன. அவ்வனம், இரவில் பாம்புகள் கக்கிய மணிகளால் ஒளிவிட்டு விளங்குகின்றது.

முனிவர் வருகை

அவ்வனத்துக்குச் சூதமா முனிவர் வந்தார். அவர் வருகையைக் கண்ட நைமிச வாசிகள் எழுந்து பணிந்து உபசாரம் செய்து வரவேற்றனர். வரவேற்கப்பட்ட முனிவர் பெருமான் சில சொல்லத் தொடங்கினுர்.

உபதேச மொழிகள்

உலக மக்கள் இம்மையில் செல்வ முதலிய அடையவும், மறுமையில் வீடு பேறடையவும் வழிகாட்டியாகவுள்ள நூல்கள் பல. அவற்றுள் சிவ இரகசியம் என்ற நூல் சிறந்தது. அந்நூல் முதலில் சிவபெருமான் உமையம்மைகுச் சொன்னார்; அவள் சனற் குமாரற்குச் சொன்னாள்; அவர் வியாசருக்குச் சொன்னார். அவர் எனக்குச் சொன்னார் என்று கூறி மேல சில சொல்லத் தொடங்கினார்.

2. திருக் கயிலாயச் சிறப்புரைத் தவத்தியாயம்.

கயிலை, முனிவருள்ளம் எவ்வளவு தூய்மை யுடையதோ அவ்வளவு தூய்மை யுடையது. நிலா, இதுகாறும் இறைவன் முடிமீது இருந்தோம், இனி யவன் இருக்கும் மலையைத் தாங்கு தலே தகுதி யென வுன்னித் தாங்குவது போன்றது. அம் மலையிலுள்ள நாகணப் புள் ஆகமத்துக்குப் பொருள் கூறுவன ஒருபால்; அதனைக் கேட்டுக் காகங்கள் உவப்பன ஒருபால்; வேங்கை, சிங்கம் முதலிய கொடிய விலங்குகள் தம் கொலைத் தொழிலை விட்டுத் தவம் இயற்றுகின்றன. அம் மலையின் ஒளியால் சூரிய ஒளி மின் மினியின் ஒளி போன்றிருக்கின்றது. அந்தணர் மறை யொலி, அகந்தை தீர்ந்தவர்கள் ஆரவாரம் ஆயவை காதுகளைச் செவிடு படுத்துகின்றன. இத்தகைய சிறப்பு வாய்ந்த கயிலையில் நந்தியம் பெருமான் கையில் பிரம்பு கொண்டு சூழ்வர, அரியணை மீது உமையோடு வந்த தமர்ந்தான் அந்தி வண்ணன்.

3. கும்பகோணச் சிறப்புரைத்த வத்தியாயம்

உமையம்மை வினுதல்

ஓலக்கத்தில் இறைவனோடமர்ந்த உமை, அந்திவண்ண னடி வணங்கி, "உலக உயிர்கள் வினையினின்றும் நீங்கிப் பேரின்ப வீடடைவதற்குரிய தல மெது?" என்றாள். அவ் வினாவிற்கு இறைவன் விடை கூறுகின்றான் :-

தலத்தின் சிறப்பு.

ஒப்பதும் மிக்கது மில்லாத தலம் குடந்தை. காவிரியும் அரிசிலும் அந்நகரைச் சூழ்ந்து வருவன, அ ந் ந க ர மாய மங்கைக்கு மாலையணிந்தது போன்றுள்ளன. அந்நகரின் நடுவில் கொடிகள் கட்டியிருப்பன, அத்தலத்துக்கு வருகிற வர்கட்கு முத்தி கொடுப்பதற்காக எடுத்த கொடிகளை யொத் திருந்தன. அத்தலத்துக் கோபுரங்கள் முத்திவீ ட் டு க் கு வைத்த ஏணியை யொத்திருந்தன. மேலும் கோபுரங்கள், கயிலை மலையிலுள்ள ஆகாய கங்கையைப் பார்ப்பதற்குக் கூட்டமாக வந்திருந்ததனை ஒத்திருந்தன. அந்தணர்கள் தேவரை யொத்திருந்தனர்; ஆதலால் தேவரையு மறைய யவரையும் வேறு பிரிக்க இயலாதிருந்தது. வே ள் வி யி ல் எழும்புகை, பெண்கள் தங்கள கூந்தலுக்கு ஊட்டும் புகை இரண்டும் சேர்ந்து வானில் முகிற் கூட்டத்தொடு கலந்த தனுல், புகை எது ? முகிற் கூட்டம் எவை ? என்று வேறறிய லாகாதனவாயின. வேதஒலி, இசையொலி இவைகள் கட லொலியை விஞ்சின ; ஆதலால் இத்தலத்தின் பெருமை எவ ராலும் இயம்ப இயலாது. உமையே ! நின் மனத்துள்ளும் அடியவர் உள்ளத்துள்ளும், வேத இசையினும் நாம் விளங்கு வது போன்று குடந்தையம் பதியில் விளங்குவோம்.

இத்தலத்து மாந்தாதா, கும்பலிக்கப் பூசை புரிந்ததன் பயனுகை, உலகை யொரு குடைக் கீழாண்டான் ; அவனுட்சி யில் புலியும் பசுவும் ஒரு துறையில் நீரருந்தின. மாளவ நாட்டு மன்னன் சத்திய கீர்த்தி, பார்ப்பனனைக் கொன்ற பாவத்தை, இந் நகரத்துக் காசிப தீர்த்தத்தில் மூழ்கித் தீர்த் துக்கொண்டான். சந்திரன், சோமலிமங்கார்ச்சனையால், தன் உடல் நோய் நீங்கி வளம் பெற்றுன் ; குபேரன் அவ்வர்ச்சனை யால் என(சிவனு)க்குத் தோழனுன் ; அளகைக்குத் தலைவனு மானுன்.

மேலும் பொன்னன், அவ்வர்ச்சனையால் இந்திர பதவி யடைந்தான். திருமாலும் அதனுல் வைகுந்தத்திருந்தான்.

அந்தணன் ஒருவன் தன் தாய் என்பைக் கொண்டு சென்று கங்கையில் விட அவிழ்த்தான். அது என்பாகவே இருந்தது; அதனைக் கொணர்ந்து காவிரியில் அவிழ்த்தான், அது தாமரைப் பூவாக விருந்தது; அதனையவ்வாற்றில் விட்டான் அதன் பயனாக அவன் தாயும் உயர் கதியடைந்தாள். ஆதி சேடன், தன் உடல்வலியற்றுப்போகச் சோமலிங்கார்ச்சனை யால், வலியும் ஒளியும் பெற்றான். தக்கன் யாகத்துக்குச் சென்ற தேவர்கள். அவன் படுத்திய பாட்டால் துன்புற்றுக் குடந்தைமேவி அர்ச்சனையாலும் நமது ஆடல் கண்டும் தங்கள் துன்பந் தீர்த்தார்.

மனைவி சொல் கேட்டு மயன், சூரியன் ஒளியைக் கெடுத் தான்; கெட்ட ஒளியை மீட்க இத்தலத்து அர்ச்சனையால் ஒளி பெற்றான் சூரியன். ஆழிவேண்டித் திருமால், மலராயிரத் தால் வழுபட அவற்றுள் ஒன்று குறையத் தன் கண்ணைப் பறித்து வழிபாடு செய்ததன் பயனால் ஆழிபெற்றான், கும்பம் சாய, சாய்ந்த கும்பத்தடியினின்றும் அமுதம் பொங்கி எழுந் தது. அந்தவிடமே பொற்றாமரைக் குளம். தேவர்கட்குச் செய்யும் சோமயாகப் பயனாக மகா மகக்குளம் ஒன்றுண்டா யிற்று. அக்குளத்துள் அச்சுவ தீர்த்தம், அழல் தீர்த்தம் முதலான பல தீர்த்தங்களுண்டு. கங்கை முதலான தீர்த்தங்கள் ஒன்று சேந்தது போன்ற அதனுள் ஒருமுறை முழுகினால் பாவம் போம். பன்னிரெண்டாண்டுக் கொரு முறை அக்குளத்துள் பெருஞ் சிறப்பு நடக்கும். அது மகா மகம் எனப்படும். ஆதிரை கூடிய சதுர்த்தசி விதிபாதத்துள் அர்ச்சனை செய்தால் முத்தி பெறுவார்.

4 சிவ பூசைக்குரிய உபகரணங் கூறிய வத்தியாயம்

இறை வழிபாட்டின் பொது நன்மைகள்

வில்வ இலை, அதன் பொடி இவற்றை அவன் திருவடியில் சேர்த்தல் நன்று. ஆடை, பூணூல் முதலிய கொண்டு வழி

பாடியற்றினல் இறைவனுக்கு உவப்பு. ஆதிரையோடு கூடிய விதிபாதத்தன்று நடு நிசியில் இறைவழிபாடியற்றினல் பார்ப்பனனைக் கொன்ற பாவம் போம். திருமால் வழிபட்டால் வருகிற நன்மையை விடப் பல மடங்கு தீமையுண்டாம். வில்வம் முதலாய கொண்டு வழிபடல் நன்று ; பல பாவங்கள் போம்.

காலை வழிபாடு

இறைவனுக்குத் திருமஞ்சன மாட்டி, வெண்ணீறு சந்தனம் முதலியவற்றைப் பூசி, தூய ஆடை அணிவித்து எருக்கு மலர் முதலிய மலர் கொண்டு வழிபட வேண்டுமென்று சாபால வுபரிடதங் கூறுகிறது. வழிபாடியற்றிய பின்னர் பண்ணிகாரம் முதலிய கொண்டு நிவேதிக்க வேண்டும் ; நிவேதித்த பின்னர் தீபம் அருக்கியம் கொடுத்து ஐந்தெழுத்தை நூற்றெட்டு முறை உருப் போடவேண்டும். இடக்காலைத் தரையில் மடித்துச் சதாசிவத்தை அபிமுகமாக நோக்கி அவன் திருப் பெயர்களைச் சொல்லி, "ஏழையேன் செய்த பிழை பொறுத்தருள வேண்டு" மென்று தண்புனலை பூவொடு விட்டு வில்வத்தால் மூன்று முறை தொட்டுச் சத்தியோசாதம் முதலிய முகங்களைச் சொல்லி செபித்து மும்முறை வலம் வந்து, ஐந்தெழுத்தைப் பலமுறை எண்ணி முடிக்க வேண்டும். "நோய் முதலிய தொடாதிருக்க வேண்டு" மென்று சொல்லி இனிய நீர் பருகவேண்டும்.

மாலை வழிபாடு

மாலையில் தீர்த்தக் கரையில் மூத்த பிள்ளையாரைத் தொழுது "சம்பு கேசாய நம:" "சிவாய நம:" என்று மும்முறை சொல்லி ஆசமனம் செய்யவேண்டும். பின் பிராணயாமம் செய்து நீறணிந்து அக்கமணி புனைந்து அந்தி தொழ வேண்டும்.

மாதவழிபாடும் மற்றும் பலவும்

சித்திரை முதல் பங்குனியீருகவுள்ள மாதங்களில், இறைவன் பெயர்களில் ஒவ்வொன்றைச் சொல்லி நீடினல் ஒவ்ரா

வொன்றுக்கும் ஒவ்வொரு பயனுண்டு. புரோச மலர் முப்ப தாயிரம் இறைவன் அடியிலிட்டால் இந்திர போகமுண்டாம். தருப்பைப்புல், மலர்கள் இவற்ருல் வழிபட்டால் முருகன் போல விளங்குவான். ஐப்பசி கார்த்திகையில் தாமரை மல ரால் வழிபாடு செய்தால் வீடுபேறடைவான். மார்கழியில் வெள்ளெருக்கு மலரால் வழிபாடு செய்தால் பொன்விமான மீது வானில் பொலிவான். பெரும் பொழுது ஆறினும் முப்ப தாயிரம் முறை மலரால் வழிபாடு செய்பவன் தான் விரும்பும் பதங்கள் பெறுவான்.

இறை நிலை

இறைவன் எங்கும் நிறைந்த வடிவாய் தன்னிச்சையில் விளங்குவான். சிந்தைக்கும் மொழிக்கு மெட்டாதவன். ஒளி வடிவானவன். அறப் பெரியவன் அறத்தாழ்ந்து அடிய வரிடும் பச்சிலேயை ஏற்றுக்கொள்வான். வித்தக வடிவாக வுள்ள மெய்ப்பொருள், அரு உரு அருவுருவமாக விளங்கு வான். இத்தகைய நிலையிலுள்ள இறைவன் நாதவடிவாய் ஆடியிற் ருேன்றும் நிழல்போல விளங்குவான்.

இறைவனை வழிபடுவோர் பெறும் பயன்

செய்கின்ற அறமெல்லாம் இறைவனைக் குறித்துச்செய்க; செய்யின் காற்ருடிபோல் சுழல்கின்ற பிறவி வேரறுத்து நற் பயனும் வீடும் பெறுவான். "உமையம்மையோடு கூடியிருப் பவனே ! சம்புவே ! சங்கர" ! என்று மந்திரத்தால் துதித்துத் தண்புனலாட வேண்டும். பூரணையோடு கூடிய திருவாதிரை வருகிற மாதத்தில் வெள்ளெருக்க மலரால் வழிபாடு செய்ப வன், இம்மையில் நற்பயனும், மறுமையில் வீடுபேற்றையும் பெறுவான். ஒவ்வொரு மாதமும், அவ்வம் மாதத்திற்குரிய நட்சத்திரத்தன்று விதிபாதத்தில் வழிபாடு செய்பவன் நற் பேறு பெறுவான்.

5 சிவபுண்ணியம் உரைத்த வத்தியாயம்

இறை வழிபாட்டின் பயன்

சிவனூர்தம் ஆலயத்து நெய் விளக்கேற்றல், அடியாரிடத்து அன்பாயிருத்தல் ஆயவற்றைத் தவறாது செய்பவன் சிவலோகஞ் சேர்வான். அகிற்புகை, குங்கிலியப்புகை முதலிய புகைகொண்டு வழிபாடு செய்பவன் பிறவான். ஆலயத்தில் வண்ணம் தீட்டுதல், சுதையால் துலங்கவைத்தல், யாழ் குழல் முதலிய கொண்டு இறைவனை மகிழவைத்தல் செய்கிறவர்கள் கருவிடை எய்தார். ஆலயத்தில் அலகிட்டு மெழுகிட்டு உழவாரத் தொண்டு முதலிய செய்கிறவர்கள், சிவலோகஞ் சேர்வர். கும்ப மாதத்தில் I கிருதகம்பளத்தால் வழிபாடு செய்பவர் சிவசாயுச்சம் பெறுவர்.

I **கிருதகம்பளம் :** நெய்யால் நனைந்த கம்பளத்தை இறைவனுக்குச் சார்த்தி வழிபாடு செய்தல்.

6. கிருதகம்பள விதி கூறிய வத்தியாயம்.

கிருதகம்பள வழிபாட்டு முறை

மெல்லிய ஆடையில் வெண்ணெயை ஆகாய நிறமாக வுருக்கி யெடுத்துக்கொண்டு, மாலையில் காஞ்சியிலுள்ள **ஏகாம்பரநாதன்** முன் வைக்கவேண்டும்; வைத்து "அர்ச்சனை செய்வேன்" என்று கூறிக்கொண்டு, உருக்கிய நெய்யோடு பண்ணிகாரம் முதலிய சுவைப் பொருள்களை வைத்து அர்ச்சனை செய்து, கிருத கம்பளத்தை அழகுறச் சார்த்தி, நீராஞ்சனம் விதிப்படி செய்து வலம் வந்து முக்கால் பணிந்து, "கங்கையலம்பும் வேணியா!" என்று சொல்லி, இரவெல்லாம் துயில் நீத்து வைகறை எழுந்து நாட்கடனை முடித்து நல்ல சைவருக்கு உணவளிக்கவேண்டும்.

கிருத கம்பளப் பூசையின் சிறப்பு

மாசிமாதப் பூரணையில் பூசை செய்தல் நன்று. பூசையால் புத்தியும் முத்தியும் பெறுவர். செல்வம் கொடுக்கும். பாவமெல்லாம் போம். உலக மக்களால் நன்கு மதிக்கப் பெறுவார். "இத்தகை சிறப்பு வாய்ந்த பூசையால் அரும் பெரும் செல்வ மடைந்தவர் யாவர்"? என வினைய சிவ விரதியர்க்குக் குறுமுனிவன் செப்பலுற்ருன்.

கிருத கம்பளப் பெருமை

கோதமன் என்னும் தவசி, இரேவந்தி நதிக்கரையிலிருந்து தவம் செய்துகொண்டிருந்தார். அவரிடம் சுமேதா என்பான்சென்று அவரடி பணிந்து நின்ருன். நின்றவனை நோக்கினுர் முனிவர்; நோக்கி "என்ன செய்தி'! என்று வினுவினர். அவன் "முனிபுங்கவ! தவத்தவர் தலைவ, அடியேன் வறுமையால் வாடுகின்றேன், அதனைப் போக்கி, இறுதியில் முத்தியும் பெற வேண்டுகின்றேன்" என்ருன், "மாசித்திங்களில் வருகிற பௌர்ணமியில் தேவர்கட்குக் கிருதகம்பளப் பூசை செய்தால், அது நினக்குச் செல்வம். புத்தி, முத்தி எல்லாம் கொடுக்கும்" என்ருர் முனிவர்.

கோதமன், சுமேதாவுக்குச் சொல்லிய வேறுமொரு கதையுண்டு :

கூடகன்னன் என்பான், **சுஞேகசனை**க்கண்டு பணிந்து 'என் வறுமை போக வழி சொல்லவேண்டும்" என்ருன். அதற்குச் **சுஞேகசனும்** கிருதகம்பளப் பூசையையும், அதன் பயனையும் எடுத்துச் சொன்ஞன். அதன்படிச் செய்து சிறந்த செல்வம், மக்கட்பேறு இவற்றைப் பெற்ருன்.

செல்வம் பெற்றதின் பயன்

" இறைவனருளால் கிடைத்த செல்வத்தை நல்வழியில் பயன்படுத்த எண்ணினுன். இறைவன் எழுந்தருளியிருக்கப் பசும்பொன்னுல் ஆலய மமைத்தான். இறைவனடியவர்கட்குச் செல்வ முதலிய நல்கினுன். இறைவன் திருமஞ்சனத்

துக்கும். நாட்பூசை நடப்பதற்கும் நல்ல பசுக்கள் வாங்கிக் கொடுத்தான். அவைகள் வாழ்ந்துவர நல்ல மேய்ச்சல் நிலங் களையும் கொடுத்தான். I மகேசுரர்கட்கு உணவளித்து மணி பொன் முதலிய வழங்கினன்"— எனக் கோதமன் கூறினன்,

7. சீதகும்பமும் திலபூசையும் உரைத்தவத்தியாயம்

பூசையின் பயன்

சித்திரை முதல் ஆவணியிருகவுள்ள மாதங்களில் இறை வனுக்கு இடையீடு படாமல், நல்ல நீரில் மணப் பொருள்கள் சேர்த்துத் திருமஞ்சனமாட்டி மலர்கொண்டு வழிபட்டான் செல்வம்மிக்கு நல்வாழ்வு வாழ்வான். வினையினீங்கி முத்தி பெறுவான். "எள்ளினல் பூசை செய்வே" னென்று சங்கற் பஞ் செய்துகொண்டு, பால்கொண்டு திருமஞ்சன மாட்டிப் பாலமுதோடு முக்கனிகளையும் நிவேதித்து, அருக்கியம் முத லியனவும் கொடுத்துப் பங்குனித் திங்களில் எள்ளினல் பூசை செய்யவேண்டும். சித்திரைத் திங்கள் சுக்கில பக்கம் நவமி யோடு கூடிய நாளிலும் கிரகண காலத்தும் எள்ளினல் வழி பாடியற்றல் வேண்டும். செய்தால் நாம் செய்த தீவினைபோம்; தென்புலத்தார்க்குச் செய்யும் பயனுமுண்டாம்.

8 சிவனும மகிமை யுரைத்த வத்தியாயம்

நிதம்—எனும் நாட்டில், தீயவனுய ஓரந்தணன் இருந் தான். அவன் ஐம்பெரும் பாவங்கள் செய்தலில் ஈடுபட்டிருந் தான். அவன் ஒருநாள் நன்ருகக் குடித்தான். வில்லுங் கம் புங் கைக்கொண்டு நிடத நாட்டை யடைந்தான். அந்நாட் டரசன் பத்திமான், அரசன் உறங்கும் அந்தப்புரத்தினுள் இர வில் எப்படியோ காவலர் கையிலகப்படாமல் நுழைந்துவிட் டான். அந்நிலையில் உறங்கிக்கொண்டிருந்தவன் விழித்து இக்கொடியவனைக் கண்டான்.

I மகேசுரர்—சிவனடியார்.

அரசன் நிலையும் அந்தணன் நடிப்பும்

கண்ட அரசன் சீற்றங்கொண்டு, உறைவாளை யுருவி, "தொலைத்து விடுவேன்" என்று கூறிக்கொண்டு நெருங்கினான். அவன் ஓட்டத்தில் நாட்டமானான். இடம் புதிது, திக்குத் தெரியவில்லை; திகைத்து நின்றான். உருவிய வாளைக் கொண்டு கொல்ல முயன்றான். அந்தணனன்றோ? சமயத்துக் கேற்றவாறு நடிக்கத் தொடங்கினான். சிவன் அடியவன் போலப் பாவனை செய்தான். பத்திப் பாடல்கள் சிலவற்றை இனிமையாகப் பாடத் தொடங்கினான். அவற்றைக் கேட்ட அரசன் மயங்கினான். உடனே அவன் கையிலிருந்த வாள் அவனறியாமல் நழுவியது. "இத்தகை யடியவரையோ இவ்வாறு செய்யத் துணிந்தேன்" என வருந்திக் "கறைக்கண்டனடியவரென்று கருதாது கெட்டேன்" என்றுங் கூறினான்.

அரசன் வருந்துதல்

"இவ்வந்தணவடியவரைக் கொலை செய்ய நினைந்ததால் என் குலத்தவர் நரகத்திற்கன்றோ போய்ச் சேர்வார்கள்" என்றகங் குழைந்து "ஐயகோ" என்றழுது அரன் நாமம் பல சொல்லினான். "என்னைத் தீவினையினின்றுந் தப்புவித்தான். எந்தை சிவனுமம் இவன் வாயில் கேட்டேன். கொடுநரகம் பிழைத்தேன். உறங்கிக்கிடந்த நான் தெளியுமாறு சிவன் நாமங்களைச் சொல்லினான்" என்று சொல்லிக்கொண்டே அவ்வந்தணன் காலில் விழுந்தான்.

மறையவன் செயல்

அவ்வந்தணன் தன்னுள்ளே "யான் செய்த தீவினையோ அளவற்றன. சில நல்வினையுஞ் செய்திருப்பேனன்றோ? அவற்றின் பயன் தானோ? அரசன் வாளுருவியுங் கொல்லாது விடுத்தான்" என்றதிசயித்தான். அரசனும் சிவசரிதங் கூறி மணி பொன் முதலிய கொடுத்தான். மறையவனும் அன்று முதல் உண்மைச் சைவனானான். அரசன் கொடுத்த பொருளைக் கொண்டு சிவாலயம் எடுப்பித்தான். நெய்யால் பல விளக்

குகள் வைத்தான். தீபதண்டம் பொன்ஞல் பல வைத்தான். நந்தவனம் வைத்து வழிபாடு செய்து வந்தான். வழிபாடு செய்ததன் பயஞல் பாரமாய பழவினைப் பற்றறுத்துச் சிவ லோகம் போய்ச் சேர்ந்தான் மறையவன்.

அரசன் செயல்

அரசனும் தன்ஞட்டுக் குடிமக்களை யழைத்து, சிவனுமைப் பெருமை சிவபூசையின் மகத்துவம் முதலியவற்றை அவர்கள் தெளியுமாறு எடுத்து விளக்கினுன். அனைவரும் அன்றுமுதல் சிவ வழிபாட்டில் ஈடுபட்டனர். அவர்கள் வழிபாட்டுக்குரிய திருக்கோயிலமைத்தான். பின் அரசன் மக்களொடு வாழ்ந்து மனையறங்காத்து, மகனுக்கு முடிசூட்டித் தான் துறவறம் மேற்கொண்டு அரிய தவமியற்றிச் சிவலோகம் சென்றடைந் தான்.

9. வாணலிங்க மகிமை கூறிய வத்தியாயம்

இலிங்க வரலாறு

சிவயோகி, சிவபூசை எவ்வாறியற்றிஞல் பயனுண்டாம் எனக் குறுமுனிவரை விஞவினர். குறுமுனிவர் பகர்வார்:— "இலிங்க வழிபாட்டில் பலவுள. அவற்றுள் வாணன் வழி பட்ட இலிங்கம் நருமதை யாற்றிலிருக்கின்றது. அவ்வாற் றின் தீர்த்தங்கொண்டு அவ்விலிங்கத்தை வழிபட்டால் சிவ சாயுச்சியம் பெறுவர்" என்ருர். சிவயோகி "அதனைக் கேட்டு அருட்கடலே! யானும் வழிபாடு செய்யவேண்டும். அவ் விலிங்க வழிபாடு செய்து உயர்ந்தார் யாவர்? அதனைத் திரு வுள்ளம் பற்றவேண்டும்" என்று விஞவினர். குறுமுனி உரைப்பதானுர்.

வேடன் வரலாறு

வேடன் ஒருவன் குடிலமைக்கும்போது, பூமியிலிருந்து இலிங்கம் ஒன்று கிடைந்தது. அது நாவல்பழத்தை யொத்

திருந்தது. அதனைத் தான் அமைத்த குடிலில் வைத்து வழிபாடு செய்து வந்தான். அவன் தொழில்: வழிப்போக்கர்களை வழிப்பறி செய்து, அவர் கைப்பொருள் வௌவிக் காலங் கழித்து வந்தான். ஒருநாள் கிழவரொருவர் அவ்வழியே வந்துகொண்டிருந்தார். வழக்கம்போல வழிப்பறி செய்யக் காத்துக்கொண்டிருந்தவன், வழிப்பறி செய்யத் தொடங்குகையில், அப்பெரியார், "ஏனப்பா இத்தொழில் உனக்கு. நல்ல தொழில் நாட்டிலிருக்க இத்தொழிலைச் செய்யத்தொடங்கினை. இன்றே விட்டொழி" என்று கூறி அவன் செவியில் நல்ல உபதேசம் செய்தார். அவனும் இசைந்து அதனை யேற்றுக்கொண்டு அநூன்வழி நின்றான்.

சிவ வழிபாடு

உடனே குடிசைக்கு வந்தான். வந்தவன் அவர் கூறிய நன்மொழிகளைச் சிந்தித்தவண்ணம் உறங்கிவிட்டான். அவ்வுறக்கத்தினிடையில் சிலர் சிவலிங்கத்தினை அவன் சிரமீது வைத்துச் சென்றனர். உறங்கத்தினின்றும் எழுந்த வேடன் அவற்றைக் கண்டான். மிகவும் மகிழ்ந்தான். வில்வத்தால் நாடோறும் வழிபாடு செய்துவந்தான்.

பின்னரும் வழிப்பறி செய்தல்

பிறவியில் ஊறிய வழிப்பறி அவனை விட்டபாடில்லை. மறுபடியும் அதனைத் தொடங்கினான். அவ்வழியே ஒருநாள் சில அந்தணர்கள் வந்தார்கள். அவர்களை வேடன் கண்டான் மகிழ்ந்தான், "அந்தணர்கள், சிரமமில்லாமல் பொருள் வெளவலாம்" என்றெண்ணினான். வந்தவர்களை நெருங்கி அவர்கள் தலையை மூங்கில் முளையை யானைத் திருகுவதுபோலத் திருகி யெறிந்தான். அவர் கைப்பொருள் கவர்ந்துகொண்டான் வேடன். ஆனால், அவர்கள் இறைவழிபாடு செய்தவன் கையால் இறந்ததால் பேரின்பப் பேற்றினையடைந்தார்கள்.

நமன் தூதுவர் அந்தணன் உயிரைக் கவர்தல்

இவ்வாறு வாழ்ந்துவரும் நாளில், பொய்தான் உருவங்கொண்டு வந்ததோ என்றெண்ணத்தக்க மறையவன், அவ்

வழி வந்தான், வந்தவனை நெருங்கிச் சில நல்ல வார்த்தை சொல்லித் தன் குடிலுக் கழைத்து வந்தான் வேடன். குடிலில் வைத்து உபசாரம் செய்பவன்போலப் பாவனை செய்து இலிங்கத்தால் அடித்துக்கொன்றான். இறந்தவன் உயிரைக்கவர்ந்து செல்ல நமன் தூதுவர் வந்து மறையவன் உயிரைப் பிடித்துக் கட்டி துன்புறுத்திக்கொண்டு போய் நமன்முன் விடுத்தனர்.

நமனும் சித்திர குத்தனும்

தன்முன் நிறுத்தப் பெற்றவனை உற்று நோக்கினான் நமன். சித்திரகுத்தனை அழைத்தான். சித்திரகுத்தனும் அவன் முன்னின்றான். நின்றவனை நோக்கி, "இவன் செய்த நன்மைகள் யாவை? பாவச் செயல் யாவை?" என வினவினன். "இவன் செய்தன யாவும் பாவச் செயல்தான் நன்மையே இல்லை" என்றான், "ஆனால் இவன் வாணலிங்கத்தால் அடிக்கப்பட்டிறந்தான்" என்று வாணலிங்கப் பெருமைகள் யாவற்றையும் விரிவாகத் தெளிவாகக் கூறினான். உடனே நமன் "சிறப்புவாய்ந்த வாணலிங்கத்தால் இறந்தவன் நமது சிங்காதனத்தி லிருக்கத்தக்கான்" என்று சிங்காதனத்திருத்தி வழிபடுவானானான். உடனே சிவகணங்கள் வந்தன. வந்து சூழ்ந்து பூசைபுரிந்து விமானத்தேற்றிச் சிவலோகம்கொண்டு சென்றன.

நமன் ஆணை

"இலிங்க வழிபாடியற்றாதவர்கள், இறைவன் பெயரைச் சொல்லாதவர்கள், பஞ்சாட்சரத்தைச் செபியாதவர்கள் இவர்களை மலமடுவில் வீழ்த்துவீராக" என ஆணையிட்டான். வாணன் வழிபாடு செய்த இலிங்கார்ச்சனையால் பல நன்மைகளுண்டாம்.

10. வேடன் கதிபெற்ற வத்தியாயம்

அந்தணர் வருகையும் வேடன் கொலையும்

நருமதை யாற்றங்கரையில் வேடன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அப்பகுதி மரங்களடர்ந்தவிடம்; ஆதலாலவ்வழி

வருவோரைக் கொலேசெய்யத் தகுதியுடையதாக விருந்தது. குருதி கக்கவே குத்தி அவர் கைப்பொருள்கொண்டு காலங் கழித்து வருநாளில், சில அந்தணர் அவ்வழி வந்தார்கள். அவர்களைத் தன் குடிலுக்குக் கொண்டுவந்தான். வந்தவர்கள் தலையை இலிங்கத்தால் நசுக்கினுன்; நசுக்குண்ட பகுதியி னின்றும் குருதி வெளிப்பட்டது; வெளிப்பட்ட குருதியால் இலிங்கத்துக்குத் திருமஞ்சன மாட்டினுன், இறந்தவர்கள் உடலை வில்வத் தழையால் மூடினுன்.

வில்வீரர் சிலர் வந்தடைதல்

வில்வீரர் சிலர் அங்கு வந்தனர். "இங்கு வந்த அந்த ணரைக் காணவில்லை. இவ்வேடன்றான் கொலேசெய்திருக்க வேண்டு"மென்று தங்களுக்குள் பேசிக்கொண்டார்கள். இப் படியே வழிப்போக்கர்களைக் கொலை செய்கிறுன். இன்று இவனை நாம் நமனுக்கு விருந்தாக அனுப்பவேண்டுமென் றனர்.

வேடனோடு போர்

வந்த வீரர்கள் வில் முதலிய கொண்டு போர்புரியத் தொடங்கினர், அம்புகளை மாரிபோற் றூவினர். வாள் வீரர் வாளால் வீசினர், வேல் வீரர் வேல்கொண்டு பாய்ச்சினர்; இவை யாவும் அவன் உடலை ஒன்றும் செய்யவில்லை. கை சளைத்து நின்றனர். மற்றும் சிலர் வந்து போர் தொடுத்த னர். அதுவும் பயனில்லை. இவ்வளவிற்குங் காரணம் இலிங்க பூசையேயாம்.

வேடன் பேச்சும், வீரர்கள் வியப்பும்

வேடன் வீரர்களை நோக்கிச் சில சொன்னுன்: "வீரர் களே! நீவிர் மிகவும் வலிமை வாய்ந்தவர். போர்த்திறம் அறிந்தவர்கள். யானோ இவற்றுள் ஒன்றும் அறியாதவன். அங்ஙனமிருக்கவும் நீவிர் வலியிழந்து ஓய்ந்து நிற்பது ஏன்" என்று வினயமாகச் சொன்னுன். "உன் கையாற்றலுக்குமுன்

எம் ஆய்தம் எல்லாம் வலியிழந்தனவாயின; பேடி கைவாளொத்துப் போயின. இவற்றைப் பார்த்தவுடன் எங்கட்கே மயக்கமாக விருக்கிறது" என வியந்தனர்.

வீரர்கள் தங்கள் வலிமை கூறல்

"இறை வழிபாட்டால் எங்கட்கு இத்தகைய ஆற்றல் உண்டாயிற்று; இவ்வாற்றலால், திருமாலை வென்றேம், இந்திரனைப் புறம்கண்டு கந்திருவர் உலகம் சென்றேம், பின் சத்தியலோகம் சென்றேம். நான்முகன் தரிசனம் கிடைத்தது. நாங்கள் மறை பயின்றறியோம். நின் பெருமையறியாது நின்னேடு போர் தொடுத்தோ"மென்று சொல்லிக்கொண்டே தங்கள் கையிலிருந்த ஆய்தங்களை விட்டெறிந்து, வேடன் அடிமீது பணிந்து நின்றனர்.

சிவபெருமான் காட்சி

இந்நிலையில் இடபாரூடராய்க் காட்சி கொடுத்தார் சிவ பெருமான். அங்கு நின்ற வீரர்களும் வேடனும் இக்காட்சி கண்டு மயிர்சிலிர்த்து வியப்பெய்தினர். "இருவருக்கு மறியான், ஏழையேமாகிய எம்முன் தோன்றுவதே" என்று பலபடியாகத் தோத்தரித்தார்கள். மகிழ்ச்சிக் கடலில் திளைத்தனர். "நுங்கள் வழிபாடும் தோத்திரமும் கண்டு மகிழ்ந்தோம். இவ்வேடன் செய்த பாவங்கள் இவனை யடையா, முத்தியுமடைவான். இவனால் மடிந்த அந்தணர்கள் வீடுபேறடைவார்கள்" என்றார் சிவபெருமான்.

படைவீரர் வினவும் பரமசிவன் விடையும்

"கொலை செய்த வேடன் முத்தியடைவ தெங்ஙனம்" என வினவினர் வீரர். "இலிங்க வழிபாடு செய்துவந்தான். அதற்குத் திருமஞ்சனம் செய்ய எண்ணினன். அதற்கு நீர் கொலை செய்தவர்களது குருதி, அக்குருதி காவிரிநீர், வழிபாடு செய்தவிடம் பளிங்குமண்டபம். வில்வத்தால் மூடியது நமக்குச் செய்யு மர்ச்சனையாகும்; ஆதலால் வாணலிங்கப்

பூசையின் பெருமை நம்மால் பகரலாகுமோ ? வாணலிங்க வழிபாட்டால் இம்மை இன்பமும், மறுமையில் முத்தியுமுண்டாம்" என்று கூறிமறைந்தார்.

11. வாணலிங்க மகிமை கூறிய வத்தியாயம்

வாணலிங்கார்ச்சனையால் பிறவிக் கடல் கடக்கலாம். வல்வினைபோம். இன்பத்துறையில் இழிந்தவர்க்கெல்லாம் நன்மருந்து. பொருமை முதலிய தீக்குணங்களில்லார்க்கே இவ்வழிபாடு கிட்டும். இதற்கிணையானது வேறெதுவுமில்லை. ஆதலால் சிவனையே பதியாக நினைத் தர்ச்சனை செய்க.

இறைநிலை

ஐந்தொழில் இயற்றும் ஆண்டவன் செயல் யாரால் சொல்லவியலும். ஆகாயத்துக்கு ஒப்புண்டென்றால் அவனுக்கு ஒப்புச் சொல்லலாம். முக்காலங்களுங் கடந்த மூர்த்தியன்றோ அவன். மூப்பு உயர்வுமின்றி, ஒப்பாரும் மிக்காருமின்றி இறுதிக் காலத் தொடுக்கங்கட்கு உறைவிடமாய் விளங்கும் சிவம். மனம் வாக்குக் கெட்டாததாய் அகண்டிதாகாரமாய் விளங்கும் சிவம். இவ்வளவுயர்ந்த பொருளை நாமணுகுவ தெப்படி? அடியார்க் கெளியனன்றோ? அவனை யாரும் எளிதில் அணுகலாம். அப்பரம்பொருள் ஒருபக்கம் செம்மேனி, ஒருபக்கம் நீலமேனியாகவுள்ளது; நாமரூபமில்லாதது; உயிர்களின் பொருட்டு விருபாக்கன் முதலாய பல பெயர்களைப் பெறுகிறான்; உலகமே உருவமானான்; ஆதலான் உலகத்துள்ளோர்கள் அவ்வடிவிலேயே அவனைக் காணவேண்டும். அவன் உருவத்தில் நாமெல்லாம் கடலிடை எழுகின்ற ஒரு திவலைக் கொப்பாவோம். அவன் காரணங் கடந்தவன். சித்தாகிச் சத்தாகி ஆனந்தமயமான பரம்பொருள் நித்தியனெனப்படும். இத்தகை சச்சிதானந்த சிவத்தை வழிப்பட்டு மலமகற்றி மதிப்பார். எல்லாப் பொருளிடத்தும் தோய்ந்தும் தோயாதவன். உயிர்கள் அடையும் துன்பம் இறைவனைச் சார்வதில்லை:

அவத்தை கடந்திருக்கும். இம்மொழியைப் பழுதென்று சொல்லுமவன் பாரணத்தில் (ஏகாதசியின் மறுநாள் காலை யுணவு) பாற் சோற்றை உப்புடன் உண்ட பஞ்சமா பாதகனுவான். அழிவில்லாத வுயிர்கள், தன் பா லொடுங்கிய காலத்து ஒருவனே யென்றுரைப்பார். உலக உயிர்கட்கு ஆதாரம் அவன். அவனுதாரமின்றி நிற்பான். உயிர்கட்கு கலை முதலிய தத்துவங்களைக் கொடுத்து, அவைகள் செய்கின்ற வினைக்கீடாகச் சுகதுக்கங்களைக் கொடுத்துத் தான் தோன்ருமல் தோன்றி உயிர்களைச் செயல்படுத்துந் திறத்தால் நிராகாரனென்பர். உலகம் முடியும் காலத்து அரனுய் எல்லோரையும் அழிப்பான். முத்தொழிலு மியற்றுவன் நொடிப் பொழுதில்.

பயன்கருதாத செயல்

இம் முத்தொழிலுமியற்றுவதனுல் பயனென்? என்னில்? ஒன்றுமில்லை என்ற விடைதான் கிடைக்கும். ஆயினும் அவன் அருளாலே உலகைப் படைக்கிருன், அளிக்கிருன், அழிக்கிருன். முழுதுணர் பேரறிஞனுகிருன். பொருள்கள் மீது விருப்பு வெறுப்பில்லாதவன். உருவம்-அருவம்- உருவருவம் ஆய மூன்று தன்மையு முடையவன். சர்வ சுதந்திரன். இத் தகையவனை உணர்ந்து வழிபாடியற்றுக. சிவதீக்கை பெற்ருேர்கள் அவனையறிவார், அல்லா ரறியார். விபூதி அக்க மணி முதலாய சாதனங்களால் புத்தியும் முத்தியுமுண்டாம். இவையில்லார்க்கு அவையில்லை. மற்றைய தெய்வங்களுக்கு வழிபாடு செய்தால் புத்தி முத்தியுளவோ? வென்னில், அவர் கள் பசுக்கள், எம் இறைவனே அனந்தசக்தி யுடையவன்; ஆதலின் அவனே புத்தி முத்தி தரவல்லவனுகிருன்.

13. வாணலிங்கத் தரிசனம் உரைத்த வத்தியாயம்

அந்தணன்

கல்வி முதலிய நிறைந்த அந்தணன் ஒருவன் வாழ்ந்து வந்தான். வாணலிங்கப் பூசை செய்து வருவான். பழிபாவங்

களுக்கு அஞ்சாதவன். ஒருநாள் தான் செய்யும் பாவச் செயலை நினைந்து வருந்துவானுனன். அவன் ஒருநாள் தவசி யொருவரைக் கண்டான். வணங்கி இவற்றைச் சொல்வா ருயினன்.

அந்தணன் தன்குறை கூறுல்

"அடிகளே! அடியேன் செய்யும் விண்ணப்பம் திருச்செவி சார்த்தியருள்க. தீயவை யென்று நினைந்துமவற்றைச் செய்து வந்தேன். தறுகண்ணர்களோடு சேர்ந்து திரிந்தேன். வழிப் பறியும் செய்து வயிறு வளர்த்தேன். இத்தகைய கொடுமை செய்த எனக்கு நரகம் சித்திக்கு மெனபதில் எந்தவிதத் தடையுமில்லை. ஆதலால் அடியேன் உய்யும் வகை உரைத் தருள்க" என்று வேண்டி நின்ருன்.

முனிவர் கூறல்

இவ்வாறுரைத்தவன் முகம் நோக்கினுர் தவசி. நினக்கு இறையருள் உண்டாகியிருக்கிறது; ஆதலாற்ருன் நம்மை யடைந்தனை. நரகத்தை நினைத்து அஞ்சலை. நிருமதலிங்கம் இரேவந்தி நதிக்கரையிலிருக்கிறது. அந்த இலிங்கத் தரிசனத் தால் பாவம் போம்; கூற்றுவனுல் வரும் இடையூறு நீங்கும்; அந்த இலிங்கக் காற்று எத்திக்கில் படுகிறதோ அத்திக்கி லுள்ளார் பாவமெல்லாம் தீயிற்றூசாம். வைகறை எழுந்து வில்வத்தைச் சிவலிங்கத்திலிட்டால் அவனைப் பிடித்துள்ள பாவகோடிகள் பறக்கும். முத்தியுண்டு. செல்வம் முதலிய எல்லா நன்மைகளுமுண்டாம். பிறவி வேரறும். இறுதியில் இறைவன் சோதியில் கலப்பான்" என்றனர்.

அந்தணன் செயல்

இவற்றைக் காது குளிர மனமுவப்பக் கேட்டு அதன்படி திருவாராதனம் செய்துவந்தான். அதன் பயன் பசும்பொன் விமான மூர்ந்து சிவலோகம் சேர்ந்து இறைவன் சோதியிற் கலந்தான். இக்கதையை விருப்போடு கேட்பவர்க்கு முத்தி யுண்டாம்.

14. சிவயோகவிரத முரைத்த வத்தியாயம்

மாலவன் மகிழ்ந்திருத்தல்

மிகவும் காடடர்ந்த பகுதி திருக்கேதாரம். அந்நகரத்துள்ள ஆலயத்தில் முனிவர் புடைசூழத் திருமால் வீற்றிருந்தான். அவனை நோக்கி, "நின் இனிய பேச்சினால் யாம் மகிழ்ந்தோம். வாணலிங்கப் பெருமையு முணர்ந்தோம். சிவ யோக விரதத்தை மேற்கொண்டவர் யாவர்? அதன் பயனென்? அவற்றை யடியேம் தெளிய வுணர்த்தவேண்டும் திருமாலே" என்று வேண்டினர்.

அந்தணன் பூசை

இந்நகரத்துப் பூதிபூடணன் என்னும் ஓரந்தணனிருந்தான். அவன் ஞானங்கனிந்த நலங்கொண்டவன். சில காலமாக, நல்லுணர்ச்சி, உறக்க மிவையின்றி யிருந்தான். இருந்தவனுக்குப் பெரியோர், "வளர் பிறையில் பதினான்காம் நாள் விதிபாதம் ஆதிரை கூடிய நன்னாளில் சிவார்ச்சனை செய்தால் இவை நீங்கு" மென்றனர். அங்ஙனமே செய்து அவை நீங்கப் பெற்றான் அந்தணன்.

புலைச்சி மகள்

வேதபாரங்கதனானதால் மேல்வரும் பிறவிநோக்கி வருந்துவானாயினன். "பன்றி, கழுகு, புழு முதலியவாகப் பிறக்க நேரிடுமே" என மனம் நொந்தான். "இவை வாராமல் தடுத்தற்குரிய வழி யொன்றுதான்; அது, இறைவன் வழிபாடுதான்" என்ற முடிவுக்கு வந்து, அவ்வழிபாட்டை நன்முறையில் செய்ததன் பயனாக இறுதியில், எல்லாப் பிறப்பும் கடந்து புலைச்சி மகளாய்த் தோன்றினான் அந்தணன்.

புலைச்சி மகள் செய்யும் பூசனை

புலைச்சி மகளாகப் பிறந்தாலும் கழிந்த சன்மவாசனை இருந்தே வந்தது. இறை வழிபாடு தவறாது செய்தல், செய்த

பின்னரே யுணவருந்தல் முதலியவற்றில் விழிப்பாக இருந் தாள். இறைவனுக்குப் படைப்பது நாயிறைச்சியேயாம். தான் நிவேதிக்கும் நாய்த்தசையைச் சுடலைத்தீமேல் வைப் பது வழக்கம்; அவ்வாறே வைத்தபோது முனிவர் ஒருவர் வரக்கண்டாள். கண்டவள் அவ்விறைச்சியைப் பிறர் கண் டால் ஈசற்காகாதென வுன்னி, நாய்த் தோலால் மூடினாள். அதனை முனிவர் கண்டார். வியப்புற்றார். வியப்புற்று, மூடிய தற்குக் காரணங் கேட்டார். வந்தவர் ததீசி முனிவர்.

மூடியதற்குக் காரணங் கூறல்

"இறைவனுக்குப் படைக்கும் பொருள்கள் இறைவ னுக்குத் திருவாராதனம் செய்த பின்னர்தான் உட்கொள்ள வேண்டுமென்பது வேதவிதி. அவ்வுணவைச் சைவ ரல்லாப் பிறர் காணப் போகா" தென்றாள் "சைவ ரல்லாப் பிறர் யாரெனின்? நான் முகனும் மாலுந் தேடியும் காணாத பொருளைத் தேவனென்று செப்பாதவன், நீறு பூசாதவன், ஊர்த்த புண்டரமாகத் திருமண் காப்பணிபவன், மண்ணால் ஊர்த்த புண்டரந் தரித்திருப்பவன் என்றறியாமல் அவனுக் குணவளிப்போன், அவனை வணங்குபவன், சிவன்பால் அன்பில்லாதவன் ,நாளுஞ் சிவசரிதங் கேட்க முயலாதவன், சிவனிரவில் அக்கமணியணிந்து சிவ வழிபாட்டிலீடுபடாத வன் ஆகிய இவர்கள் சைவரல்லாதவர்கள். நைவேத்தியப் பொருள்களை சிவ வழிபாட்டிலீடுபாடில்லாதார் கண்டால் கண்ணூறு படுமென்று மூடினேன்" என்றாள். "அவர்கள் கண்டால் விலக்க வேண்டுமோ-என்னில்? முந்தை மறைகள் மொழிகிற சிவ வழிபாடில்லாதவர்கள் புலையனுக் கொப்பாகு மென்று இகழ்வார்கள்; ஆதலால் சைவசீல மில்லாதவர்கள் கண்டால் அகற்றல் கடனாகும்" என்றாள்.

முனிவர் ஞானக்கண்கொண்டு நோக்கல்

இவற்றைக் கேட்டு இறும்பூது எய்தினார். "இவைகளை இவளறிந்தபடி எங்ஙனம்" என ஞானக்கண்ணால் நோக்கினார்

நிகழ்ந்தவற்றை யெல்லா முணர்ந்தார். சாபாலவுபநிடதம் சொல்கிற சைவ விதி இவளறிந்தமையால்தான் இவ்வாறு கூறினுள். சிவ பூசை கேதாரத்தியற்றிய தன்மையால், இவள் பல பிறப்பெடுத்தனுபவிக்க வேண்டியவற்றை ஒரே பிறவியி லனுபவித்துத் தீர்த்தாள்; ஆதலால் சிவ வழிபாட்டின் பெருமை யாரால் சொல்லவியலும்" எனவுள்ளத்தெண்ணிக் கண்குளிர இனிது நோக்கி வாழ்த்திப் போனுர் முனிவர்.

15. சிவசரித்திரங் கூறிய வத்தியாயம்

ஈசன் புகழ்

முன் அத்தியாயத்துக் கூறிய கேதாரத்தீசனை உள்ளன் பொடு பூசனை புரிபவர் வாழ்வை யாரால் சொல்லவியலும். யோகசித்தி சிவதத்துவப் போகசித்தி, முன் பிறப்பிலுண் டாகிய சித்தி முதலியவைகளை அடைந்தார் பலர். இம்மலை ஈசனைப் பூசனை புரிபவர் தூயராவர்.

இறை வழிபாட்டால் செல்வம் சேரும்

அந்நகரத்தீசனை அன்பினுல் சிந்தை செய்பவர் திருவாள ராவர். இவர்கள் குலத்துள்ளோர் யாவரும் பந்தம் நீங்கி உயர்ந்தவராவார்; வழிபாடு வஞ்சனையின்றி யியற்றியவர் செல்வங்கட்கெல்லாம் இருப்பிட மாவார்; வழிபாடு செய்யா தவன் பலராலும் நிந்திக்கப்படுவான்; அவன் நித்திய சூனி யன்; வழிபாட்டி லன்பிலாதன் துட்டனுவான்; அவன் பழி பாவங்கட்கு அஞ்சான். இவ்வாருகத்தானே கன்ருல் விள வெறிந்த காளை கழறினுன்.

16. அபராதங் கூறிய வத்தியாயம்

தேவர்கள் திருமாலை வணங்கிச் 'சிவாலய' வழிபாட்டு முறையை உரைத்தருள வேண்டும்,' என வேண்டினர். திருமாலும் இசைந்தான்.

வழிபாட்டு முறை

இறைவன் கோயிலைச் சூழ்ந்து வலம் வருபவர்கள்; அவனருட் கடலில் தோய்வர், சிலமுள்ளவர்கள் பணிந்து அனல் மெழுகாக வுருக வச்சமுடன் கை கூப்பிச் செல்வர்; ஆடையை மேல் போர்த்துக் கொண்டும் தலையில் தலைப் பாகை வைத்துக்கொண்டும் செல்லலாகா; அவ்வாறு செய் பவன் எரிநரகிற் கிரையாவதோடு ஓயாத தலைவலியும் உண் டாம்; சட்டை யணிந்து மேலாடை போட்டுக்கொண்டு செல் பவன் இழி நரகிலுழல்வான்; கோமுகி நீரில் கால் வைப்பவன் புலையனுகப் பிறப்பான்; செருப்பு வைத்துத் தொழப் புகுமவன் புலையனுக் கடிமையாய்க் கிடந்துழல்வான்; நாமம் வைத்துக் கொண்டு கோயிலுக்குச் செல்பவன், வெறுப்பால் பூசனை செய்பவன் ஆய இருவரும் கால தத்துவமுள்ளளவும் நிரையத் திலுழல்வார்; இறைவன் ஆராதனைக்கு முன் உண்ணலாகாது இறை வழிபாடு செய்யாமல் வீண் காரியங்கள் செய்பவன் பன்றியாகப் பிறப்பான்; கோயிலை வலம் வாராதவன், இசை யோடு தோத்திரம் சொல்லாதவன், ஆலயத்தை நாளும் வணங்காதவன், இறைவன்முன் நடித்திறைஞ்சாதவன், கோயில் மதிற்சுவரருகே மலசலங் கழிப்பவன் ஆய இவர்கள் முறையே செக்கிழுக்கும் எருது, ஊமை, குருடு, மூத்திரக் கிணறு, மலமடு இவற்றுள் விழ்ந்தும் இவைகளாகப் பிறந் தும் துன்புறுபவர். இதன் திறம் விரிவாகச் சொல்லப் பட்டுள்ளது நூலுட் காண்க,

17. விபூதி மகிமை உரைத்த வத்தியாயம்

வழிபடும் முறை

வைகறை துயில் நீத்து இறைவன் அடிமலர் நினைந்து காலைக்கடனை முடித்துத் தண்புனலாடி வெண்ணீறணிய வேண்டும். நானம் (ஸ்நானம்) இருவகை : தண்ணீரில் முழுகுதல் ஒன்று; தூய வெண்ணீறு பூசுதல் ஒன்று. நீராடி னல் உடலழுக்கும்போம், நீருடினல் உளத்தழுக்குப்போய்த்

தூயவனுவான். நோய் வாய்ப்பட்டபோது உத்தூள நீருடல் நன்று. புழுக்குரம்பையென்னுமிவ் வுடல் விழுப்ப மாம், வெண்ணீறு பூசினுல், பல தீர்த்தமாடுதலின் பயன் தரும். நீறணியாதவன் வைதிக காரியங்களுக்குதவான்.

நீற்றின் பெருமை

நீறு பூசியவனே தூயரிற்றுயன். காலந்தவருது முக்காலங்களிலும் நீறு பூசுபவன், இறைவனை யிடைவிடாது நினைப்பவன் இவர்கள் இறைவனேடு ஒப்பார். நீறணியாத வன் பாவி. அக்கமணி, நீறு அணிந்தபின் முப்புண்டரமாகத் தலையிலணிய வேண்டும் நீற்றை; அங்ஙனம் செய்யின் நல்ல பலன் உண்டாம். இவை செய்யாகுகில் அவனை ஆருகத ஞகச் சொல்லவேண்டும். நீறு பூசுமொருவன், துர்மரண மடைந்தாலும் அவன் மலம் நீங்கித் களிதருவிமான மேறிக் கண்ணுதல் முன்னம் சேர்வான்; ஆதலால் நீற்றின் பெருமை யார்தான் சொல்வார், ஒருவராலுமியலா தன்ரே ?

18. கலிவிடம் பனத்தியாயம்

நீறணியாதவர் செயல்

மக்கள், முதல் மூன்று யுகங்களிலும் நீறணிந்து இறை வழிபாடு ஒழுங்காகச் செய்து வந்தனர். இக்கலியுகத்தில் நீறு பூசும் விருப்பிலராஞர்கள். மறை பயின்றும் அம் மறையினுள் நீற்றின் பெருமை விரிவாகப் பேசப்பட்டிருந்தும் நீறு தரிக்க மனமிலாராகு ரந்தணர். நீறிடாதவர், இறை வனுக்குரிய வழிபாடியற்ருதவர், நீறு தரிக்காமல் மண்ணிஞ லூர்த்த புண்டரந்தரித்திடுபவர்கள் எண்ணில் காலம் நரகத் திலுழல்வார்கள். உருத்திராக்கம், வெண்ணீறு இவைதாம் உண்மை யென்றுணராத வந்தணர், கலிக்கொடுமையால் ஊர்த்த புண்டரத்தைப் பிடரியில் சேர்கின்ற வம்பெனத், தரித்திடுவர். துளவணிவார் அந்தணர்; ஆனுல் இலிங் கார்ச்சனை செய்யார். ஐந்தெழுத்தோதார். சிவனடிதுதி யார், துதிப்போரை நிந்திப்பாரந்தணர். இவ்வாறு செய்

கின்ற அந்தணரெல்லாம் தொழு நோயால் துன்புறுவர், பொய் சொல்லாதவர்கள், பிறர் பொருள், பிறர் மனே விழை யாதவர், மனம் போன போக்கில் மனத்தைச் செலுத்தாதவர் களே இல்லே இக்கலியுகத்தில்.

சைவர்கள் பெருமை

இப்பெருங் கொடுமை செய்யாத உண்மைச் சைவர்கள் காண்பரிதாயினர். இதனுண்மை தெரிந்து இதிலீடுபட் டோர் குடும்பங்கள் மேலோங்கின. அவர்கள் விடு பேற்றை யுமடைந்தனர். சைவர்களே எல்லாவற்றிற்குந் தலேவர்.

கோவலன் கூற்று

படை நமனுலகஞ் சேர்தல்

இவ்வுலகில் படைகள் கடல்போலத் திரண்டு நமனுலகம் நோக்கிப் புறப்பட்டன. கவலே தோய்ந்த முகத்தோடு நமனுலகம் போய்ச் சேர்ந்தன படைகள். அப்படையை நோக்கி, " நீவிர் இத்துணே சோகத்தோடும் கோபத்தோடும் வந்த காரணமே தென்ன " விஞவினன் நமன்.

மாறுபடாத குணத்தோய் ! கேட்பாயாக. நின் ஆணே வழி நடந்து நின்னடி சூடும் எங்களுக்குத் துன்னலர் மிகுந் தன ரன்றே ? துன்னலர் யாவரெனின் ? சிவதீக்கை, திருநீறு பூசுதல், சிவதரிசனம் செய்தல், தீர்த்தமாடுதல், சிவ புராணங் கேட்டல், அடியவர் பூசை, நந்தவனம் வைத்தல், சிவ விரதங் கள் இவையாவையும் ஒழுங்காகச் செய்து எங்களேத் துரத்தி ஞர்கள்; ஆக இதத்ன்மையால் எமக்கு அச்சம் தோன்றியது. அச்சம் போக்குவா ரொருவரையும் காணேம்; இருக்க இடமு மின்றி நின் திருவடி நம்பி வந்தோம்; நீ எங்கட்குச் செய்ய வேண்டுவன என்னே யெனின் ? புகலுவோம் : எங்கட்கிடரே செய்யும் சிவதருமங்கள் யாவற்றையும் அகற்றவேண்டும். காமம், குரோதம், புறங்கூறல், அழுக்காறு, பொய்மை. நூல்நிந்தை முதலியவற்றை நாள் தோறும் செய்யும்படிச்

செய்வாயானால், நின் ஏவல் கேட்டு அதன்படி நடப்போம்; எமக்குச் சிறப்புமுண்டாம்" என்றனர்.

நமன் கூறுவன

இப்படைகள் கூறியவற்றைச் செவிமடுத்த கூற்றுவன், செவிகளை மூடிக் கண் கலங்கி ஏங்கிச் "சிவசிவ" என்று நடுங்கி இனைய சொல்வானானன்; "ஏ! பாவ மூர்த்திகளே! நீவிர் வசிக்குமிடம் சைவரல்லார், கொடும்பாவம் செய்வோர் இவர்கள் உறைவிடமாம். இறுமாப்புற்ற பாவிகள்பால் போய்ச் சேர்வீர். நீரில்லா நெற்றியர், நீறுள்ள நெற்றியாரை வந்து வணங்காதவர், திரிபுண்டரத்தை மதியாதவர் இவர்கள்பால் போய்ச் சேர்வீர். இன்னும் இவைபோன்ற பாவஞ் செய்கிறவர்களை அன்பினால் சேர்ந்து நாளும் பாவமெல்லாந் தங்கவீற்றிருப்பீர்" என்றான் காலன்.

சேனைகள் வினவும்–காலன் விடையும்

இவற்றைஎல்லாங் கேட்டுக் கொண்டிருந்த பாவமூர்த்திகள், "தந்தையே! நீவிர் செப்பியன யாவும் விளங்கவில்லை" என்று விளங்கியும் விளங்காதவைபோலக் கேட்டனர். அது கேட்ட கூற்றுவன் உரைப்பதானன்: "மொழி பயிலுங் கொடும்பாவ மூர்த்திகளே நீர் கேளிர்? அழியுமியல்புடையார் யாவர்? அவர் சைவரல்லாத் திருவிலிகளாவார். நீவிர் உம் வீட்டைவிட்டு வேறுஒருவன் வீட்டிலிருக்க விரும்புவீரோ? விரும்பமாட்டீரன்றோ? அவ்வாறே பாவமுட்டைகள் தாம் நீவிர் உறைவிடமாம். சைவரல்லாதவர்கட்கு என்ன அடையாளம் எனின்? தூய வெண்ணீறு உத்தூளனம் பூசாமல் இருப்பார் யாவர்? அவரேயாம்; அவர்கள் பல பிறவிகளில் துன்புறுவர்; ஆதலால் சிவபூசை புரிபவரே வினைகளினின்று நீங்கி இம்மைச் செல்வமும் மறுமை முத்தியுமடைவர்" என்றான். நன்றென்று படைகள் திரும்பின.

19. காசியின் சிறப்புரைத்த வத்தியாயம்

காசியின் சிறப்பு

துசவான் என்னும் முனிவர் காசிக்குச்சென்ருர், செல்லும்வழியில், முனிவர் பலர் சந்தித்து அவரோடு காசிக்குப் போய்ச் சேர்ந்தார்கள். சேர்ந்து மிடியால் வருந்தும் ஒருவன் நிதியைக்கண்டாலெனக் கண்டனர் கங்கை வேணியனை. மகிழ்ந்தனர்; மயிர்க்கூச்செறிந்தனர்; நீராடினர்; விநாயகப் பெருமான் முருகப்பெருமான் இவர்கள் வழிபாடு முடித்தனர்; துசவான் முனிவர்களோடு கோயிலை வலம் வந்து கால வயிரவ தீர்த்தத்தில் தீர்த்தமாடினர். தேவனைத் தொழுது பூசனை புரிந் தருக்கியமும் கொடுத் தமர்ந்தனர்.

உபதேசம்

முனிவர் பலரோடு விசுவலிங்க தரிசனம் முடித்தபின் தரிசித்ததன் பயனால் எல்லோரும் முத்திபெற்றனர். பிறவிப் பயனால் வழிப்பாடியற்றியதால் காசியிலிறக்க நேர்ந்தது. “பரம்பொருள் சிவனே” என்று, மடியில்வைத்து அவன் வலச்செவியில் தாரக மந்திரத்தை உபதேசிப்பர் உயிர்விடுந் தறுவாயில்.

கண்ணனைத் துதித்தல்

கலைமகள் கணவன் முதல்வானோரெல்லாங் கூடி நெஞ்சம் நெகிழ கண்ணீ ருற்றெடுத்தோட சீதரன் சேவடி பணிந்துரைப்ப தானர்: “ஐய! நின் பவழவாய் மொழி எனும் அமுத மாந்தினம். நேமிக்கையனே’ அமரரதிபனே கமலக் கண்ணனே! களங்கனியனைய மெய்யனே! முகுந்த! கேசவ! கருணை வெள்ளமே! வள்ளலே! போற்றி” என மனங் கனிந்து தொழுதனர்.

20. கும்பகோணச் சிறப்புரைத்தவத்தியாயம்

சிவவழிபாட்டின் இயல்பு

சிவவழிபாடொன்றே பிறவிப் பிணியகற்றும் மருந்து. பூசனைக்குரிய புண்ணிய னியல்பும், முற்பிறவியிற் செய்த தவப்பயனுல் கிட்டுமேயொழிய வேறொன்ருல் கிட்டாது. உள்ளம், உரை, செயல் மூன்றுந் தூய்தாய் வில்வம் முதலான பொருள்கொண்டு அண்ணலடித் தாமரையிலிட்டால் முத்தி யடையலாம்.

கும்பகோணச் சிறப்பு

பிறவிச் சேற்றைத் தன் புகழெனும் நீரால் கழுவுந் தாயாய், முத்திப்பயிர் விளையு வயலுமாகிப் பாச வேரறுக் கும் பதியுமாகுங் குடமூக்கு. அப்பதியில் வாழ்பவர், காண் பவர், நினைப்பவர் கும்பகோணமென்றொருக்கால் சொன்ன வர் ஆகிய இவர்கட்கெல்லாம் முத்திகொடுக்கும் தலமாம். ஆதிகும்பேசன் பூசை, தரிசனம், அடியவர்நட்பு, தியானம், வலங்கொளல், இறுமாப்பகற்றல் ஆயவை யெல்லாமுண்டாம் அப்பதியில் வாழ்வார்க்கு, அங்குள்ளவர்கட்குக் கரியில் நெருப்புப் பற்றுவதுபோல் ஞானம் பற்றும். அத்தலத்துச் செய்கின்ற தவம் ஒன்ருயினும் கோடியாய்த் தழையும்.

21. பிரமன் மாயனைக் கண்டவத்தியாயம்

சிவபூசையின் சிறப்பும், செய்முறையும்

சுதை வடிவிலமைந்த கும்பேசன் அடிமலரில், அன்ப மலராலும், மணமலராலும், வில்வத்தாலும் பூசனை புரிந்தால் பிறவிக்கடல் வற்றும் முத்தியுமுண்டாம். வைகறை யெழுந்து காலைக் கடனை முடித்துக்கொண்டு, தூய நீராடி, வெண்ணீ றெங்கும் பூசி, முப்புண்டரமுந் தரித்தபின் வழுவாவகை அர்ச்சனை புரிந்தால் பயனுண்டாம்.

22. மாயன்சிவபூசை மகிமை கூறியவத்தியாயம்

சிவபூசையின் பெருமை

தேவர்க்குத் தலைவனான இந்திரன் சிவ வழிபாட்டால் இந்திரபதவி யடைந்தான். சங்கரன் அடித்தாமரையில் அர்ச்சனை செய்தால் ஏற்றமுண்டு. பிறவிக்கடலையுந் தாண்டலாம். சிவவழிபாட்டை விட்டு மற்றைத் தேவரைப் போற்றல் கரும்பை விட்டு இரும்பைத் தின்றல் போலாம். அவனடிக்குத் தொண்டு செய்யாதவன் துர்ச்சனன். மாதொரு பாகனுரை யர்ச்சியாதவன் உயர் குலத்தவனுயி னும் நரகிடை வீழ்வான். புலன் வழியில் புத்தியைச் செலுத்துபவன், சிவபூசை மறந்தவன், உண்ணுஞ்சோறும் பருகுநீரும் மலசலத்துக் கொப்பாம். ஐம்புலன்களையடக்கி, முக்கரணங்களை மடக்கி, அன்பினால் நம்பனைப்பூசை புரி பவன் செல்வ முதலிய எல்லாம் எய்துவான். பூசனை புரி யாதான் செல்வ முதலியன சிதறுண்டுபோம். சைவசீலத்தின் வழிநில்லாதவன் செய்யும் கன்மமெல்லாம் பயினின்றும். அறச்செயலும் பாவச் செயலாம். சைவசீல மில்லானுக்கு வைதிகக் கன்மம் வேண்டா. முக்கணர்க் கன்பிலான் புழு மகன். சைவசீலமில்லான் மலப்புழுவாய்ப் பிறத்தல் நன்று. ஏன்? புழு, வெடுத்தவுடலுடன் ஒழிந்துபோம் துன்பம். இவன் நெடுநாள் துன்புற்று நரகிடைக்கிடப்பான்.

23. சிவபத்தர் மகிமை கூறியவத்தியாயம்

அந்தணர் முதல் பஞ்சமர் இறுதியாக வுள்ளவர்கள் சிவ சின்னம் தரித்து சிவ வழிபாட்டி லீடுபட்டால் அவர்கள் சைவர்களே. அவர்கள் மக்களால் போற்றப் படுவார்கள். சிவபத்தியால் அசுவமேதம் செய்த பலனுண்டாம். சிவபத்தி யறியார் அறுசுவையோடு அளிக்கு மன்னதானத்தால் பய னென்? சிவபத்தி யில்லார்க்கு மனத்தை யடக்கிச் செய்யும் தவம்தான் என்ன செய்யும்.

சிவனருளிலீடுபட்டார் அடையும் பயன்

அஞ்செழுத் தெண்ணுமவன் எண்ணிலாப் பலவளங் களும் பெறுவான். அவனை வணங்கி யொருமுறை வெண் ணீறிட்டால் பழுதகல அறம் எல்லாம் பலிக்கும். அவன் கழலி லர்ச்சனை செய்தால் நற்குலத் துத்தமனுவான். சொற் கலை தேர்ந்தவனுமாவான்.

24. சிவயோகியைக் கண்டவத்தியாயம்

பொதியமலை வளம்

பொய்யாய தவங்களைப் போக்கி மெய்யாய தவத்துக் கொரு வேலிபோன்றது; தூய்மையால் கயிலையை யொப் பது; பலவளங்களும் நிறைந்தது. மணிகள் ஒளிவிட்டு விளங்குவன, வேள்வியில் வளர்க்குந் தீ போன்றன. ஒரு துறையில் சிம்மமும் யானையும் நீரருந்துவன. ஆகமமொழி யைக் கேட்டுப் பாம்பும் மயிலும் ஒன்ருகவிருக்கின்றன. செவிக்கினிய செந்தமிழை நாகணவாய்ப் புள்ளும் கிளியும் பாட—மந்திகள் தலையசைப்ப—தருக்களுங் கனி யுகுத்தன.

முனிவர் பெருமை

இத்தகைய வளங்கள் நிறைந்த பொதியில் முனிவர் ஆச்சிரசம். சிவனென வணங்கும் மெய்யன், முக்குறும்பறுத்த மேலோன், வெண்ணீற்று மேனியன் ஆகிய குறுமுனிவன், சிவவிரதியர்பாற் சென்று அவரைக் கண்டான். அவர் எழுந்து வணங்கினுர். பலபடியாகத் தோத்திரஞ் செய்து "பொதியத் தினித்த முத்தமிழை மக்களுக்களித்தவனே" யென அவனடி மலரில் விழுந்தார். விழுந்தவர் எழுந்து பலஉபசாரங்கள் செய்து "மாதவ! நீ இங்கெழுந்தருளப் பெற்றதால் அடியேன் அடிக்குடில் தூய்மையுற்றது.

25. சிவபூசை விதி கூறியவத்தியாயம்

குறுமுனி, சிவபூசை விதியைச் செப்பலுற்றுர். வைகறை துயில் நீத்துச் சிவதீர்த்தம் படிந்து, பால் நிறத்த வெண்ணீ றணிய வேண்டும். அக்கமணி யணிந்து சிவபூசைக்குரிய மந்திரங்களைச் செபம் செய்யவேண்டும். சிவலிங்கத்திற்கு வில்வத்தால் அர்ச்சனை செய்யவேண்டும். அஞ்செழுத்தை எண்ணி உருத்திரஞ் செபித்து அவன் திருவடி வணங்க வேண்டும். முக்காலும் அன்பொடு வாழ்த்துக்கூறி முடிக்க வேண்டும்.

26. பிரதக்கணவிதி கூறியவத்தியாயம்

சிவபெருமான் அபிடேக நீர்செல்லும் கோமுகிக்குச் **சோமசூத்திரம்** என்று பெயர். அதனைத் தாண்டிச் செல்லா மல் செய்யும் பிரதட்சணத்துக்கு சோமசூத்திரப் பிரதட்சண மென்று சாத்திரங் கூறுகின்றது.

அஃதாவது: நந்தியம் பெருமானை வணங்கி அவரிட மிருந்து தொடங்கி இடமாக வந்து சண்டேசுரப் பெருமானை பரசிப் பின் வந்தவழியே திரும்பி நந்தியையடைந்து அவர் பின்புறமாகக் கோமுகிவரை வலம்வந்து பின் வந்தவழியே திரும்பிப்போய் நந்தியை வணங்கிப் பின் இடமாக வந்து சண்டேசுரப் பெருமானைத் தொழுது பின் திரும்பி நந்தியை யடைந்து இறைவனை வணங்கல் வேண்டும்.

இந்தப் பிரதட்சணம் ஒன்பது முறை செய்வது நன்று. இவ்வகையாகக் காலை மாலை வேளைகளில் செய்யலா மென்றும் பிரதோட காலங்களில் செய்யலாமென்றும் இவ் வாறு செய்வதால் எல்லாப் பாவங்களும் நலியுமென்றும், பந்தம் நீங்கி விடுபேறு உண்டாமென்றும் சாத்திரங் கூறுகிறது.

27. பூசைக் குபகரணங் கூறிய வத்தியாயம்

உபகரணப் பொருள்கள்

பூசை செய்பவன் கிழக்கு முகமாக விருத்தல் வேண்டும். அக்கமாலை விபூதியணிதல் வேண்டும். தூய்மையான நீரில் மணப்பொருள்கள் சேர்த்து, அகங்குளிர நோக்கிச் **சதா சிவத்தையுன்னி**, உருத்திரம் செபித்துக்கொண்டு, அந்நீரை அபிடேகம் செய்யவேண்டும். வெள்ளிய தூய ஆடையால் திருமேனியை ஒற்றவேண்டும். பால்போன்ற ஆடையை அணிவித்து நீறு பூசி முந்நூல் சார்த்தித் தொழவேண்டும். நல்ல மலரை அவன் திருவடிகளில் சார்த்தவேண்டும். வில்வமில்லாத பூசனைப் பயனின்றும். சாங்க பூசை செய் வார்க்கு நல்ல பலனுண்டு. திருவாதிரை கூடிய சோம வாரத்தில் விதிபாதங் கூடிய நன்னாளில் பூசை செய்தால் கொடிய பாவம் போம்.

28. சில தனிப்பாடல்கள்

திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், குறுமுனிவர், மநுநிகர் சகசி, தொண்டை நாட்டு அரசூர் சொக்கப்பப் புலவர் இவர்கள் வாழ்த்தும், சகசி அரசவையில் சொக்கப்பப் புலவர் அரங்கேற்றிய தென்றும் தெரிகின்றது. வாழ்க வந்தணர்—என்ற பாசுரம்போல, மறையவர், சுரபி மன்னர் முதலானவர்களும் குடந்தையும் வாழ்கவே என முடிகின்றது.

வரலாற்றுச் சுருக்கம் முற்றும்.

திருச்சிற்றம்பலம்.

கும்பகோணப் புராணம்

நைமிசாரணியச் சிறப்புரைத்த வத்தியாயம்

கலிவிருத்தம்

1 இருண்மணி கண்டன தினிய நல்லருள்
பொருணிதி யறைதிறந் தன்ன பொற்பது
மருளறுத் துயர்சிவ மதித்து வாழ்மறைத்
தெருள்பெறு முனிவரர் திருந்து நைமிசம் 1

2 பேனவார் திரைக்கட லுலகிற் பேதுறும்
யானென தென்னுஞ் செறுக்கறுத் திலங்கிய
மோனமார் கொடிகளாய் முத்திற னக்கருள்
ஞானவா ரணியமே யொக்கு நைமிசம். 2

3 விழுத்தவ முளமெனுஞ் செறுவில் வித்தியுள்
அழுத்திய வருள்முளைத் தன்பு நீரினால்
தழைத்தொளி பூத்தங் காய்த்துத் தத்துவம்
பழுத்தது நைமிசம் போலும் பாங்கெலாம். 3

4 திவ்விய நோக்கினாற் சிறந்த பல்லுயிர்
அவ்விய மொழித்த வரம்பொற் கையின்மேல்
நவ்விய னடியவர் நயந்த சிந்தையால்
செவ்விய ரமர்ந்தது சிறந்த நைமிசம். 4

5 ஒளிதரு சிவமுணர்ந் துருகு மானந்தத்
துளிதரு கண்ணினர் தூயர் வெங்கலி
நெளிதரச் சரிப்பவர் நிமல வாகமம்
தெளிதரு முப்பொருள் தெரிந்த மேலவர். 5

6 வட்டவாள் முகத்தியர் மண்டு தீப்படும்
விட்டிலிற் கரிந்துரு விழந்து பாசவேர்க்
கட்டறுத் துயர்ந்து களைகடிந் துநூல்
உட்டெளிந் தவர்களே யொருங்கு மொய்ப்பரால். 6

7 வாழையி னன்புகு தேனும் வண்பலாப்
போழும் முட்புறக் கனித்தேனும் பூந்துணர்த்
தாழுமாங் கனிகளின் சாறு மேயலால்
ஆழுநீர் வேறில வகன்ப ரப்பெலாம். 7

8 வேயுகு தரள மும்மவ் வராவிட
வாயுகு பணிகளும் வயங்கு மாடெலாம்
பாயிருள் பருகிடும் வெயிலும் பாலெனக்
காயுவெண் ணிலவுமே யொருங்கு காணலாம். 8

9 குரண்டமு நாரையுங் குருகு நீர்க்குள்வாழ்
கரண்டமுஞ் சிறையுளர்ந் திருப்பக் கானடு
வரண்டரு மாவி மீனகடு முட்டவும்
கெரண்டகு தண்ணளி வரிவ சார்பெலாம். 9

10 உன்னரு மெழில்கனிந் திருந்த வொண்மலர்ப்
பொன்னெனக் குணம்விராய்ப் புயலி னூடுலாம்
மின்னென விருடிகள் மெய்யினீ ழல்பொன்
பன்னியர் சரிப்பது பகர்ந்த நைமிசம் 10

11 உந்துயி ரிடும்பையுற் றுழக்கு மென்றுடல்
குந்திய நடையினர் குறித‘ரு’ வையர்
இந்துவெண் ணிலவென விளங்கு நீறணிந்து
அந்திமே னியனடி யலால்மற் றன்பிலார். 11

12 பொதுக்கடிந் தாளடி போற்று மன்புதான்
விதுப்புறு குழவியாய் வெளிப்பட் டாலெனக்
குதித்துறு முனிவரர் குமர ரீண்டுவார்
அதிர்ப்புறு மறைவிளை யாடு நாவினர். 12

13 தருப்பையுஞ் சமிதையுந் தத்து நதிகளும்
விருப்பொடு தரமுனிச் சிறுர்செய் வேள்விக்குக்
கருப்பைகள் பாந்தள்வாய் மணியைக் கையினுல்
நெ(ய்) யெனவுவிட நிகழுங் காட்சியால். 13

14 துளவமு மிதழியுந் துரோண ராசியும்
தளவமுங் குரவமும் மகிழுஞ் சாதியும்
குளவியும் நாகமுங் கோங்கும் பூந்துணர்க்
களவுமா லூரமும் வளருங் கானெலாம். 14

15 சிறைவரி வண்டு பாண்செய்யு மஞ்ஞைகள்
முறைநடங் குனிப்பவா னரங்கள் முட்பலா
உறுகனி முழவென முழக்கமாக் கேட்பவொண்கிளி
இறையெனப் பூவையோ டிருந்து பார்க்குமே. 15

16 மறைப்பொருள் விரிப்பரோர் பாலில் வள்ளனூல்
துறைப்பொரு ளுரைப்பரோர் பாலிற் றூயனைச்
சிறப்புறு பூசனை செய்வ ரோர்பால்
முறைப்பொ டுயரிவரோர் பாலி லொள்ளியர். 16

17 அழுக்ககல பாதவத்தை யருளு ளம்போல்
விழுப்பமாம் பூந்தடம் மேவு மன்புதான்
பழுத்தன முனிவளர் பரம னுக்மத்து
ஒழுக்கமே போலநீ ரோடும் யாறெலாம். 17

18 இத்தலத் திருந்தவக் குழாம் மொய்த்தென
சவுனகர் முதல் பரதவர்த் தகுரநாற்
பத்தெண்ணு யிரத்தரு மொருங்கு கூடியே
சத்தயாகத் தனற் சங்கரர்க் கென. 18

19 புரிந்தன ரிருந்'து'ழிப் போத ஞானமே
விரிந்தென விலங்கும் வெண்ணணீற்று மேனியன்
சரிந்தபுன் சடையினன் றவத்துக் கங்கமாம்
விரிந்தரு ளக்கமா மணிசெய் மார்பினுன். 19

18-வது பாட்டு எதுகை முதலிய நன்கமையவில்லை.

20 சிந்தனை சிவனடி யலது தோய்கிலான்
வந்தனை யரனுக்கே மதிக்கு மாண்பினான்
இந்தன மெரிப்படுத் தென்ன வெவ்வினைப்
பந்தனை யறுத்திடும் பஃற வத்தினான். 20

21 இன்ன நற் குணத்துய ரேந்த லெவ்வரும்
முன்னரும் பெயரினா னெப்பி லாச்சிவன்
நன்னயப் புடனெதிர் நண்ணி னானெனத்
துன்னி னானம் வேள்விச் சூழலே. 21

22 கண்டன ரெழுந்தனர் கடைந்த வாரமுது
உண்டனக் களித்த னருடல் குளிர்ந்தனர்
எண்டரு தருப்பையும் மீந்தனர்
அண்டருக் கியமுதல் வழங்கி னாரரோ. 22

23 சூழ்ந்தனர் முனிவரர் சூழ்ந்து சென்னியால்
தாழ்ந்தனர் விழுமநோய்ச் சயிலந் தூரரொடும்
போழ்ந்தன மினியென்ப போகு முத்தியில்
வாழ்ந்தன மெனச்சிலர் வழுத்தி னாரரோ. 23

24 வெம்புறு பிறந்தையாங் கடற்கு வேலகாண்
அம்பியா யீசனுக் குதந்த வாகமாங்
கும்பகோ (ணம்)புக் கூறு போது
உம்புரிற் சிலமறை யுளதென் றோதினார். 24

25 அம்மறை நின்முகத் திங்கள் களங்கதிர்
விம்முற்று காதரும் புள்ளின் வேட்கையேமம்
செம்மையிற் புகவெனச் செங்கை கூப்பினார்
தம்மையு முணர்ந்தருந் தவத்தி னோர்களே. 25

26 ஆயவ ருரைத்தலு மண்ணல் சேவடிப்
பாயுநீர் பள்ளத்திற் படுத்த சிந்தையன்
சேயொளி யானந்தந் திளைத்துக் கண்கணீர்
தூயினன் சூதமா முனிவன் சொல்லுவான் 26

27 அராவணி சடைய (ருக்)கன்(ப) ரீருள
விராயினி ருமக்கலால் வெண்டி ரைக்கடல்
உராவுபூ தலத்தினி லுண்மை யாஞ்சிவன்
இராசியந் தறுகணர்க் கியம்பொ ணாதரோ. 27

28 முற்படு காலையில் முதல்வன் மாதுமைக்கு
அற்பொடு வழங்கினு னஃது நந்திகேட்டு
இற்புறு சனற்கு மாரனுக் கியம்பினுன்
பொற்புறு வியாத னுக்கவன் புகன்றனன். 28

29 அவனெனக் குரைத்தன னருளி னுழியான்
புவனியிற் காந்தமா புராண ந் தன்னுழைத்
தவமரு ளியசனர்க் குமார சங்கிதை
இவர்தரு சத்தமாங் கிசத்தி லீதரோ. 29

30 அகத்திய சிவரக சியமென் றன்பொடும்
சகத்தினில் யோகிக்குச் சாற்றி னுனென
இகத்தினில் முத்தி விடெனுங் குடந்தையில்
மகத்துவ மரியயற் குறைத்து............. 30

31 என்றருந் தவர்கள் கடனென வின்னமுதம்
அன்றென வாமென வரைந்திட்டா னருள்
துன்றிய சூதமா முனிவன் தொல்லையோன்
தன்னருள் வேணியனடி குறித்து நோக்கியே. 31

நையிமிசாரணியச் சிறப்புரைத்த வத்தியாயம்
முற்றும்.

திருக்கயிலாயச் சிறப்புரைத்த வத்தியாயம்

32 வண்ணந்தா னென்று மின்றிய வாயன்வண் புகழாம்
விண்ணந்தா வியதிரைக் கடன்மு ளைத்த
வெண்ணி டோட்டுத்
தண்ணந்தா மரைப்பொகுட் டுடன்விளங்
குமா தவத்தோர்
எண்ணந்தா வியவன்பு போலா மிலங்கு கயிலை. 1

33 புந்தியுங் கடந்தாணவச் செருக்கறப் புகன்று
வந்திசெய்திடு மடியவருக் கருளுவான் மதிப்ப
இந்துசேகர னுணையா லிருநிலத் தெய்தும்
விந்துவொப்பது கயிலையாம் வெள்ளி வேதண்டம் 2

34 எண்ணெய்விட் டெறிந்திலங்குமா றெல்லைய
மிகந்தே
அண்ணல்சே வடித்தாமரைக் குளமெனு மளியாம்
கண்ணையுற்றவ ரானந்தப் பாற்கடல் கடைந்து
வெண்ணெயொப்பது கயிலையா நிகரெறி விலங்கல்.
3

35 விலகிவில்லுமிழ்ந் திலங்குசிற் சுடரிடை விருப்புற்று
உலகமாயையைக் கடந்தவ ருளம்புணர்ந் துவப்பக்
குலவுமுத்தியாந் திருமணக் கோலவாண் முகத்தில்
திலகமிட்டது கடுக்கும்வெண் கயிலையஞ் சிலம்பு. 4

36 புரண்டவார் திரைமுகட் டெழும்புனிற்றிளந் திங்கள்
இருண்டகண்ட னெம்மிறையவன் சடையின்மே
விருந்தனம்
முரண்டகா தினிச்சுமப்பலென் றிளநிலா முற்றும்
திரண்டுதாங்கிய தொக்குமே கயிலையஞ் சிகரம். 5

37 வட்டமுற்றொளி பழுத்தபொன் மாடமா ளிகைசூழ்
விட்டிலங்கிய புரிசையுஞ் சிகரியும் விளங்கல்
கட்டறுத்துவான் கயிலையின் முத்தியாங் கன்னிப்
பெட்டகந் திறந்தெனக் கவின்றுள்ளொளி பிறங்கும்
6

38 நாகிருந்த்பூந் தடத்திடை நிழலென நாறிப்
போகுயர்ந்தபொற் றருக்களு முடுக்களும் பொலியச்
சேகெறிந்தவெண் கயிலையி னுலகெலாந் தெளிய
யோகிருந்தவ ருளத்திடைத் தெரிந்தன போக்கும். 7

39 பொறையுயிர்த் திடுமேருவே முதலிய போருக்கு
இறையெனச் சுடர்முடி கவித்தென்பதை யேய்க்கும்
குறியிறந்த மெய்ப்பொருள்கட் குலவுறக் குயிற்றும்
செறியிருட் பிழம்பெடுத் தெறிகுல மணிச்சிகரம். 8

40 இந்திராதிபர்க் கரியதா மெரிமணி யொன்றும்
அந்திதீபமென் றெடுத்தொளி மூழையிடை வைத்
ஐந்துமொன்றி யானடக்கிய முனிவ ருகத்து [தயல்
எந்தைஈசன துருவெனச் சுடரெறிந் திலங்கும். 9

41 துன்னிலங்கொளிக் கயிலையிற் புனற்றடத் துணை
யோடு
அன்னங்கண் படைபுரிந்திடல் சரோருகத் தலர்மேல்
மன்னுமாதவ ருளத்திடைப் பரையொடும் பரமன்
சின்மயத்தொளி ராரியப் புள்ளெனச் சிவனும். 10

42 ஆகமப்பொருள் விரிப்பன நாகணமது கேட்டுக்
காகமுற்றிருந் துவப்பன தத்தைகள் முத்தித்தி
யாகமிங்கெனப் பூகங்க டோகையாஞ் செங்கை
மாகமூடெடுத் தழைத்தன வயங்குமால் வரையே.

43 முத்திவானவ ஞனந்தச் சமுகத்தின் முன்னர்ப்
பத்தியான வானவர் நின்றமெய்ப் படிவம்
ஒத்திருந்தன வோவநூற் செம்மையி னுருற்றும்
சித்திரத்தன மாமாளி கைக்குலஞ் சிறக்கும். 12

44 ஓலெடுத் துவெங்கூற் றவனு யிர்ப்பலி
காலெடுத்தவ னரைசுற் றிருந்திடுங் கயிலை
மேலெடுத் தவர்க்கின் னருள்புரி விழைதீம்
பாலுகுத்தெனத் திசையெலாந் தண்கதிர் பரப்பும். 13

45 சிலைத்துநோக்குறும் வாள்வரி வேங்கையுஞ் சினமா
அலைக்கும்வா ளரிக்குலங்களுந் தண்ணளி யடைந்து
கொலைத்தொழிற் குணங்கனவிலு நினைவுறுக்
குப்புற்று
உலைக்குநெஞ்சமுஞ் சுழன்றிடா வருந்த முஞற்றும்.
14

46 மந்திரங்களே தருக்களும் குழைக்கும் வல்லரியும்
தந்தி ரங்களேசரித்தி டும்படு தறுகண்
சிந்துரங்களே குடிலைகள் சிவமுறத் தெரிக்கும்
எந்திரங்களே முனிவ ரிருக்கைக ளெல்லாம் 15

47 கங்கைவேணியைத் தொழவருங் காலம்பார்த் துழலும்
பொங்கும் விஞ்சையர் மாலயனிந்திரர் புலவர்
தங்கு கியெலாந் த்டவரைச் சுடரால்
செங்கதிர்க்கெதிர் மின்மினி யாமெனத் திகழும். 16

48 கணங்களெண் ணிலர்முனிவர ரெண்ணிலர் கவினும்
குணங்கொள்பன் மணிச்சிக ரிகளெண்ணி லகொடி
மணங்கொள்பூந் தடமெண்ணில வானவர் மடவார்
அணங்குமாடலும் பாடலுங் கலிப்புமா யமரும். 17

49 முகுந்தனுதியர் தோத்திர வோதையு முறையே
திகந்தமுற்றிடும் நான்மறை யோதையுஞ் சிந்தை
அகந்தைதீர்ந்தவ ரார்ப்பு மெயுற்றவவ் வசலம்
உகந்தமெய்ப்பர நாதமே யுருவெடுத்த தொக்கும்.
18

50 மண்டுபே ரொளிமன்னிய கோபுர வாயில்
புண்டரீகனே முதலிய வமரர்கள் போற்றித்
தொண்டுநேர்பட நிபுடமிட் டிறைஞ்சிடச் சோதி
கொண்டவர்ச் சனையுருவே சூரன்கைக் கொண்
டோன். 19

51 நந்தியம் பெருமான் கணஞ்சூழ்வர நண்ண
இந்திரநீலத்தாற் புனைந்தொளி
யெறிக்குமண்டபத்தில்
உந்துவாளெயிற் றுளையரி சுமந்தவொண் டவிசில்
அந்திவண்ணனுங் கருணைவாரிதியனுன மர்ந்தான். 20

52 ஆயபோழ்தினி லரிமுதற் பண்ணவ ரருளால்
தாயைநேர்படுங் கன்றென வணைந்துதாள் பரசிப்
பாயுமால்விடைப் பரனருள் விடைகொடு படர்ந்
தாள்
ஏயவேளைநல் லமையமென் றுலகெல்லா மீன்றாள். 21

திருக்கயிலாயச் சிறப்புரைத்த வத்தியாயம்
முற்றிற்று.

கும்பகோணச் சிறப்புரைத்த வத்தியாயம்

53 மணிகுயிற்றிய பசும்கொடி வாய்மலர்ந் தாங்குத்
தணிவில்பே ரளிதலைப்பட வுலகுசெய் தவத்தால்
பணிமொழிக்கனி பவளவாய் புதைத்தனள் பரிவால்
கணிதமில்புகழ் குழகனைப் பணிந்திவை புகலும். 1

54 உலகிலுள்ளபல் லுயிர்கள்மற் றியாவையு முளுற்றும்
அலகில்வெ(வ்)வினையொழித்துய ருட்கதி யளிக்கும்
தலமதெவ்விடத் ததுவெனத் திருவுளந் தழைத்துக்
குலவுவெண்பிறைக் கண்ணியோன் மகிழ்ந்து
கூறுவனால். 2

55 வெண்ணிலாப் பொழிந் தமுதுகும் பவளவாய்
மின்னே
எண்ணிலாததலந் தரணியின் மிக்குள வெனினும்
கண்ணினேர்வரும் பொறியில வெனுமொழி கடுப்ப
மண்ணுளேதிருக் குடந்தையென் றொருபெயர் மருவும்.
3

56 அப்பதிக்குயர் சிறப்பெவ ருரைக்குந ரணங்கே
இப்புவிக்கொரு திலகமற் றெமதரு ணிதிக்கு
வைப்புமுத்தியின் பயன்விளை செறுவது வளத்தால்
ஒப்புவேறில நமக்குளங் காதலித் துவக்கும். 4

57 கின்னருட்பெருக் குறழ்மற் றிருகரை நிமிரும்
பொன்னிநற்றிரை யரிசிலென் றிருநதி புணர்ந்து
மன்னுமுத்தியா மத்தலத் திருவுக்கு மாலை
என்னவேகரைக் குறும்பெறிந் தினமணி கொழிக்கும்.
5

58 இரும்பவக்குறும் பெறிந்துவெம் பாவத்துக் கெரியாய்
வரும்புனற்பொன்னி பல்லுயிர்க் கருடரு மாதாத்ம்
தரும் பசுங்கதிர்த் தடமுலைப் பாலெனத் தயங்து
பெருங்புவிக்கெலா மமுதெனத் தண்ணளி பெருக்கும்.
6

59 காவிரிக்கரைப் பால்குழைத் தளியினங் கஞலப்
பூவிரிக்குநற் றருவெலா மசைந்துவிண் பொலிவ
சேவிருக்குநங் குடந்தையிவ்வளவெலாந் தெரிந்து
கூவிரிக்குநற் பசுங்கா கம்பிதங் குலவும். 7

60 அரிசிலின்கரை பொன்னியின் கரையவிர் மணியும்
பொருவில்பூக நற்கதலிமாத் தூங்குபொன் கனியும்
திருவினீ ணகர்க்குடந் தையைச்சூழ்ந் துராய்ச்
செறிவவுரைசெய் பொன்மணிவா மமேகலையுடுத்த
தொக்கும். 8

61 விடந்தலைச்சுடர்க் குதவின னெனக்கடல் வெருவிக்
கிடந்தலைத்தலை வணங்கிவண் டினங்கிளர் கிளவி
துரந்தலைத்தவம் புயக்கரங் குவித்தெனச் சூழும்
தடந்தலைப்படுங் குடந்தையைச் சூழ்ந்தபூந் தடங்கள். 9

62 நிரம்புசெல்வத்துக் குடந்தையைப் புரிசைசூழ்
நிமிர்வ
பரம்புமுத்தியாம் பைம்பொனின் கிழிமுகம் பதிய
விரம்புபுண்ணியக் கடவுளெம் மடியவர்க் கென்றே
வரம்புமுத்திரை வனைந்தது கடுக்குநாம் வழுத்தில். 10

63 பழுதில்கற்புடை மலைமலி கங்கையைப் பார்க்க
எழுகிரிக்குலங் குடந்தையில் வந்தென வேய்க்கும்
முழுமுதற்பத முத்திவீட் டேணிபோல் முளைத்துச்
செழுவிசும்பறுத் தகடுகீண் டெழுந்தபோல் சிகரி. 11

64 போக்கறுத்துயர் புரிசையுறு சிகரியம் பொருப்பு
மேக்குயர்ந்த பொற்சிகர மும்போன் மணிவீடும்
ஆக்குநற்றிருக் குடந்தையி னீழல்பட் டன்றே
தூக்குமண்டத்தின் பொன்னுல காயது சுவர்க்கம். 12

65 வச்சிரத்தன வெள்ளியந் தகட்டன வயங்கும்
முச்சிரத்தன நித்தில மாளிகை யுயர்வ
நச்சுபொற்புறு குடந்தையெத் தலத்துக்கு நாதன்
நிச்சயம்மிது வெனும்புகழ் வளர்ந்தென நிகர்க்கும். 13

66 உள்ளமார்திருக் குடந்தையில் மணிமறு கொளிரும்
வெள்ளியந்தகட் டிழைத்தொளி விரிக்குமா ளிகை
மேல்
கொள்ளைவண்டுளர் கோதையர் நடங்குனித் திடுதல்
எள்ளிலவெண் முகிற்குலங்களின் மின்னென
வியையும். 14

67 மரகதத்திழைத் தவிர்தரு மாளிகைத் தலமேல்
விரவுபொற்சுடர்த் தீபதண் டொளிவிடு விளக்கம்
சரவுநீர்த்தடத் தம்புயத் தணங்குபல் லுருவாய்ப்
புரவுபூண்ட நங்குடந் தையினள் போலாம், 15

68 அனகநற்கிரி யுயிர்த்தபொற் கொடியிடை யணங்கே!
கனகநற்றிரு மாளிகைக் குலங்களிற் கவின
மனவிழைத்தபொற் றசும்புகள் வயங்குத லுதயத்
தினகரக்குலங் குடந்தைசூழ்ந் திருந்தன சிவணும்.
16

69 இங்கயற்கிறும் பூதுசெய் குடந்தையி லியங்கும்
செங்கயற்கணு ரனப்பெலாந் தனித்தனி தெரிய
அங்கயற்கணீ ரர்நல்லார் நோக்கல் போலலர்ந்து
பங்கயத்தடம் பற்பல சூழுமப் பதியை. 17

70 பொருவின்மா மணிமாளிகை சூளிகை பொன்னூர்ந்து
இருவிசும்புயர் செய்குன்று மணிமுகப் பிலங்கும்
திருவிளமண் டபந்தமனி யக்கோ புரஞ்சிகரம்
மருவுகண்கவர்ந் தெரிபசும் பொன்னிறல் வயங்கும்.
18

71 கொழுதிவண்டினம் முரன்மலர்ச் சோலைசூழ்
குடந்தைப்
பழுதினல்வளம் பார்த்தவண் பிரிந்திடாப் பரிவால்
தொழுததேவர்கண் ணிமைத் திடார்நிற் றல்போல்
எழுதுசித்திர மண்டப மருகெலா மிலங்கும். 19

72 அத்தலத்துறும் மடநலா ரழுகுகண் டலர்மேல்
வித்தகத்திரு வணங்கெனும் பெயர்கொடு மெலிவாள்

மத்தமால்கரி பொருவிறற் காளையர் வினையால்
சித்தசன்னுருக் கரந்தனன் ஞணிஞற் றிரிவான். 20

73 சங்கமம்புய மிருநி தித்தடக் கையாய்ப்
பொங்குசெல்வத்து மாக்கடென் குடந்தையிற் பொலிவுற்று
அங்கண ரவருமிருத் தல்கண்டழுக் கறுத்தகைப்
பங்குகாலனுந் தோற்றன னொருவிழிப் பயத்தால். 21

74 பாணியாதொரு போதுநற் கலைபல பயின்று
பூணுநல்லறி வடைந்தவர் குடந்தையிற் பொலிவார்
கோணிலாத வெண்ணீறு தம்முள்ளமாங் கோயில்
வாணிவெண்ணிற மேற்பொலிந் தாலென வனைவார். 22

வேறு.

75 மின்னொளிசெய் குன்றினடி வீழு மழைகம்
தன்னையு மதக்கரிக டன்னையுந் திப்பால்
அன்னமு மடந்தையரும் வேறறிய லாகா
முன்னமதி லன்றியிள மூரல்மட நல்லாய். 23

76 தேவரொடு மாமறைசொல் வேதியர்கள்சேர்
மாவியலு மனதியலு மணந்துவரு காலை
யா(வ)ரறி வாரிமையி லங்குமது வன்றிப்
பூவிலுளர் வானிலுள ரென்றிவர்கள் பொற்பால். 24

77 இந்திரர் நரேந்திர ரிணைந்துவரு போதச்
சுந்தரரை யின்னரென யாருணர்வர் தோகாய்
கொந்தலர் குடந்தையினி ஞகரொடு கூடி
வந்தருள் குபேரரையும் வேறெவர் மதிப்பார். 25

78 அள்ளிலை யயிற்படைஞ ரோடுமத வானைக்
கொள்ளையையு மின்னரென யாவர்கள் குறிப்பார்
தெள்ளுமறை வேள்விமுடி வாகிவரு தேரும்
ஒள்ளிய குடந்தையிமை யோர்தமு மோரார். 26

79 வேள்வியி லெழும்புகையு மின்னனைய நல்லார்
நீள்குழ லிடும்புகையும் மாளிகையி னெற்றிக்
காளமுகிலும் பிறிது கண்டறிய லாகா
வாள்செய்மதி மாடல மதித்தவத னத்தாய். 27

80 காரகில் நறும்புகை கனிந்தமொழி நல்லார்
வார்குழல் வகிர்ந்தன ரிடும்பொழுது வானுர்
நீர்கெழு முகிழ்த்தொளிர் மின்னுமைவர் நீதிச்
சீர்கெழு குடந்தைமணி மாளிகைசெய் குன்றில். 28

81 மின்னென நடப்பர்சிலர் வேண்டுமை யாகக்
கன்னலை முறித்ததென மிழற்றுவன களிப்பால்
பொன்னெழுது கந்துக மடிப்பர்சிலர் பூவைப்
பன்னுகுயில் தகை(ந்)தாடுநர் பாடுரர்கள் பல்லோர். 29

82 இம்பரில் வள........ - ...ளி தோகையெழ லன்னம்
செம்பதுமை யன்னவர்கள் பின்னருகு சேறல்
(ல)பம்பொன்னெழி லின்னடை பசுங்குதலை கற்கும்
ஆம்பொருளி னல்லது வளர்த்துபரி சன்றே. 30

83 விண்கவர் முலைக்கிரி சுமந்துவரு மின்பொன்
கண்கவர் வனப்பினர் களித்துவரு பண்ணை
எண்கவர்வில் வேள்படை யெழுச்சியையு மொக்கும்
தண்கவர் பொதும்பர்கழை தழைத்தகுட மூக்கில். 31

84 பூசனைசெய் வாருநமைப் போற்றிவரு வாரும்
நேசமுறு வார்களும் நினைந்துருகி மும்மைப்
பாசமொழி வாரொடு பசும்பொனுல கென்னத்
தேசுவரு குடந்தையி னெருங்குவர் கள்செவ்வே, 32

85 உம்பருல கம்புகழ் குடந்தையினி லொன்றும்
கொம்பர்நடை கற்றனைய கோற்றொடி நல்லாரும்
அம்பரமின் னுர்தமையு வெற்றிபலர் கா..........
இம்பர்நிழ லன்றியுல கீன்றமட நல்லாய். 33

81—4-வது அடி சிதைந்துகாணப்படுகின்றது.
85—3-வது அடி இறுதிச் சீரில்லை.

86 பாய்பரி விலாழியொடு பண்ணமைகை யாவின்
தூயகர டப்புன றுதைந்தடி யிழுக்கிச்
சேயிமையர் பொன்முடி யுரிஞ்சிபொடி சிந்தி
ஆயன றுணக்குமெழி லாருமணி வீதி. 34

87 முன்னுமறை கூறுமொலி முப்பொருள் விரித்துப்
பன்னுமொலி நம்புகழ் படித்துமொலி யம்பொன்
கின்னரி பழித்தமொழி யார்கணவில் கீதம்
மன்னுதிரை யார்கலி யடக்குமணி வீதி. 35

88 எரிபொரு மணிக்குவையு மீட்டுநிதி வெற்பும்
வருசுவைய நெற்குவடும் வண்டரள வெற்பும்
திருவநக ரிற்பொலிவ சேண்வரைபொற் காமன்
வருபகையை யஞ்சியிவண் வந்தன கடுக்கும். 36

89 விஞ்சைய ரியக்கருயர் கந்திருவர் மேவு
மஞ்சையர் கருங்குழல் மடந்தையர்க ளோடும்
நஞ்சமணி கண்டனமு தேசனெனும் ஞான
புஞ்சமரு ணம்மடிகள் போற்றுவர்க ளென்றும். 37

90 முப்பத்து முக்கோடி யிமையோர்கண முதிர்ஞானம்
துப்பிறவ மாமுனி கணங்க ளலைத்ததும்
அப்புநதி கங்கைமுத நீர்த்தமவை யாவும்
ஒப்பில்குட மூக்கிடை வசிப்பரொழி யாரே. 38

வேறு.

91 கரும்பெனத் திரண்ட மென்றுள் கத்திகைக்
கருமென் கூந்தல்
குரும்பையின் பணைத்து விம்மும் குவிமுலை
யணங்கு கேட்டி
இரும்பு வனத்திற் கும்ப கோணத்தி
லிணையி லின்பம்
வரும்பெரு வளங்கள் கூற வல்லவர்
யாவர் மாதோ. 39

92 வாள்கிடந் தனைய கண்ணாய் நின்னுள
வனசத் துள்ளும்
தாள்பணிந் துருகு மன்பர் தம்மனக்
கமலத் தாடும்
கோளறுத் துயரும் வேதத் துச்சி
யுங்குல வுவபோல்
நாளுமக் கும்பகோணப் பதியில் வீற்றி
ருப்போம் நாமே. 40

93 மடங்கலஞ் சீற்றத் துப்பின் றனைமாந்
தாதா வென்போன்
குடந்தையிற் பெரிய வன்பாற் கும்பலிங்
கத்திற் பூசை
தொடங்குபு புரிந்த வாற்றாற் றுளையெயிற்
றுரகந் தாங்கும்
தடங்கட லுலக மெல்லாந் தனதடிப்
படுத்தி யாண்டான். 41

94 மாளவ தேயந் தன்னில் சத்திய
கீர்த்தி மன்னன்
கேள்வனைக் கொன்று கெட்ட பார்ப்பனி
கிளந்த பாவம்
நாளலாக் குடந்தைப் பொன்னிக் காசிப
தீர்த்தம் நண்ணி
ஆளுமா மகத்தி னண்முன் குடியே
தீர்ந்திட் டானே. 42

95 தீங்கதி ரமுதங் காலுந் திங்கடென்
குடந்தை மேவி
ஆங்கமிழ் துருவ சோம லிங்கவர்ச்
சனையி னாலே
ஈங்குட றழைத்து வானோர்க் கின்னமு
தீயப் பெற்றே
ஓங்குயர் தழைப்பத் தாது முதவிடப்
பெற்றிட் டானே. 43

96 இருநிதிக் கிழவன் கும்ப கோணத்தி
னெய்தி யன்பால்
பொருபுன றடமுந் தொட்டுப் புண்ணிய
சோம னாதன்
அரியவர்ச் சனையி னாலே வாருயிர்த்
தோழ னாகித்
திருவள ரளகை யாதி பதியெனச்
சிறந்திட் டானே. 44

97 ஐம்புலக் குறும்பு வென்ற வங்கிரா
வுயிர்த்த பொன்னன்
செம்பொருட் சோம லிங்கந் திருந்துமர்ச்
சனையி னாலே
உம்பருக் கரச னாகி யொளிகலைக்
கடலை நீந்திப்
பைம்பொனின் றருவி னீழற் பனற
நணமும் பெற்றான். 45

98 சுந்து மாயப்படலை மாலுங் குடந்தையிற்
பணிந்து நெஞ்சம்
கசிந்துமா லீச லிங்கங் கவின்பெற
நாட்டிப் பூசை
வசிந்துசெய் தசுரர் வாணாள் வாட்டுமற்
றவையும் பெற்றே
ஈசன் சந்துமெய் யழகும் பெற்று
வைகுந்தந் தனிலுற்றான், 46

99 மங்கையி திறும்பூ தாகும் பாவல்ல
மறைவ லாளன்
கங்கையி லென்பாய்த் தோன்றக் கண்டுமா
ணாக்கன் கூறச்

98-ஆம் பாடல் எதுகை சரியில்லை
99-ம் பாடல் முதலடியில்—பாவன்ன என்று காணப்படுகிறது.

சங்கையுற் றேகிப் பொன்னித் தடங்கரை
வைத்து நோக்கப்
பங்கய மாக வன்னை யுயர்கதிப்
படரப் பெற்றாள். 47

100 துளையெயிற் றுரக ராசன் றெல்லைமா
ஞாலந் தாங்கு
முளையிலா வலியின் றுகக் குடந்தையி
லுற்றுப் போற்றிக்
களைகணு நாக நாதன் கருணையாற்
றிறலும் பெற்று
வளைபடு பிலமுங் கங்குல் மாய்ந்தொளி
வளரப் பெற்றான், 48

101 மடம்படு மறிவாற் றக்க னிழைத்திடு
மகத்தி லூட்டும்
கடம்படு மவியால் சூரன் படுத்திய
கலக்கந் தீரக்
குடந்தையி னுக நாதன் குரைகழல்
பழிச்ச நாமே
நடங்குனித் திடுதல் கண்டு மறையெலாந்
தீர்ந்தார் நாகர். 49

102 பாயிருள் பருகுங் செங்கேழ்ப் பருதிதன்
கதிரைப் பன்னி
வாயுரை கேட்டுத் தேவர்த் தச்சன்வெவ்
வாளால் போக்க
நோயுழந் துற்று நாயக னேன்றுள்
போற்றிச்
சேயநற் கதிவெங் கோளி றைமையுஞ்
செவ்வே பெற்றான். 50

102-வது பாடலில் 3-வது அடிசீர் சரியாக அமையவில்லை.

103 சொற்றவ ரமுதம் பொங்கித்த ரர்தலந்
தொடங்கி யண்ட
முற்றிய புனலி னூடு மொக்குளிர்
வடிவ மாகி
உற்றகா ரோண மென்னும் பெயரொடு
மூலம்
ஒற்றிய விலிங்க மாகிக் குடந்தையி
லெழுந்த தன்றே. 51

104 பச்சிளங் கரும்பு கேட்டி சிலவான
பசும்பொன் மேரு
வச்சிர யாக்கை போழ்ந்த வனைசுட
ராழி வேண்டி
நச்சிய குடந்தை நண்ணி நளினமா
யிரத்தி லோர்பூ
அச்சுதன் குறையக் கண்டு வலக்கணிட்
டருளிற் பெற்றான். 52

105 செங்கதிர்ப் பருதி கோடி யிருநிலஞ்
சேர்ந்த வென்னத்
தங்குவை குந்த நின்றுந் தாழ்ந்தபொன்
விமானத் தூடு
பங்கயச் செங்கை மாயன் குடந்தையிற்
பணிந்து போற்றி
அங்கணம் மாணை தன்னு லறிதுயி
லமர்ந்தா னன்றே. 53

106 குமிழ்மறிந் தோடும் வாட்கண் கோகிலக்
குதலை கேட்டி
உமிழ்திரை நிலத்துப் பாவ கோடிகட்
கெரியாய்த் தோன்றித்
தமிழ்வளர் குடந்தை நம்பொற் சன்னிதி
சாய்ந்த கும்பத்து
அமிழ்துபாய் தரங்கப் பொற்று மரைத்தட
மமருமன்றே. 54

103-வது பாடல் 3-வது அடி சீர் சரியாக வில்லை.

107 அம்பரத் தவருக் காசா ளுற்றிய
சோம யாகம்
கும்பகோ ணத்தி லாற்றக் குபேர
னம்மெல் லாலே
செம்பொனின் மாரி பெய்யுந் தீர்த்தமொன்
றுண்டு கண்டாய்
இம்பரி லதனுக்கே மகாமக மென்னும்
பெயரு மெய்தும். 55

108 வஞ்சகப் பாவ கோடி செய்யினும்
மாக மாதம்
தஞ்சமென் றுடி ளுரேற் றீர்த்தரு
டன்னை நல்கும்
எஞ்சலி னமது வாம பாகத்தி
லிருக்கும் பொன்னிக்
கஞ்சநாண் மலர்கள் மல்குங் காசிப
தீர்த்தங் கண்டாய். 56

வேறு.

109 தென்புலத் தவரி லொருவரைக் குறித்துத்
திலமள வாயினுஞ் சிரார்த்தத்து
அன்புறு பிண்ட மளிக்கினுங் கோடி
பிதிரர்களுக் கருக்கிய மளிக்கும்
மன்பெருமை சீர்த்திப் பாவனதீர்த்த
வளங்கெழு குடந்தையில் வயங்கும்
துன்புறு முடைநோய் யாவையுந் துடைக்கும் .. ....
ரறர தீர்த்தமுந் துலங்கும். 57

110 சேட்டிளம் பருதி யாயிர முதயஞ்
சேர்ந்தெனத் திருஞ்
சூட்டுவா ளுரக மரிச்சனை புரிந்த
சோதி தென்கீழ்த் திசையின்

வாட்டு மச்சுவத் தீர்த்த முண்ட தற்குக்
கீழ்த்திசை மருங்கு
மூட்டுவெம் பாவ மொழித்தருள் கொழிக்கு
முழங்கழ றீர்த்த முண்டால் 58

111 முரிதிரை சுருட்டிக் கரைக்குறும் பெறிந்த
முழங்குதிரைக் கங்கையே முதல
பொருபுகழ் தீர்த்த முள்ளவைக் கெல்லாம்
புகலிட மாய்ப்பவம் போக்கித்
தருசுவை யமிழ்திற் சுவைத்தநீர்த் தரங்கந்
தண்ணளி கொழித்திருந் தடாகம்
திருவருட் காயா ரோகண விலிங்கத்
தென்றிசை யூழிக்குஞ் சிவனும். 59

112 அப்பெரு வாவிக்கரிய .... மென்றறை
குவ ரன்றிச்
செப்புவர் பிரம தீர்த்த முத்திதீர்த்தமுங் கன்னி
தீர்த்த மென்று
இப்புவி வழுத்துந் தீர்த்த மற்றதுவே
யிரும்புகழ் மாமக தீர்த்தம்
முப்புவ னத்துள் தீர்த்த கோடி கட்கு
முதன்மையென் றருமறை மொழியும் 60

113 சிங்க வேற்றுச் சிவான வாகுர சேர்ந்தருண்
மாசிமா மகத்தில்
தங்கிய கும்பச் சிங்கவே றுதையந் தந்தந்தனு
டரணிவான் படரும்
கங்கைமுதல் தீர்த்தமு மயன்மால் கடவுளர்
கணங்களுஞ் சூழ
மங்கை நின்னெடு மாமக தீர்த்த நாப்ப
ணியைந்து வீற்றிருப்போம் 61

112-வது பாடல் முதலடியில் சில எழுத்துக்கள் காணப்பெற
வில்லை.

114 அத்த மருங்கிற் சிரார்த்த மேமுதல் தருமங்க
ளன்பொடு மளிக்கில்
சுத்தமா மொன்றே கோடி யாய்மயங்குஞ்
சுநந்தி பணிந்து டனுகும்
புத்தமு தனைய தீர்த்தநீர் படிந்தாற்
புனபவக் கிளையெலாம் போக்கி
முத்தியு மவர்க்கே யெனச்சு ருதிநாத் தழும்பு
ஏறவு மொழியும். 62

115 கங்கை காளிந்தி நருமதை சரையு கன்னி
கோதாவிரி பொன்னித்
துங்க பத்திரை யோடருண சரசுவதி யொன்பது
முருக்கொடு துன்னிய
சங்கமமா மகதீர்த் தம்படிந் துதம்பா
வங்க ணீங்கி
அங்கணன் காயா ரோகணன் கோயி லணைந்து
வீற்றி ருந்துல களிக்கும். 63

116 பளிக்கறை மருங்கிற் கனகதிர்ப் பருதி
பதித்தென வடவை கொப்பளிக்கும்
ஒளிக்கதிர்ப் படலை விடுசுட ராழி காவிரி
யொருபுடை யுவப்பால்
அளிக்கு ளுடிவைப்பச் சக்கர தீர்த்தமா
மறைதனி லாரெனும்
களித்துட ளுடிப் பவமெலாம் நீங்கிக்
கிளையொடும் பரகதி காண்பார். 64

117 ஆதிகும் பேசன் சோம லிங்கேச னருட்கடல்
நாகலிங் கேசன்
சோதிகா ரோண விலிங்க மோரெங்குஞ் சுயம்புவங்
குடந்தையிற் றுன்னிப்
பாதகங் கோடி புரிந்தவ ரெனினும் பணிந்திடில்
முத்தியில் பயில்வார்
பூதல மடந்தைக் காருயிர் போலும் பொற்பதுப்
புகழையார் புகல்வார். 65

வேறு

118 அத்தலத்தி லுதித்தவர் தாங்க ளெப்பொழுதே
முத்திபெற்றிடு நினைப்பருஞ் சுருதி மொழியும்
எத்திறத் தவரெனினு மத்தலத்தினி லிருப்போர்
சித்தசுத்திவந் தகமகிழ் சைவராய்த் திகழ்வார். 66

119 வருசரோ ருகத் தளிரம் செய்யவாய்
முகிழ்ப்ப வாய்வழுத்துறக் கனிவுற்றுரை செய்சீர்
திருக்குடந்தை யில்வதிந்தவ ருள்ளிச் சீர்சரோருகத்
திருத்துவர் நமது சேவடியே. 67

120 மெய்யெ லாமுழு நீறணிந் தக்கமே
மிலைந்துசே வடிக்கரிச்சனை சிறப்பொடு மியற்றி
ஐய! சிற்குண! சங்கர! வீச! வென்றன்பாய்
உய்யவே யுரைத்தெம் பெயர்முடிக் கணிந்துவப்பார்.
68

121 மற்றும் வானுள தேவரை நோக்கவு மதியார்
முற்றுநம்புநம் சரணமே சரணென முடிப்பார்
பற்றுமஞ்செருத் துருகுநெஞ் சழுத்திய பரிவால்
உற்றநம்மையே யடைந்து வீட்டின்பமே யுறுவார்.
69

122 அப்பதிக் கணுங்கும்ப லிங்கத்தி லன்பாய்
ஒப்பிலா திரைபத்து நான்கெனுந் திதியொடு
செப்புசீர் விதிபாதமும் புணர்ந்திடு தினத்தில்
தப்பிலர்ச்சனை புரிந்தவர் முத்தியிற் சார்வார் 70

119-வது பாட்டுச் சிதைந்துள்ளதால் இதனைக் கண்டுபிடிப்ப தரிதாகின்றது.

123 முருகுகொப்பளித் தளியுறு முகையான் மலரும்
குருவகிற்புகை நீரொடுங் கந்தமுங் கொண்டே
உருகுகாதலா லத்தலத் தருச்சனை யுஞற்றில்
பெருகுநல்லறம் பொருளொடும் காமமும் பெறுவார்
71

124 என்றுவானவ ருய்யநஞ் சுண்டவ னியம்ப
மன்றல்நாறுபூங் கோதையும் மகிழ்ந்துநல் வளங்கள்
துன்றுமத் தியாவர் 72

கும்பகோணச் சிறப்புரைத்த வத்தியாயம்

முற்றும்

124- இச்செய்யுளில் தொடர்ச்சி யில்லை
இதன்பின் ஓரேடு இல்லை

[இப்பகுதியில் ஏழு பாடல்கள் எழுதிய ஏடு இல்லை]

125 மெல்லிய குழைந்து தூய்மை மேவிய
கிருமி தீண்டாப்
பல்லவம் பறித்தெடுத் துப்பழுதுரு
நவமிதி ......ய
வில்வநற் கிளையிரத்தின மாமென
விழைந்தெ டுத்துச்
செல்வமென் றுன்னி யையன் சேவடித்
தலத்திற் சாத்தி. 8

126 அரிய தின்னண மென்றாலு மன்புட
னெருநல் கொண்டது
உரியது மாகு மின்றேற் கிருமி
யுண்டதுவு மாகும்
புரைபெறு பசலை யேனும் புகலுமெவ்
வியல்பிற் றேனும்
சருகிலை யெனினும் வில்வப் பொடியதுஞ்
சாத்த லாமே. 9

127 எவனிவ ணுரைப்ப தென்னி லீசனுக்
கிகுதொப் பாகும்
புவனியி லொன்று மில்லை வில்வத்திற்
பூசை சாங்கம்
புவன மகிழ்வில் வமின்றேற் பயனின்று
பூசை யம்ம !
தவநனி தூப மாதி சாங்கபூ
சனைசெய் வார்க்கே. 10

125-வது பாட்டு இரண்டாமடி சிதைந்து காணப்படுகிறது.

128 சோடச வுதவி யின்றேற் றுணைபெறு
வனநற் சேர்த்தில்
தேடரு மன்பிற் செய்யுஞ் சாங்க
வற்சனைக ளாகும்
மாடகத் திவவு நல்லியாழ் வடித்தென
மிழற்று மம்பொன்
பாடகக் காலி னுடன் பாங்கனை
மனத்தி னுற்கே. 11

129 வத்திரம் பூணூல் கந்த மலர்கற்
றூப திபம்
புத்தமு தனைய வன்னம் புனலடைக்
காயே யாதி
புய்த்திலான் வில்வ மொவ்வொன் றுதவி
லொப்புக் கொள்வான்
கைத்த வெவ்வி டமுண்டு களங்கனி
யனைய கண்டன்' 12

130 ஆதிரை சோம நன்னா ளருவிதி
பாதங் கூடி
மாதி பெத்துன் னுன்கு வருதினம்
நிசியில் வில்வத்து
ஓது மற்சனை செய்வானே லொருங்கும்
பிரம கத்தித்
தீதகன் றுமையாள் கேள்வன் செம்பொனின்
தாளே சேர்வன். 13

131 கூடிளங் குழைகொண் டம்பொற் குரைகழ
லற்சித் தன்பாய்
மாவிள வடியுண் கண்ணாள் மனாளனை
வழுத்தி னோர்கள்

பூவிடை யனெக்கொடிய கணிதம்
புகலும் புந்தி
மேவிய விருத்திமா வீட்டின்ப
மடைந்தா ரம்மா! 14

132 ஓடவைத் துலையிற் சேமித் துருக்கிய
வொளிகொள் மேலாம்
ஆடகத் தமைத்த வில்வ மஃதுமற்
றதம மானுல்
ஏடவிப் புவனத் துள்ளே யெப்பொரு
ளிதற்கொப் பாகும்
நேடில்முக் காலத் துள்ளும் விதுமவிலம
நிகற்ற முண்ண. 15

133 அறைந்திருந்து நூலங்கங் கூடி
னற்புத மதாகும்
நிறைந்ததவ் வற்புதங்க ளாயிரம் மாற்றி
நிமலன் றுளில்
உறைந்தபொன் னன்பி றுலே யொண்மலர்
சாத்தும் பேறு
பிறந்தகூ விளமொன் றிந்தாற் கோடிபங்
கதிகம் பேசும். 16

134 கானிடை நட்ட மாடுங் கண்ணுதல்
கமலத் தாளின்
மானிடர் மாட ராசி வழங்குமர்ச்
சனையிற் கோடி
தானுவந் தளிக்கும் வில்வம தறுகிளை
யொன்று சாத்தில்
ஏனையர்ச் சனைக டானும் வில்வத்துக்
கிணையொப் பாகும். 17

135 சொல்லருஞ் சாலி ராசி தூமமென்
கூந்தற் செவ்வாய்
அல்லியம் பொகுட்டின் மேய வணங்கனுள்
பங்கன் றன்னை
புல்லுமற் சனையிற் கோடி மடங்கருள்
புரிந்து நல்கும்
வில்வமொன் றென்று கூறு நாத்தழும்
பேற வேதம் 18

136 அற்புதம் பிரமகத்தி யற்புத நறவமாந்த
லற்புதம் பசும்பொன்
பொற்கள்ளல் கணித மனந்த
கோடி ....
யற்புதங் குரவன் தேவி யணைந்தவெம்
பாவம் நீக்கும்
அற்புத மல்ல வில்வ மரன்றனக்
களித்தா லம்மா. 19

137 சொற்றவிப் பதக ரோடுந் துணையுற்றுன்
றுனு முய்வன்
பெற்றவ டனக்கு மூத்தாள் பின்பிறந்
தாடொட் டானும்
நற்றவக் கன்னி தாட்பு ணர்ந்த
வின்னவைக ளெல்லாம்
எற்றுமே வில்வ மீச னிணைடித்
தலத்தி லேறல் 20

138 கள்விலை மகளிர் காமக் கலவியிற்
கள்ளுண் மாதர்
தெள்ளுதீங் குதலை மாந்தி செறியெயிற்
றூற லுண்டு

136-வது பாடலில் இரண்டாமடி இருசீரில்லை.

கொள்ளைவெம் பாவ மையன் குரைகழற்
கமலப் போதில்
தள்ளரும் வில்வஞ் சாத்திற் றுனெரித்
தோட்டுந் தானே 21

139 பூசுரர் சோலைக்கு நேரா மவர்களைப்
புடைத்துச் சீறித்
தேசறப் புன்சொற் கூறிச் சினத்ததீ
வினைக ளெல்லாம்
ஈசனுர் கமல பாதத் திணையிலா
வில்வ மிட்டால்
ஆசறச் சுட்டு நீக்கு மையுறேல்
சரத மன்றே. 22

140 செம்பொனின் காவுக் கொப்பாஞ் செழித்தவெண்
பொன்னுஞ் செம்பும்
இம்பரி (ற்) .... பஞ்ச லோக மெடுத்தவன்
காவி னுலே
வெம்புறு பவங்க ளெல்லாம் வில்வமொன்
றுமையாள் வேந்தன்
அம்பொனின் சரணத் திட்டா லகற்று
மீதைய மின்றே. 23

141 பஞ்சபா தகங்க ணேரா மிவைகள்மேற்
பன்னு பாவம்
உஞ்சிடா திழைக்கும் பாவமும் பமனு
பாத கங்கள்
நஞ்செனும் பவங்கட் கெல்லா நமனெனத்
தோன்றிச் சீறி
எஞ்சிடா தெரிக்கும் வில்வ மொன்ற
ரற்கியி லம்மா. 24

142 இத்தனை மேன்மை யுற்ற வில்வமெவ்
வேலை ஈசற்கு
உய்த்திட லென்னி லெல்லா மஞ்சன
முடன்கொண் டாடச்
சுத்தவெண் ணீறு கந்தஞ் சூழ்ந்தவெண்
டுகிலுஞ் சாத்தி
வைத்தபின் னிவற்றிற் கன்பான் மகிழ்ந்தரிச்
சிக்க வேண்டும் 25

143 எருக்கொடு கொன்றை சூடு மீசனுக்
குவகை யெல்லாம்
பெருக்கிடும் வில்வம் சாத்திற் பிரியும்வெம்
பாவ மென்னுஞ்
செருக்கினுற் சேர்ந்த தென்னச் செப்பிடு
மிருக்கி னுள்ளும்
உருக்குசா பால மென்னு முபநிடத்
துள்ளுங் கூறும். 26

144 துப்புறழ் தொண்டைச் செவ்வாய்த் தூமொழி
யுமையாள் கேள்வன்
முப்பெருஞ் சுத்தி முக்கண் முப்பொருள்
முக்கு ணங்கள்
வைப்பெனக் கிளைகண் மூன்று மதித்தனன்
மறைகள் வில்வத்து
ஒப்புவே றில்லை கண்டாயு ரவுநீர்
ஞாலத் துள்ளே. 27

145 மெல்லிலை வில்வம் சாத்திப் பின்கர
விர மாதி
மல்லலம் மலர்கள் சாத்தி மகிழ்ந்தகிற்
றூபத் தோடும்
எல்லொளித் தீப மாதி யெழிலுப
சாரஞ் செய்வான்
அல்லறிர் வில்வம் நாளு மையனுக்
களித்தல் வேண்டும். 28

146 கருணையா னெய்யி லட்ட கடுஞ்சுவைப்
பண்ணி காரம்
வெருகனிக் கதலி தேமா வருக்கையின்
கனிகள் பாலில்
தருசுவைப் பாய சாதி தான(வர்க்)
காயகற் பூரம்
பெருகிய வன்பி னுலே பிஞ்ஞுகர்க்
கீந்த பின்றை. 29

147 திருச்சுடர்த் தீப மாதி திருந்தருக்
கியமு மீந்து
கருச்சுடு மஞ்செ ழுத்துங் கனிந்துநூற்
றெட்டு மெண்ணித்
தரிச்சிடுஞ் சானு பாதத் தரையுற
மடித்து வேளை
யெரிச்சிடு சதா சிவத்தை வேதாபி
முகமாய் நோக்கி, 30

148 அழைத்தவர் வாக னுதி வரிச்சனை
யறியே னெந்தாய்!
மழைத்தகண் ணுமையாள் கேள்வ! வானவர்
தலைவா! நாயேன்
பிழைத்தது பொறுத்து நின்ருட் பெய்நிழ
லாள்வா யென்றும்
தழைத்ததோர் மனுவாற் பூவைத் தண்புன
லோடு நல்கி. 31

148 கைவந்த வில்வத் தாலே கடவுள்மேல்
முக்காற் றெட்டுத்
தைவந்து பின்னி சானஞ் சத்தியோ
சாதி யந்தம்
மெய்வந்து செபித்துச் சாத்தி விருப்பொடும்
பணிந்து முக்கால்
நைவந்து சூழ்ந்து போற்றி நாயகன்
முன்னர் வைகி. 32

150 ஆயிர மஞ்செ ழுத்து மகங்குழைந்
தெண்ண வேண்டும்
ஏயுமைஞ் ஞூற தேனு மிதனுளும்
பகுந்த தேனும்
மாயுநெஞ் சோடு மெண்ணி மகிழ்ந்தரிச்
சனையு நல்கிச்
சேயபூ சனைக ளெல்லாந் தெளிவுறச்
செய்த பின்னர். 33

151 குட்டமே முதல நோயுங் கூற்றுவன்
பயமும் வெந்தீச்
சுட்டெரி பிரம கத்திச் சூழலுந்
தீரு மென்று
உட்டெளி மனுவைக் கூறி யுன்னிமுக்
காலு நாளும்
சிட்டனா லயத்தின் றீம்புனல்
பருக வேண்டும். 34

152 நெய்யுடை யடிசி லேனு நீரடைக்
காயே யேனும்
ஐயனுக் களித்த பின்ன ரருந்துவா
னன்றி யிந்தப்
பொய்பெறு பௌத்த னன்பு புரைபடு
வயிற்றி னிட்டான்
நெய்விடு மலந்தின் றானு மிழிகுவ
னிரயத் தன்றே. 35

153 நித்திய கன்ம முற்றும் நேர்ந்த பின்
சைவர் தம்மை
எத்திசை யெனினு நேடி யீகநல்
லன்ன மாதி
முத்தியை யளிக்கு மீது முகமனன்
றுண்மை யன்பர்க்கு
உய்த்திடி லீச னார்க்கே யுதவிய
தொக்குங் கண்டாய். 36

154 அன்பராஞ் சைவர் தம்மை யருத்திய
பின்னே முன்னே
இன்புற நுகர்த லென்னி லீசனே
யிவனென் றெண்ணி
மன்பெறு தூப மாதி வழங்கிமுன்
னருத்து வானேல்
தென்புல வாண ரெல்லாஞ் சிவகதி
சேர்வார் திண்ணம் 37

155 அன்றிமற் றவர்க ளோடு மகத்தினிற்
சிவனை யுன்னி
ஒன்றிமுன் னருத்திதனை தானு முடனிருந்
துணலு மாகும்
துன்னியிர்க் குயிராய் ஞானச் சோதியாய்
விபுவா யெங்கும்
நின்றருள் வானுக் கென்றே நீரொடு
நுகரு விப்பான். 38

156 பின்னர்வாய் பூசி நெஞ்சிற் பெருகுமா
றெழுத்தும பேணிச்
சின்மயச் சிவனை யுன்னிச் சிவசரித்
திரமுங் கேட்டு
நன்னயப் போடு சாயா னத்தபூ
சையுஞ் செய்து
துன்னிருள் நடுநாட் பூசை துளங்கிடா
தியற்றல் வேண்டும், 39

157 புலரும்வைகரை யெழுந்து பூதிமெய்
யெங்கும் பூசி
மலருநெஞ்சகத்து ளம்பொன் மணியணை
யுமையா ளோடும்

குலவு வெண்ணி புகரலுங் குறுநகை
வதன் னாகும்
நிலவணி வேணி யானை நிமலனை
நினைந்த பின்னர். 40

158 நற்சிவ தீர்த்தந் தானே நயப்புட
னாடல் வேண்டும்
புற்புத நீர்மற் றொன்றும் புகுந்துட
னாட லாகா
சிற்சிவ தீர்த்த மெங்க னென்னி
னிசெப்பக் கேண்மோ
தற்பர னென்னத் தோன்றுந் தண்புனற்
றடம தாமே. 41

159 பூந்துழா யலங்கன் மாலை பூவை
வண்ணத் தன்னான்
ஏந்தலே முதல விண்ணோ ரியக்கர்கந்
திருவ ரானோர்
காந்தள்மெல் விரலாள் பாகன் கண்ணுதற்
குறிக ளூட்டி
ஏய்ந்தநீர்த் தடங்க டொட்டா ரவைசிவ
தீர்த்த மென்பர். 42

160 மறைவிளை யாடுஞ் செந்நா வசிட்டனத்
திரிமுன் னான
உறுதவ முனிவர் முன்ன ருனாற்றிய
தவத்தி னாலே
சிறுநகை கோட்டி வெய்ய தீயின்முப்
புரமுஞ் செற்றான்
குறியரிச் சித்துத் தொட்டகுள முறுநற்
றீர்த்த மாமே, 43

160-வது பாடல 4-வது அடி 3-4 சீர்கள் சரியாகவில்லை.

161 தானவ ரரக்க ராதி தரணியி
லுதித்து யாறுயுர்
மானவர் யாவரேனும் வளரொளிப்
பவள வேணிக்
கூனல்வெண் டிங்கள் குழகனுங்
குறியைப் பூசித்து
ஆனமெய் யன்பாற் செய்த வாவியுந்
தீர்த்த மாமே. 44.

162 சாம்பவ தீக்கை பெற்ற சைவனே
யிலிங்கஞ் சூடுவபூசை
யாம்பணி புரிக வல்லா னரிச்சிக்க
லாகா வாய்மை
பாம்பணைத் துயின்ற மாயன் முதலியோர்
பயந்த தீக்கை
மேம்படப் பெற்ற பின்னர் விமலனை
யரிச்சித் தாரே 45

163 ஆகையாற் சைவ தீக்கை யாதரத்
துடனே பெற்ற
ஓகையாற் பூசை செய்யு மொள்ளியர்
தமக்கே நாளும்
பாகையே கைத்த தீஞ்சொற் பாகனு
நல்கு மன்னோர்
சேகறப் புரிந்த தீர்த்தஞ் சிவனரு
ளர்த்த மாமே. 46

164 துளப்புறு மசுத்த மேனுந் தூய்மைய
தேனு மோரான்
குளப்படிப் புனல தேனுங் குழகன்முன்
வைகிற் றென்றால்
அளப்பருங் கங்கை யாதி தீர்த்தங்க
ளதுவென் றெண்ணி
உளப்படுத் தாடி னோர்க ளொள்ளொளி
நெறியிற் சேர்வர். 47

வேறு

165 இவ்வாறு நூலுரைத்த சிவதீர்த்தக் கரையேகி
மைவாரு மிடற்றானை யுமையொடு மனத்திருத்திக்
கைவாழு முகத்தானை முகத்தானைக் கைதொழுது
செவ்வாறே யாசமனத் துறைமுடிப்பர் செவ்வியோரே
48

166 ஐம்புலவெங் குறும்படக்கு மருந்தவத்தோய்
கேட்டியால்
சம்புமகே சாயசிவ நமவென்று தான்முக்கால்
வெம்புநுரைய காறியிருந் துளுந்தமிழ்து வியநீரைச்
செம்பதுமக் கரத்தள்ளித் திருந்தவருந் தியபின்னர்
49

167 நீறுபுனைந் தெழுங்காலை நிறுத்துபிரா ணாயாமம்
மாறுபடா வகையி னுன்னிர் ... ணுக் கருக்கியநீரைப்
பேறுமனு மொழிந்தளித்துப் பெருகுநறும் புனலாடி
ஊறுபுன லுள்ளமுழுந்தி யொண்சிவனை நினைந்துருகி
50

168 மன்னுமகா தேவாய நமவென்னு மந்திரத்தை
உன்னுகவெட் டுருவின்றே லொல்லும்வகை
தான்செபிக்க
என்னையெனி லந்தமனு யாதொருகன் மங்களுக்கும்
துன்னியகா ரணபூத மென்றுமறை சொற்றிடுமே 51

169 அம்மனுவா லகலிடமி யற்றியகனக் குறையேறி
தம்முடனி றணிந்தக்க மணிபுனைந்து சந்திபுரிந்து
இம்மையருள் வில்வாதி யுடன்பூசை யியற்றியபின்
வெம்மைமுழங் கழற்கரும விதியோடு மியற்றிடுக 52

170 சித்திரையே முதலாய செப்பியபங் குனியத்தம்
பத்திபெறு கனம்மெல்லாம் பரமனுக்கே பாலிக்கச்
சுத்தமுறு நாலுவன்னத் தூயோரு மெனமறைகள்
புத்திபூ ருவமாகக் கூறுமுனி புங்கவனே 53

171 புனலாடன் முதலாய புண்ணியங்கள் யாவேனும்
அனலாடி திருவடியா மம்புயத்தே யடைவிப்பான்
பனிலான கன்மபலன் பரமனெ திருமன்றி
இனவானோர் யாரேனு மீயவவர்க் கேலாதே 54

172 மூலவாகமத் தறையு முப்பொருளுந் தெளிந்தருளால்
சீலமறைப் பொருடேர்ந்தார் திருந்தியநற்
கன்மமெல்லாம்
ஆலமுகந் தவனடிக்கே யடைவிப்பார் கையினால்
ஏலுமுயர் செய்கையெல்லா மீசனுக்கே செயவேண்டும்
55

173 வழுத்துமறை யிவ்வண்ணம் வாய்த்தமேவு
படச்சொலவும்
அழித்தமரர் தலைப்போற்றி யானைமறந் தார்புரியும்
விழுத்தவங்கள் வெவ்வினையாம் விமலனையே
குறித்தியற்றும்
கொழுத்தபவ மானாலும் நல்வினையாய்க் கூறிடுமே.
56

வேறு

174 குதிகொளுந் தரங்கக் கடலக முதல்...வ்
வண்டகோ டிகட்கும்
அதிபதி யாவ ருருத்திரக் கடவு ளமரருக்
கவ்வதி காரம்
துதியெவ னென்னில் வனச மெல்லிலை
புனற்றிர டன்னை
மதிகொ ணித்திலத்தின் மதிக்குளர் போலுமென
மறைவழங் கியதன்றே. 57

175 எவனிடை யுலகம் சத்தி யிருக்குமவ்
விறைவனே யிமைப்பில்
புவனகோ டிகளுண்டாக்கி நின்றளிக்கும் புங்கவன்
புல்லுயிரை வைக்கும்

அவனடி தாங்கு மென்ப வவ்வுரை
யெவ்வண மென்னில்
தவலரும் பீசமொடுங்குழி முளைக்கு மாகையாற்
சங்கரன் றலைவன் 58

173–198 ஆம் பாடல் முடிய ஐஞ்சீர், ஆறுசீர், எழுசீர் இவைகள் கலந்து வருகின்றன.

176 ஆய(வ ன)ப்பிகந் துயர்ந்த வரும்பொரு
ளகிலகோ டிகளும்
ஆயவன் தானே புகலிட முயிர்கட்க
ருடரும் வியாபி மற்றற
(தோயவ) னுன்மறைக்கு மாருயி ரவனே
யரிபிர மாதிக டலைவன்
ஆயவன்றானே யுலகெலாந் தன்னு ளடக்கிய
சதாசி வனுமால் 59

177 (தட)மாய் விபுவா யகண்டபூ ரணமாய்ச்
சோயிச்சை யிலங்குசிற்
சுடராய் நித்தமா யருவ முருவுமா யமலநிர்
மலருபியு மாய்ச் சித்தமும்
தொடரா வொளியுமா யடியவர் திருந்திய வர்ச்சனைக
ளெளிதாய் வித்தக
வடிவாஞ் சதாசிவ மெய்ப்பொரு ளாமென
மறைவிளிக்கும். 60

178 புகலரு மறைக்கு மரிபிரம ருக்கும்புகழ்
மனம்வாக்கிற்கு மெட்டாது
அகிலகோ டிகளைத் தன்னுளடக்கி நின்றிலங்கு
பேரொளியாமா
நகரெறி பொருளுக் கிரண்டுள வுருவ
நிட்களசகளமென்று
உரைப்பத் (தகுதிசா)ன்று சதாசிவ மொன்றுமென
மறைசாற் றியதன்றே 61

179 ஆங்கவன் ருனேபூ தபரவன் னு மருமறைச்
சிரத்துமெய்ப் பொருளும்
.... மேவ வுலகு மகப்புறந் தழுவியுட
னிருந்து மொ ன் சுடரும்
ஈங்கிது வென்னுஞ் சுட்டிறந் திலங்கு
மிறைவனு மிமைய . ..
மாங்குயிற் பிள்ளை பழித்தசின் மொழியாள்
மணனுமென வுளம்ம திப்பார் 62

180 அப்பொரு டனக்கோர் படிவ மீசான
மாதிய மூப்பற்றுச்
செப்புசிற் சத்தி புஞ்சமென் றுரைப்பர்
தேவர்க்கு மரிச்சனை பொருளாம்
வைப்பொளிர் படிகந் தன்னு ளெவ்வுரு
மடக்கும்
ம ...... ாதொப்ப வெவ்வுலகுந் தன்னுழை யடக்கி
யோங்குநற் சிவமென வுரைப்பர் 63

181 எவ்வகை யொருட்கு மாடகமம் பொற்கடவுள
ரெவர்க்கும்
கொவ்வைவாய் பவழக் கொடியனு டழுவக்,
குழைந்தவ னுதவிடுஞ் செல்வம்
செவ்வனே பெற்றுத் திரிதருமவர் பரமெனத்
தெரித்தல்
கவ்வைசேர் வந்தி மகன்முயற் கொம்பாற்
ககனவாரி தொடல்கடுக்கும் 64

182 அந்தமெய்ப் பொருளொன் றுல்றுமறை யாகம்
மனுக்கள்
தந்தன் னதனுற் சருவவித்தி யேசன் னுனெனச்
சாற்று வாய்பெயரும்

179-இப்பாட்டில் சில அடிகள் சீர்கள் குறைந்தும் கூடியு முள்ளன.

181-ஆம் பாட்டும் சீர்கள் குறைந்துங் கூடியுமுள்ளன.

முந்துபூ தாதிபதி பிரமாதி முழுமுத
லமுத ....
வந்திசெய் துருகிப் பழிச்சிய வள்ள லவனென
மறையெலாம் வழுத்தும் 65

183 ஐயவிவ் வுரைதா னரிபிர மாதிக்கு
மேல் .... குமோர்
பசுமண் கடத்தின் மேலடுக்கல் வைத்திடல்
மானுமெய் பொருளும்
உய்யவே யளிக்கும் நாதருபக மாமொள்ளொளி
குடிலையே தவிசாய
மெய்யுயிர்தற் குளாடியி னிழல்போல் விளங்குநற்
சதாசிவ விமலன். 66

184 அறம்பொரு டான மேமமா ரழலின்
சுவையினருந் தவங்குயிற்றல்
திறம்படு வேள்வியிவை யெலாமிறைக்கே செலுத்துசு
செலுத்திடி லுவந்து
கறங்கெனச் சுழலும் பிறந்தைவே ரறுத்துக்
கணிக்கொளும் பயன்பெற லளிக்கும்
பிறங்குசித் துருவாஞ் சதாசிவ மென்னப்
பேசிய துபநிடம் பெரிதும். 67

185 தேற்றருஞ் சுருதி சாற்றுநல்ல மங்கள
திங்கள் வேணியன்றனக் கென்றே
ஆற்றிடல் வேண்டுந் தவரணி வானவர்
முன்னெடுத்த நற்குலத்து ளோரெவரும்
மாற்று மற்றைக் கடவுளர் பழிச்சலம்
தந்தி யுவட்டெடுத் தூற்றிக்
கூற்றெனப் பிளிறுங் களிற்றுரி போர்த்த
குழகனே பரமெனக் குறிக்க. 68

186 சித்திரைமுதல் பங்குனி யீருந் திங்களிற்
றிங்களங் கண்ணி
தத்துநீர் வேணிப் பவளவெற் பனுக்சே
தண்புனல் படிதலே யாதி
உய்த்தநல் லறங்கள் சிவமனு வதனு லுதவிட
வேண்டுமென் றுரைத்தான்
புத்தமிழ் தனைய தமிழ்முனி யென்னப் புண்டரீகக்
கண்ண னயற்கே. 69

187 மந்திரம் பகவா னென்று காரணப்பேர்
422 எங்களைப் பார்வையால் வென்ற வெந்தையே
மங்கள ரூபக வனச ரேசநீ
திங்களஞ் சடைமுடித் தேவ னேயெனப்
பொங்குள மதித்துப் புகழி னாழியாய் 23

423 உன்றனக் குவமையிவ் வுலகத் துள்ளெவர்
கன்றிய விடமுணுங் காள கண்டனுக்கு
ஒன்றிய வுருவத்தி லிதுவு மொன்றென
நின்றநின் பெருமைதான் புகழறற் பாலதோ 24

424 போர்முகத் தெங்கள்பொற் புயத்தின் வெவ்வலி
யார்முகத் தினுங்குறை யாதுகா ணின்று
தார்கெழு மார்பினாய் நினக்குத் தாழ்ந்தது
சீர்கெழு வலியெவ னென்னிற் செப்புகேம் 25

425 மதுகயிடவரைமுன் செற்ற மாயனை
எதிர்வினை யாட்டென வென்று மிந்திரன்
திரிதரப் பொருதுபின் காட்ட வார்த்தனம்
துதிசெய்கந் திருவர்தந் தொல்லவை நோக்கினோம். 26

426 ஐயமன் றெங்களுக் கவனிமே லெதிர்
செய்யமற் றொருவரு மின்று செருச்சிலைக்

கையினோர் விரற்குமுன் காட்ட நின்றனம்
உய்யுமிப் புயவலி யுற்ற தோதுகேம். 27

427 உருத்திரக் கடவுட னுபயபா தத்தின்
கருத்துறு மரிச்சனை களித்து நாடொறும்
அருத்தியிற் செய்தலா லண்ண லிந்திட
ஒருத்தரு மிணையிலா வலிமை யுற்றனம். 28

428 சத்திய வுலகமே முதலத் தாவறும்
எத்திசை யுலகமுஞ் சரிக்கு மெங்களுக்கு
உத்தம நின்முக வொண்பொற் றுமரை
இத்திசை நோக்க நல்வினை யிழைத்தனம். 29

429 பகனெனு மாதபன் றன்னைப் பண்டொர்நாள்
உகவிழக் களைந்திடு மொருவ னீயெனத்
தகவுள நினைந்தனந் தமுற்கண மான்மழுப்
புகவிடுத் தெங்ஙனம் போந்த தையனே. 30

430 வேத முணர்கிலா விமல நாயகி
மாதவ நின்புகழ் மதித்து வந்தியாது
ஏதமே புரிந்திடு மெம்மை நின்கையால்
காதுதல் கடனெனக் கைகள் கூப்பினர் 31

431 மறையவர் போலயா மாய வுன்கையால்
பொறையுடற் றடிதரப் புந்தி செய்கவே
மறைய வென்கொலன் றுன்னி லின்பமாம்
முறைபடு முத்தியின் முயங்கு வாமரோ 32

432 முத்தியை யெய்திட முக்கண் மூர்த்தியாம்
அத்த! நின் றெரிசன மமையு மங்கையால்
வைத்திட லென்னெனி லுன்னை மாய்த்திடப்
புத்தியி னினைத்தவெம் பாவம் போக்குவம். 33

433 இவ்வுரை கூறியா யுதங்களை விட்டெறிந்து
அவ்வயிற் பொருநரா மன்பர் பூதியால்

செவ்வுய ரக்கமா லிகையா தீயினும்
வெவ்விய வேடனை விரும்பித் தாழ்ந்தனர்· 34

434 மதித்தனர் சிவனென மகிழ்ந்து வில்வத்தால்
அவித்தன ரரிச்சனை மீட்டுந் தாழ்ந்துதாம்
துதித்தனர் சிவசிவ வென்று சூழ்ந்தெமைச்
சிதைத்திடு சம்புவே யெனவுஞ் செப்பினார். 35

வேறு

435 ஆயவேலையில் வெள்ளி வெண்முகிற் குவடணையும்
சேயவா தப கோடி யாயிரங் களிற்றிரண்ட
தூயமேனியும் பவளவாய் வெண்ணிலாச் சுடரும்
பாயுமான் மழுக்கரங்களு மவிர்சடைப் பரப்பும். 36

436 வள்ளவாய்ச் செழுங்கமலம் போலன்ன மதியும்
கொள்ளைவண் டினமுரன் றிடுங்கோ மாலிகையும்
வெள்ளிமால்வரை கால்கள் பெற்றாலென விளங்கும்
துள்ளுமால் விடையிவர்ந் தருடோற்றமுந் துலங்க 37

437 தருவிசும் பியபொன் வரையுயிர்த்த பொற்றளிரின்
வருபசுங் கொடிபடர்ந்த பொற்றோண் மலைவனப்பும்
கருவிசுந் தெறிசரண வாரிசங் களுங்கவின
இருவிசும் பிடைத்தோன் றிருவர்க்கு மரியான். 38

438 நந்திபிரிங்கி மாகாளர் குண்டோதர னயந்து
முந்துபற்பல கோடிநற் சிவகண மொய்ப்ப
இந்திராதி முப்பத்து முக்கோடியா மிமையோர்
வந்துவந் திருபக்கமுஞ் சூழ்ந்தனர் வயங்க. 39

439 நெடில்படுந் துறுகற்சுர வனத்திடை நினைக்கும்
அடியருக் கருள்புரிகுவா னிவனென வறையும்
மடியினான் மறைதொடர் மெய்தொழும்பா மேற்பரிந்து
முடிதுளக்கினன் வந்தனர் முக்கணெம் மூர்த்தி. 40

440 தொண்டு போற்றிய தொழும்பர்கள் விடையின்மேல்
கண்டு களிகூர்ந் தருளான நந் தக்கனியை
உண்டமுதத்தரிற் குளிர்ந்தன ருடலம் புளகாங்கம்
கொண்டுநோக்கின ரென்றுகொ லென்றதிசயங்
கொண்டார். 41

441 எழுந்துபோகிய தருக்கள் வேர்பறிந் துடனெதிர்
விழுந்ததா மெனப்பணிந்தனர் விதிர்விதிர்ப் புற்று
பொழிந்தகண்க ணீரூற்றினர் பிறந்தையாம் புணரி
அழுந்துவோங்ளுக் கருடர வேண்டிற் றேவைய. 42

442 என்றுநெக் குடைந்துருகினர் பதரின ரெனிலேம்
ஒன்றுமோர்கி லோம்பிரமன் மான்முதலி யோருழிச்
சென்றுதேடியுங் காண்கிலாய் செழுமதிக் கொழுந்து
துன்றுவேணியா வென்றுவாட் பொருநர்
துதிப்பார். 43

வேறு

443 சங்கரா! போற்றி! யெங்க டாணுவே!
போற்றி யார்த்த
பொங்கரா! போற்றி! முக்கண் புண்ணியா!
போறி! யானைக்கு
அங்கார வடர்த்த கொண்டற் கரியவா!
போற்றி! யார்க்கும்
துங்கரா ஒத்த கால சூதனு!
போற்றி! போற்றி! 44

444 எழில்குவிந் தனைய கொங்கை யிளநலங்
கனிந்த தீஞ்சொல்
மழலைய பசும்பொற் றேகை மனோரதா!
போற்றி! யேவல்
தொழில்புரிந் திறைஞ்சுந் தேவர் துணைவனே!
போற்றி! தொண்டர்க்கு

அழிவிலாப் பதங்க ணல்கு மப்பனே!
போற்றி! போற்றி! 45

445 ஐங்கணைக் கிழவ னங்க மடலைசெய்
திட்ட நெற்றிச்
செங்கணு! போற்றி! தக்கன் றீகம
முற்ற தேவர்
பங்கமுற் றிரங்கச் செய்த பகவனே!
போற்றி! கொன்றைக்
கொங்கவிர லிங்கற் றிண்டோட் குழகனே!
போற்றி! போற்றி! 46

446 பாற்றினஞ் சுழலும் வெற்றிப் பரசுபா
ணியனே போற்றி !
நீற்றொளி பழுத்த மேனி நின்மலா
போற்றி! திங்கள்
கீற்றொளிர் பவள வேணிக் கேடிலாப்
பொருளே! போற்றி!
தோற்றமு மீறு மில்லாச் சூழ்சுடர்
மூர்த்தி! போற்றி! 47

447 வேதமு மளக்கலாகா விண்ணவர்க்
கதிபா! போற்றி!
கோதக லமுதே! போற்றி! கூற்றுயிர்
முடித்தாய் போற்றி!
மாதவர்க் கரசே! போற்றி! மறிகடற்
பிறவி யென்றும்
வேதனை தவிர்த்தாட் கொள்ளு மின்பரு
பகனே! போற்றி! 48

448 சருவலோ கேச போற்றி! சருவவித்
தியேசா! போற்றி!
சருவதே வேச! போற்றி! சருவபூ
தேச! போற்றி!

445-4வது அடி கொங்கை விலங்கல்-என்று காணப்பெறுகிறது

சருவவந் திதனே! போற்றி! சருவசம்
பன்னனே! போற்றி!
சருவவே தாந்த! போற்றி! சருவசற்
குணனே! போற்றி! 49

449 நிராகார! விமலா கார! நிற்குணா!
நிமலா னந்தா!
வராகர ரவணையோற் கெட்டா வண்ண!முக்
கண்ண! வண்ணு!
திராகாரம் பொருகா வெந்தீ
வணு!லோ காதார!
விராகார வண்ணையட்ட வித்தகா
போற்றி! 50

450 சோதி ரூபக! சக்கிறே! சதுரந்தரா!
சகுண ராச!
வாதிபூ தாதி நாதா! வம்பிகாபதி
பதியீ சான!
பாதி மேனிய கெம்பீர! பத்த
வாற்சல்லி
ஆனந்த! பூடண! சித்தேச!
புண்ணியா! போற்றி! 51

451 புவன கோடி கட்கா தாரம்
புனிதநீ நினக்கா தாரம்
எவனிவ ணறியெந் தேவ வந்தித
னென்ப ருன்னைத்
தவலோ சனனின் றன்மை சதுமுகன்
ருனுந் தேரான்
அவனியிற் பசுக்க ளோநின் னளந்தன
ரறிகு வாரே. 52

450- 4-வது அடி எதுகை சரியாக இல்லை

வேறு

452 என்றுநின் றுருக்கமுட னன்ப ரென்றுமெதி
ரொன்றிலாத பொருளாவன
நின்ற வில்வமது கொண்டு பூசைவழு
வற்றியற்றி மகிழாவன
நின்றவர்களு மறிகின் றிலாதவ விரகின்ற
சோதி யடியைத்தனம்
என்றிறைஞ்சும வன்பு கொண்டு தழல்கொண்ட
மெய்ய னறைகுவான். 53

453 ஆனந்த வெள்ள மதுரித் ததேவ
வமிர்தம் பொழிந்தனைய
ஆனந்த மானசிவ சங்க ரன்மணி
வாய்மலர்ந்து மொழிகுவான்
தேனந்த மான மலர்கொண்டு பூசை
தெரியும்படிக்கு முயல்வீர்
ஊனந்த மாய போகங்க ளொன்று
முணராது நமையுறுவீர். 54

454 பாபங்க டானு மணுகானிவ் வேடர்
பதியும்பின் னமையடைகுவான்
தாபங்கொ ளாவி யிவனுன் மடிந்த
சதுவேதரும் பின்னருளால்
தீபங்கொண் முத்தி யடைவார்க ளென்று
திருநின்றதக் கன்முயலும்
யூபங்கொள் வேள்வி சிதையப் புரிந்த
வுமைகேள்வ னின்று மொழிய 55

வேறு

455 கூற்றுருக் கொண்டதன்ன கொலைபுரி புலைஞன்
கையால்
பாற்றின ராவிவேத பாரகா வமிர்தத்துத்

தேற்றமொன் றுனு மில்லாத் தீயனு முத்தி யெய்தச்
சாற்றுவ தென்னே ஐயா வென்றடி தாழ்ந்து
சொன்னுர். 56

456 இவனிருமதையி லிங்க மென்றிடை யருமற் கொண்டு
தவமுறும் பனவர் சென்னிதலையணங் குறுத்தி
நெய்த்தோர்
பவமறக் கழீஇய பின்னர் பன்னமார் குடிலின்
வைத்தும்
சிவமுறு வில்வந் தன்னுற் திருந்துபு மூடி
வைத்து. 57

457 நித்தியமுயிரைக் காக்கும் நிதியெனக் கொண்டு
மேவிப்
புத்தியிர் தரத்திேைடு மனுதினம் புரிந்து நோக்கி
வைத்தது நமக்கு மாளுமகிழரிச் சனை களாயது
எத்திற மென்னிற் சொல்கோ மிருந்தவக் குணக்
குன்றன்னீர். 58

458 வார்புனல் கழியதெல்லா மஞ்சன மாயது
வில்வத்து
ஆர்கி லேயான் மறைத்த லர்ச்சனை யாகும்பன்னம்
கூர்குடில் வைத்தல் கோயிற்குலவி தாடத்தில்கூடும்
ஏரிலிங்கத்தி னுமே யிடைவிடா திருத்த றன்னுல். 59

459 அனுதினம் நிதியமென்றிவ் வனசர னன்பிேைக்கல்
தினமுறு சேவை யாய்த்துச் சிந்தித்த லறியான்
மாய்த்துப்
பனவரும் வாணலிங்கப் பரிசனந் தெரிசனந்தான்
மனமுயிர் விடுமவ்வேலே கிடைத்தலால் விடுவார்
முத்தி. 60

460 வாண லிங்கத் தின்பூசை மகிமையின்
வண்ண மென்றே

கானவில் வேடன் றன்பாற் காட்டினங்
கருதிக் கொள்வீர்
கோணிலீர் பண்டு நம்மைக் குறித்தரிச்
சனைகள் செய்து
பேணிய வதனுல் பெற்றீர் பிறங்குவீ
ரியங்க ளெல்லாம்.

461 தன்னையுந் தன்னைச் சூழுந் தானையுந்
தயங்கா வண்ணம்
துன்னிய ஞாட்பிற் காத்துத் துன்னலர்ச்
செகுத்த னிகம்
சின்னபின் னங்கள் செய்து செற்றுயி
ரச்ச மின்றி
மன்னிய தஃதே வீர மீதுநம்
வரத்திற் பெற்றீர் 62

462 ஒதுங்குற முகுந்த ஞதியும் பர்க
ளுன்று கண்கள்
பிதுங்குறப் பொருத வுங்கள் பெரிய
விரியங்க ளெல்லாம்
மதங்கிளர் வாண லிங்கப் பூசைசெய்
வனச ரன்பால்
பதுங்குறப் புரிந்த தென்ரு லினியெவன்
பகர லாமே. 63

463 எத்தன்மை யுறுவ ரேனு மீனமே
புரிவ ரேனும்
வைத்தன்ன தீக்கை பெற்ற மாதவத்
துயர்வ ரேனும்
சுத்தநல் வாண லிங்கப் பூசனைத்
தொடங்கு வாரே

சித்தவீ ரியங்க ளெல்லா மவருழைச்
செல்லா வன்றே. 64

464 சொற்றவிம் மொழிக ளெல்லாஞ் சத்திய
முக்காற் சொன்னேம்
மற்றிது வென்னை யென்னில் வாண
லிங்கத்தை வெய்யில்
பற்றிடா தெடுத்துத் தண்ணெனன் னிழலிற்
பதித்திட் டாலும்
இற்றுவெம் பாவ மெல்லா மெரிந்துவெண்
சாம்ப ராமே. 65

465 காரிரு ளுருக்கொண் டன்ன கடுஞ்சினக்
கரிய கூற்றம்
மூர்த்தியின் களத்தி னூர்த்த வுடைமணி
யோசை கேளான்
சாரு டாந்தம் நம்பா லடைகுவ
னிதுவுஞ் சத்தியம்
பார்திகழ் வாண லிங்கத் தரிச்ச
னைபயின் றுனே. 66

466 என்னையிக் கூற்றின் றேற்ற மென்னி
னுமியம்பக் கேளீர்
பொன்னவிர் திதலை பூத்த புணர்முலைக்
கொம்பன்னு ரோடு
மன்னியர் முறையு மிந்த வாண
லிங்கத்தை யேந்திப்
பன்னமார் புல்லால் வேய்ந்த படர்குடில்
வைத்திட் டாலும் 67

467 வையகத் தெனினு மிட்டி வாய்த்த
மண்டபத்தி னேனுந்
துய்யகற் கோயி லேனுஞ் சோதியிவ்
விலிங்கந் தன்னைச்

செய்யநற் பதிட்டை செய்தார் செறியும்
வெம்பாவ கோடி
மொய்யிருட் கங்கு லென்றாழ் மூர்த்தியைக்
கண்டா லொக்கும். 68

468 நறவு கொப்பளிக்குஞ் செய்ய நளின
வட்டணையி னும்பர்
இறையென வைக வேண்டி லெழிலுறு
வாண லிங்கம்
முறையுற நிறுவி ஞனேன் முன்னிய
முடியும் பொற்றேள்
ஏறுழ்வலிக் காமன் றந்தை யிரும்பதங்
கருதி ஞேனும் 69

469 இலைத்தொழிற் பைம்பூ ணூர்ந்தங் கெழில்குடி
யிருந்த பொம்மன்
முலைக்குவட் டிந்தி ராணி முயங்கிய
தோளி ஞன்பொன்
தலைப்படக் காமித் தானுந் தண்ணளி
வாண லிங்கம்
நிலைப்படு பதிட்டை செய்தா னினைத்தது
வாய்க்குங் கண்டீர் 70

470 மணிகிடந் திமைக்கு மல்குல் வளரொளி
வல்லி போலும்
அணிநலங் கவற்று நல்லார்
முலைக்குவடு பாயப்
பிணிமுறுக் குடைந்த தண்டார் விஞ்சையர்
பேறு வேண்டின்
திணிசுடர் வாண லிங்கந் திருந்திய
பதிட்டை செய்வார் 71

471 பொருங்கைமாக் களிநல் யானைப் புரவலர்
மகுட கோடி

தருங்கதிர் மணிவினீ ராஞ்சன மென்னத்
தயங்குஞ் செங்கால்
கருங்கழற் சக்கிர வர்த்தி காமரு
போகம் வேண்டின்
வருங்கதி வாண லிங்கப் பதிட்டையை
வயங்கச் செய்வார். 72

472 காமுற்ற பதங்கள் யாவை யவையெலாங்
கடிதின் வாய்க்கும்
போமுற்ற பாவ கோடி வினையெனும்
பவ்வந் தூரும்
நாமுற்றும் பகர்வந் தன்னை நம்முடை
யுருவ மெல்லாம்
சேமித்த வாண லிங்கப் பதிட்டையைச்
செய்யவல் லார்க்கே. 73

473 வீட்டையு மவர்க்கே நல்கும் விருப்புளோ
மென்று கூறித்
தோட்டிள முல்லை வேய்ந்த தூன்றுறுங்
கூந்தற் செவ்வாய்க்
கோட்டிளங் கொங்கை யோடுங் கொழுங்கதிர்
விரிக்குங் கோடி
சேட்டிளம் பருதி யன்னான் மறைந்தனன்
றேவ ரோடும். 74

474 அத்திசை நோக்கி நோக்கி யலம்வரு
முள்ளத் தோடு
பத்தியால் வேடன் தன்னைப் பணிந்தனர்
முகமன் கூறி
தத்துநீ ருலகத் துள்ளே சிவார்ச்சனை
தழைக்கச் செய்தே
முத்தியும் பெற்று ரந்த முதுக்குறை
வயவ ரெல்லாம். 75

475 கொலைத்தொழில் மறந்து வேடன் கொடும்பவங்
கோடி கோடி
நிலத்திடைப் புரிந்து கெட்டே னென்செய்கே
னிமல வென்று
மலக்குறு முள்ளந் தேற்றி வான
லிங்கத்திற் பூசை
உலக்குரு திழைத்துப் பின்ன ருத்தமன்
ருளே சேர்ந்தான். 76

476 வெம்புறு மனந்த கோடி தீமையை
விளைத்த வேடன்
நம்பனைத் தீண்ட றன்று னவையெலாந்
தீர்ந்தே யுய்ந்தான்
செம்பு மொண்பரிச வேதி பரிசத்தாற்
செம்பொ னாகி
இம்பரி லிங்கங் கண்டோ மெனக்குறு
முனிவன் சொன்னான் 77

477 விசும்புறை யமரர் தாமும் விழைந்திவ
ணுறையச் செம்பொன்
தசும்புறு மாட கூட சாலைசூழ்
குடந்தை மேவும்
பசுந்துழாய் படலை வேய்ந்த பருதியம்
பகட்டு மார்வன்
அசும்புநீர்க் கண்க டுற்று மயனுக்கன்
றுரைத்தா னம்மா. 78

வேடன் கதிபெற்ற வத்தியாயம்.

முற்றும்.

வாணலிங்க மகிமை கூறிய வத்தியாயம்

வேறு

478 (இ) ன்னுங் கேட்டியிவ் வாணலிங் கத்தின்
மன்னும பூசை மகிமை யெனக்கடல்
முன்னமோர் குடங்கைக் கோண முதுக்குறைத்
தன்னை யொப்பவன் சாற்றுதன் மேயினன் 1

479 கொழிக்கு நல்லருள் வாணக் குறியின்மேல்
செழிக்கு மர்ச்சனை செய்யிலில் வேள்பட
விழிக்குங் கண்ணுத லோனும் விருப்புறும்
சுழிக்குஞ் சென்மக் கடலையுந் தூர்க்கலாம் 2

480 இன்ப விடுறக் காதலித் திட்டவர்
புன்ப வங்களைப் போக்கும் புனிதனை
அன்ப ருக்கரு ளாழியை யக்குறி
மன்பி றங்க வரிச்சனை மன்னுவார் 3

481 சகள நிட்கள மாகுமத் தாணுவில்
அகள மான வரும்பொருள் வைகிடும்
துகளொ ழித்த வரிச்சனை துன்றிடில்
நிகள மாகிய வல்வினை நீங்குமே. 4

432 ஆத பங்களி லாயிருர் துன்புறும்
ஏத மங்கொழி யப்புய லேயெனப்
பூத மாரி பொழிபவ னரிச்சனை
நாத வாண லிங்கத்தி னயக்கவே 5

483 இடந்தலைப் படுநா ரியரின் பமாம்
விடந்த லைப்படும் வீணருக் கம்மலை
மடந்தை யைப்புணர் வாண லிங்கத்தின்மேல்
தடந்த லைப்படும் பூசைசஞ் சீவியே 6

484 விட்டி டாத பிறந்தை விழுமநேய்க்கு
அட்ட மூர்த்திநல் வாணலிங் கார்ச்சனை
உட்டெளிந் திழைத்ததா லொள்ளியர்க் கெல்லாம்
சட்ட மிட்ட வமிர்தசஞ் சீவியே 7

485 மாது பாகனை வாணலிங் கத்தினில்
ஓது மர்ச்சனை செய்தவ னுள்ளுயிர்
மோது பாவங்க ளற்றுயிர் முத்தனும்
ஈது சத்தியஞ் சத்திய மென்பவே. 8

486 நரக வாதனையு நமனுடுறு
மரண வாத னையும்மரு வானருள்
பரமனை வாணலிங் கார்ச்சனை பண்ணினுன்
முரண றுத்தடை வானுயர் முத்தியே. 9

487 அவ்வி யவிப சாரநல் லன்புசேர்
செவ்வியர்க் கன்றிச் சிற்சிவ ரூபத்தை
வவ்வி யசுடர் வாணலிங் கார்ச்சனை
இவ்வி யனுல கத்தருக் கெட்டுமோ. 10

488 அளவி றந்த தவங்க ளசலமேல்
உளைவ லின்றியு ஞற்றினர்க் கன்றிமுக்
களைக டிந்திடு வாணலிங் கத்தின்மேல்
விளையு மர்ச்சனை கிட்டிடின் மெய்ம்மையே 11

489 வித்தகன் சிவபூ சைக்கு மேலென்
வைத்த நற்றரு மந்தவ மாமறை
சுத்த ருகமத் தும்மிலைச் சூளுரைச்
சத்தி யம்மிது சத்தியஞ் சத்தியம். 12

490 பரனை யேபதி யென்று பணிகநம்
அரனை யேபொரு ளென்றறிச் சிக்கநல்
உரனின் மேலுறு மஞ்செழுத் துன்னமான்
கரனை யேநினைக் கக்கதி நல்குமே. 13

491 என்று வார்கட லுண்டுநல் லின்னிசை
துன்று செந்தமிழ்ச் சொற்றவன் கூறினன்.
ஒன்று நற்சிவ னுண்மை யமிர்தினைக்
குன்று போலுயர் மாதவன் கூட்டுண 14

வாணலிங்க மகிமை கூறிய வத்தியாயம்

முற்றும்

பதிநிர்ணயங் கூறிய வத்தியாயம்

வேறு

492 அருமறையின் பொருளு மாகமத் துள்ளுறையு
மறிந்தருளிற் றெரிந்தசிவ விரதியனு மலர்மேல்
திருமருவு மணிமார்பன் முதலியபுத் தேளிர் சிறந்
திருக்கப் பித்தனெனுந் தேவனையே பணிகென்று
உருகிமனங் களிகூர வுரைத்த தெவனென்று
வுரைக்குமுனி புங்கவனு மும்பர்களு முன்னுளில்
பொருவருநற் கேதாரந் தனிலிமையத் திருந்து
போந்தனர்கள் புண்டரீகத் தயனெடும்
பொருந்தி 1

493 போந்தவய னுடமரர் கேதாரத் திறையைப்
பூசைபுரிந் தகங்குழைந்து போற்றின ரங்கிருந்தார்
ஆந்தவர்க ளுறைகாலத் தருட்காசி முதலா
வமலனுறை சிவதலங்க ளவைதெரிசித் தருளால்
சாந்தகுணத் தரிகமலப் பொகுட்டிருந்த தையறனக்
குவட்டுமுக டுழக்கத் தழைந்துகளி கூரவொளி
மாந்தளிர்மெல் லடிக்கவுரி யுயிர்க்கணவ
னென்றுமகிழ்ந்
திருக்குங் கேதாரம் வணங்கிடவந் தடைந்தார் 2

494 ஆகமத்தி னுரைத்தபடி யரன்கமலத் தாளரிச்
சனைகள் புரிந்து மனங்கரைந் துருகி யன்போடு
ஊகமுறு முருத்திரமந் திரங்களினுற் றுதித்தே
யுவந்து பணிந்தெழுந்து பிரதக்கண முஞற்றித்
தாகமுட னஞ்செழுத்து மெண்ணிமுகில் வண்ணனரு
வருஞ்சீ ருருத்திரமுந் தகைமையொடுஞ் செபித்தே
ஏகமுறு பரசிவனை யுன்னியவ ணிருப்ப
விமையவரு மலர்வது மிகுந்தவனைக் காணா 3

492- முதலடி துன்றுறையும் என்று காணப்பெறுகிறது.

495 கருணைமழை பொழிந்தளிய கமலமலர் பூத்துக்
கதிரிரவி யொளிமழுக்குங் கவுத்துவமும் புனைந்து
தெருளுமருட் சிவஞானக் கரைக்குளனும் பூதி
திருந்திய பரானந்தத் திரைக்கடலின் மேய்ந்து
தருணமுகிலைக் கொடிபடரும் வனநிறம் புரையுந்
தாழ்வரையின் கால்விழுந்து தடிற்றணங்கிஞேடும்
வருணமணி நிறம்படைத்த முகிலிருந்த
தேய்க்குமாயனைக்
கண்டயன் முதலோர் மையலுற்று மகிழ்ந்தார். 4

496 ஆடகப்பொற் றகடணைத்த தனையமலர்க் கமலத்தரை
சிருக்குஞ் சதுமுகனு மமுதவச னருமே
பாடகப்பொற் றிருவிருந்தபகட்டெழின் மார்பகனைப்
பணிந்தெழுந்து சூழவந்து கைகூப்பிப் பகர்வார்
நாடறிய சிவபூசை நயப்பு மருளன்பும்
நன்கறிந்து முதுக்குறை வினையகநீ யடியேம்
தேடரிய சருவசெகற் காரணமா யுள்ளமுந்
தீண்டரிய செம்பொருளின் தியானமெ
தெப்படியே. 5

497 அப்பிரமே வண்ண மிருக்கு மதினியல்பு
மகளசகளத்தையுமிங் கறியுறவே யறைகென்று
இப்புவியி லென்வுயிரு முய்யவவ ரியம்பவெ
ழிலிநிறம் பழுத்தனைய மணிவண்ண னிலகும்
துப்பினிறக் கோமளத் துடையபரம் பொருளைத்
தோன்றுமற் ருேன்றியருடுணைவனைக் கைகூப்பித்
தப்பிலனு பூதியினில் விழுந்துமணி நாவுந்
தழுதழுப்பத் தொழுதிதையத் திருத்தியிது
சாற்றும். 6

498 வேதமுநல் லாகமமும் விளம்பியது தானும்
விரகறிந்த படிமொழிய வினையமி லனம்மா
பூதபரம் பரையுயிர்க்கு மெட்டாத பொருளைச்
சொல்லரிய புனித னையா ரறிவார்

ஓதரிய வுவமையி லாட்பொருள் விசும்புக்
கொப்புண்டாகி லப்பொருளு முவமையுட னுலவும்
கோதகற்று மானந்த சாகரத்தைக் கொள்ளையிடு
மவனடி யார்க்கல் லாது குறிக்க. 7

499 முக்காலங் களுங்கடந் தெப்போது முளதாய
முடிபுமடி நடுவிளமை மூப்புயர்பு மின்றாய்த்
திக்காரு மறிவரிய வகண்டித மாயெங்குஞ்
செறிந்த பொருளெவ் வெவைக்கு மேலாகிச்
சித்தாயப் புக்காரு மொடுங்குதற்குப் புகலிடமா
யதற்கோர்புக லிடமற் றெவ்வுயிரும் புணராமற் புணர்ந்தே
எக்காலு(மொ)ப் பரிதாய்க் குணங்களின்றி
யிலங்குயிருக் குயிராகி யிலகுமது சிவமே. 8

500 வாக்குமனக் கெட்டரிய வச்சிவ மேயான
மாமலத்திரு ளிலாப்புண்டு வருவிடையே போகம்
போக்கியமும் வருவாயி லுணராது மயங்கும்
புணர்ப்பொரு விதனையுணர்ந்து போற்றி மலமறவே
ஆக்குமரு ளாலுருவு சோயிச்சை யாய்த்தானே
யடைந்தவ ரணுகுவ ரெவ்வண்ண மென்னில்
மேக்குயர்வித் துரும்பொரு பக்கமொரு பக்கம்வில்
லுமிழிந்திர நீலம்விரவி நிமிராத வன்றே. 9

501 விகலமின்றி நிறைபொருட்கு விகாரமெ துவென்னில்
சோயிச்சை யென்னெனி னல்லா னேய
நிகலமின்றி யுருகிய காலவருண மொழிந்ததுவே
நிறம்படைக்கு முறைந்த பொழுதத்து வுறழ நிகழும்
பகரவருமச் சுடருக்கு நாமமெவ னென்னிற்
பனுவருய ரேதச்சாய விருபாக்கப் பெயரால்
அகிலவுரு வாமவனவ் வகிலத்துக் குள்ளா
மடியோ மெல்லாமவ னையரிச்சிக்க வேண்டும். 10

502 விருப்பாக்கப் பெயருடைய சிவனவனே பிரமம்
விளம்பிடி லெம்மனோர்க் கும்விரவா தேயென்னில்
பொருவார்க்குங் கூடாது நாமெல்லா மவன்பால்
புணரியிடைத் திவலையினிற் றூமிரங்கள்
போல்வோம்
திருவாக்குஞ் சுத்தமா யெவரே வாக்குமேலாய்த்
திருந்துபாற் பரமவனே பிரமமெனத் தெரிக்கும்
உருவாக்கு மெமக்கெல்லாங் காரண மற்றவனே
யொப்பரிய விருபாக்கன் காரணசூ னியனே 11

503 சத்தாகிச் சித்தாகி யானந்த மயமாந்
தாணு வினைச்சி தானந்த மெனச் சாற்றும்
முத்தியி னிற்கூ டாதோ வெம்போல்
வார்க்கென் னிலுதித்த பொழுதின் ?
நித்திய மற்றரனுக் கதுவுரையா ரித்தகையிற்
சிவனித் தியனென் பவற்று லேயிறை
சத்துநம்மனோரு ருவங்களெல் லாங்குற்ற முறுசடம
வற்குச்
சிற்சத்தியு ருவங்கூடும துவாகையாற்சித்
தென்றுகுறிப்பார். 12

504 ஊனந்த முற்பத்தி யுற்றநமக் கெல்லா
முடையநடுச் சிறிதின்ப முறுவானுக்குயர்வாம்
ஆனந்த வுருவமே யறைந்த வதனாலே
யறிந்துரைப்பர் சச்சிதா னந்தசிவ னென்றே
தானந்தப் பரப்பிரம தத்துவஞ் சிவனுக்கலால்
சாற்றிடிலெம்மனோர்க்குங் கூடாதுசத்தியம்
வானந்த முறுந்தேவர் முதலியமற் றெவரும்வழிப்
பட்டேயவ னருளான் மலமகற்றி மதிப்பார். 13

505 நிற்குணத்தி னிலக்கணமுஞ் சிறிதறிந்த படியா
னிகழ்த்திடுவ னென்னிலிந்தப் பெயர்தோய்ந்துந்
தோயான்

505 முதலடியில் திடுவ னில்லித்தப் பெயர்—என்று காணப்படு
கிறது.

எற்குயிர்க் குயிராகி மறுவிடினு மதுபோ
லுறுதுயர மிறையடையா னென்கொலென
வுரைக்கில்
அற்குலவும் வெண்ணிலவுக் கம்புயங்கா முறுவோ
னருந்துய ரேற்றகங் கருகுமன் னிலக்கிலவாம்
சிற்குணத்த துகையாற் றத்துவங்க ளன்றுசெறிந்
திடுமுக்குண மின்றி நிற்குணத்திற்சேரும். 14

506 காரண வதீதமெனக் கழறுவர்க ளதனுற்
கருதரிய நித்தியமெங் கண்ணுதலுக் கடுக்கும்
ஏரணவுந் துரியமென விருக்குரைப்ப தென்கொ
லியம்புகெனி லவத்தைகளைக் கடந்திருக்குமி
றைவன்
ஆரணங்கண் மொழிந்தனவிவ் வண்ண நாத்தழும்
பவன்பல்ல சத்தியமுக் காலுமிது சத்தியம்
பாரணத்திற் பாலடிசில் லவணமுடன் பஞ்சபா
தகனில்லயின் றவனிம்மொழி பழுதென் றறை
வான். 15

507 தொலைவிலியா யெவ்வுலகு மொடுங்கிய வப்
பொழுதுஞ்
சுடருருவாய் நின்றமையா லேகனெனச் சொல்வர்
கலைமுதற் றத்துவ வுருவமின்றுதல் கண்டுகருத
ருநிராமய னென்றுரைப்பர் கருத்துடையோ ரலகில்
உலகெவைக்கு மவனுதார மவனுக்கா தாரமின்றிய
நிராதார மறைவ ரிலகியசின் மயத்து
உருவா மீசனை நன்குணந்தோ ரியம்பிடுவர்
பரம மாகா யமென விறைக்கே. 16

508 எவ்வுயிர்க்குங் கலையாதித் தத்துவங்க ளியைவித்
தியன்றவினைக் கீடாகச் சுகதுக்க நிகழ்வித்து
அவ்வுயிர்க்கு முயிராகி நிற்குமெவ னென்னி
லடுத்தவுரு வின்றிய காலங்கள் வினையளிக்கும்

செவ்வியனு மவ்வியல்பிற் றேன்றுமற் றேன்றித்
திருவுமின்றிச் செயலளிக்குந் திறத்தால்
ஒவ்வொருவர்க் கில்லாத பரமசிவன் றனக்கே
யுரைக்குநர் நிராகார னெனமறைக ளுணர்ந்
தோர். 17

509 உலவாது சுருதிதின மோலிடுமச் சிவனேயுல
கிலுயிருய்ய வுள்ளத் துன்னுமரு ளாலே
கலையாதி தத்துவத்தைச் சேட்டிருக்குஞ் சத்திகலந்
தருளுந் திருமேனி கவின்றெளிர்க் கொண்டான்
விலகாது நெருப்பிலெழும் வெம்மைநிகர் சத்திமேனி
யெதுபொருட் டென்னின் விளம்புவன முதலாயப்
பலவாகும் பசுக்களுக்கும் நல்வினை யொன்றிருந்தபரி
சதனு லிறைவனுக்குப் பதிந்திச்சை யுளதாய் 18

510 பவனுதி பெயரா லுமாபதிதா னென்றும்
படைத்தளித்துச் சங்கரித்தும் பயில்வனெவ
னென்னில்
இவனுதி யென்னை முதற்பசு வர்க்கம்
தன்னை யின்னருள் செய்வினை யாட்டில்
பவனுகி யீன்றுகவி ருருமிடனு யெனமுன்னோர்
யார்க்குங் களைகடிந்து மகிழ்ந்தளிப்பான்
கடைமுறையில்
அரனுயத் தவமாருமெ னைமுதலோர் யாவரையும்
நொடியிற்றவிடு பொடிபடமுடிப்பன்
விளையாட்டிற் சரித்தே. 19

511 முத்தொழிலு நொடிவரையி லியற்றிடுமவ் விறைக்கு
முயங்கிவரச் சாம்புதலு மிலதாமோ வென்னில்
நித்தியனுய் நிட்களனுய் விகாரமின்றி யிருக்கு
நிருமலற்கு நிகழுமோ நிகாழாதிங் கென்னில்

உத்தமனுக் கிதனாலே பயனென்கொ லென்னி
லொன்றுமிலை சகசமிது நிச்சயமென் றுரைக்கும்
இத்தகையன் விளையாட்டுப் புரியுமோ வென்னி
லெனமுன்னோர் களிக்கவரு மின்னருளென் றுரைப்பர் 20

512 ஏதுவைப்பற் றிதுவிழைக்கு மிறையவ னென்றுரைக்கி
லின்புருவ னாகையா லிச்சையிலனென வைக்கும்
காதுதன்முன் னாயதொழி லெனமுன்னோர்க் கெல்லாங்
களிம்புமல மொழித்துக் கதியுறுத்தல் வேண்டி
ஓதுலகிற் புரவலர்கள் துட்டரை யட்டிதலோங்கு
புகழ்பழியு மிலையுவர்க் கரசு மொழியும்
போதுலக மானுருவ மன்னியமொன் றுண்டேற்
புணருமிச்சை யவனையன்றிப் புவனமில்லைப் புகல்வீர் 21

513 சுகந்தானே யெப்பொருட்கு மாகையா லிச்சைதோன்று
தன்னிய மொன்று சோதிதனக் கின்றும்
இதந்தருமவ் விறையவனை யீசனெனவு ரைப்ப
ரெம்மனோர்க் கந்நாம மில்லையோ வென்னின்
மதன்பொடியுங் கண்ணுதலு மகேச னெனுநாம
மருவுமந்த வபிதான மற்றையருக் குண்டோ
பதந்தரு பல்லுயிர்கள் புரியிருவினை களெல்லாம்
பகருமொரு கணத்தழியும் பரமன்முதுக் குறைவால். 22

514 முழுதுமுணர் பேரறிவு சிவனுக்கே யல்லாமல்
மொழியிலமெம் மனோர்க்கஃது முற்றுமோசொல்லீர்
பழுதகலும் பேரறிவனென்ப ரவன்றன்னைப்
பரிச்சின்ன மின்றிய பரிச்சின்னப் பயில்வால்
பொழியுமரு ளாதார மவனென்ப ரவன்றன்னைப்
பூரணரா யன்னியமொன் றில்லாத புகழால்
விழைவுறுத லொருக்காலு மிறைக்கில்லை யுண்மை விளம்
பியநிரா சையான் முத்தொழிலும் விளைக்கு. 23

515 அருவுருவ முருவருவ மாதியாமூன் றுமல்லாத
பாசி வினையா ரறிய வல்லார்
திருமருவு மணிமார்ப ஞகியவென் முதலோர்
சிந்தைக்கு மெட்டாது தெளியவொருக் காலும்
பொருவரு மப்பர சிவனையறிவ தெவனென்னிற்
புகழ்சருவ சுதந்தரன் மகேசன் முதுக்குறைவான்
தருமமலிய மிதாறம? னழித்தளிக்கு முதல்வன்
தானென்ன வேதவே தாந்தகங்கள் சாற்றும். 24

516 ஆனுலவ் வேதாந்த மறிவதெவ னென்னி
லறியலா மிருதி யிதியாச புராணத்தால்
கோனுகு மானரு ளாலாகமத் துமரனை
குறிக்கலாம் புவனுதி பதியையனு பவித்தால்
தேனுரு மிதழிமலர்த் தொடையல் புரிவானைச்
சிந்திக்க நிச்சயிக்கச் செய்க சிவபூசை
நானுளு மென்றுமறை யோலிடுதலுணர்ந்தும்
நன்கறியீ ரிதற்கென்னுன் செய்வ தந்தோ. 25

517 சகலகலை வேதமுப் படிகூற யார்க்குந்
தற்பரனைப் பொருளென்று மதியாத் தவறு
விகலமுறக் கூறிடுவ னெண்ணிறந்த பிறவி
வேதாந்தம் விளம்புவிதி யளவிறந்த தவங்கள்
இகலகற்றி யிந்திரிய நிக்கிரகம் வாய்மை
யெண்ணிறந்த காலங் கோளியற்றுநருக் கன்றிப்
புகலிருள் சிவதீக்கை யடைந்தவர்க ளுணரும்
புண்ணியனை யாரறிய வல்லாரிப் புவியில்.

518 ஞானுதி கம்புரியுஞ் சிவதீக்கை பூதிநாயகன்
றனக்கமணி நாத னருள் முதலாய்
ஆனுத சாதனங்க ளுடையார்கள் வேதமறிந்
துரைக்கும் பதியவனே முத்தியையு மளிக்கும்

517 மூன்ருமடி கூளியற்று—என்று காணப்படுகிறது.

தானுரு மொப்பரிய தாதாவு மென்னுந்
தலையுணர வந்தனையா ளுந்தந்தை யிவனென்னும்
ஊனுணர்நெக் குருகும் பத்தியையும் பெறுவா
ருரைத்திடுமச் சாதன மிலார்க்கரிய னுண்மை 27

519 மற்றையரு டேவர்களை வந்திக்கில் முத்தி
மருவாதோ வென்னிலவ ரவரும்பசுக் களாவார்
நெற்றிவிழி யான்பிரம மென்னை யென்னிலாதி
நிகழுநடு முடிபிறந்து நிறையனந்த சத்தி
உற்றவன்மற் றுகையா லனந்தனெனச் சொல்வா
ரொள்ளொளி யர்களவ்விய னென்றோதுநர்
களுண்மை
சொற்றன னின்றென்னை முதலோர் மடியும
வியாபாரஞ் சோதி யொருக்காலு முடியான்........
மகள்சொல்லும் 28

520 சாந்தனெனச் சொல்லுவதென் றுணுவை
யிங்கென்னிற்
சார்வெறுப்பு ராகமது தானுமிலன் கண்டீர்
தீர்ந்தவடி யார்க்குமகிழ் மங்களஞ்செய் வானைச்
சிவனென்று சொல்வரவ னக்கரனென் றுரைத்தல்
ஆய்ந்தருள்செய் கூத்தன்வியாபகன் மற்றவனே
யடிமைசெயு நாமெல்லாம் வியாப்பியமென்
றறைவர்
பாந்தளணியத் துவயனென்ப தவனைப் பகரி
லிரண்டிறந் துளனென்றே மறைகள் பன்னும். 29

---

519 ஆம் பாடல் நான்காமடி சீர்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. அப்பாடல் இறுதியில், வியாரம்—என்று காணப்பெறுகின்றது.

வேறு

521 கருதியிவ் வண்ண மேவுங் கண்ணுதல்
கமல பாதம்
தருதியென் றிறைஞ்சி லயன் ருவறு
முத்தி நல்கும்
சுருதிசொல் விதியைவிட்டுத் தொல்லைவா
னவரைப் போற்றில்
தருவர்தம் பதங்கள் வீடு தந்திட
மாட்டா ரம்மா. 30

522 பிறந்தையாங் கடலை நீந்தப் பிறிதொரு
கடவுட் போற்றல்
இறந்தலை தன்மை யோரா திருந்துளை
பூத்த நாவாய்
அறிந்ததி லிவர்ந்து முந்நீ ரலைகடல்
கடக்கச் செல்லு
மறந்தலை மதியி னுய்கன் றன்மையை
மானு மன்றே. 31

523 வழிபல சுருதியாகமங்களை
யுணர்ந்தோ னெற்றி
விழியல ரமல னல்லால் விண்ணுளார்
பழிச்ச வெண்ணேன்
முழுவலிச் சமனையட்ட மூர்த்தி பொற்
கமல பாதம்
உழுவலன் பெவர்க்கு மேவு முரையென
வுரைக்க லுற்றான். 32

524 முலைமுகம் பழுத்த செம்பொ னேந்தி
ழைக்கு வடுபோல
முலைமுகிழ் பூத்த நல்லார் முயக்கமே
முதல வாய

வலைபுரி குடும்பத் துள்ள மடைந்தவன்
றனக்கு வாராது
உலைபுரி சூல மேந்திப் பதியென
வுணருந் தேற்றம். 33

525 விடயத் திற்பற் றென்றின்றிப் பவத்துக்கு
வெருவி முத்தி
அடைவ தெஞ்ஞான் றென்றுன்னு மன்பனுக்
கம்பொற் கொன்றைத்
தொடைய லான்றானே மேலாம் பதியெனத்
தோற்றுஞ் சிந்தை
மடையுடை வெள்ளம் பள்ளத் தூற்றென
மருவு மன்றே. 34

526 உலைவில சிரங்க டான மொழுக்கநற்
றவங்கள் வேள்வி
பலமுறை புரிந்து வேதம் படித்தரும்
பொருள்க டேரும்
கலைவிலான் றனக்கே யன்றிக் கண்ணுத
லுருவந் தேரும்
தலைமைமற் றியார்க்கு மேவா தென்றுநான்
மறைகள் சாற்றும். 35

527 வேதத்திற் பொருள்க டேர்ந்து விமலனைப்
பதியென் றோர்ந்து
சாதித்த பயன்யா தென்னிற் றன்மை
யொன்றின்றி யார்க்கும்
போதத்துக் கெட்டொணாத பொருளு
மாமகே சனாதி
கோதற்ற விருப்த் தைந்து கூறுபா
டென்று கொண்டே. 36

528 அறிந்ததே பரம மான வரும்பய
னதுவென் றோர்க
செறிந்தவம்'மூர்த்தந்தந்'தடிமையைச் சிந்திக்க
செய்க பூசை
பிறிதொரு கடவுட் போற்ற றவிர்கவிப்
பெரிய காதல்
நிறைந்தவிப் பத்தி யார்க்கு நிகழ்ந்திடு
மென்னிற் சொல்கேம். 37

529 இரவுநன் பகலுஞ் சிந்தித் தெரிமழு
கென்னச் சிந்தை
யுருகியூற் றெடுத்துக்கண்ணீ ரூற்றிடத்
திரியு மன்பர்க்கு
அரவணி வாண லிங்க மாதி
விம்பங்க டன்னில்
விரவுமர்ச் சனைகள் செய்யும் விருப்புறு
மென்னும் வேதம். 38

530 இந்தன மன்றித் தோன்று தெரியது
போல வெந்தை
முந்திய புன்னும் லிங்க மாதிய
மூர்த்தந் தன்னுள்
சிந்தைசெய் தரிச்சித் தானேற் றிருவருள்
புரிந்து தோன்றிப்
பந்தம தறுத்து முத்தி பாலிக்கு
மென்னும் வேதம் 39

531 காட்டத்தை யன்றித் தோன்றுக் கனலெனக்
கவின்ற சோதி
சேட்டொளி யிலிங்க மாதி திருவுரு
வன்றித் தோன்றுன்

---

528 ஆம் பாடல் இரண்டாவதடி மூர்த்தந்தடிமைச் சிந்திக்க— என்று காணப்படுகிறது.

பாட்டளி முரலுங் கூந்தற் பான்மொழி
பங்கன் றனே
தாட்டுணை வழங்கும் பூசை புரிந்திடுஞ்
சதுரர்க் கன்றே 40

532 அகத்தினுக் கஞ்சிப் பொல்லா வைம்புலன்
களையும் வென்றோன்
சகத்தினுக் கறிய லாகா சச்சிதா
னந்த சோதி
மகத்துவ முணர்ந்து சிந்தை வனசத்தில்
வழிப்பட் டன்றி
முகத்தினிற் பூசை யாகா தென்றுடன்
மொழியும் வேதம் 41

533 அதருவ சிகையென் றோது முபனிட
மமல மான
பதமுறு மறைசா பால வுபனிடம்
பரிவி னாலும்
துதியுப னிடஞ்சு வேதாச் சுவதஞ்
சொல்லு மிந்த
விதியிவ ணுரைத்த தெல்லா மறிகுவீ
ரர்விர குளோரே 42

534 விச்சுவப் பூத மாதி விசித்திரப்
புவனம் நீங்கும்
அச்சிறு சீவன் வைகு மாருயி
ராதி யெல்லாம்
நிச்சய முருத்தி ரன்ற னுருவென
நினைந்து நாளும்
நச்சி யுள்ளும் புறமும் பூசையே
நயக்க வேண்டும். 43

---

534 ஆம் பாடல் நான்காவதடி யுள்ளும் பிறப்புமொன்று காணப் பெறுகிறது.

535 உருத்திரப் பெயர்க்குச் சொல்லு முறுபொரு
ளுலக மெல்லாம்
அருத்தியிற் கொல்லும் வேலை யாரையும்
மாற்றச் செய்யும்
விருத்தியாற் றன்னைப் போற்றி விழைந்தவாக்
களிக்குஞ் செல்வம்
பொருத்தியே ருதுவொன் றுக்கும் போக்கலால்
புனிதற் கேற்கும். 44

536 இன்னகா ரணத்தி லெந்தைக் குருத்திர
னென்னு நாமம்
அன்னவன் மகேச னென்றே யருச்சனை
யாற்ற வேண்டும்
மின்னொளி வானோர்க் கெல்லாம் விச்சுவ
ரூப மெங்கும்
மன்னியங் கிருத்தல் கூடா தெனச்சிவம்
வழுத்தல் வேண்டும். 45

537 வாக்கொடு மனத்தா லெல்லாம் வல்லவன்
சிவனே யென்றும்
போக்கொடு வரவு மில்லாப் பூரண
னென்றும் யாதும்
தாக்கியுந் தாக்கா னென்றுந் தத்துவ
னவனே யென்றும்
தூக்கிநான் மறைகள் பாடுஞ் சோதியங்
கவனே யென்றும். 46

538 உணர்குவ ராவரியா ரேயென்னி லொண்மணித்
தவிசில் வைத்துத்
துணர்மலர் கொண்டு போற்றித் துதிக்கினுங்
துக்கங் கோடி

535-ஆம் பாடல் நான்காவதடி ருது வொன்றுக்கும் போக்கை
லால் என்று காணப்படுகின்றது.

இணரெரி யெனச்செய் தாலு மிரண்டையு
மொருங்கு நோக்கிப்
புணருநம் வினையென் றுன்னும் புனிதர்சா
துக்க ளாவார் 47

539 விருப்பொடு வெறுப்பு மில்லா மெய்யர்
சாதுக்க ளன்னோர்
கருப்பையிற் புகுதா வண்ணம் காப்பவ
னவனே யென்றும்
உருப்பொரு விறந்த சோதி யொண்சிவ
னென்றுந் தேவர்
பொருப்புவிற் குழைத்தோன் பாதம் நீவிரும்
போற்ற வேண்டும். 48

540 அனந்தர் நிர்க் குணர்செஞ் சோதி யனுகத
ரமர ருய்யக்
கனந்தரு கண்டத் தெந்தை சிவனெனக்
கருதி யாரு
மனந்தனில் வாக்குத் தன்னால் வழுவற
வழுத்தும் பூசை
தினந்தொறும் புரிக வென்று செப்புநாத்
தழும்ப வேதம். 49

541 தயித்தி ரியுப நிடத்துந் தக்கசா
பால மென்னும்
மயித்தி ரியுப நிடத்து மறைகளும்
வழுத்து மம்பொன்
கயிற்றி ரியரவ னேகன் காட்டுவ
னெல்லா மென்று
முயற்றி யாற்பூசை யந்த முக்கணற்
கியற்றல் வேண்டும். 50

542 இதுவல திதுவு மல்ல வென் றுநான்
மறைகள் பன்னும்
அதுவுரை யென்கொ லென்னி லவையினி
லரசன் றன்னைக்
கதுமென வொருவன் சுட்டிக் காட்டொ
ணுதது கடுப்ப
விதுவணி வானைச் சுட்டியிவ னெனக்
காட்டா வேதம். 51

543 ஊழிபல் லூழி வெற்பி னுயர்முகட்
டிருந்து நோற்றுஞ்
சூழிநின் முகத்தி யானைத் தோலனைச்
சுட்டிக் காணர்
வாழிமற் றவன்க ணுேக்க மில்லரேல்
வானுேர் நீவிர்
ஏழிசை புகழ்ந்து போற்றி யருள்வர
விறைஞ்சல் வேண்டும். 52

544 காயத்தைச் சுருட்டிப் பாய்பொற் கையகத்
தடக்குங் காதல்
மேயவ னுேக்கு மெங்கள் விமலனை
யுணர்ந்தி டாமல்
சேயொளி முத்தி வேண்டித் திரிபவன்
றேவர் நீவிர்
தூயனை யுணர்ந்து பூசை புரிவிரேற்
றேன்று முத்தி. 54

545 உமையுடன் கூடிச் சோம னெனும்பெய
ருருவந் தன்னை
எமையுடை யிறைவன் கொண்டா னெம்மனேர்க்
கிரங்கிக் கண்டீர்

அமைதரு மிலிங்க மாதி விம்பத்தி
லளிந்த வன்பால்
கமைதரு பூசை செய்யின் முத்தியைக்
காட்டு மன்றே. 54

546 தோய்ந்தும் பின்ருேய்ந் திலாதசோதிநில்
லித்தன் ருனே
ஆய்ந்தருள் விருப்பாக் கப்பே ரடைந்தன
னடியர்க் காக
வாய்ந்தகை காலுந் தோன்றும் வடிவிலா
னெனினுந் துன்பந்
தோய்ந்திடு மெம்ம ஞேர்க்கா யுருக்கொண்டா
னுலக நாதன். 55

547 சுதந்தர ஞகுந் தோன்ற லருபனுஞ்
சோதி தானே
இதந்தரு மரிச்சனைக்கா யெரியுருக்
கனைய செம்பொன்
விதந்தரு மேனி கொண்டா னெந்தை
விண்ணவர் கணிவிர்
நிதந்தரு பூசை செய்தே நிருமல
ராகி வாழ்வீர். 56

548 வானளந் தறிதறேற்ரு வளரொளிப்
பரமா னந்த
ஞானமே தேக மேனு நங்கையம்
பிகைக்கு நாதன்
ஆனவன் கண்டீ ரெட்டா வரும்பொரு
ளகந்தை விட்டுத்
தேனலர் மலராற் பூசை திருந்துபு
மகிழ்ந்து செய்வீர். 57

549 தேவருக் கீச னுவானெவ னெவன்
றிருவுள் ளத்தால்
தாவரு சீவ கோடி சனிப்பித்தான்
தழைத்த போகம்
யாவரு லருந்து வோமற் றெம்மனே
ரியைந்த லோகம்
வேவுறப் புரிவானி யாவ னவனுமை
வேந்த னுவான் 58

550 காற்றுள நடுங்கி யாவ னுணையாற்
சலித்துக் காட்டும்
தோற்றி யத்தமிக்கு மியாவ னுணையாற்
சுடரோன் வெம்மை
ஆற்று சந்திரனும் யாவ னுணையான்
முதலுங் காலும்
போற்று மவ்வாணை யுய்ப்பா னவனதி
புனைந்த புத்தேள் 59

551 புரந்தர னரசுமி யாவ னுணையாற்
புரப்பான் மன்னன்
நிரந்தரஞ் செங்கோலி யாவ னுணையா
னிகழும் வேதம்
வரந்தரு படைப்புமி யாவ னுணையால்
வருமவ் வரனைச்
சிரந்தரச் செலுத்தித் திங்கட் சென்னிய
னென்னும் வேதம் 60

552 மறிகட லழுவம் யாவ னுணையான்
மறியுஞ் செந்தீ
அறிவுயிர் குறைவு யாவ னுணையா
லட்டு நல்கும்

உறுதொழில் வானோரி யாவ ருணையா
ழுய்த்துச் செய்வார்
பொறிவழி யாணை வைப்பான் புறம்பொடி
படுத்த புத்தேள். 61

553 குடங்கைநீ ரெனினு மெல்லென் கொழுந்துபச்
சிலைய தேனும்
இடங்கொளுஞ் சிவலிங் கத்தி லிடுநர்மற்
றெவர்க ளேனும்
தடங்கொ ளுன்மறையிற் கூருந் தருமங்க
ளவர்பா லெல்லாம்
மடங்கிடச் செய்வோனி யாவ னவனெம்மை
யாளுங் கோவே. 62

554 பேணிய தவத்தி னுனும் பிறிதொரு
முயற்றி யானும்
காணரு முத்தி யையன் களித்துவீற்
றிருக்கு மம்பொன்
தாணுவைப் பூசை செய்தாற் றடங்கை
வல்லியம தாக்கும்
ஆணையெத் தேவன் செய்வா னவனெமை
யாளுங் கோவே. 63

555 மேலைஞா பகத்திற் சொன்ன வுபநிடம்
விதித்த விந்தச்
சீலமார் பொருள்க ளெல்லாந் தெரிந்துநுந்
தமக்குச் சொன்னேன்
ஆலமார் களத்தன் றனே யடிகள்மெய்
பிரம மென்று
மேலுயு ரத்தன் வார்த்தை யாமென
வியந்து கொள்வீர். 64

---

555 ஆம் பாடல் நான்காமடியில் மேலுய ரத்தன் — என்று காணப்பெருகின்றது.

556 மறைகளு மெட்டொ ணுத மணிகளத்
தவனைப் போற்று து
இறையெனச் சொற்றைத் தேவ ரினங்களைத்
தொழுது மும்மைக்
கறைதவிர் முத்தி தாதா வென்னவுங்
கருத லாகாது
அறையும் வேதாந்த நூலா லான்றமைந்
தறிஞ ராவார். 65

557 ஆயனு வெனமுன் னேரா மமரரை
முத்தி நல்கும்
தூய்மையா ரென்ப தென்னை யெனின்முயற்
ருேன்று கொம்பும்
பேய ஞர்தேவ ரைநீ ரென்னலும்
பிறங்கு கங்குல்
காயமார் வனசஞ் சூடு காட்சியுங்
காட்டு மன்றே. 66

558 வேதவே தாந்த மெல்லா மிப்படி
வீற்று வீற்றுய்
ஓதுமெய்ப் பொருளி னுண்மை யொண்டொடி
பாகற் போற்றும்
காதலர்க் கோத லாகு மென்றியெக்
கசட்டு நெஞ்சில்
பாதகர்க் குரைக்க லாகா வுரைத்திடிற்
பாவ மாமே. 67

559 என்றெடுத் துருகிக் கண்கணீ ருற்றெடுத்
தெழில்கொள் மார்வம்
துன்றிடக் கஞ்ச னுதி தூயவ
னவர்க்குச் சொன்ஞன்.

கன்றினார் புரங்கள் வேவக் கதமெரி
மடுத்தான் வைகும்
பொன்றிகழ் மணிகே தாரப் பொருப்பிடை
யிருந்து மாயன். 68

ஆனவிச் சரிதந் தன்னை யருமறைச்
சிரத்தின் மேய
மானிடத் தனைத்துள் ளவன சத்தி
லிருத்திப் போற்று
மோனமா தவத்தி யோகிக் குரைத்தனன்
முழங்கு முந்நீர்
தேனலர் கமலக் கையி லடக்கிய
சித்தன் றானே. 69

பதி நிர்ணயங் கூறிய வத்தியாயம்

முற்றும்.

வாணலிங்கத் தெரிசன முரைத்த வத்தியாயம்

வேறு

561 ....கூறுந்து நிருமதலிங்கம் புரிதருதரு சிவபூசை
விதிகள்செய் பொறியில்லார் தருதரிசன முற்றோர்
கதியது சார்வாரே ....
....ரசெயநினை கென்னக் குறுமுனியுரை செய்வான் 1

562 முன்னொரு நாடன்னில் முத்தொடு சுடரம்பொன்
பன்மணி மலர்மாலைப் ப(லக)லை தருகையால்
தன்னுயிர் மணவாளன் சலநிதி முடிசூடி
நன்னல முறுதெவர் நதிதுறை யோர்பால் 2

563 வீட(ரு டன)மான மெய்த்தவ மொருகோடி
தாடரு மறைசெய்யுந் தாபதன ருள்கல்வி
பாடமை தருமுள்ளப் பண்புறு பனவன்றன்
ஏடுறு மலரோனி விதவ னுரைக்கின்றான். 3

564 அழகுறு மொளிவாண லிங்கம தருள்பூசை
எழிலொடு புரிதந்தே யென்னரு நனிகாலம்
உழிதறு புனிதன்னை யொ(ய்)யறு மதிபாவம்
பழியது வுருவுற்ற தெனவொரு பனவன்றன் 4

565 கண்டன னழல்சேரக் கரைதரு மெழுகென்ன
விண்டனனப் போதே யுளமது வொருகோடி
பண்டிழை வினையுள்ளி வெருவொடு படர்வுற்றான்
ஒண்டவர்க் கண்ணுற்று லுளநனி யுருகாதோ. 5

566 காந்தன மலைகண்ட காரிய முருநெக்குச்
சார்ந்தன சிவயோகி தாண்மலர் பணிவுற்றான்
பாய்ந்தன விருகண்ணீர் மடையுடை பயமென்ன
ஏந்த லிருகையும் கூப்பின னிவைசொல்வான் 6

564-ஆம் பாடல் மூன்றாவது அடியில் பூன்தன்னை பொயறு—
காணப்படுகின்றது.

567 சொல்லரு மறைக(ண்) முதலிய தொன்னூல்கள்
எல்லையிலவை கற்ற விறையவ(ன்) சிவபூசை
வல்லவ முனி(வர்வாழ்) குணமலை யொப்பாய்(நீ)
அல்லல் செய்யொருபாவி யளியதியல் கேளாய் 7

568 சாகர மணலெண்ணி தத்து தரங்கத்தின்
சீகர மிவையே(செய்தி)ண்ணியதிற லோரு
மாகடு வனையேனு லாய்ந்துசெய் யொருகோடி
மோகம துறுபாவ மெண்ணிட முடியாவால் 8

569 எவ்வண(ம் வினைசெய்வா) ரிவர்தமை வதைசெய்தால்
கவ்வுறுமவ் வினையென்னக் கருதியு மவைசெய்வேன்
செவ்வியர் துயர்கூரச் செறியிரு ணடுவேகி
வவ்வின னொருகோடி வருமிரணிய மெந்தாய் 9

570 கள்ளிது வெனநெஞ்சிற் கருதியு மெரிமூட்டும்
கொள்ளிதன் மனைவைத்தா லொத்தது முடித்தேனுல்
அள்ளூறு மெழில்கூரு மருள்குரு மனையோரை
உள்ளூறு முணர்வோடுந் தழுவின னொருகோடி 10

571 தறுகண ரிவரோடுஞ் சார்தரி னவையா மென்று
அறிவுறு முணர்வோடு மவருழை யன்பானென்
நெறியிது வெனவோரே னெடில்படு சுரமேவிப்
பறிபடு பொருள்கொண்டு பாழ்வயி
றிதுதுய்த்தேன் 11

572 பிறர்மனை யவர்தம்மைப் பெட்புறு மயல்செய்தே
உறுசுடர் விழும்விட்டி லொப்புற வணைவுற்றேன்
இறையவ ரவையேகி யெரிகொளு வியதென்னப்
பறைதரு கோளென்னும் பாதக மொருகோடி 12

573 அளவறு முயிர்கொன்றே னுருயி ரதுகாத்துக்
களிதரு முடனேக்கிக் காலனு மகிழ்வெய்திக்
கொளுவெரி நிரையத்துக் கெருவிவ னெனக்கூறத்
துளிமதக் களிறென்ன நாள்பல சுழல்வுற்றேன் 13

574 இப்படி மகடானு முதுகற நெளிவெய்த
மைப்படி யதிபாவம் வடிவுட லுற்றென்னத்
தப்புற லுணராதே தரையிடை திரிவேனுன்
எப்படி யுய்வேனியா னரகினுக் கிரையானேன் 14

575 இனியுயிர் கவர்கால தூதருக் கெளியேனென்று
உனியுனி யுளநொந்தே னென்செய்வே
னுரவோய்நின்
பனிமலர் விழிநோக்கம் பாதகனடைவோனே
துனியுறு வினையேனுக் கார்துணை யாவார்(கள்) 15

576 என்றவ னுரைசெய்தே யென்பவ கிரிநூறிப்
பொன்றநின் னருள்வாய்மை புகலென வடிதாழ
நின்றவன் முகநோக்கி நீண்மறை முறைதேரும்
மின்றவழ் சடையோகி யிம்மின னிதுசொல்வான் 16

வேறு

577 அடியருக் கருடரு மந்தி மேனிவெண்
பொடியணி புதனின் னருள்பு ணர்ந்ததுன்
வடிவினின் மறலிதன் பயமும்வஞ் சமுகமும்
தடிதரு முறுதுய ரடையல் சத்தியம் 17

578 (தண்)ணளி (நி)ருமத லிங்க சங்கமும்
விண்ணதி பணிதரு திறனு மேயது
நண்ணும் ரேவந்தி யென்னு நாமத்துப்
புண்ணிய நதிக்கரை போதப் பே 18

579 அந்நதி தெரிசன மடையப் பெற்றபேர்
துன்னிரும் பவமெரிப் பஞ்சை யொத்தது
நன்னய மறையவ! வினி நடுங் கலே
வென்னிது வெனிலுனக் கியம்பு வாமரோ 19

580 செறிந்திரு டுன்னிய சிந்தை யோர்களும்
அறிந்தறி யாதுசெய் பாவ மாயிரம்
அறிந்திடுங் கூற்றுவன் புரியம் வஞ்சமும
பறிந்திடு நிருமதலிங்கம் பார்க்கவே 20

581 அருவுரு வின்றிய வமல ரூபமாம்
ஒருதிரு நிருமத லிங்க மொண்கணால்
தெரிதரிற் றால மாம(ரு)ளை வெற்றிப்
புரிதரு பாவங்கள் பொன்று மக்கணம். 21

582 ஆகையால் கணித மாக வங்கணன்
தோகையோ டுறைதரு வாண லிங்கமோ
வேகரே வந்தி விரவ னோக்கினாய்
சேகறு நின்பவ கோடி தீர்ந்தபோல் 22

583 காணவும் வேண்டுமோ களிகொ ணின்மத
வாண லிங்கத்தினை மனத்து ளோர்கடாம்
பேணியே நினைந்தவன் பிழைத்தி டும்பவம்
கோணிய பாதக கோடி மாயுமே 23

584 நினைக்கவும் வேண்டுமோ நிருமதைக் குள்வாழ்
முனைக்கதிர் வாண லிங்கத்தின் மூட்டுகால்
எனைத்திசைப் பட்டிடு மெவ்வுயிர்க் கெலாம்
வினைத்திற னவையெலா வெந்து போமரோ 24

585 பட்டுற வேண்டுமோ காற்றும் பாயொளிச்
சிட்டரு நிருமத லிங்கஞ் சேர்வுழி
உட்டெளி யாதவ ரேக வுன்னினும்
கட்டுவேழ் பாவங்கள் களையு மென்பவே 25

586 வரைத்தனு வளைத்தவன் வாண லிங்கத்தில்
உரைத்தவித் திறனெலா முகம னோவல
இருக்கருநாத் தழும்புற வியம்பிற் றாதலால்
திருக்கற வுணர்குவோர் தெள்ளி யோர்களே 26

581. நூலமனைவெறதிப்படமாலென—என்றுளது.

587 இத்திறங் கூறிய விருக்கி னுண்மையைத்
துத்திய மென்றவன் றுச்சன் வெற்புவில்
வித்தகன் றன்னடி விருப்பமில் லாதவன்
அத்திற னுற்பவத் தைய்ய முண்டரோ 27

588 மந்திர மாமறைக் கிளவி வாய்மைகொண்டு
இந்தநற் றருமமீ தி:ஃது பாவமென்று
அந்தநன் மொழிகடேர்ந் தய்யந் தீர்வரால்
சிந்துரக் களிறனுய் செவ்வி யோரெலாம். 28

589 உண்மைசொல் லாதத னுமொள் ளியான்சிவன்
வண்மையோ டுரைத்தன மறைக ளாகையால்
திண்மையென் றுணர்வரம் மொழிக டெள்ளியார்
வெண்மையர் பூரியோர் பொய்கொ ளார்களே 29

590 அந்தநல் லுண்மையாம் வேத மாய்ந்துரை
சிந்தையார் நிருமத லிங்க சேவகன்
முந்துநீ கண்டவே முயன்ற பாவங்கள்
தந்தது திப்படும் வேதஞ் சொன்னவே 30

591 தெரித்திடு சேவையெவ் வேலே செப்பெனில்
அருத்தம காலேயி லன்ன லிங்கத்தைக்
(கு)ளிர்ப்(பப்) பத்தியாற் கும்பிட் டாரெனில்
உருத்திடு பாவங்கள் கோடி யோடுமே 31

592 தாணுவின் தெரிசனஞ் சாயுங் காலேயில்
காணுறக் கிடைத்தது நினக்கிங் காதலின்
மாணுறப் புரிந்தன பாவ மாய்ந்தன
சேணொளி கண்டிருள் சிதைந்த தென்னவே 32

593 இழிதொழி லியற்றிய வீன ரென்னினும்
பழுதுறு பாவிக ளெனினும் பச்சிமப்
பொழுதகல் வேலேயிற் புனிதலிங் கத்தைத்
தொழுதவர் பாவங்க டொலேந்த தூயரே. 33

594 தினகர னத்தமஞ் சென்ற வேலையில்
மனமுறு சிவலிங்கச் சேவை வாய்த்திடில்
சனனகோ டிகளெலாந் தகைந்த பாவங்கள்
இனமொடு மடிந்திடு மீது சத்தியம் 34

595 அத்தம காலத்தி லண்ணல்லிங்கத்தில்
உத்தம தெரிசனங் கிட்டு மேயெனில்
மத்திய மனிதர்க்கு வாய்க்கு மோபுகழ்
வித்தக தேவர்க்கு மேவி டாததே 35

296 தடத்தனுஞ் சிவலிங்கஞ் சாயுங் காலையில்
கிடைத்திடுமி யார்க்கெ னிற்கிரி குழைத்தவன்
கடைக்கணேக் கார்கலி மூழ்குங் காட்சியார்க்கு
உடைத்தநற் றெரிசன முண்மை யுண்மையே 36

597 பாக்கிய மின்றிய பாவிக ளாகிலும்
மேற்கடற் பொழுதுவீழ் வேலை நாடொறும்
சேக்கொடி யிலிங்கத்திற் சேவை கிட்டுமேல்
தூக்கிய முத்திவீட் டின்பந் துய்க்குமே 37

வேறு

598 விடியநற் பகலி னள்ளிருட் காலை
விரைகமழ் கூவிளத் தளிரால்
பொடியணி திண்டோள் வள்ளல் வீற்றிருக்கும்
புண்ணியச் சிவலிங்க மூர்த்தி
அடிமலர்க் கமலத் தரிச்சனை புரியி
லறைதரு கோடிவெம் பிறப்பிறப்பில்
படிதரு பாவ கோடிக ணீங்கிப்
பரமமா முத்தியிற் பயில்வார் 38

599 பாவகோ டிகளை வேரறச் சுட்டுப்
பரகதி பெறுவதற் குபாயம்
சேவுய ரிலிங்க பூசையே யன்றித்
தெரியில்வே றென்றையுந் தோரான்

.... ஸரிச்சனே யே
வென்னிலி யாதொரு வருக்கும்
பாவமேவி யங்கிருக்குங் காலை மெவ்வளவும்
வரவிடா திம்மொழி மெய்ம்மை 39

600 நல்ல (வனிவ) னைக் கிண்கிணிக் குமாரர் நற்றவம்
பெறற்கருங் கல்வி செல்வம்
நல்லொழுக்கம் வனப்புமீக் கூற்றம் தீர்க்கருள்
நன்னிலக் கிழமை பூண்டு
வில்லுமிழ் பவளக் கிரியனுன் பூசை
விருப்பொடு மிழைத்தவன் பெறுமென்று
அல்லறிர் மறைக ளுன்கு நாத்தழும்ப
வாவிக் காலெடுத் தறையும் 40

601 மாற்றல ருடலம் பிழிந்துயிர் குடித்து
மண்டமர்ப் படுகளங் கலக்கும்
சீற்றவெம் புலிப்போத் தென்னவே பசும்பொற்
றெரியிழை செய்யவாய் பவளக்
கோற்றொடி மடவார் கடைக்க ணேக்களிகள்
குலவுறச் சூட்டிடும் வாகைக்
கீற்றிளந் திங்கட் கண்ணியோன் பூசை
கிடைத்தவன் பெறுமெனக் கிளக்கும். 41

600 வற்றிடா தைவரறிந் திடா தகமு
மருவிடா தமலமாய்ப் பிறர்கள்
உற்றிடா தடியார்க் குடையதா யெவர்க்கு
முரைப்பதற் கரியதா யாரும்
கற்றிடா தின்பச் சுவானு பூதியதாங்
கடலினைக் காட்டுமெய் ஞானம்
பெற்றமேற் கொண்டோன் பொன்னடிப் பூசை
பெருக்கியோன் பெறுமெனப் பேசும் 42

601 என்றெழுந் திருந்த மறையவன் வந்த
விருபிறப் பாளனை நோக்கித்
தன்தனிக் கைக ளிரண்டையுந் தூக்கித்
தாணுவின் பூசைக்கு மேலாய்
ஒன்றுமிங் கில்லை யென்றுமுக் காலு
முரைத்தனன் சத்திய மன்பு
மன்றலங் கூந்தற் கணவனைப் பூசை
வழுத்தினரி யாரென வழங்கும் 43

602 அலப்புநீர்த் தரங்கக் கடலகந் தன்னி
லரனடிக் கன்புசெய் பூசை
உலப்பிலா துழைக்கு மன்புடை யாருக்
குதவிடாப் பொருளொன் றில்லை
மலைப்புறு பிறவிப்பவ்வ மறிந்து தற்கு
வங்கமிங் கிதுவென மதித்துத்
தலைப்படு நான்கு மறையெலா மணிநாத்
தழும்புறச் சாற்றிய தன்றே 44

603 பொன்மலை விழுது வ்ட்டெனக் கிடந்த
புரிசடைப் புங்கவன் பூசை
தன்னொளி வானம் பொருதிரு மார்பன்
விருப்பொடும் புரிந்தர னுவக்கும்
தண்ணருள் கோடி கோடி பங்கதனிற்
சற்றடைந் தடையலர்ச் செகுத்துப்
பன்னரும் போக நுகர்ந்துவை குந்தம்
வானவர்வாண லிங்கம்வீற் றிருந்தான். 45

604 துளிநறுப் பிலிற்றும் வரசரோ ருககத்திற்
றாயவன் புலோமிசை கொங்கைக்
களிநன்மால் யானை பூட்டுபொற் புயத்துக்
காளைகந் திருவர் விஞ்சையர்கள்

ஒளியரு வியக்கர் கின்னரர் முனிவ
ரொள்ளிய கடவுளர் நிருபர்
அளியருக் கூந்தற் பங்கனர்ச் சனையா
லரும்பெரும் போகமுற் றடைந்தார். 46

605 அரிபிரமாதி வானவரின்னு மண்ணவி லின்னருள்
பெறவேண்டி
யுருகுநற் றவங்க ளர்ச்சனை புரிவா ருத்தமன்
றன்னடி பழிச்சிப்
பரிவில் வாணலிங்க கோடிக டாம்பயிலு
மவரே வானதி
மருங்கின்மரு வலாலுன்னைச் சிவனென மதிப்பர்
மாலயன் முதலிய வானோர் 47

606 வாம பாகத்திற் பசுந்துழா யவனை
வலத்தினிற் சதுமுகன் றன்னை
ஏமுறப் பெற்றுக் கூற்றுவன் றன்னை
யெற்றிவா னவர்தொழ விருந்து
காமனைச் செற்றுப் பிரமன்மா லின்னங்
காணுறு தடிமுடி யிதழித்
தாமனு யுலகம் படைத்தளித் தழிக்குந்
தாணுவைப் பூசனை புரிவாய் 48

607 இந்திரன் முதற்கடவுளர் வழுத்த விடையருப்
பதங்க ளீந்த வனைச்
சந்ததஞ் சுருதி யுபநிட தங்கள்
தனித்தனி வழுத்துதற் பரனைக்
கொந்தலர் மலரினறு மணம்புரை யக்கூ
றுபல்லு யிரெலாங் குலாவும்
எந்தையைச் சச்சி தானந்த வடிவா
மிறைவனைப் பூசனை புரிவாய் 49

608 பாலிடை நெய்யுங் கனியிடைச் சுவையும்
பகருமெள் ளெண்ணெ யுமெனச்
சாலுல கெல்லாம் வியாபி யிருக்குஞ்
சதுரனைச் சங்கரன் றன்னை
மேலுரும் விபுவை நிற்குணன் றன்னை
விரும்பிய சகுணனைச் சுடரைத்
தோலுரி போர்த்த புங்கவன் றன்னைத்
தொண்டுபட் டரிச்சனை புரிவாய் 50

609 அரசிவ ! சம்புசங்கர ! தேசவம்பிகை தாத !
பூதேச ! புரகர ! நிமல ! வென் று
உரைத்தவர்க் குப்புன்பவம் போக்கிவி
டளிக்கும் ......
வரகுணத் தவனைத் தன்புகழ் கேட்ட மட்டில்
வெம் பிறவிவே ரறுத்துப்
பிரமன்மால் வணங்கும் பதங்களளிப் பவனைப்
பெரிதுள மகிழ்ந்து பூசிப்பாய் 51

610 கொச்சை மானிடவர் தங்கள் கூறு
பாட்டோர் தினமெனி னும்
இச்சையோ டுள்ளம வாக்கு மெய்யுடனே
இறைஞ்சிடிற் பவமெலாம் போக்கி
மெச்சுவீ டளிக்கும் வித்தகன் றன்னை
மெய்த்தவர் நெஞ்ச கத்தும்
நச்சனை பூசனைகள் புரிந்த புண்ணியனை
நாளுநீ யரிச்சனை புரிவாய் 52

611 யாதொரு தனது நாமமா ரமுதமெடுத்
தருந்தினர் தம்மைக் கடலில்
சீதவா ரமுத பானவா னவருஞ்
சீதரன் றானு மிந்திரனும்

பாதபங் கயங்க ளிறைஞ்சிடப் பணிக்கும்
பரமனைப் பச்சிலை யெனினும்
கோதறப் புனையின் மணியவர்க்குக் கொடுப்ப
வன்றன் னையரிச் சிப்பாய் 53

612 மைமுகின் மேனி நாரணன் பிரமன்
வணங்கடி மைத்திறம் விரும்பிச்
செய்திடும் பூசை கொள்பவன் யாவன்
றிருமறை தேவர்க டேவன்
உய்திற னளிக்கு நிட்களன் சாந்த
ஞெண்சுடர் நிரஞ்சன னென்றே
கைகுவித் திறைஞ்சுங் கடவுள்மற் றியாவ
னவன்றனைக் கருத்துற நினைப்பாய் 54

613 கடையுகந் தன்னின் முகுந்தனைக் கமலக்
கடவுளைத் தன்னகத் தடக்கி
நடனவி லம்பொற் கிண்கிணிக் காலி
னயந்தரிச் சனைபுரி நண்பர்கட்கு
இடருறு பிறவிக் கடலினை யேற்று
மெந்தையை யீசனை நீயும்
தொடர்வுறு மூபுரிந்து பாட்டின்பச்
சோதியிற் கலக்குதி தூயோய் 55

614 இவ்வுரை யெல்லா மதர்வண வேத
மியம்பிய துனக்குநா னிசைத்தேன்
செவ்விதி னுணர்தி யெனச்சிவ யோகி
தெளிவுற வுணர்த்து மறையோன்
அவ்வயி னுணர்ந்து வாண லிங்கத்தி
னரிச்சனை யன்பொடு மியற்றி
பௌவநீ ருலக மதிசயித் தேத்தப்
பசும்பொனின் விமானமேற் படர்ந்தான் 56

613—இறுதியடி மூடிரிந்து......டடி என்று காணப்பெறுகின்றது.

615 கடுத்தவெம் பாவம் வேரறக் களையக்
கருதரு முத்திவீ டடைய
அடுத்தபே ரறிவால் காதலிப் பவனவ்
வாணலிங்க வரிச்சனை யன்பால்
தொடுத்திடிற் பெறுவன் னரியிச் சரிதஞ்
சொற்றிடக் கேட்கினுந் துன்பம்
விடுத்தருங் கயிலைச் சாமிதன் னருளால்
விழைந்தது பெற்றுவீ டடைவான் 57

616 வார்கட லேழு மொருங்குறக் குடித்தும்
வயிற்றெரிக் கதுவுறச் சினவிக்
கூர்கெழு சினவேலிரா (ப்பகல்) குதட்டி
யாருயிர் குடித்தெழுந்து
போர்கெழு நிருத ருடல்பிளந் துதிரப்
புணரி யில்கு ளித்தபொற்
......கேமாயன் சிமைய கேதாரத்
திருந்திமை யோர்களுக் குரைத்தான்

வாணலிங்கத் தெரிசன முரைத்த வத்தியாயம்

முற்றும்

சிவயோக விரத முரைத்த வத்தியாயம்.

வேறு

617 (வெந்து) லர்ந்து வீசும் வேய்நர
வொலியும்
வெந்தீக் கணமுக வேடரார்க்குங் கைவிளி
யொலியும்
யார்க்குமெண் முகந்தின்ன தேறே
கேதா ரத்தின்
தண்முகில் வண்ணன் றன்னைத் தாழ்ந்துவா
னவர்கள் சொல்வார் 1

618 ஐயநின் வதன மென்னு மம்புய முகத்தில்
தோன்றும்
(உய்)யுநல் வசனந்தன்னுற் பெரிதுளங் குளிர்ந்து
வாழ்ந்தேம்
மெய்யொளி வாணலிங்கப் பெருமையு மொழிக்கு
மெட்டாச்
செய்ய (வ) னின்சீருஞ் செவிப்புலந் தெளியத்
தேர்ந்தோம் 2

619 இனியெமை யுய்யக் கொள்ளுஞ் சின்மொழி
யயம்பக் கேணீ
கனியுநின் னும்பர் கருதருஞ் சிவயோ
கத்தில்
பனிமலர்க் கொன்றையானை யரிச்சனைப் பண்ணு
வாரேல்
நணியுறு பயன்க ளெல்லாம் நவையற வெய்து
வாரே 3

619-இரண்டாமடி பயனற்க பெப்பா ரென்றுமுள என்று காணப்
படுகின்றது.

620 அச்சிவயோக மென்கொ லப்பய னடைந்தா
ரியாவர்

நச்சு மெங்க ளுக்குச் சொல்வா
யென்ற(வர்)க்
கச்சைமால் யானைக்கன்று கருதருங் கருணை
நல்கும்
பச்சைமா லயன்முன் னோர்க்குப் பவழவாய்
மலரு மன்றே 4

621 (பொழிகதிர் வி)ரியும் பொன்னு மாதுலர்க்
களிப்பார் போன்று
கவிழ்தலை யருவி வீசுங் காட்சியார்
கேதா ரத்தில்
புவிபுக ழந்த ணாளன் பூதிபூ
டணன்மெய்ஞ் ஞானம்
குவிதரு முளத்த னக்க மாலையன்
குணக்குன் றன்னான் 5

622 ஒருவனல் லுணர்வு மின்றி யுறக்கமு
மின்றி யுண்மைத்
திருவருள் போகந் தன்னிற் சிவனை
யர்ச்சனை புரிந்தே
அருளொடு மிருந்தா னென்ன வச்சிவ
யோகம் யாது ?
வருதின மென்கொ லுற்ற பயனென்கொல்
வழங்கு கென்றான் 6

623 வெள்ளிய மதிநாள் பத்து நான்கொடு
விதிபா தப்பேர்
தெள்ளுமா திரையுங் கங்குற் சேர்ந்திடிற்
சிவயோ கப்பேர்

கொள்ளுமத் தினத்திற் பூசை குழகனுக்
களிக்கிற் பாவம்
தள்ளுமுற் பிறவி யெல்லாந் தனித்தனி
தெரியு மன்றே 7

624 நிலத்தினுற் கடுகு தன்னுற் செந்நெலி
னியவை தன்னுல்
நலத்தினுல் வில்வந் தன்னு னற்சிவ
யோகந் தன்னுல்
வலத்தினு லுயர்ந்த தேவை மகிழ்ந்தரிச்
சனைகள் செய்தால்
கலத்தினுற் புரிந்த பாவந் தழற்படு
பஞ்சி யாமே 8

625 ஆதிரை பத்து நான்கும் மலர்விதி
பாதஞ் சோமன்
ஓதுநற் றினமுங் கூடி லொப்பருஞ்
சிவயோ கப்பேர்ப்
போதிரு சுடரைப் பாந்தள் புணருநாள்
கோடி யோர்க்கும்
மீதுபூ ரணையுங் கோடி யோர்க்குமென்
றிசைக்கும் வேதம் 9

626 இந்தநற் றினத்திற் செங்க ணிறையவன்
லிங்க பூசை
முந்திய தன்றி யன்பாற் சைவரை
முறையிற் போற்றிப்
புந்தியுற் றுருகி யம்பொன் பூடண
மாடை யாதி
தந்திடிற் கோடி கோடி பாவங்க
டணந்து போமே 10

627 புணருமித் தினத்திற் சொன்ன
பூசுர னெனக்கு முந்தை

எணவரு பிறவி மேலு மெய்தும்வெம்
பிறவி தானும்
உணர்வுற வருங்கொ லென்ன வுன்னிநற்
சிவயோ கத்திற்
றுணர்மல ரதனு லீசன் றுணைப்பத
மரிச்சித் தானே 11

628 நேசித்த வுணர்வு மின்றி நெடுந்துயி
லின்றி நூல்கள்
வாசித்த விதியை யுன்னி வள்ளறன்
வனசத் தாண்மேல்
பூசித்த வற்றை நாளென புலர்ந்த
வைகறை யினெல்லாம்
யோசித்தா னுணர்ந்தான் றுன்பத் தொடுங்கினுன்
மறைவ லானே 12

629 மேல்வரும் பிறவி தானும் விருப்பொடு
வெறுப்புத் தன்னுல்
மால்வரு மிடுக்க ணோடும் வருவன
மனத்துக் கண்டான்
சால்புறு தத்து வங்க ளுணர்ந்திடுந்
தகைய னேனும்
பால்வரு மூழா லுள்ளம் நடுங்கினுன்
பதைத்தா னம்மா 13

வேறு

630 அந்தோ! சம்போ! சங்கர!
வீச! வருளாள
எந்தா யெண்பத்தோ டோரி
லக்கத் தெழுசாதி
நந்தா துற்பவ மொன்றுக்
காயிர நாயேற்கு
வந்தா லென்செய வெவ்வா
றுய்குவ 14

631 என்றென் றுன்னி நெட்டுயிரா
வருமிட ரோடும்
துன்றிய வூழை நினைந்து
நினைந்துயிர் சோர்வான்
எய்திய விதியை விலக்க
வோவறி வில்லான்
கன்றிய மேனி யன்னோ நம்பி
நெஞ்சொடு கரைவானல் 15

632 கொல்லுலை தன்னி லுறுங்குடி
சைப்புனல் குமிறுறைப்
புல்லிய கமடத் துறுதுயர்
(போய்ந) லனோடும்
வல்வினை யெனவெங் கருப்பா
சத்தினின் மறுகிற்கும்
எல்லையில் வெம்பிறவிக் கடனீந்
துவதெவ் வண்ணம். 16

633 விடமே கொழிக்குங் கொலையே
யிழைக்கு மெய்யஞ்சும்
உடலே யெடுக்கும் வரைவா
முரகத் துற்புத்தி
கடனோ வெடுக்கத் தகுமோ
வென்னக் கலுழ்வானீ
திடமார் தெய்வச் செம்பொ
னகர்ப்பா லெய்திற்றே 17

634 சொற்றரு மங்கள் விற்றன
னற்றுளை யார்கைச்
செற்றம தத்துக் குஞ்சர
மாகித் திரிவேனே

631- இப்பாடல் காப்பீடு நூலில் காணப்படவில்லை, மூலச்சுவடியைக் காணும்போது கண்டுபிடிக்கப்பட்டது.

நற்றவர் வெம்பசி யுற்றுயிர்
வாடவு நல்காதே
உற்றனன வையாற் சூகர
மாகவு முழல்வேனே 18

635 அஞ்சன மேனியவ் வண்ணலே
நிந்தை யறைந்தேன்முன்
நஞ்சென வெம்பசி யுற்றிடு
கொம்பியின் நயவாமல் 19

636 அந்தண ருக்குச் செம்பொ
னளிக்கு மன்பேபோல்
முந்த வுரைத்துப் பின்னர்
வழங்கா முறையாலே
நந்து விடக்குத் தின்றுழல்
கின்றிடு நரியாவேன்
வெந்திறல் வெவ்வினை யாற்றுறு
கானில் விலங்காவேன் 20

637 ஆசா னின்றியு மந்திர
மெண்ணுமவ் வினையாலே
பேசா நின்றதோர் வெங்கழு
கென்னப் பெயர்வேன்யான்
தேசார் ஞானச் செவ்வியர்
தம்மைச் சினமாகக்
கூசா தறைவேன் வெங்காமப்
படுகுழி குலேவேனே 21

638 எந்தைய யீசன் றன்றடி
யார்தமை யிழிவாக
முந்தி மதித்துப் புன்சொற்
கூறிய முறையாலே

---

635 ஆம் பாடலில் பின்னிரண்டடிகள் காணப்பெறவில்லை.

குந்திய காலொடு மங்கிய
வுடம்புங் கூனுக
நிந்தைசெய் யொட்டக யோனியில்
வீழ நினைந்தேனே 22

639 வள்ளுகிர் வெம்புலி கோளரி
செந்நாய் வருகீரி
கொள்ளுப தங்கங் குக்குட
மான்மரை யெழுகாகம்
தள்ளிய மச்ச மிடங்கர்
தடங்கண் சுழல்பூசை
தள்ளு மலத்திற் கிருமிக
ளாதி யன்னங்கள் 23

640 எத்தனை நாளித் துன்புறு
சென்மத் தெளியேனுக்கு
ஒத்திடு மொன்றுக் காயிர
மாயிர முடலாகத்
துய்த்தலை வேன்மற் றெவ்வகை
போமித் துயரென்னுச்
சித்தம் நினைந்து நினைந்து
வருந்தித் தெளிவானுல் 24

வேறு

641 கூறு சாதியி லீனங் கூடியது
ஊறு புன்றலைப் புலையரா மல்குல்
மாறு பாடொரு மங்கை தன்னினும்
ஏறு மாயிரம் பிறப்புக் கென்செய்வேன் 25

642 ஆலும் வேலைக ளேழு மங்கையால்
சால நீந்தியுந் (த)ண்டு சிறகினும்
பால லோசனன் பணித்த நூல்வழி
மேலை யூழ்வினை விலக்க லாகுமே 26

---

641 இரண்டாமடி தெளிவில்லை.

643 குலவு மங்குலி கொண்டு காயத்தை
இலகு மிவ்வள வென்று காணினும்
தொலைவி லாருயிர்த் தொகைக டேரினும்
விலக லாகுமே யூழின் வெவ்வலி 27

644 ஆழி யானொடு மகில லோகங்கள்
ஏழு மோர்துணை யாக வெய்தினும்
தாழும் வேணியான் றன்வி தித்திடும்
ஊழின் வெவ்வலி யொழிக்க லாகுமோ 28

645 என்று நைந்துநைந் துருகி வாடுவான்
துன்று துன்பத்திற் றோய்ந்தி டாததோர்
நன்று நுட்பமே தென்று நாடினான்
மன்ற னான்மறை வல்ல வேதியன் 29

646 அர சிவா! வென வாவற் காலையில்
உரைசெய் வாரெனி னுற்பவங் காளாம்
கரைசெ யாக்கடல் காண லாங்கரை
பரசு பாணிதன் பதமுஞ் சேரலாம் 30

647 நினைக்க வொட்டுமோ நேரு முற்பவம்
கனைக்கு மாயையாங் காட்டில் வைகிடும்
வினைக் கொடும்புலி மேவு மேல்வரும்
பனைக்கை மாவமே பரம னாமமே 31

648 பிறக்கும் வெவ்வினை நீங்கும் பெற்றியோன்
இறக்குங் காலையி லீச னெந்தையாம்
துறைப்பெ ரும்புனல் சூடு வோன்புகழ்
மறக்கி லான்சிவ மன்னு நாமமே 32

649 முழுத்த வன்பினுன் முக்கணுன் பெயர்
வழுத்து வானெனின் மருவுமா பத்தில்
கொழுத்த புண்ணியங் கூடு மாலமார்
கழுத்த னம்பொனின் கமல பாதமே 33

650 நெஞ்சொ ருங்கியே நெடிது நடைசிவம்
அஞ்செ ழுத்திணு லர்ச்சித் தானெனில்
விஞ்சு நாமங்கள் வெய்யபா வம்போய்த்
துஞ்சும் வேளையிற் சொல்ல மேவுமே 34

651 வெய்ய கூற்றுவன் மேவும் வேளையில்
பொய்ய னேனுக்கும் புகல வேயது
மெய்யு நற்சிவ ஞமை முற்பவம்
செய்யு மூழ்பல சேர்ந்தி ருக்கவே 35

652 இன்ன வாறெலா மெண்ணரி யெண்ணியே
தன்ன துள்ளமு நொந்து தானுவின்
மன்னு பூசையான் மறித்து வெல்குவேன்
முன்னை யூழையு முயற்சி யாலரோ 36

வேறு

653 பண்பதாகவிவ் வாறு நினைந்து
வேத பாரகன்
கண்புகாத பேரொளியாங் கடவுள்
பூசைப் பெருமையால்
எண்பதோடு மெட்டிலக்க மீனசாதி
பேத மெல்லாம்
நண்பதாகுஞ் சிவயோகந் தன்னு
லெடுத்து நாட்டினுன் 37

654 மறையோன் ஞானதத்துவங் ளுணருமதி
மானவரை குனித்த
இறையோனரு ளால்வெவ்விலங் கின்பிறப்பை
யெல்லா மழித்தெழுந்து

கறையார்கடல் களோரேழுங் கடந்தானோர்
கால்கடப் பான்போல
முறையாலோர் பாற்புலமைக ளாயுதித்தா
னுணர்வால் முதியோனே 38

655 ஒருகாலத்தி லாருயிர்போவ வொன்றுக்
குறுமுற வந்தனைத்
திருகாவளத் துப்பூசானு மெடுத்தே
திர்ந்தான் சேரிடும்பைத்
தருகார்வரை வாழுரக முதற்சனன
மெல்லாந் தானுவடி
உருகாதர விற்புரிபூ சைப்பெருமை
யெவரே யுரைசெய்வார் 39

656 எடுத்தவெடுத்த பிறவிதொறு மெய்துமடி
சிலெழு மாலம்
தடுத்தகளத் தன்றனக் கூட்டித்தான்
பினுண்ணுந் தகைமையேன்
அடுத்தவுணர்வா லூன்கழிந்த வகன்மானிடன்
வெண்டலை யோட்டில்
மடுத்தமதுவார் நாயிறைச்சி சுடலைத்
தீமேல் வைத்திடுவாள் 40

657 அந்தவேளை யொருமுனிவ னருகே
வரக்கண்ட புலைச்சி
இந்தவிறைச்சி யிவனேக்கி லிசர்க்
காகா தெனவுன்னி
வெந்துகொதிக்கு நாய்த்தசையைத் தோலால்
விரைந்து மூடினள்
நிந்தையிதுவென் றம்முனிவன் கண்டா
னெடும்போ ததிசயித்தான் 41

658 வேதநான்கும் விளையாடு மணிநா
முனிவன் வெண்ணீற்றன்
பூதநாதன் பழந்தொழும் பன்புனித
னக்கமணி மார்பன்
கோதிலான் தத்துவ ஞானங்கூர்
ததீசியெனும், பெயரான்
மாதுபுலைச்சி வைகுமிட மிறும்பூ
தோடும் வந்துற்றான். 42

659 கண்டான் சுணங்கன்றசை நறவாற்கழி
யூன்றலையிற் சுடலையழல்
கொண்டாதரத் தோடுணவாக் குங்கொள்கை
புலையர்குல மடவாய்
மண்டார்கலி சூழுலகிழி புமதுநா
யிறைச்சிவரு தலையோடு
அண்டாச் சுடலையெரி மூட்டியடுவாய்
தோலான் மூடியதென் 43

660 தேனிழிந்த பொருளுலகத் தின்றூற்
பசுவின்றோ லாலெய்த
மூடுகாரண மேதறைவா யென்னவடி
பணிந்து மதனையெரித்த
நுதலாற்கு வருபல்லுயிர் கள்வயிற்
றுணவாம் பதமெவ்
வண்ண மெனினு மவற்கூட்டி
நுகரும் பண்பிற்றால் 44

661 அவ்வா றுரைக்குஞ் சுருதியெலா
மாகையான் மற்றவர்க்கு
உய்வா றளிக்குங் குலதேவுக்
கூட்டியன்றி நுகராத

660-ஆம் பாடல் எதுகை நன்கு அமையவில்லை.

கையாரணவே யிழிபிந்தக் கழியூ
னிழிபோ வெங்கடவுள்
பைவாழரவன் றனக்கா மென்றிதனைப்
பரிவான் மூடினேன் 45

662 மூடுவதுவென் னென்றுரைக்கிற் சொல்கேன்
சைவனெனு முதன்மைப்
பாடிலாதா னேக்குமெனப் பயந்து
பரிவான் மூடினேன்
நாடிற்சைவ னல்லாதான் யாரென்றுரைக்
கினுன்மு கன்மால்
தேடும்பொருளை யமரர்கடந் தேவ
னென்று செப்பாதான் 46

663 மையுமிருளு மெழுக்கெறிந்து வார்ந்தகூந்தல்
வளரொ ளிப்பொன்
தொய்யல்பூத்துக் கனத்திளகுந் துணைமென்
கொங்கைத் தூமுறுவல்
தையல்பாகன் றனைமுகுந்தன் றனக்குச்சரி
யாமென் றுரைக்கும்
பொய்யனவனே சைவனல்லாப் புலையன்
பார்க்க லாகாதே 47

664 ...... வினீக்குஞ் சிவபத்தியன்றிப் பூசைபுரிவாரு
நிதியென் றெண்ணி
வெண்ணீறுத் தூளம்புரிய நினையாரும்
மதிமந் திரத்தால்
.... யிடைத் திரிபுண்டரத்தை வனையாரும்
பதித ரவரே
சைவரல்லாப் பதகர் பார்க்கப்
போகாதே 48

664-ஆம் பாடல் உள்ள ஏடு முறிந்து போனபடியால் எதுகை மோனை நன்கமைக்க முடியவில்லை

665 நெற்றிமுதற்று னங்க (ளிலூ) ர்த்த
புண்ட ரங்களை
உற்றமண்ணுற் றரிப்பாரு முவந்தேடணியப்
பிறர்த மக்குச்
சொற்றவரும் விளையாட்டிற் றரிக்கு
மவருஞ் சொல்லரிய
புற்றிலரவன் றனக்காகு மடிசில்
பார்க்கப் போகாதே 49

666 மண்ணுலூர்த்த புண்டரத்தை வணையு
மவரென் றறியாமல்
தண்ணுரடிசி லளிப்பாரெஞ் சங்கரே
சன்றாள் வணங்க
ஒண்ணுதவனுக் கின்னடிசி லீயும
வருமிவ ரெல்லாம்
கண்ணுதலாற் காகு மடிசிற்
காண லாகாதே 50

667 ஐயனமலன் பூங்கழலுக் கன்பி
லானை யாதரவால்
செய்யும்பூசை யுடையாருஞ் சிதமுட
னவனைப் பணிவாரும்
உய்யும்பூசை யானடிக்கீ ழூருற்று
தவருமுவ ரெல்லாம்
கையின்மழுவன் றனக்காக்கு மடிசில்
காண லாகாதே 51

668 நாளுமுருகிப் பரசிவ சரிதங்
கேட்க நயவாரும்
மூளுந்தழற்கண் ணுதலானைத் தினமு
நினைக்க முயலாரும்

வாளும்பணியும் விழியாடன் மகிணன்
றுனே மாலயனே
ஆளும்நம் மடிகளென வெண்ணுதவருங்
காண லாகாதே 52

669 மனமுமொழியு முடலோடும் வள்ளல்
சிவனுக் குரித்தென்று
தினமும்புகழ்ந் துருகிப்பருகித் தொழுது
செலுத்தாத் தீயோரும்
வனயுமிதழி முடியானை குலதே
வதையாய் மதியாரும்
புனையுஞ்சைவ மல்லாதார் போற்றிக்
காணப் போகாதே 53

670 செல்வமறைகண் முறைகூறுஞ் சிவராத்
திரியைச் சிந்தையுறும்
அல்லலகலத் தோன்றுமதி யணிவான்
றன்னைப் பணியாரும்
நல்குமதிநாள் விரதத்தை நயவா
தவரும் நவில்சைவம்
புல்லுமவர்க ளல்லாரிவ் விறைச்சி
காண்ப தாகோதே 54

671 பரமனுரைக்கு மாக மத்திற்
கூறும்பர பக்கத்தில்
வருவட்டமி யினேம்பிருக்க விழையா
தவரும்வேத மெல்லாம்
பரவியிறைஞ்சியுஞ் சிவதீர்த்தஞ் சிந்தை
கூர்ந்து படியாரும்
கரவினுளத்தா ரிவ்விறைச்சி கண்கா
ணலா காதே 55

672 வீற்று(வேதச்சொ)ற் களெல்லாந் துதிக்கும்
விமல னடியாரை
ஏற்றுவன்போ டெஞ்ஞான்று மொருதன்மைய
ராயிறைஞ்(சாரும்)
(சாற்)றுமிவர்கள் விழிநோக்கந் தலையோட்
டமைத்தழல் கொதிக்கும்
போற்றுமதுவார் நாயிறைச்சி யிதனில்
வீழ்ப வர்களே 56

673 அருப்புமுலையாள் கணவனுக்கு நையவேத்
தியமா மனத்தில்
விருப்பமிலாதா ரிவர்முதலோர் விழிகள்
வீழுமென வெருவிச்
செருவி விதுமுடிச் சேர்த்தே
னென்றுரை செய்தாள்
பொருப்புச்சிலையா னடிமலரிற் புந்தி
வைத்த புலமகளே 57

674 எல்லாவகையாலுங் குறைவோ ரீனன்
றெட்ட வன்னத்தைப்
பொல்லாதென் றெப்படியெறிவா
ரதுபோற் சைவன்
அல்லாத கல்லா(ப்புலையவனி)றைச்சி கண்டா
லகற்றக் கடனுகும்
வல்லாய் மறையின் பொருடோர்ந் முனிவா
வென்று வழுத்தினள் 58

675 அந்தணுளர் முதலான வடுத்த
நான்கு வன்னத்தார்
அந்தவடிசி லவர்கண்டா லெறிய
வேண்டுமோ வென்னில்

முந்தைமறைசொல் சிவபூசை முயலும்
புத்தி யில்லாத
நிந்தையாளர் புலையருக்குங் கடையா
யுலகின் நிகழ்வாரே 59

676 சைவசீல மில்லாத் தறுகண்
ணாளர் தாங்கண்ட
கவ்வுமடிசி லோர்காலு முண்ணா
தொழிக்கக் கடனாகும்
இவ்வின்னிறைச்சி யிழிபாமென் றுரைத்த
தென்னே யெழுந் திரையார்
பவ்வநிலத்தி லிழிபாமப் பதகர்
கண்ட வடிசில் 60

677 என்றென்றெடுத்துப் புலைமடந்தை யியம்ப
விறும்பூ தெய்தியே
குன்றுபோலுந் தவமுடைய ததீசி
முனிவன் கொடும்புலைச்சி
ஒன்றுமறைசொல் சைவவிதி யுணரும்
வகையெவ் வண்ணமென
நின்றுஞானத் திருட்டியா னிகழ்ந்த
பொருள்க ளிவையுணர்ந்தான் 61

வேறு

678 சாபால வுபநிடத்திற் சைவவிதி
யிவளறிந்த தகைமையாவும்
கோபாலன் மலரயனுங் கூடியுந்
தரப்பல்லூழி குறிக்கொணாத
காபாலி யருள்பூசை சிவயோகத்
தியற்றுமந்தக் காட்சியா
லேபால்வெண் ணீற்றனரு மறையோன்
புலைச்சி வடிவாயினாள் 62

679 சிவலோகத்தினருட் சிவபூசை கேதாரச்
சிலம்பு தன்னில்
தவயோகத் தொடும்புரிந்த தன்மையா
லொருகாலஞ் செனனமெல்லாம்
பவயோக மொருபிறப்புக் காயிரக்கா
லெடுத்துமனு பவித்துத்தீர்ந்தான்
நவயோகத் தமரேச ருச்சனையின்
பெருமையெவர் நவிற்றவல்லார் 63

680 எனவுள்ளத்திற் றேர்ந்துமுனி யிருகண்ணின்
மணிகுளிப்ப வினிதுநோக்கி
பனவகுலோத் தமவேத பாரகமே ஞானப்பாலுந்
தேனும்கனியு மொழியிடப்பா
கனடியவர்க் குனைப்போலக் காணேனுன்
றனினை வுணரேன்
எனப்பணிந்து நினைந்தபிழை பொறுத்தியென
நிகழ்த்திப் போனான் 64

681 பாணிலாப் பொழிந்தகதிர் மதிக்கொழுந்து
விசும்பளக்கப் பகரும்வேயின்
தேனிருட்டகடுழக்க விழிந்தநரு வுயர்ந்த
மலைச் செந்நெல்
பாய்ந்துகானெலா மளிகுமிற மணங்கொடுக்குங்
கேதாரங் களித்துநோக்கி
ஊனெலா நெக்குருகப் பணிந்தெழுந்து ததீசிமுனி
யுவப்பிற் சொன்னான் 65

682 அண்டகோ டிகள்விழுங்கி யகட்டிலொரு
புடைகிடத்து மண்ணலம்பொன்
புண்டரீகத் தவற்குமிந் திராதிபர்
தமக்கும் புகன்றான்வானில்

---

681 எதுகை சரியாயில்லை.

துண்டவான் பிறைமுடித்த கேதாரத்
தீசன்மலர்த் துணைமென்ருளில்
மண்டுகா தலிற்பூசை சிவயோகத் தியற்றுமவன்
மகிமை யெலாம் 66

வேறு

683 என்று கும்ப முனிவ னியம்பினுன்
கொன்றை வேணியன் ருளைக் குறிக்கொளித்
துன்று மைம்புலன் பாசத் தொடக்கையும்
வென்ற யோகிதன் னுள்ளம் வியக்கவே 67

சிவயோக விரத முரைத்த வத்தியாயம்

முற்றும்

சிவ சரித்திரங் கூறிய வத்தியாயம்.

684 பின்னுந் தாமரை மேவும் பெம்மானெடு
மன்னு மிந்திர னேமுதல் வானவர்
இன்னு மிவ்வரை யீசன் புகழெலாம்
பன்னு வாயென மாயனும் பகருவான் 1

685 இந்த நல்வளக் கேதாரத் தீசனே
அந்த நற்சிவ லோகத்தி லன்பொடும்
வந்து பூசை புரிந்தவர் வாழ்வையென்
தந்தை யன்றிமற் றியாவர்கள் சாற்றுவார் 2

686 யோக சித்தியு மொண்சிவ தத்துவப்
போக சித்தியும பூருவ சென்மந்தொ ந்
தாகு சித்தியும் மிவ்வரை மேற்பரி
பாக பூசைப் பயின்றடைந் தார்பலர். 3

687 எத்தி றத்தவ ரென்னினு மிக்கிரி
முத்தனைப் பணிந் தர்ச்சனை முற்றுவார்
சுத்த ரென்றிரு கைகளுந் தூக்கியே
சத்தி யம்மெனச் சாற்றின னச்சுதன் 4

688 கரியகண் டத்தெங் கண்ணுதற் சாமிதன்
உரிய பூசை யுஞற்றிய வுத்தமர்
பெரியரிற் பெரிய ராவ ரேயென
விரியு மாமறை கூறிடு மெய்ம்மையே 5

689 பிரம னாதிய வானவர் பெய்முகில்
பொருவி னானைப் பணிந்து புகலுவார்
திருவி னாயக! செப்புமிப் பத்திதான்
இருநி லத்திடை யேயது மெவர்க்கென 6

690 எண்ணி றந்த பிறவிநம் மீசனை
உண்ண யந்து தவங்களு ஞற்றினோர்க்கு
அண்ண லன்பு மருவுமவ் வன்பினால்
மண்ணி லெண்ணிலர் முத்தியில் வைகுநர் 7

691 முத்தி பெற்றவரி யாவரு முக்கணன்
பக்தி வாய்த்தவரே மற்றப் பண்ணவர்க்கு
உய்த்த பூசை யுதவுத லில்லையால்
சித்தி வீடது சத்தியம் செப்பினோம் 8

692 அந்தரகங் கத்தி லையனை யன்பினால்
சிந்தை செய்திடு வார்திரு வாளரே
இந்த தன்மையர் தங்குலம் யாவையும்
பந்த நீக்கிய பண்ணவ ரென்பவே 9

693 புண்ணி யங்கள் பலபுரிந் தாருக்கே
நண்ணு பூசை நயப்புவந் தேய்திடும்
திண்ண மென்றிரு கைகளுஞ் செங்கண்மால்
விண்ணிற் றூக்கி விளம்பினன் சத்தியம் 10

694 நாட்ட மூன்றுடை நம்ப னரிச்சனை
கோட்ட மின்றிக் குயிற்றினர் தங்கள்பால்
ஈட்டு பாக்கிய மெல்லா மிருப்பிடம்
காட்டு மென்று மறைகள் கழறுமே 11

695 சங்கர னன்றி வீடளிக் குந்தரம்
எங்கு மில்லை யிமையவ ருக்குளே
கங்கை வேணிக்குக் கார ணப்பொது
பொங்கு மின்பச் சுகஞ்செயும் பொற்பினால் 12

696 என்னு ளத்தி லிறையவ னன்றியே
மன்னு முத்தி வழங்குநர் தங்களை
உன்னு தற்கு மறிந்தில னுண்மைகாண்
சொன்ன விம்மொழி சூளுரை சத்தியம் 13

697 வாரமன் றிந்த வாய்மை மறையெலாம்
ஒரு நல்லுரை யுள்ளரங் கம்மிது
தேரு மென்று செவியுறச் செப்பினேன்
காரு நேரு மெனக்குங் கருத்திதே 14

698 சிரத்தை யோடு மரிச்சனை செய்குநர்
அரத்த வாயுமை யன்ப னெனும்பராம்
பரத்தை யர்ச்சனை செய்பவர் பாதத்தில்
வரத்தி னீரும் வழுத்துதல் வாய்மையே 15

699 வந்திக் குஞ்சுடர் வண்பவ ழத்தொடும்
அந்திக் கும்பொரு மேனியெம் மையனைச்
சிந்திக் குந்தின மர்ச்சனை செய்திடான்
நிந்திக் குமவ னித்திய சூதகி 16

700 இந்தப் பூமியிற் சென்ம மெடுத்தவர்
தந்தைக் கொப்பவர் தாணுவின் பூசனை
சிந்தை செய்யாச் சிதடர் குலமெலா
நிந்தை செய்திடு நித்திய சூதகர் 17

701 புனித னுயன் புடைமை பொருந்திய
வனிதை நாயகன் வண்கம லப்பதங்
கனித னன்புறு பூசைக் கருத்திலான்
துனித னன்பில னேயவன் துட்டனே 18

0 சேவியன் கோடித் தேவ னரிச்சனை
பூவியன் றதுசெய் யப்பொ ருந்திலான்
பாவி யங்கவ னேபதி மேவிய
கோவி யங்கவ னேவினைக் குன்றனுன் 19

703 என்று வானவ ருய்யவி யம்பினுன்
கன்றி னுல்விள வின்கனி கட்டவன்
குன்று மாரெயில் வேவக் குனித்திடும்
மன்று ளாடிய வள்ளல் சரித்திரம் 20

சிவ சரிந்திரங் கூறிய வத்தியாயம்
முற்றும்.

அபராதங் கூறிய வத்தியாயம்.

வேறு

704 மருவிருக்குங் கோகனகப் பொருட்டரைசு
வீற்றிருக்கு மயிலஞ்சாயல்
திருவிருக்கு மணிமார்ப! வென்றிமையோ
ரடிவணங்கிச் செம்பொற்சோதி
ஒருவருக்குந் தெரியாத வுண்மையான
கருணைபொழிந் தூற்றும்வாட்கண்
அருகிருக்குங் கடவுடிரு வாலயத்தின்
விதியை யறைதியென்றார் 1

705 பாலாவி சுகிர்ந்து புனைந்தனைய
துகிலாட கப்பரியகாஞ்சி
சேலாவி மலர்க்கமலங் கிடந்துபிறழ்ந்
தனையவிழிச் செய்யவாயாள்
மேலாவி திருவுருக்கொண் டருகிருந்த
தெனவிளங்கும் விமலன்கோயில்
காலாரச் சூழவந்து சேவைபுரி
வோர்களருட் கடலிள்ளேய்வார் 2

706 ஆலயத்திற் றேவர்தொழ வரசிருக்குங்
கண்ணுதலெம் மடிகண்முன்னர்ச்
சீலமொடும் பணிந்து குழைந்தச்சமுடன்
கைகூப்பிச் சென்றிடாமல்
மேலினறுந் துகில்போர்த்துச் சென்னியிலுங்
கலைவீக்கி விரைந்துசெல்வான்
கோலுமெரி நரகிழிந்து மண்டைநோ
யொடும்புவியில் குலவுவானல் 3

707 அங்கிமேற் புனைந்துடலின் மீப்போர்வை
புனைந்துமுய ரண்ணல்கோயில்
தங்குபய மில்லாமற் சென்றானேல்
நரகினிழிந் தாழ்ந்துபின்னர்
வெண்குறுவென் றுயடைவன் வெண்ணீறு
புனையாமல் விரைந்துசென்றால்
பொங்கெரிவாய் நரகிழிந்து புவிமீதில்
பழிசுமக்கும் புலையனாவான் 4

708 கங்கணத்துக் குரகமணி கண்டன்
வீற்றிருக்குங் கவினார்கோயில்
அங்கணத்துட் கழலிறுத்து மவனரகிற்
கோடிகற்ப மடைந்து பாரில்
இங்கிழிந்த புலையனாய்த் திரிந்துழல்வன்
கனகழல்கள் புனைந்தெரு வானேல்
தங்குலத்தோ டொருகோடி கற்பமருவு
புலையனுமாய்ச் சரிப்பானன்றே 5

709 மாபுரத்தை நகைத்தெரித்து மதன்புரத்தை
விழித்தெரித்த வள்ளல்கோயில்
கோபுரத்தின் முன்னாகச் செருப்பகற்றி
வைத்தாலுங் கோடிகற்பம்
சாபுரத்தை யடுஞ்சுடலைச் சண்டாளற்
கடிமையெனச் சார்வாரம்மா 6

710 மதியணியும் பவளமலை விழுதனைய
சடைமுடியெம் வள்ளல்கோயில்
மிதியடிதொட் டேகினவன் புத்திரர்
மித்திரர் விளம்புசுற்றம்
கொதியழலின் றுணர்கதுவு நரகிலவரு
டன்விழுந்து கோடிகற்பம்
கதியழிபு தரும்பின்னுஞ் சண்டாள
னாயுதித்துக் கலங்குவானே. 7

---

709 ஆம் பாடல் மூன்றடிகளேயுள்ளது.

711 அழியாம லானுலு மிழிபூர்த்த
புண்டரத்தை யணிந்துநாளும்
மறியாருங் கரதலத்தான் றனைப்பூசை
புரிந்துவரு மளவன்பின்றி
வெறியாருங் கொன்றையனை யரிச்சனையை
விளைப்பவரும் வெண்ணிலவால்
செறிவாரு மதியிரவி யுள்ளளவு
நரகிழிந்து தியங்குவாரே 8

812 திருமருவும் புவனேச னரிச்சனைக்காம்
பொருள்சுமந்து சென்றிடாமல்
பொருவருநற் றரிசனத்துக் காலயத்தி
னிடைவாளா போயினுரும்
கருணையனு மகேசனைக் கடவுளரி
லொருவனெனக் கருதினுரும்
இரவிமதி யுள்ளளவு மெரிநிரையந்
தனில்விழுந் தெழுந்திடாரே 9

713 எள்ளிலுறு நெய்யென்ன வீசனுயிர்க்
குயிராகி யிருப்பானன்றே
உள்ளமறி வில்லாரு முலகினுக்கு
நாயகனென் றுன்னினுரும்
வள்ளலிவன் வீட்டின்ப மளிப்பதனுக்
கெனவுளத்தின் மதித்திடாரும்
தெள்ளுமதி கதிரிரவி யுள்ளளவும்
நரகிடைத் தியங்குவாரே 10

714 பொன்னின் மால்வரை குழைத்தோன்
றனக்குமுன்னர் புரிந்திடாமல்

---

711 ஆம் பாடல் இரண்டாமடி—மளவான் பின்றி என்று காணப் பெறுகிறது.

அன்னபா ஞாதிகளை யயின்றுனே
லவனிடுக்கண் ணடைந்துபாரில்
பின்னரே மலப்புழுவா யுதிப்பனொரு
பிரமகற்பம் பெருகுபூசை
தன்னைநே ரில்லானைப் புரியான்முள்
ளுடைமரமாய்ச் சனிப்பன்றுனே 11

715 அண்டர்நா யகன்பூசை புரியாம
லன்னியகன் மத்தையன்பால்
கொண்டுதான் புரிவானேற் கோடிசன்மஞ்
சூகரமாய்க் குலைவானில
கண்டனு னவன்பூசை புரிவதன்முன்
னீர்பருகிற் கடையனுவான்
துண்ட வான்மதி யணிவான் பூசைபுரி
யாதுண்பான் சுணங்கனுவான் 12

716 ஈசனுர் பூசனைக்கு முன்மனையி
லனதான மீந்தி டானேல்
பூசையாய்க் கோடிசன்ம முதித்திடுவன்
திருநீறு புனைந்திடாமல்
நேசமோ டனமருந்திற் கோடிசென்மங்
காக்கையாய் நிகழ்வனீற்றை
ஆசையோ டணியாமலன தானஞ்செய்யிற்
கழுகா யலைகுவானே 13

717 சென்னியின்மே லருடிரிபுண் டரம்புனையா
மறையவர்க்குந் தீம்பாலர்க்கும்
அன்னமருந் துறக்கொடுத்தான் கருங்குரங்காய்த்
திரிந்துழல்வ னரனுர்
முன்னர்ச்சொன் னமுறைசாட்டங்கத்
துடனிறைஞ்சான்
மலைப்பாம்பாய்ச் சுழல்வன்சூழல்
மன்றுவலம் புரியாதான் செக்கிழுக்கு
மேருக வருவன்றுனே 14

718 இசைபயிலுந் தோத்திரங்க ளீசன்முனம்
பழிச்சாத வீனனென்றும்
வசைபுனையு மூகனுய் வந்திடுவன்
சிவாலயத்தில் வணங்கிநாளும்
நசைபுரியுஞ் சேவைசெய்யா னந்தகனுய்ச்
செனித்திடுவ னுகமுன்னர்
விசைபுரிய நடித்திறைஞ்சான் மூத்திரகூ
பத்திடை வீழ்குவானே. 15

719 மயிலருகே வந்தனைய மலைமகளை
யிடத்துவைத்தவள் ளலவன்கோயில்
எயிலருகே மலசலத்தை பிறக்குமவன்
கோடிகற்ப மினர்கூடி
குயிலுமல மடுவில்விழுந் திடருறுவ
னுலயத்திற் கோழைமூக்கில்
பயிலுமல நீர்விடுத்தான் கோழையுறு
நரகத்திற் படிகுவானே 16

720 என்னையுடை யானருளால் வீற்றிருக்குஞ்
சிவலிங்கத் தெண்ணெய்க்காப்பு
மன்னியதில் வைகாம லபிடேகத்
திரவியத்தா லவயங்க நீக்கிப்
பின்னரும்புற் குச்சிலிட்டு மலினமறப்
பூசியாப் பேதைநாளும்
மன்னியகற் பங்கோடி கொதிக்குமெண்
ணெய்க்கொப்பரை யின்மறிகுவானே 17

721 வீட்டின்ப மனுபவிக்கு விழைவுடையார்க்
கண்ணலருள் வேண்டுமென்றே
நாட்டுஞ்சொன் மறைகூறும் விதியுணர்ந்து
பயந்துலக தநான்ருளில்

---

718 ஆம் பாடல்—பழிச்சாத வீசனென்றும் — என்றுங் காணப் படுகின்றது.

721- ஆம் பாடல் பயந்துலகதனுற்ருளில் என்று காணப் படுகின்றது.

மூட்டுந்த னன்புபொது வகற்றியபத்
தியிற்றெழுதான் முத்திவீடு
காட்டுந்தண் ணளிகொழிக்கு மானந்தக்
கடலழுந்திக் களிப்பன்றுனே 18

722 வீடளிக்குந் தாதாவும் வினையொழிக்குங்
கருணையனும் விமலனென்றே
தாடொழுது களியாமன் மற்றையபுத்
தேளிரடி தனைப் போற்றல்
தேடுசுவை யாரமுது செங்கையிலே
யிருப்பவது தெளிந்திடாமல்
ஓடுமுடை நாற்றமுறுந் தாதருந்து
மவனிழிபுக் கொக்குமன்றே 19

723 என்றுகுறு முனியோகிக் கிசைத்தவண
மிவ்வாறென் றிமையோர்கேட்ப
நன்றுரைப்பச் சிவயோகத் தருமறையோன்
பின்புபெறு நலமேதென்னத்
துன்றுபிறப் பொன்றினுக்கோ ராயிரம்பல்
லுருவெடுத்த துன்பமெல்லாம்
கன்றுமுளத் தொடுபொருந்தி யொருகாலத்
திருவினையைக் கடந்தானம்மா 20

724 அப்போதே பூசுரனு யடைந்தரிய
கேதாரத் தண்ணல்பாதம்
முப்போது மரிச்சனைசெய் திருவினையாங்
கடல்கடந்து முத்திபெற்றுன்
ஒப்பாரு மில்லானைச் சிவயோகத்
தரிச்சனைக ளுஞற்றுவாரேல்
தப்பாது விண்ணவர்க்குஞ் சார்வரிய
தொருவீடு சார்வாரன்றே 21

725 மயிர்க்கடையி னெருட்பாற்றைக் கடக்குமவ
னெனமதித்து மத்துச்சேந்த

தயிர்க்குநிகர் மனச்சுழற்சி தவிர்ந்துகரங்
குவித்திறைஞ்சி தாழ்ந்துபோகி
உயிர்க்குதவுங் கருணையொள் ளிழையா
ளுயகனை யுவந்துபோற்றி
செயிர்க்குணங்க ளவைநீக்கிச் சேவித்தாற்
பரகதியைச் சேரலாமே 22

726 வேதமூல காரணமான வீட்டின்ப
மளிக்குமவன் விமலனேகாண்
ஆதுலராங் கடவுளர்க ளவ்வீடு
கொடுக்குமங்கை யறியாரெங்கண்
மாதுபாக னுக்குரித்து முத்தீவீ
டெனமறைகள் வழுத்துமாற்றல்
ஓதிவா லுணர்வுடையோர் சிவபூசை
யனுதினமு முஞற்றல்வேண்டும் 23

727 அளவிறந்த புண்ணியங்கள் புரிந்தவருக்
கல்லாம லையன்பூசை
உளமருவ மாட்டாது சிவனருளைப்
பெற்றவரே யுவந்து செய்வார்
வளமருவு சிவபூசை வயத்ததே
யானந்த வடிவாமுத்தி
விளையுமறை துணிபிதுவே யினிமொழிவ
திலையெனவும் விளம்புமன்றே 24

728 எனக்கமலப் பொகுட்டரசு வீற்றிருக்குஞ்
சதுமுகன்முன் னிமையோர்க்கெல்லாம்
மனக்கவலை நீக்குதிர் நம் பரசிவனே
பிரமமென மதிப்பச்சொன்னன்
சினக்களிற்றின் மருப்பொசிக்குங் கோளரிதா
மரைக்கோயிற் செல்வியம்பொன்
தனக்குவடு பாய்ந்துழக்க முறுக்குடையும்
பசுந்துளபத் தாரினனே. 25

அபராதங் கூறிய வத்தியாயம்
முற்றும்.

விபூதி மகிமை கூறிய வத்தியாயம்

வேறு

729 நித்த மர்ச்சனை நிகரி லான்றனைப்
புத்தியங் கொருப்படப் புரிகு வார்க்கெலாம்
முத்தியும் போகமு முறையி னல்கிடுஞ்
சித்தியாந் திறமினிச் செப்பு வாமரோ 1

730 விடியி லெழுந்து வெண்ணீறு பூசியே
பொடியணி மேனியன் புனித நாயகன்
அடிமலர் நினைந்துதன் னகத்து நீங்கிப்போய்
முடிசவு சாதிக ளியாவு முற்றியே 2

731 தண்புனற் படிந்த பின்ருணு ரூபமாம்
பண்புறு நீறுட லெங்கும் பாலித்த
வெண்பொடி நானமென் றுரைக்கும் வேதங்கள்
எண்பயி னுனமற் றிரண்டுதா னென்பர் 3

732 வாருண நானமு மறைகள் கூறிடும்
மாரு ளாக்கி நேயமு மன்பொடும்
சீரு நானமற் றிரண்டுஞ் செய்கபொன்
தாறு கொன்றையன் ருளுக் கன்பரே 4

733 இரண்டு நீர்படித லென்னெனில் வெண்டிரை
புரண்ட நீர்படித லேபோது மென்பிரேல்
திரண்டுறு புறத்தழுக் கொன்றுந் தீர்த்திடும்
உருண்டுறு முளத்தழுக் ககற்ற வல்லதோ 5

734 பூதிநீ ராடலே புறம்பு முள்ளுமார்
கோதுறு மழுக்கெலாம் நீக்குங் கூறிய
மாதுய ரிடும்பையில் வாருணநா னம்விட்டு
ஆதிநீ றணியினு மடையு மின்பமே

735 கூசிநோய் வயத்தனுய்க் குளிரு நன்னதி
வாசநீர் படிந்திலா னெனிலும் வண்மையால்
ஓசைகொ ணீற்றிலுத் தூளனஞ் செய்யின்
பூசனைப் பயனெலாம் பொருந்து மென்பவே 7

736 ஆற்றுநீர் படிபவ னண்ண லுண்மகிழ்
நீற்றிலுத் தூளன நேர்கி லானெனின்
தோற்றுநீ ராலின் பயன்க டுன்னிலான்
போற்றுநீ ருடலா வசியம் புண்ணியம் 8

737 ஆக்கினே யம்மெனப் பூதி யாடலை
தூக்கிநான் மறையெலாந் துதிக்கு மாகையால்
தேக்ககம் புறத்தழுக் கொழுக்கந் தீர்த்தமாம்
பாக்கிய நீற்றின்மே லென்கொல் பாரிலே 9

738 புழுக்குரம் பையெனப் புகலுங் காயமும்
விழுப்புமா மண்ணல்வெண் ணீறு மேற்படில்
அழுக்குறு பாவங்க ளனைத்து மாய்ந்திடும்
ஒழுக்கநான் மறைகளு முரைக்குஞ் சத்தியம் 10

வேறு

739 நித்தியங் கோடிதீர்த்த நீர்படிந் தாலுமன்னேன்
சுத்தனே நீறுபூசான் தூயவெண் ணீறுபூசில்
பத்தியாய்க் கோடிதீர்த்தம் படிந்திடும் பயனு
முண்டாம்
மெத்திய பாவகோடி தீர்ந்துபின் விமலனுவான் 11

740 விதித்தவெண் ணீறுதன்னை மெய்யெலாம் புனைந்த
மேலோன்
மதித்திடு மகிமைதன்னை மறைகளு முணரமாட்டாத்
துதிக்கில ரறிவரென்னிற் சோதிக்குஞ் சோதியான
மதிக்கொழுந் தணியுமெங்கள் வானவ னறியு
மன்றே. 12

741 நீறுடல் தரித்துவேதம் நிகழ்த்திய கன்மஞ்செய்க
மாறுபட் டணியாகுகில் வைதிகக் கன்மம்பண்ணும்
பேறுமற் றடையான்கண்டீ ராகையாற் பெரிய
நீறறைத்தே றுறவணிந்தபின் னர்வைதிக கன்மஞ்
செய்வன். 13

742 மெய்யெலா நீறுபூசும் விருப்பிலான் சுத்தன்கையன்
பொய்யனு மவனேயாமாற் புண்ணிய நீறுபூசும்
துய்யனே சுத்தர்தம்மிற் சுத்தனுய்ச் சொல்லும்வேதம்
செய்யவெண் ணீறுபூசான் றீராத பாவியாமே 14

743 அனந்தநற் றீர்த்தந்தன்னி லாடிய பயன்களோர்கால்
வனந்தவெண் ணீறுத்தூளம் புனைந்தவன் றனக்கு
வாய்க்கும்
நினைந்துமுக் காலந்தோறு நீறுமெய் யணிந்தா
ஞென்றூர்
கனந்தருங் கண்டன்றூனே யவனெனக் கழறும்
வேதம் 15

744 மூன்றெனுங் காலந்தோறு முதல்வன்வெண் ணீறு
பூசான்
மான்றதோர் பதிதனுகுமேன் மறைமுழங் குமாற்றூல்
ஏன்றகா லங்கடோறு மிடைவிடா தணியவேண்டும்
ஆன்றமைந் தடங்கிவேத மாய்ந்தவர் யாருமன்றே
16

745 இருமினுந் தும்மினுலு மிருந்துகொட் டாவிவிட்டுப்
பொருமினு மலசலாதி போக்கிய போதுமன்னம்
தருசுவை நுகர்ந்தபோதுந் தண்புல் பருகும்போதும்
பெருமித நீறுபூசிற் புனிதனுய்ப் பிறங்குவானே 17

746 அறையுமிக் காலம்வெண்ணீ றணிந்திடான் பதித
னுவான்
நிறையுநீர்ப் படிதலாதி நிகழ்த்திய கன்மமெல்லாம்
முறையுடன் புரிந்தானேனு முதல்வன்வெண்
ணீறுபூசான்
இறையுநற் புனிதனுகா னென்றெடுத் துரைக்கும்
வேதம் 18

747 அக்கநன் மணியும் வெண்ணீருடலு மணிந்தபின்னர்
மிக்கமுப் புண்டரத்தை மிலைந்தரிச் சனைகள் செய்தால்
தக்கதோர் பயன்களெல்லாந் தருமிவை தரியானாகில்
தொக்ககன் மங்கட்கன் றேனருகனுய்ச்
சொல்லலாமே 19

748 ஒளிசெய்வெண் ணீறுபூசு மொருவனெவ்
விடத்திலேனும்
சுளியுமெவ் வியல்பிற்றேனுஞ் துன்மர ணத்திலேனும்
விளியுமிவ் வுடலம்வீழ்ந்தால் விமலமாய்ச்
சிவலோகத்தில்
களிதரும் விமானத்தேறிக் கண்ணுதன் முன்னம்
சேர்வார் 20

749 ஆகையா லண்ணல்வெண்ணீ றனுதின
மன்பினளித்(து)
ஆகமோ டணியும்போழ்திற் றுணுவி ஞமங்கூறின்
ரோகமாம் பாவகோடி முடிந்தது சாம்பராமேல்
நாயகன்ற னீற்றின் பெருமையாரி யம்பவல்லார் 21

750 இங்கிவை வேதநான்கு மியம்பும்வெண்
ணீற்றின்தன்மை
உங்களுக் குரைத்தேனென்ன வும்பர்க
ளிறைஞ்சியையா!
மங்குதுன் மரணந்தன்றல் வனந்தனி
லடைந்தாருக்கும்
பொங்குவெண் ணீறுபூசிற் கதியுண்டோ?
புகல்வாயென்றார். 22

751 அவ்வுரை கேட்டுவானோர்க் கலைகடல் மதித்துநல்ல
செவ்விய வமுதமீயுஞ் சீதர னுவந்து தீந்தேன்
கொவ்வைவாய்க் கருங்கட்டோகை கூந்தலங்
கவுரிகேள்வன்
சைவவெண் ணீறுபூசுஞ் சரித்திரஞ் சாற்றலுற்றான் 23

752 முற்படு காலந்தன்னின் முதுக்குறை யந்தணாளன்
சொற்படு வேதங்கற்ற **துசவா** னென்னுந்தோன்றல்
அற்பொடு வாரணசிக் கருந்தமிழ் நாடுநீங்கிக்
கற்பொடு வனத்திற்செல்வானக் கதிரவன்
மறையக்கண்டான் 24

753 ஆறணி வேணியான் னருள்பெரு வசடர் தங்கள்
பேரறி வதனைமாயைப் பெருகிருள் மூடுமாபோல்
காரிருட் படலஞ்சோதி கானத்தைக் கவர்தலோடும்
ஓருமம் மறையோனந்த வனத்திடை யுற்றானன்றே
25

754 உற்றவம் மறையோன்கங்கு லொழிந்தரு
ணோதயத்தில்
பெற்றமூர் பெருமானின்பப் பேரருள்
கிடைத்தோனுக்குத்
துற்றிய பசுனீகாரத் துன்னிருள் கிழியத் தோன்றும்
சிற்சுடர்ச் சோதிபோலுந் தினகரன் தோன்றக்
கண்டான். 26

755 புலரும்வை கறையிலையன் பூங்கழற் கமலஞ்சிந்தை
அலருற விருத்திபோற்றி யருங்கடன் முடித்தபின்னர்
பலர்புகழ் நீற்றினனம் பரிவுட னுடிச்சிந்தை
மலர்துச வானுமந்த வனத்திடை வருதலாகும் 27

756 பின்னொருமறை யோன்வெய்ய பாதகம் பெரிதுஞ்
செய்தோன்
அந்நெறி செல்லும்வேனை யடல்விடந் தீண்டலோடும்
தன்னிறி விழந்துமாழ்கித் தலைமிசைக் கொண்டு
சேர்வான்
நன்னெறி வினையாலந்த நான்மறை யவனைக்
கண்டான் 28

757 துசவான்றனைக் கண்டுசோர்ந்திடு மறையோன்
சொல்வான்
நசையுநர்க்காக்குஞ் செஞ்சொனுன் மறைமுனிவ!
நாயேன்

இசையும்வெவ்வினை யாலிக்கானே குழியெரிவாய்க்கும்
வசையுறும் வெவ்வராவின் வல்விடந் தீண்டிற்றன்றே
29

758 கூறினன் கூறுமுன்னங் கொடுவிடந்
தலைக்கொண்டாவி
பாறினன் போலவீழ்ந்த பரிபவ நோக்கியெல்லாம்
தேறுமா முனிவனந்தோ செழுமறைக்
குலத்துளோனுக்கு
ஊறுவந் துற்றதோவென் றிரங்கின னுருகினானே 30

759 அகத்ததோ புறத்ததோவென் றுவிபோ
மமைதிதன்னில்
முகத்துட னெற்றிதன்னில் முக்கணன் கழல்களுன்னி
மகத்துவ முனிவனீறு வனைந்தனன் வனைந்தவேலை
மிகச்சுழன் றெரியுங் கண்ணார் வெஞ்சமன்
றூதாவந்தார் 31

760 ஆர்த்தன ரரிகள்போலு மழன்றெரி பொங்குகண்ணார்
பார்த்தனர் மறையோர்நெற்றி பானிலா
வெரிக்குநீற்றைக்
கூர்த்தனர் நோக்கிக் கைகள் குலைந்தனர் காலதூதர்
வேர்த்தன ருடலமெல்லாம் நடுங்கினர் விலகிநிற்பார்
32

761 நமரங்கள் கேளீரிந்த நான்மறை யாளன் பாவத்
திமிரங்கொள் சிந்தையானென் றெண்ணிலீர்
திருவெண்ணீறு
பிமரங்கொ ளுடம்புநீங்கும் பெற்றியிற்
கிடைக்கப்பெற்றான்
தமரங்கொள் நீர்சூழ்பாரிற் றபோதனர்
தலைவனானான் 33

762 அவரவர் புரிந்தகன்ம மனுபவ விதியென்றாலும்
இவர்தரு வெண்ணீறுபத் திலங்கிய திறத்தினாலே
கவர்தரு பாவமெல்லாங் கனல்படு பஞ்சியாய்த்
துவனினி யெம்மாற்செய்யு முயிரச்சந்
தீர்ந்துவிட்டான் 34

763 அந்திய காலந்தன்னி லரன்றிரு வெண்ணீறள்ளி
முந்துகே சாதிபாத முழுதுட லணியப்பெற்றால்
பந்தமாஞ் செனனகோடி பவக்கட றூர்க்குங்கண்டீர்
தந்தபுண் ணியங்கள்கோடி தவத்திறற்
றறிக்கக்காட்டும். 35

764 புண்ணியங்கள் கோடிகோடி புரிந்தவர் தமக்கேயன்றி
அண்ணனீ றிரண்டுதூளி யாயினு மணியலாமோ
எண்ணில புண்ணியங்கள் முன்பிழைத்தவ
னிவனேயாகும்
நண்ணுமுத் தூளணந்தா னயந்துட
லணியும்பேற்றால் 36

765 எனச்சில ரியமதூத ரியம்பிடச் சிலவர்சொல்வார்
உனத்தகு நீறுத்தூள முடம்பெலா மணியப்பெற்றால்
வினைக்கொடுங் கிரியைநூறி வீட்டையு
மளிக்குமோதான்
இனைத்துநீர் சொன்மினென்னக் கேட்டவர்
நிகழ்த்துவாரால் 37

766 நீறணு வொன்றேதேனும் நிகழ்ந்ததிற் பாதியேனும்
ஈறுவந் தணுகும்வேலை யணிந்திட வெய்திற்றென்றால்
விறுமால் விடையோன்போன்று விரிசடா
மழுவுந்தாங்கி
நாறுபூங் கொன்றைவேய்ந்து கயிலையி
னண்ணுவாரே 38

767 பரம்புநீருலகி னீறுபகரணு வேனுமிப் புவிபெற்றத்
திரம்பெறு கதிபெற்றுரைச் செப்பிடில் கணிதமின்றே
திரம்புமுத் தூளமின்றே னிகழுமா பத்திற்பெற்று
வரம்பெறு மிவன்தன்சீர்த்தி யாவரே
வழுத்தற்பாலார் 39

768 பாதமே தொடங்கிச் சென்னிபரியந்தந்
திருவெண்ணீறு
மீதுற வணதனுனே விளம்புமுத்
தூளணப் ......
ஏதம தகற்றுமின்னேன் மெய்யெலா
மிலங்கப்பூசிச்
சாதலு மணியதென்று விவன்புகழ்ச்
சாற்றலாமே 40

769 பாரிடை யனேகபாவம் பயிற்றுமிப்
பனவனிந்தக்
காருறு வனத்தில்வீயக் கதியும்வந்
தெய்திற்றென்றல்
ஓரிலமற் றொருவர்தம்பா லொண்ணித்
செல்வமெய்தும்
சீருறு காலந்தன்னைத் தேவர்க்குந்
தெரியலாமே 41

770 பூசுரன் றனக்குவந்த புன்கணை
யொழிக்கவிந்தச்
சூழ்ச்சியு நுழையாதாகக் கானிற்றுலங்குநீ
றெய்திற்றம்ம
பேசுநல் வினையினுற்ற பெரும்பய
னுதவமுட்டும்
ஈசனார் திருவுள்ளத்தை யாரறிந்
தியம்பவல்லார் 42

771 இவன்றனக் கெளிதாய்முத்தி யிப்பொழு
தெய்துமுள்ளம்

கவன்றது விடுமினீறுங் கதிக்கொரு
துணையாய்மேவும்
துவன்றுவெண் ணீற்றைத் தானேதொன்னில
வரப்பிற்றேடிச்
சிவன்றிரு வருளிற்றேய்வர் செம்பொரு
டெளிந்தமேலோர் 43

772 எய்துகற் கரியமுத்தி யெளிதுவந்
தெய்தநல்கும்
மெய்தரு நீற்றுமேலாய் விளைந்தபாக்
கியங்களின்றால்
மைதரு மறையோன்மெய்யில்
வனைந்தவெண் ணீறுகாணச்
செய்தவ நமக்குவாய்த்த திறத்தையென்
சொல்வேமென்றான் 44

773 நீற்றினை யணிந்தவிந்த நீதிமான்
தன்னைக்காணும்
பேற்றினை யடைந்தோநாமும் பெருந்தவத்
தலைவரானோம்
தோற்று மித்தின நமக்குத் தூயநற்
றினந்தானுய்த்து
சாற்றருந் தவத்தா னிமறை தரித்தவன்
றன்னைக்கண்டோம் 45

774 நெற்றிமே னிறுதாங்கு நீதிமான்
றன்னைக்காண
வற்றிடாத் தவங்கள்கோடி யிழைத்தவர்
தமக்கேவாய்க்கும்
பெற்றுளோ மிவனைக்காண விதற்குமேற்
பேறுமுண்டோ
கற்றைவார் சடையாற் காணுங்காட்சியக்
கானிற்பெற்றோம் 46

775 பொறையிலிம் மறையோனுக்குப்
பாவங்கள் போக்குவித்த
மறையவர் பெருமானுக்கு வருதுசவானைக்
கண்டோம்
கறையறு சான்றோருக்குஞ் சான்றவன்
களைகணன
துறைபெறு நீறுநல்குங் கொடையினிற்
றுன்சூரன் 47

776 சாந்தநற் சதுரன்சீலன் தயாபரன்
றண்சம்பன்னன்
ஏந்தலித்து சவான்ரு னீசனுக்கி
னிய நண்பன்
போந்ததோர் தெரிசனத்தா லிவனருள்
புனிதநீற்றுல்
வாய்த்தது சிவசாருப மாயுமிம்
மறையோனுக்கே 48

777 ஈசனுக் குவகையார்மே லென்னில்வெண்
ணீறுதம்மேல்
பூசிய புனிதர்மேலும் புனிதநீறணிந்
தோர்க்கண்டு
நேசமோ டிறைஞ்சிப்போற்று நீதியான்
மேலுங்கண்டீர்
ஆசையோ டவரையென்று மகன்றிடா
னெங்களையன் 49

778 வெண்பொடி யணிந்தவிந்த விப்பிரன்
றன்னைகக்ண்டது
ஒண்பெருந் தவமோவன்று வுரைத்தி
டிற்றெய்வாதீனம்

எண்பெறு நமக்குமேலை யின்பவீ
டெய்துங்கண்டீர்
திண்பெறுந் திருவெண் ணீற்றுச் செழுந்தவன்
தெரிசனத்தால் 50

779 இன்னவா றுள்ளந்தன்னி
லெண்ணிய காலதூதர்
மன்னுமித் திறத்தாற்றன்ம
சங்கடம் வந்ததம்மா
என்னையென் றுரைக்கிலின்னேன்
றனைக்கவர்ந் தேகினேமேல்
கொன்னவில் பரசுபாணி கணங்களால்
குலைகுவோமே 51

780 அன்றிநல் லறத்தின் மேனியருடிரு
நீற்றினனை
நின்றநாம் பிணித்துச்சென்று நிருபன்முன்
விடுத்தாமென்றால்
துன்றுவெண் ணீற்றினனைத் தொடச்சொன்னரி
யாவரென்று
மென்றிதழ் கடித்துக் கூற்றும்
வெகுண்டெமையார்க்கு மென்பார் 52

781 விட்டுநாஞ் சொல்வோ மென்றால்
வெஞ்சினக் கூற்றினனை
பட்டுநா மகலப்போமோ படுத்திடிற்
கணங்கள்கொல்வார்
எட்டும் வெங்கனலி யுற்றவிருதலைக்
கொள்ளியுறும்
கட்டெறும் பொத்துநின்று கலங்குதற்
கடனேவென்பார் 53

780—மூன்றுமடியில் ணீறு நாளை—என்று காணப்பெறுகின்றது.

782 உருத்திர கணங்களிப்போ
துற்றிடுவா ரெலனுமு
மருத்தியி ஞெருவவாகு மன்றியோ
ரடியதேனும்
கருத்துறப் போக்கப்போமே வென்றவண்
காத்துநிற்பார்
கிருத்துறு கணங்கள்செல்லுந் திசைதொறு
நோக்குவாரால் 54

783 சங்கர! சிங்கரேசா! சார்வரோ
வென்றுசொல்வார்க்கு
இங்குநீ றணிவார்தம்மை யிமைப்பொழு
தெதிர்வோமென்னும்
பொங்குறு மூவகைய ரிப்போதிவண்
புகுவரென்று
இங்கெவன் சங்கையென்றவ் வேந்தலைச்
சூழ்ந்துநிற்பார் 55

784 பூதிமெய் யணிவார்தம்மை யழைத்திடப்
புவனமீனற
மாதொரு பாகனேவ வருசிவ
கணங்களாவார்
காதலின் முகமலர்ந்து களிப்புறு
நகையிஞேடும்
ஆதரத் துரைமுன்னுக வடைந்துபின்
ணன்புஞ்செய்வார் 56

785 கலைத்தொழிற் படுத்ததென்பாற் கனிந்திடுங்
கானஞ்செய்வார்
தலைத்தரு மன்பினாலே முகமனுஞ்
சாற்றியும்மை

நிலத்திடைக் காணப்பெற்ற்ரே மென்றெடுத்
துரைத்துநீவிர்
அலைத்தநீர் வேணியான்முன் னணைகுவி
ரென்றழைப்பார் 57

786 விலகிவில் லுமிழுஞ்செம்பொன் விமானத்
தினடுவணேற்றி
மலர்தரு மன்பிற்சூழ்ந்து சென்றிட
வருவீரிப்போது
அலைதரு நமர்காள்சற்றே ரரைக்கண
நிற்பினென்பார்
இலகுற விண்ணுமேதோ வந்திலா
ரென்றுஞ்சொல்வார் 58

787 தாயினு மினியவெங்கள் சங்கரன்
றனதுநீற்றல்
வாய்தரு மேனியாரை மறப்பனோ
வென்றுஞ்சொல்வார்
ஆய்தரு கணங்கடம்மை யனுப்பவுஞ்
செய்வானென்பார்
வேய்த்தோ ளமரனுன் விருப்பெலா
மவர்பாலென்பார் 59

788 நீற்றொளி பழுத்தமெய்யர் தங்களை
நிழல்வெண்டிங்கள்
கீற்றொளிர் வேணியானங் கேளிரென்
றுவக்குமன்னோர்
ஆற்றிய பாவமெல்லா மகற்றிநன்
முத்திவீட்டில்
ஏற்றுவ னென்றுசொன்ன னென்றெடுத்
தியம்பும்வேதம் 60

789 மறைகளின் றுணிபுகூறி மகிழ்திரு
நீறுபூசும்
அறிவுடை யாரேயைய னருளெலா
மடையக்கொள்வார்
அறையுமற் றன்னோர்பாலிற் பராமுகஞ்
செய்யானென்று
முறைமையாற் கணமிப்போதே முன்னுவர்
காண்மினென்பார் 61

790 எவ்வகைப் பட்டானேனு மெப்பவம்
புரிந்தானேனும்
செவ்விய நீறுபூசுஞ் செய்கையோ
னேயென்னும்
அவ்வகை யிவன்பாற்காட்ட வனுப்புவன்
கணங்கடம்மைக்
கொவ்வைவாய்க் கவுரிபாக னென்னவுங்
கூறுவாரால் 62

வேறு

791 இவைபோல்வன பற்பல கூறியெதிர்
அவையம தூத ரவ்வாருயிரைக்
கவராது விடாது கலங்குமுழிச்
சிவராச கணங்கள் செறிந்திடுவார் 63

792 அணைந்து மகிழ்ந்து புறந்தரவே
அலமந்து நான்மறை யாளனுயிர்
விலகும்பொழு தம்பொன் விமானமொடும்
குலவுங்கண நாதர்கள் குப்புறுவர் 64

793 குப்புற்ற கணங்கள் குலச்சுருதி
செப்புற்ற வெண்ணீறு புனைந்தசிவம்
ஒப்புற்ற வனைத்தொழு தாருருகித்
துப்புற்ற மனக்களி துள்ளினரால் 65

794 வெண்ணீறு புனைந்தனர் மேனியிலெம்
கண்ணுள் கலங்கலை யென்றுகனிந்து
எண்ணுதவ ரோடுமியம் பினரால்
மண்மேலுனை யார்நிகர் வார்களெனு 66

795 மாணிக்க விமானம் வளைந்தநடு
சேணிற் கதிரொத்த செழுந்தவிசில்
ஆணிக்கலை யோயமர் கென்றலரால்
பூணிப்பொலி பூசைபுரிந் தனரால் 67

796 ஆர்த்தார்க ளவ்வேலையில் விண்ணமரர்
தூர்த்தார் மலர்மாரி துதைந்தனரால்
போர்த்தா ரரமங்கையர் பொற்புநடம்
கூத்தாடினர் கொம்பரி னிம்பரிலே 68

வேறு

797 தழங்கின வலம்புரி தாரை சின்னமும்
முழங்கின துந்துபி முருடு சச்சரி
செழுங்கருவிகள் செவிக்கமுதிற் சேர்ந்தன
எழுங்கதிர் விமானமும் விண்ணி னேறிற்றே 69

798 கொண்டனர் படர்ந்தனர் குலவு வான்வழிச்
தண்டலிற் சிவகணத் தலைவர் வெண்டிரி
புண்டர நீற்றணிப் பூசு ரன்றனை
மண்டொளி விரித்திடுங் கட்டிலை மால்வரை 70

799 அடுத்தன ரின்னரு ளாழி யான்முனம்
விடுத்தனர் பனவனு மெய்வி திர்த்தனன்
கடுத்ததும் பியமணி கண்ட னின்னருள்
கொடுத்திடப் பணித்தனன் கும்பிட் டேத்தினுன் 71

800 ஏத்துபு நின்றவவ் வேந்த லுக்கருள்
பூத்தர சிவகணத் தலைமை பூண்டுற
பார்த்தனுக் கருளினுன் பணிந்திட் டானுயர்
மாத்தவ மறையவன் மகிழ்ந்து பெற்றனன் 72

801 மான்மழுச் சூலமும் வளரும் வெண்பிறை
தான்மலர் வேணியுந் தழற்க ணெற்றியும்
தான்கண வானவர் வணங்கு நன்மையும்
ஊனமில் செல்வமு முயர்வும் பெற்றனர் 73

802 அந்திய காலத் திலைய னீற்றருள்
வந்திடு தன்மையால் மாத வம்புரி
இந்திரற் கரும்பத மெளிதிற் பெற்றனன்
உந்திய விட்டிரு னுடம்பு நீங்கினுன் 74

803 மூன்வித்தன்மை யாலையனீற் றையேநான் மறையால்
முறைற்கலத் தருமேமுறை விதிப்படி
மிலைந்திட்டாலவர்
மமரோர் வழுத்தற் பாலதோ 75

804 வேதவே தாந்தங்கள் விதிக்கும் பூதியை
பாதக ரென்றவர் பரிந்து பூசினுல்
வாதனை யடைந்திடா ரின்ப ருபமாம்
மாதொரு பாக னுமருள் வழங்குமே 76

805 (ஒப்பிலா தவரணி) நீற்றை யின்னுயிர்
வைப்பெனத் தரித்திடா மடமை யுற்றவர்
செப்பிய வுடலினுற் றீண்டப் பெறுதவர்
வெப்புறு நரகமே விளையு மேலைக்கே 77

806 தரித்தவன் பூதியைத் தணப்பில் பாக்கியம்
வரித்தவ னுலகினில் வாழ மூத்தமன்
விரித்த நான்மறை யெலாம் லிளம்பும்பூசைக்கும்
உரித்தவ னஞ்செழுத் துணறற் பாலதோ 78

807 இந்துவார் சடையினுன் கணங்க ளவ்வழி
வந்தது மறையவர் கொண்டு வான்வழி
பந்தமில் படர்ந்தது நோக்கி யஞ்சியே
உந்துவெங் கூற்றுவன் தூத னேடினுன் 79

803-ஆம் பாடல் உள்ள ஏடு முறிந்திருப்பதால் பாடல் நன்கமைய வில்லை

808 என்றருந் தமிழ்முனி யிட்டியம்பி
சென்றவிங் கனியிதழ்க் கொண்ட லூர்தியான்
வென்றிமால் விடையினுன் குடந்தைவீற்
றிருந்தோள்
.... க்குரைத் திட்டானரோ 80

விபூதி மகிமை கூறிய வத்தியாயம்

முற்றும்

808- ஆம் பாடல் உள்ள ஏடு முறிந்துளது

கலிவிடம்பன் அத்தியாயம்.

809 மாயன் தன்னை வணங்கி மதுமடை
பாயுந் தாமரை யோனும் பகருவான்
தூய னீறுதரிக்க வறிவிலான்
மேய தோர்கதி யென்கொல் விளம்பென 1

810 கேச வன்னிது கேட்டி யுனக்குநான்
நேச மோடு நிகழ்த்துவ னென்றெடுத்து
ஆசை யோடறை வான்முத லாமுகம்
பேசு சீர்த்தி ரேதாயுகம் பின்னுகம் 2

811 இந்தமூன் றுகத்தி யாவரு மெந்தைதான்
தந்த நீறு வரிக்கக் கலியுகத்து
உய்ந்து போநெறி யோர்கில ராகையால்
வெந்த நீறு தரிக்கும் விருப்பிலார் 3

812 மறைகள் கற்று மதிமல ரந்தணர்
இறைவ ருக்கு முணர்விலை யெட்டியர்
அறிவு பற்றி யணிகில ரன்பினுல்
பிறைமு டிச்சடை பிஞ்ஞக னீற்றையே 4

813 காருலா மணிகண் டன்வெண் ணீற்றினைச்
சீருலா வத்தெரி யாச்சி தடர்கள்
தார காகண மட்டுந் தழற்படும்
கோர மாநிரை யத்திற் குளிப்பரால் 5

814 கலியு கத்தினிற் கண்ணுதற் சாமிதன்
பொலிவு றச்சிவ தன்மங்கள் பூசுரர்
தவநமை பற்றிப் புரியாத தவறினுல்
மெலியுங் கோர நரகில் விழுவரால்

இத்தலைப்புள்ள ஏடு முறிந்திருப்பதால் இதன் உண்மைப்பொருள் தெரியவில்லை,

815 நந்தி வாகன் றன்னடி நண்பினல்
புந்தி யாரக் கலியுகம் பூசுரர்
சிந்தி யாத தவறினிற் றீக்குழி
சந்தி ராதிபர் மட்டுந் தளர்குவார் 7

816 ஆகில் சீர்க்கலி காலத்தி லந்தணர்
ஈசனுர்க் குறுபத்தி யில்லா மையால்
தேசில் சந்திரர் சூரியர் மட்டுந்தீ
வாச முற்ற மடுவில் மயங்குவார். 8

817 அந்திக் காலத் தரனைத் தரிசியார்
நந்து நான்மறை யாளர் நவையினல்
வந்த வார்கலி மாநர கத்திலே
சந்தி ராதிபர் மட்டுந் தயங்குவார். 9

வேறு.

818 உண்மை யாகுமுப் புண்டரந் தரித்திட வுணரார்
மண்ணணி னூர்த்த புண்டரந் தரித்திடு மயக்கால்
நண்ணும் வெங்கலி காலத்தினுன் மறையாளர்
எண்ணணில் காலமும் நரகமே கதியென விளைப்பார் 10

819 உருத்தி ராக்கம்வெண் ணீறுமே யுண்மை
யென்றுன்னி
அருத்தி யோடணி யார்களாய் நரகிடை
யடைவார்
வருத்து வெங்கலி காலத்தின் மறையவ
ரெல்லாம்
எருத்திற் சேரம்பென வூர்த்தபுண் டரந்தரித்
திருப்பார். 11

820 துளவ மாலிகை தரிப்ப ரந்தணர்க ளுடொறும்
புளக மீக்கொள வரிச்சனை யிலிங்கத்திற் புரியார்
உளமுருத் திரமந் திரஞ் செபித்து நெஞ்சுருகி
வளரும் வெங்கலி காலத்தி னரகிடை வதிவார். 12

821 அஞ்செ ழுத்துநெஞ் சழுத்திடா ரந்தண ராணைத்
தஞ்ச மென்றடி தொழுதிடா ரமரர்க டலைவன்
நஞ்ச முண்டதோர் கண்டனே யாமென நவிலார்
வஞ்ச வெங்கலி காலத்தி னரகிடை வீழ்வார். 13

822 துறைந்திச் சடைப்பிஞ் ஞகன்றன்
னடிதுதியார்
இறைவனைத் துதிப்பார் களைநிந்தை
செய்திழிப்பார்
பொறையி னோடுநற் சைவரைப் பூசனை
புரியார்
அறையும் வெங்கலி யந்தணர் நரகமே
யடைவார், 14

823 தந்தித் தோலினான் றன்னடி துதிப்பவர் தம்மை
நிந்திப் பார்கள்நற் சைவரைவணங்கிட நினையார்
வந்தித் தெந்தையை யரிச்சனை வகுத்துளோர்தமைச்
சிந்தை வெந்துயருறும்படி தூடணை செயவார் 15

824 இவ்வணங் கலிகாலத்தி லிருப்பவ ரெல்லாம்
மைவணக் கருங்கூற்றினா னரகிடை மறுகச்
செவ்வண மறைநெறி யுணராமலே தேரும்
தவ்வணங் கொடுந் தொழுனைநோய்
முதலியவடைவார் 16

825 ஒவ்வொ ருத்தமர்மற் றெவ்வோ ரிடங்களி
லொதுங்கிக்
கொங்கை வாயிடப் பாகனார் விபூதியுட் கொண்டு
செவ்வி தாய்ப்புனைந் தக்கமு மணிந்து ளந்தெளிந்து
பவ்வ மேநிகர் பிறந்தையாங் கடலிடைப் படியார்
17

826 சாற்று மோர்திசை யிருப்பவர் விபூதியுந் தரித்துப்
போற்று மக்கமும் புனைகுவார் தங்களைப் புவிமேல்
தீற்று மூர்த்த புண்டரம்புனை யந்தணர் செயிர்த்து
வேற்றுத் தூடணங் கூறியே நரகிடை விழுவார் 18

827 ஏக தேயத்தி லுருத்திர மந்திர மெண்ணித்
தோகை பாக ரஞ்செழுத் தெண்ணியே துதித்தே
ஓகை யோடிருப் பார்தமை நிந்தனை யுரைத்து
மோக வெங்கலிப் பூசுர் நரகிற்கே முயல்வார் 19

828 கோட்டி ளம்பிறை சூடிதன் புராணங்கள் கூறக்
கேட்டு ளார்தமை நிந்திப்பார் புரத்தின்மேற் கிளர்தீ
மூட்டு வாணகை யணன்றன் னடிகான் முளரி
நாட்டு பூசைசெய் வார்தமைத் தூடணம் நவில்வார்
20

829 இன்ன தன்மையர் பற்பலர் திசைதிசை யீண்டி
சொன்ன நான்மறைச் சைவரைத் தூடணஞ் சொல்
பன்னு வெங்கலி காலத்தினர கிடைப் படிவார் [லிப்
மன்னு மாசைவ மருகியே யிருக்கும் வையகத்தில் 21

830 அண்ணல் சேவடிக் கன்புடை யார்கண் மற்றருகி
மண்ணில் மேற்கிடை யாதுவெங் கலியிலே வாய்மை
வண்ணம் நான்கு'வன்னமுஞ் சிவபத்தி யருகி
நண்ணு சைவமு மருகியே யிருக்குமந் நாளில் 22

831 சருவு வெங்கா லத்திற் றுணுவின் சைவம்
அருகி நிற்ப தென்னென்னில் வெம்பாவ ரூபகமாய்
மருவும் வெங்கலி யாகையால் யாவரும் மயங்கித்
திருகு சிந்தையுந் தீத்தொழிற் குணங்களுஞ்
சேர்வார் 23

832 அழுக்கு ளத்தொடும் வெகுளி யன்பின்மையு மவாவும்
இழுக்கு மைம்புலன் றன்வழிச் சேறலு மிழியாம்

ஒழுக்கும் புன்சொலும் படிறொடு பிறர்நிந்தை
மொழிவார்
சழக்கு மெய்யாற் பின்னையோர் தொழில்கொண்டு
சரியார் 24

833 சூதும் வேதனைத் தொழில்களுங் கொலைத்தொழிற்
றுணிபும்
மாது யர்ப்படுங் களவும் வெங்கோளும் வஞ்சகமும்
தீதுங் காதலாற் பிறர்மனை விழைதலுஞ் செய்தே
போது போக்குத லன்றிமற் றொருதொழில் புரியார்
25

834 பொய்சொ லாதவர் பிறர்பொருள் விழைந்தியார்
புலன்போம்
கைசெ லாதவ ரனுதினம் மனத்தழுக் காறு
செய்கி லாதவர் பிறர்மனை யவர்க்கண்டு சிந்தை
நைகி லாதவ ரில்லைவெங் கலியிடை நாட்டில் 26

835 இப்பெ ருங்கொடும் பாதக முதலிய வெல்லாம்
ஒப்ப யாவருங் கலியிடைப் புரிதலா லுண்மை
செப்பு சைவமு மருகியே நடக்குமோர் திசையில்
துப்பு வேணிய னருளு மோர்கில ரிடைத்தோன்றும்
27

836 மாத வங்கள் பற்பலபுரிந் தோர்களே மதியும்
சீத வார்புனற் கங்கையு முடித்தவன் றெரிந்த
கோதி லாதநற் சைவத்திற் குலவிய குடும்பத்து
ஏதமிங் கொழிந் தின்பமா முத்திபெற் றிருப்பார் 28

837 சைவ ரேபல சமயங்கள் யாவைக்குந் தலைவர்
சைவ ரேசிவ பூசைக்கு மருகராந் தக்கோர்
சைவ ரேபல தவங்கட்கு முரித்தெனுந் தக்கோர்
சைவ ரேபல புண்ணியம் புரிந்திடுஞ் சான்றோர் 29

838 சைவ ரேபரி சுத்தர்வெங் கலிசெய்யுந் தருக்கின்
கைவ ராதுமற் றவர்களே சிவனருள் கண்டு
பவ்வ மேநிகர் பிறவியைக் கடந்தவர் பாரில்
இவ்வ கைப்படுஞ் சைவர்க ளருகியே யிருப்பார் 30

839 பாவமே யொருவடி வெடுத்தா லெனப் ... றர்
தாவில் சைவரல் லாதவர் துன்பசா கரத்தில்
மேவி வெந்ந ரகிழிந் துமேற் பிறந்து
வேதனையுற் றேய்விலாதவர் கலிக் கிருப்பிட
மெனவுரைப்பார் 31

840 அவர்க ளேசிவ பத்தியில் லார்கள்மற் றசடர்
உவர்க ளேகொடும் பாதக ருழிதோ றாழி
கவர்கொ டுந்தழ னரகிடைக் கிடப்பவர் கடல்சூழ்
புவன நாயகன் சைவமல் லாதவர் புலையர் 32

841 தேவ தேவனுஞ் சிவனரு டிருந்திய சைவ
மேவி டாதவ ரேயதி பாதகர் வியனீர்ப்
பூவின் மேலிப் போதொடும் புகுந்தனிலும்
பாவி யன்னவர்க் கொப்புவே றில்லெனப் பகரும் 33

842 என்று கோவலன் மறையெலாந் தெரிந்தெடுத்
தியம்ப
துன்று நான்முகன் முதலியோர் சைவத்திற் றேயார்
கன்று பாவியென் றுரைப்ப னெனவனைக் கரத்தோன்
நன்று கேட்டீ ரென்றெடுத் தெடுத்திவை நவிலும் 34

843 முன்னமோர் காலந்தன்னில் புரிதிரைக்
கடலந்தானை
இந்நிலந் தன்னிற்பாவம் யாவையு
மொருங்கு மொய்த்தே
பன்னருங் கோரரூப முக்கிரத்
தோடுங் கொண்டே
பன்னரு மிடுக்கனோடும் யமபுரி
படர்ந்த வன்றே 35

844 படர்ந்தவெம்பாவ கோடிப் பரப்பெலாம்
பகுவாய்ப் பங்கி
படர்ந்தெரிசெங்கட் கூற்றி னடித்துணை
பரவித் துன்பம்
தொடர்ந்தழுங் கவலையோடுஞ் சூழ்ந்துநின்
றனவெங் காலன்
நடந்தகா ரணமேதென்று பரிவொடு
நவின்ரு னன்றே 36

845 கேட்டவன் றன்னைநோக்கித் திருந்திய
கேடில் வேதம்
நாட்டுசாத் திரங்கணீதி நவையறக்
கற்று வல்ல
கோட்டமில் குணத்தோய் நின்றன்
கோல்வழி நடந்துன்பாதம்
சூட்டுமெங் களுக்குநாளுந் துன்னலர்
மிகுந்தா ரன்றே 37

846 துன்னலர் யாவரென்னின் சுருதிநூற்
றுணிபு கூறும்
மின்னலர் கொன்றைவேணி சாம்பவ
தீக்கை மேவி
மன்னும்வே தியர்வெண்ணீறு மறைநவி
லஞ்செ ழுத்துச்
சென்னியி லுருத்திராக்கஞ் சிவதெரி
சனங்க ளர்த்தம் 38

847 சிவனடி சிந்தைசெய்தல் சிவனருட்
புராணங் கேட்டல்
அவனடிக் கன்புசெய்யுஞ் சிவகீர்த்
தனங்கள் செய்ய

தவமருள் தலங்கள்சைவ தத்துவ
முணர்ந்தோர் பூசை
நவில்சிவ பூசைநந்தவ னஞ்சிவ
னல்கு நோன்பு 39

848 இத்திறஞ் சிவதன்மங்க ளியாவையு
மீண்டிப் பாரில்
வைத்தமா னிடவர்தம்மைத் தங்களின்
வயத்த வாகச்
சித்தமுந் திரியும்வண்ணஞ் செய்தன
வன்றி யாரும்
சுத்தரு மாகப்பண்ணி யெங்களைத்
துரத்திற் றன்றே 40

849 ஆனவித் தன்மையாலே யெங்களுக்
கபயஞ் சொல்லும்
மானவர் தம்மைக்காணேம் வைகுமோ
ரிடமுங் காணேம்
தேனல ரலங்கன்மார்ப நின்சரணஞ்
சேர்ந்தோ மிப்பால்
யாமினிச் செய்வதென்னென் றுரைத்தியே
லியம்பக் கேட்டி 41

850 எங்களுக் கிடரேசெய்யுஞ் சிவதன்மம்
யாவு நீக்கிப்
பொங்குவெங் காமங்கோபம் புறஞ்சொல்
கரவுபொய்மை
அங்கநூ னிந்தைகோ றலழுக்குள
மொழுக்க மின்னும்
சங்கைநல் விரதம்நீக்கற் றம்மையே
மதித்துக் கூறல் 42

851 சிவநிந்தை முதலாமாயைத் தீவினைச்
சிமிழ்ப் பினாலே
அவநிந்தைப் படுத்தியா ருமனுதினம்
புரியச் செய்தால்
புவனியி லிறைநின்னேவல் புரிந்துயாம்
பொலிவோ மென்று
கவலையிற் பாவமெல்லாங் கவிழ்வொடுங்
கூறக் கேட்டான் 43

852 கேட்டவிப் புன்சொல்லெல்லாம் கிளர்செயிப்
பட்டபொது
தோட்டுணை யோடுங்கக்கைக ளஞ்செவித்
துளைகள்பொத்தி
நாட்டமுங் கலங்கஏங்கிச் சிவசிவ
வென்றுநாடிக்
கோட்டமில் சிந்தையான்வெங் கூற்றுவ
னினையசொல்லும் 44

853 துளவணி வோனுங்காணுச் சோதியை
கூறித் துதிக்கை
குள —— வக் குரினிந்தை வரைக்கைக்
கொளந்நலம்
இளகிவுண் பான்புக்க தொப்பநீர்
விளம்ப லீயான்
அளவறு துயரத்தாழ்ந்து தெளிந்திவை
னைவனம்மா 45

854 பாவமூர்த் திகளேநீவிர் பயின்றிடு
மிடமே தென்னின்
நாவலர் புகழுஞ்சைவம் நயந்திடா
மூடர் பாலே

822 ஆம் பாடல் சிதைந்துள்ளது.

மேவுவீற் றிருப்பீரெங்ங னென்னில்வெம்
பாவங் கட்குத்
தாவிய சைவமல்லா ரிருப்பிட
மாகத் தந்தோம் 46

855 சைவமில் லாதார்தாமே தருக்குவெம்
பாவ கோடிக்கு
உய்விட மாகுமின்றி வேறுமோ
ருமியு மில்லை
கவ்வைசேர் பாவமெல்லா மவருழைச்
சார்ந்து வாழ்வீர்
எவ்வெவ ரசைவரல்லா ரென்னிரு
மியம்பக் கேளிர் 47

856 முழுப்பெருக் காறுசூடு முக்கணன்
சரண மீதில்
விழுப்பமா ராசைசெய்யு மெய்த்தவர்
மேவக் கண்டால்
அழுக்கறுத் திறைஞ்சாமுட ரவர்களே
சைவ ரல்லார்
வழுக்குறு மவர்களுங் களவாம்மனே
யாவர் கண்டீர் 48

857 நீறிலா நெற்றியாரு நீறுவாழ்
நெற்றி யாரும்
ஊறிடு மன்பினுலே யுழந்துவந்
திறைஞ் சிடாரும்
வீறுமுப் புண்டரத்தை மிலைந்தவர்க்
கண்டு பலசொல்
கூறிடு மவரைநண்பு கூர்ந்திடுங்
குவினர் தாமும் 49

858 உருத்திர வாக்கந்தாங்கு முண்மையாம்
விருப்பி லாரும்
இருக்குருத் திரத்தைநாளு மேணடை
வினர் தாமும்
பொருப்புவில் லவனையன்பாற் பூசனைப்
புரிந் திடாரும்
திருக்கிள ரிவன்தன்பாதஞ் சிரத்தையாற்
சிந்தி யாரும் 50

859 நாத்தழும் பேறக்கண்ணீ ருற்றிட
நக்கன்றன்னைத்
தோத்திரம் புரிந்திடாருஞ் சோதிக்குஞ்
சோதியான
தீர்த்தனைப் பணியச்சொல்லுஞ் சேவையில்
விருப்பிலாரும்
கூத்தன்வாழ் சரிதங்கேட்குங் கொள்கையில்
குறிப்பிலாரும் 51

860 பாண்டரங் கத்தன்றன்முன் குனித்திடப்
பரிவிலாரும்
சேண்டரு மஞ்செழுத்துச் செபத்தினில்
விருப்பிலாரும்
ஆண்டகை யீசன்கந்தை யறைப்பவர்க்
கன்பிலாரும்
காண்டகு சிவதலத்திற் சேவையிற்
கருத்தில்லாரும் 52

861 காசியில் விருப்பிலாருங் கடவுள்விச்
சுவலிங்கத்தில்
நேசமில் லாருங்கால வயிரவ
னெடியபாதத்து

ஆசையிருப் பாருமுத்தி மண்டபத்
தன்பிலாரும்
தேசுசான் ஞானவாவித் தீர்த்தத்தி
லன்பிலாரும் 53

862 தடமணி கர்னிகைப்பாற் றழைத்ததோர்
விருப்பிலாரும்
இடமுறு காசிப்பஞ்சக் குரோசயாத்
திரையிலென்றும்
திடமுற வலமுஞ்செய்வார் தம்சேவடி
பணிந்திடாரும்
விடமணி கண்டர்க்கன்பு மேவினர்க்
கன்பிலாரும் 54

863 வருசிவ நிசியின்நோன்பு வாஞ்சையா
லனுட்டியாரும்
திருமகிழ் சோமவாரந் திருந்துநோன்
பனுட்டியாரும்
இருவருக் கரியான்சீர்த்தி யியம்புவோர்க்
களித்திடாரும்
பொருவிலர்ச் சனைசெய்வாரைப் பூசனைப்
புரிந்திடாரும் 55

864 இங்கிவரி யாருஞ்சைவ மின்றிய
வீனராகும்
அங்கவர் தம்மைநீவிர் யாவரு
மன்பிற்புல்லிப்
பங்கெனச் செய்துகொண்டு நாடொறும்
பாவமெல்லாம்
தங்கவீற் றிருப்பீருங்க ளிருப்பிடஞ்
சாதங்கண்டீர் 56

865 கூறிய விவரேசைவ ரல்லவர்
கொடியபாவம
ஏறிவீற்றிருக்கோயி லிவர்களோ கோயிலிவர்க
டம்பால்
சீறிய வீசனுர்தஞ் திருவருள்
சேர்ந்திடாது
மாறில்சீர்த் திருவேயட்ட மாகவே
மகிழ்ந்துவாழ்வீர் 57

866 என்றசொற் கேட்டுப்பாவ மூர்த்திக
ளியாவு மீண்டித்
தென்றிசைக் கிழவனெங்க டந்தையே
செப்பக்கேண்மோ
கன்றிசை வரல்லாக் கச்டர்பா
லிருக்கச் சொன்னது
ஒன்றுமி யாமுணரே மென்னையுரையென
வுரைப்பதானுன் 58

வேறு

867 மொழிபயிலுங் கொடும்பாவ மூர்த்திகளே
நீர்கேளிர்
அழிதகராய் வருசைவ ரல்லாரே
திருவிலிகள்
விழைமுகங்கள் கொளமனையாம் வீடுவிட்டுப்
பின்னொருவன்
வழுவுறுமன மனைபிடித்தி லிருப்பரோ
வையகத்தில் 59

868 ஆயவிதி தன்னாலே யசைவரே
யரும்பாவக்
கோயிலெனுஞ் சுருதியெல்லாங் குவலயத்திற்
தன்வீட்டில்

மேயவிருப் பில்லாரு முண்டோதான்
விளம்புவீர்
தாயமா **மூமகாணி** சைவரல்லர்
தாமெல்லாம் 60

869 ஆகையாற் சைவரல்லா வசடரெலா
முமதில்லம்
ஓகையா யிடையூறு வாராதங்
கொழியாமல்
ஏகுவீ ரெனக்கால னேவிகு
ஞுதலால்
மோகமுறும் சைவரல்லார் கொடும்பாவ
மூர்த்திகளே 61

870 எடுத்துரைத்த சைவரல்லா வினருக்கோ
ரடையாளம்
அடுத்தவெண் ணீறுத்தூள மணியும்விருப்
படையாது
கடுத்தகொடும் பாவமெல்லாங் கன்றியுரைத்
துன்முகமாய்ப்
படுத்ததுய ரூடையானே சைவரல்லாப்
பாதகரே 62

871 ஆங்கவருக் கொண்ணீற்று நாநம்விருப்
படையாதல்
ஓங்குபல பிறவியெல்லா முஞற்றுமற
னுன்முகமாம்
பாங்குடைய ரெவரவரே சைவரவர்
பதிநீற்றில்
தாங்கியதோர் காதல்வரு மேமறைகள்
சாற்றிடுமே 63

872 எண்ணிறந்த பிறவியெல்லா மியற்றுதவம்
பயனளிக்க
நண்ணுமவர் சாபால வுபநிடத்து
ருவில்சைவம்
கண்ணொன வந்தொளிர் நீறு கவின்றதிரி
புண்டரத்தைத்
தண்ணளியால் புனைந்தக்க மணிதரித்த
தாபதரே 64

873 இருக்கோல மிடும்பூசை யீசனுக்கே
புரிபவர்க்குக்
கருக்கோலு முற்பத்தி கனவினிலு
மில்லைமலர்த்
திருக்கோலச் செல்வங்கள் திருந்தறங்கள்
பலகோடி
மருக்கோல யாகயிலவும் வந்தடையு
மனுதினமும் 65

874 சாற்றியதோர் சாபாலவுப நிடத்திற்
சாரும்விதி
போற்றுசிவ பூசயினை யாரேனும்
புகுந்தாரெல்லாம்
மாற்றரிய லாவறங்க ளவனிடத்தே
வந்தடங்கும்
ஆற்றிய நிதிச்செல்வங்க ளெல்லாம்
வந்தடையும் 66

875 அண்ணலருஞ் சிவபூசை புரிந்தவரே
யருமறைசொல்
புண்ணியரங் கவர்தாமே போற்றுதவ
மூர்த்திகளே

நண்ணுமகா தானமெல்லா நயந்தளித்
தாரம்மா
எண்ணுமொரு கோடிமகஞ் சிவபூசைக்
கெதிராமோ 67

876 ஒருகோடி மெய்த்தவங்கள் விதிவசத்ததா
லுழந்தாரும்
ஒருகோடி தானங்கள் நற்காலத்
துதவினரும்
ஒருகோடி வானதிக ளாடிவரு
மொள்ளியரும்
ஒருநாளிற் சிவபூசை புரிந்தாருக்
கொப்பாரோ 68

877 அழைத்தபல தானமெல்லாம் பசுதன்ம
மாமமரர்
உறைந்தபெரும் போகத்தை யூட்டியபின்
னுதிப்பிக்கும்
நிறைந்த சிவபூசைபதி புண்ணியமாம்
நெடுந்துயரப்
பிறந்தையெனுங் கடல்கடத்தி முத்தியினிற்
பிறங்குவிக்கும் 69

878 திரண்டசடை வானவனுஞ் சிந்தைமகிழ்ந்
தொருநால்
இரண்டுகிளை வில்வித்தால் சாத்தியுவந்
தேத்தினுல்
மூரண்டருவெவ் வினைச்சிமிழ்ப்பு முடிச்சவிழ்த்து
முத்தியெனும்
தெருண்டமறை கூறியதஞ் சேவடிக்கீழ்
வாழ்விக்கும் 70

879 முத்தியருள் சிவார்ச்சனையே முயலுவதிங்
கல்லாமல்
புத்தியுறு மதன்பயன்க ளுதவாதோ
புகலென்னில்
சித்தியுறு பலதருமஞ் செய்தவனுக்
கல்லாமல்
வித்தகநற் சிவபூசை செயும்விருப்பு
மேவிடுமே 71

880 ஆதலாற் சிவபூசை யனுதினமும்
புரியும்மனக்
காதலாற் புரிந்திடுவெம் பாவமெனுங்
காட்டினுக்குத்
தீதறுவெந் தழலாகு மல்லாமற்
சிந்தையெல்லாம்
ஓதியநல் லறம்பொருளு முத்தியையு
முதவிடுமே 72

881 நாட்டுமருட் சிவபூசை யன்றிமுத்தி
நல்குதற்குக்
காட்டுமொரு தருமங்கள் திறமில்லைக்
காணென்று
கோட்டுமதி முடித்தசடைக் கும்பேசன்
சன்னதியைச்
சூட்டியிரு கைதூக்கிச் சத்தியமாய்ச்
சொல்லினன் 73

882 தேவாரய்த் தேவர்சிகா மணியாகித்
திருந்துதொழில்
மூவராய் நின்றசிவ னரிச்சனையை
மூயல்வார்கள்

யாவரா யினுமவரே யெம்மனோ
ரிறைஞ்சுவர்
மாவரா வணிவானே யவரென்று
மறைமொழியும் 74

883 பொன்னைநிக ரிதழியான் பூசைசெய்ய
யாவரும்
என்னைவர வில்லையெனி லெண்ணரிய
பிறவிதொறும்
உன்னரிய தருமங்கள் பலகோடி
யுழந்தார்க்கே
மன்னுசிவ பூசைபண்ண வாய்க்குமென
மறைகூறும் 75

884 ஒப்புயர்பு மில்லாத வொருவனரிச்
சனைபுரியும்
செப்பமுடை யானவனே தேவர்க்குந்
தேவனுயர்
முப்புவனங் களுஞ்செயிக்கு மூர்த்தியவ
னென்பவோ திபத்து
அப்பனுரைத் தானென்ன வரியயனுக்
குரைத்தானே 76

கலிவிடம்பன் அத்தியாயம்

முற்றும்

காசியின் சிறப்புரைத்த வத்தியாயம்

885 கேசவன் தன்னை நான்முகக் கிழவன்
கேடில்சீர் கற்பக நாட்டு
வாசமார் கூந்தற் புலோமிசை தழுவு
நாயகன் முதலியோர் வணங்கி
ஈசனுக் கன்பாந் துசவான் பின்னப்
பாவியா மிருபிறப் பனுக்குத்
தேசுசேர் நீற்றுற் கதிகொடுத்த தற்பின்
செய்ததே தியம்புதி என்றார் 1

886 சுருதியுமறி யாவாறும் பேரரு ளடியைத்
தொண்டுபட் டுணர்ந்தன னென்னுக்
கருதியா வருக்கு மிதுகுறி யென்னக்
கண்ணிடந் தரிச்சனை புரிந்தோன்
பொருதிமி ரகற்றிச் சிந்தைதூய் தாக்கும்
துசவான் புரிந்தது புகலில்
நிருமத வாண லிங்க கோடிகளா
னிறைந்திடு நிருமதா நதியில் 2

887 சொன்னவன் கண்டா னரிச்சனை புரிந்து
சிவனடிச் சிந்தை செய்து
கொன்றைவே ணியனுக் கன்பரா முனிவர்
கோடியைம் பதின்மர்தாங் குழுமி
துன்றியே வாசம் புரிபவர் தம்மைத்
தொழுதன னுங்கவர் நோக்கி
பொன்றிணி சடையோ யெங்ஙனம் வந்த
தென்றலுந் துசவான் புகலுவான் 3

888 வாரணு சிக்குச் செல்வதற் காக
வந்தன னென்றலு முனிவர்
காரணு தீதன் விசுவ லிங்கத்திற்
காட்சிநின் காட்சியென் றெழுந்து

நார ணுதிகளு மறிவதற் கரிதாம்
நாதன்வீற் றிருந்திடுங் காசி
காரண முனிவ ரைம்பது கோடி
யவர்களு மவருடன் சென்றார் 4

889 மங்கள கரராய முனிவரர் தழுவத்
துசவான் மகிழ்ந்துட னேகிப்
பொங்கிய விருப்பான் மேருவிற் குனித்த
புங்கவனுல் கைபூகி திருக்கும்
கங்கைசூழ் கிடந்த ராசின்ப வணிந்து
கண்மணி குளிரப்புற நோக்கித்
தங்கிய மிடியா ஞெந்தவன் பறைந்தக
நிதியினைக் கண்டெனத் திளைத்தான் 5

890 கற்றறிவில்லா மூடனே யெனினுங் காசியிற்
சா தலுண்............ சி ....
புற்றர வணிந்த வேணியும் .. றது...ங்
காணும் பொருந்திடு முத்தியும்
உற்றதண் ணளியாற் கொடுத்துநா யகனுக்கு
வந்திடு மிருப்பிட மாகி
பற்றறுத் துயர்சிவ பதம்பற்ற தாமிந்தப்
பதிதனுக் குவமையார் பகர்வார் 6

891 என்னமெய்ப் புளகங் கூர்ந்திடப் பணிந்தே
யிருந்தவர் தம்மொடு மின்பம்
துன்றிய ஞான்று வாவியின் மூழ்கித்
தொழுது ஞரேரெனச் சுரன் றனது
பொன்னடி யரிச்சித் தேத்துபு தண்ட
பாணியைப் பூசனை புரிந்து
பின்னருட் டுண்டி விநாயக னப்பமோ
தகங்க னிகளும் பெய்து 7

892 கண்ணுதற் கினிய வுவகையுண் டாக்கும்
வில்வத்திற் பல்லவங் கவர்ந்து
விண்ணுயர் முத்தி மண்டபந் தன்னில்
விசுவலிங் கத்தினை முன்னி
புண்ணிய ஞான வாவிநீ ராடிப்
பூசனை கூவிளந் தளிரால்
பண்ணிய வேத *சாகையாற் றுதித்துப்
பணிந்துமுக் காலமும் பயின்று 8

893 முன்புள முருகி யானந்த நடனம்
முக்கணன் றன்முன் னியற்றி
இன்பொடும் வாளா கணப்பொழு தேனு
மிருப்பினும் பவமெலாம் போக்கும்
கன்பொரு வில்லா முத்திமண் டபத்திற்
றபோதனர் தம்மொடு மிருந்தான்
அன்பொடுஞ் சோதிப் பிரணவத் துடனே
அஞ்செழுத் தகங்குழைந் தெண்ணி 9

894 உருத்திர மனுவு மெண்ணிய பின்ன
ருவப்பொடுந் துசவா னெழுந்து
கருத்தொடு மாந்தர் கிரகயாத் திரையுங்
கனிவொடும் வலம்புரிந் தன்பால்
திருத்திய கால வயிரவ தீர்த்த
மாடியத் தேவனைத் தொழுதே
அருத்தியாற் பூசைபுரிந் தருக்கிய முமளித்
தன்ன முனிவரோ டம்மா 10

895 முத்திகா மியனுய் மாமுனித் தலைவர்
தம்மொடு முதுக்குறை வுடையோன்
சித்தியா னந்த கானவர் களுஞ்செய்
தனன ருச்சனை திருத்தி

---

* சாய்கை, †முக்காலவன் பயின்று

பத்தியால் வீடு விரும்பினர் நேரார்
காசியம் பதியிணைப் பிரிவார்
புத்தியி லேனங் கனியருந்தா தங்குறு
கிழங்க ருந்திடல் போல்வார் 11

896 ஐம்பது கோடி யிருடிக ளோடு
அருள்பெறு துசவா னன்பால்
செம்பொருள் விசுவ லிங்கபூ சையிஞற்
றீவினை செற்றுட லந்தம்
உம்பருக் கரிய முத்திவீ டடைந்தா
னுயிர்க்கெலா முயிரென நிற்கும்
சம்பர ஞரருள் பெற்றவர்க் கல்லால்
சாதல்கிடைக்குமோ காசிநன் னகரில் 12

897 பரம்பொருள் சிவனே யென்றுளங் கனிந்து
பாதபங் கயங்களிற் பூசை
தரம்பெறு மன்பாற் புரிந்தவர் தமக்கே
திருநகர்க் காசிநன் னகரில்
வரம்பெறு மரணங் கிடைக்குமாங் கவனை
மடியில்வைத் தருள்விச்சுவ நாதன்
திரம்பருள் கூர்ந்து தாரகப் பிரம
நெடுஞ்செவி தன்னுளே நிகழ்த்தும் 13

898 மெய்யெறிந் திருண்ட கங்குல்வீற் றிருக்கும்
வார்குழல் கவுரிவாழ் பாகத்து
ஐயனுக் குவகை பூத்திடும்பூசை யண்டருக்
கரியநற் பதமுந் துய்ய
மெய்ப்பொ ருளும்போ கமுநெஞ் சிற்றேன்
றியநினை வொடு மளிக்கும்
செய்யகற் பகமற் றுதலால் வேறு
தெரிக்கிலே மெனமறை தெரிக்கும் 14

---

895 யருந்தால்ப்புற்கிழங்கு—என்றுளது

899 அறம்பொரு ளின்பம் பெற்றகரு முத்தி
யளித்திடுஞ் சிவார்ச்சனை யன்றிப்
புறம்பொரு தரும முத்திநன் களிக்குஞ்
திறமிலை யெனப்புகழ் வேதம்
அறைந்திடு மதனான் மெய்ப்பொருள் சிவனே
பரமென வரிச்சனை பயில்வீர்
திறம்பெறு புலவீ ரென்றுகை தூக்கிச்
செப்பினான் றிருமரு மார்பன் 15

900 அரக்கெறிந் தனைய செடிமலர்ப் பதுமத்
தாயிழைக் கொருமரு மகளாம்
முருக்கிதழ்ச் செவ்வாய் **பாரதிக்** கிழவன்
முதன்முப் பத்துமுக் கோடி
திருக்கிளர் விசும்பில் வாழ்குந ரெல்லாஞ்
சீதரன் சேவடி பணிந்தே
உருக்குசெவ் வரக்கின் குழைந்துகண் ணீருற்
றெடுத்தோட நின்று ரைப்பார் 16

901 ஐய நின்ப வழவாய் மொழியெனு
மமுதபா னத்தினா லடியேம்
மெய்யெலாம் புளகம் பூத்தன முயிரும்
விடுபெற் றுய்ந்தன நேமிக்
கையனே யமர ரதிபனே! கமலக்
கண்ணனே! களங்கனி யனைய
மெய்யனே முகுந்த! கேசவா! கருணை
வெள்ளமே! வள்ளலே! போற்றி! 17

902 எனமனங் கனிந்து புலோமிசை கொழுநன்
முதலியோ ரேத்துபு தொழுது
வனமல ரலங்கன் மாலையான் றன்னை
யரிச்சனை வகுத்தன ரின்னர்
நனைமலர்ப் பொதும்பர் மதுமழை பிலிற்றும்
நலங்கெழு மிமையகே தாரத்து
அனகனைக் கொன்றை வேணியான் றன்னைப்
பூசனைப் புரிந்தன ரன்பால் 18

காசியின் சிறப்புரைத்த வத்தியாயம்
முற்றும்

கும்பகோணச் சிறப்புரைத்த வத்தியாயம்

வேறு

903 சேனைப் பிறழுங் கண்ணுள் செந்திரு
மடந்தை மகிழ்நன்
வால்வளைப் பாவை யன்னுள் வாணிநா
யகனை நோக்கி
மேல்வினைத் தரங்கம் வீசும் பிறவியாம்
வேலை நீந்தும்
காலமு முளதோ வென்று முன்னம்நீ
கழறி னுயால் 1

904 துளிநறுப் பிலிற்றுஞ் செம்பொற் கற்பகச்
சோலை வைகிக்
களியருப் போகந் துய்க்குங் கடவுளா
மங்குள மேலோர்
அளியருச் சுடர்சூழ் மூர்த்தி யுத்தம
னுமையாள் கேள்வன்
அளியருப் பூசை தானே பிறவிவே
ரறுக்கு மென்றும் 2

905 அரிச்சனை விதியு முந்நீ ரலைகடற்
பவள வல்லி
திரிச்சன சடையான் வீரன்பூ சைக்குரிய
சாதனமும் செம்பொன்
பெரிச்சன கொன்றை மாலைப் புங்கவன்
மகிழும் பூசை
தரிச்சவ னின்னு னென்றுந் தவத்தினு
லெய்து மென்றும் 3

906 பூசனைக் கழகனுன் புண்ணிய
னியல்பு முந்தை
வாசனை யுடையார்க் கெய்து மகிழையு
மின்ன தென்றும்

ஈசன தருளினாலே வீட்டின்ப
மெய்து தற்கு
நேசனு முனக்கு முன்னே
யிவையெலா நிகழ்த்தினேன் 4

907 ஆதலான் மனவாக் காய மூன்றுமோக்
கரிய பூசை
தீதெலா மொருவும் வில்வம் முதலிய
திரவி யங்கள்
காதலாற் கொண்டுமுக்கட் கனியெனுங்
கருணைமூர்த்தி
பாதபங் கயத்திற் செய்தான் முத்தியின்
பால தாமே 5

908 குருதிதோய்த் தெடுத்த வெள்வேல் குளிர்மதி
கிடத்தி யன்ன
பொருதடங் கண்ணி காதற் புண்ணியன்
மகிமை தன்னில்
தருதுக ளளவ தேனு மறிவுறுந்
தருக்கி லாதேன்
வருதிமி ரகற்றும் பூசைக் காதன்மை
மடம லேனுர் 6

909 இழிவுறும் பிறவிச் சேற்றைத் தன்புக
ழென்னு நீரால்
கழுவுறுந் தாயாய் முத்தி விளையும்நற்
கழனி யாகி
அழிவி லுத்தம மாம்பூமி யாகிய
குடமூக் காகும்
அழகுறு மெதிராச வரமெனும்?
பதியு மாகி 7

910 பாசவே ரறுக்குங் கூர்வா ளாகுமப்
பதியி னுளும்
வாசமா னவர்க்கு மங்க ணுதித்தவர்
தமக்கு மவ்வூர்
நேசமாய்த் தெரிசித் தார்க்கு நினைத்தவர்
தமக்கு மெங்கள்
ஈசனுர் கும்ப கோணமென் றுருக்காற்
சொன்னுர்க்கும் 8

911 மற்றொரு தேயந் தன்னில் வாழ்பவர்
தாமு மவ்வூர்
(உற்றுமே லமர்ந்தப் பாரெ)லாந் துதிக்கு
மவ்வூர்ப்
பற்றிவாழ் பவருக் கன்ன பானங்க
ளீந்திட் டார்க்கும்
நற்றலங் குடந்தை யென்னக் கேட்டுள
நயந்திட் டார்க்கும் 9

912 வேதவே தாந்தங் கூறும் வீட்டின்ப
மளித்துப் பாரில்
கோதறுத் திலங்கு மூதூர்க் கும்பகோ
ணத்தி னுளும்
ஆதரத் தோடு மேகி யண்ணல்கும்
பேசன் றுளில்
காதலிற் பூசைசெய்து வைகுவன்
கதியை வேண்டி 10

913 மின்னொளி திரட்டி யன்ன விரிசடை
விமலனே
என்றன னிகர்பூ சைகொள் ளுந்தானு
மற்றவனே யெல்லா

மன்னிட வைத்தா னன்றி மதிக்கிலே
ஞெருவர் தம்மை
என்னிரு கரங்கள் பூசை யவனலா
தியற்ரு வென்றும் 11

914 கும்பலிங் கத்திற் பூசை குயிற்றிய
பொழுது போக
இம்பரிற் கேட்டிட் டாலும் பாவங்க
ளெரித்துப் போக்கும்
வம்பலர் முலையாள் செம்பொன் மலைமலி
மங்கை பாகத்து
உம்ப ருக்கிறை புராணங் கேட்டிருந்
துருகு வேனே 12

915 யாவரோ டென்னி லீச னிணையடித்
திறத்திற் பூசை
பாவனை கிரியை மூல மந்திரம்
பணிதப் பாது
மேவிய விதிவசத் தாக விருப்பொடுஞ்
செய்யும் பாரில்
தேவராஞ் சைவ ரோடுஞ் சிவதன்ம
சீல ரோடும் 13

916 அலர்முலைக் குவடு தாங்கு மம்பிகா
பதிகும் பேசன்
பலர்புகழ்ச் சரிதங் கேட்டு மாதவ
ரோடு மையன்
பலர்புகழ்ச் சீரடியார்க் கன்னங் குடந்தையி
லளித்து வாழும்
தலைமைய ரோடு மீசன் னருட்டுணை
நினைப்பா ரோடும் 14

917 சோர்ந்துவீற் றிருப்பேன்கண்டா யிரவுநன்
பகலுஞ் சிந்தை
கூர்ந்துமூ வகையொடுங் குலவுவேன்
முத்தி யின்ப
மாந்தவிவ் வுடலத்தோடு மனுபவிப்
பாரை யொப்பேன்
வாய்ந்தசீர்க் கும்பகோண வாசத்தின்
மகிமை தன்னால் 15

918 ஆதிகும் பேசன்பூசை தெரிசன
மடியார்கேண்மை
காதலிற் றியானஞ்செய்தல் வலங்கொளல்
கர்வந் தேற்றும்
தீதறுத் தியற்றுவேற்குச் சிந்தனை
யொன்றுமேவும்
ஏதெனி லெனக்காலங் கணமென
விறந்து நீங்கும் 16

919 இதுவல தெனக்குமேவு மிடுக்கணொன்
றில்லை முத்திப்
புதுநலங் கருகுவிக்கும் பொற்பதி
கும்ப கோணப்
பதியதில் வாசமேயெப் பாவங்களும்
பாற்று மவ்வூர்
விதிதரிற் கரியிற்பற்று மெரியென
ஞானம் வாய்க்கும் 17

920 என்னை நற் றலங்களன்றி ஞானமெய்
தாதோ வென்னில்
நன்னில னெறிப்பைங் கூடி
நலங்கொ......... ...

கன்மினையோர் பாகம்வைத்த வித்தகன்
மெய்ஞ்ஞானம்
பன்னிய சிவதலங்க ளன்றியே
வாய்த்தி டாதால் 18

921 என்னுடை வாணுள்காறும் வைகுந்தத்
திருந்து துய்க்கும்
பொன்னுடை யின்பமெல்லாங் கணைப்பொழு
தேனும் பொற்பால்
தன்னிகர் கும்பகோணத் தலத்தில்
வாழ்சைவ ரோடு
மன்னியங் கிருந்த வின்ப நிகர்க்குமா
மறைவல் லோனே 19

922 சிந்தனை யையன் ஞான தேயத்திற்
செய்யுஞ் சென்னி
வந்தனை கும்ப லிங்க வள்ளல்சே
வடிக்கு வாய்க்கும்
பந்தனை யொழிக்கு மங்கை பாகன்சீர்
பயில்பு ராணம்
தந்தெனை யுய்யக் கொள்ளுஞ் சங்கரன்
தெரிச னத்தால் 20

923 சாற்றிடிற் றவங்க ளொன்றே கோடியாய்த்
தழைந்து மல்கும்
போற்றிய பூசை தானும் பொள்ளெனப்
பயன்க ணல்கும்
தேற்றமார் தியானமெல்லாங் கணத்தினிற்
சித்தி யாகு
மாற்றெறி கும்ப கோணத் தலத்தினில்
வாழ்வார்க் கெல்லாம் 21

924 ஆகுமிப் பெருமை தன்னு லளியனு
மசல மாது
பாகனு ரருளி னுலே பழம்பதி
கும்ப கோணத்து
ஓகையோ டிருந்து சைவ ருடன்ச
மரச மாகி
ஏகநாய கனவன் பதமி றைஞ்சி
வீற்றிருப் பேனென் றும் 22

925 மலர்ப்பொகுட் டிருந்தறியு மனேவதிக
ணீங்கிக்
கலேச்சிறு திங்கள் சூடுங் கண்ணுதல்
கும்ப கோணத்
தலத்தினில் வைகி லன்பாற் கண்டிகை
மணிதரித்து
நலந்தரு நீறு பூசி யரிச்சனே
நயந்து செய்வாய் 23

926 இரணிய கருப்ப கேண்மோ வியங்குமுன்
வாளுள் காறும்
தரணிபல் லுகுத்த கும்ப லிங்கத்தின்
சரணந் தானே
மரணமென் றடைந்து பூசை யாற்றிடி
லாண வத்தின்
முரணறுத் தரிய வின்ப சாகர
முத்தி யுண்டாம் 24

927 முத்தியை விரும்பிற் கும்ப லிங்கத்தின்
மூர்த்தி பாதம்
பத்தியாற் பூசை செய்யிற் பயிலறம்
பொருளோ டின்பம்

சித்திவீ டிகத்தேநல்குந் திரிவித
காலமொத்துச்
சத்திசெய் பொருளுங் கொண்டு பூசனை
தொடங்க வேண்டும் 25

928 கும்பலிங் கத்தின் ருண்மேற் குலவிய
பூசை நானே
இம்பரின் முத்தி நல்கு மன்றென்று
மீய மாட்டாது
அம்பர் கேச ஞன வையனைப்
பூசை செய்வார்
தம்பய னிழந்தா ரூர்த்த புண்டரந்
தரித்துச்·செய்தால் 26

929 ஞானமே யுருக்கொண் டாங் நயந்தவெண்
ணீற்றுத் தூளம்
மேனியிற் புனைந்து கண்டி மாலையு
மிலைந்து பின்னர்
தேனலங் கடந்த வின்சொற் சேயிழை
மடந்தை பாகம்
தான்மகிழ்ந் திருக்குஞ் சோதி சதாசிவ
னருள்க ளுன்னி 27

930 உருத்திர மனுவைக் கூறி யொள்ளிய
புனலி னாட்டி
அருத்தியாற் றாசு கந்த மணிந்துவெண்
ணீறு சாத்திக்
குருத்தொளிர் வில்வஞ் சாத்திக் குறுமுகிண்
மலருஞ் சாத்தி
திருத்தகு தூப தீப நிவேதந்
திருந்தச் செய்தே 28

931 ஆசும னீயம் பூசு மகத்துமுக்
காலுஞ் சூழ்ந்து
நேசமோ டிறைஞ்சிப் போற்றி நிமலனஞ்
செழுத்து மெண்ணிப்
பாசவே ரறுத்து நல்கு முருத்திர
மனுவும் பன்னி
ஈசனு ருவகைகூர விவ்வண்ணஞ்
தொழும்பு செய்வாய் 29

932 அஞ்செழுத் தாலும் வேத மருளுருத்தி
திரத்தி னாலும்
மஞ்சுறழ் கூந்த லாடன் மகிணனை
யுவகை செய்வார்
எஞ்சலில் கோர மான தவமெலா
மிழைத்தா ராவார்
விஞ்சுமம் மனுக்க ளெண்ணில் விமலனு
மகிழ்ச்சி மேவும் 30

933 ஐயமீ தல்லகண்டாய ருளுருத்தி
ரத்தின் மேலாய்ச்
செய்யுமோர் தவமு மில்லை யென்றரீ
செப்பக் கேளாய்
மொய்யலர் கமலத்தோ னு முதுக்குறை
வடைந்து நாளும்
உய்யவே பூசை கும்ப கோணத்தி
லுஞற்றி னானே 13

934 இமையவெற் பீன்ற செம்பொ னேந்திழை
மயிலே யன்னாய்
அமையுமிக் குடந்தை தன்னின் முத்தியை
யடைந்தாரி யாரென்று

எமைமுனம் வினவிக் கேட்டா யிவ்வண
மயனு மாலும்
நமையரிச் சித்துப் பெற்ருர் குடந்தையி
னயந்த முத்தி 32

935 மதிக்கரு முயிர்க ளாலு மால்முதல்
வானேராலும்
துதிக்கருள் பூசை செய்யுஞ் சோதியா
நம்மை மேலாங்
கதிக்குயர் குடந்தை தன்னிற் கவின்ருெளிர்
வல்வந் தன்ஞல்
பொதுக்கடிந் திறைஞ் சுமன்பர் பூசனை
புரிந்திட் டார்கள் 33

936 இகத்தினிற் பாவ மெல்லா மேற்றிவா
னவர்க்கு மெய்தா
மகத்துவ மடைந்து போக வாரியிற்
படிந்து வாழ்ந்து
சகத்தினிற் புகழும்பெற்றுச் சட்குணம்
தன்மை யெய்தி
உகப்புறு முத்திவீட்டி லுகந்துவிற்
றிருப்ப ருண்மை 34

937 என்ருெரு சிவயோ கிக்கு வார்கடல்
சுவற வுண்ட
துன்னிய தவத்துக் கும்ப முனிவரன்
சொற்ற தெல்லாம்
நன்றறி வடைந்த மாய ஞன்முகற்
குரைத்த வாறு
குன்றவில் குழைத்த வன்பொற் கோற்ருெடிக்
குரைத்தா னன்றே 35

938 பன்னுறக் கேட்போர்க்கும் படித்துளோ
ரெழுதி னோர்க்கும்
நன்னயப் புடனேமங்கை நாயகி
நாதன் வாழும்
மன்னிய கும்பகோண வாசத்தின்
பயன்கள் வாய்க்கும் 36

939 பத்திய ஞானச் செல்வப் பகுதியும்
பரமா னந்த
முத்தியுஞ் சைவ வாய்மை முழுதுண
ரறிவும் பூசை
சித்தியுஞ் செவ்வே கண்டீர் சிவரக
சியத்தை யன்பால்
புத்தியோ டிருந்துகேட்கும் புண்ணியர்
குலங்கட் கெல்லாம் 37

940 மங்கைநாயகி தண்ணருள் வளர்க
வைய கத்தில்
பிங்கள மும்மழை மொழிகநன்
னெறிவளஞ் செறிக
கொங்குமலி சைவமு நான்மறை
யாளருந் தழைக
பொங்குகு ... காணப பதிய
கையிற் பொலிக 38

941 நீதிமன்னவன் மனுநெறி நடாத்துக
நிமலன்
ஓதுமாகமத் துண்மையே பெருகுக
வுலக
மாதுபாகன் ...யபன்பபெற்றி ....வ
வாழ்க
தீதுதீர்க நல்லறமெலாந் தலைத்தலை
சிறக்க 39

938 இப்பாடலில் மூன்றேயடியுள்ளது.
940 கண்ணன கிளர்—என்று காணப்பெறுகின்றது.

942 என்றுவாய்மலர்ந் தருளிய செந்தேன்
மழை ....*
நந்துன் மெய்த்தவ — — முனிவன்
சொன்னுன்
கன்று மான்மழுக் கரத்தினுன்
றுணையடிக் கமலம்
ஒன்று காத்(தளிக்கு)ஞ் சவுனக முனிவர்
முதலியோருவப்ப 40

943 நலமருவு சுபானுவினிற் கன்னிமாதம்
நவமாகுந் தேதி
.... சுக்கிரவார நாலதிலக
தன்மங்களை
கும்பகோணச் சிவனுர்தஞ் சரிதமவர்
திருமுன்பாக
மலர்தலை மாநிலத்தி லுயர்திருவா......
வந்தசைவராயன் 41

இலகுபுகழ்ப் பலர்மகிழப் புலவர்
காதுக் கின்ன
முதமென்ன வரங்கேற்றி னனே 42
எங்கள் வசந்தராயன்

944 வாழி — கு புணற் காவேரி
நாடிவாழி பூசுரர்கள்
வாழி தமிழ்ப் புலவர் வாழி யெங்கள்
துன கராசன்
வாழி ...... யான் சொக் கம்பனென்றும்
சன்னிதி யும்
வாழி சங்கரன்ற னடிவார்கள் வாழி
வாழி தலந் தானம் பரிகலமும்
வாழி தானே 43

திருச்சிற்றம்பலம்

---

942 இதற்குமேல் ஏடுகள் இல்லை. பூச்சியரித்து உதிர்ந்துபோயிருத்தல் வேண்டும். இதன் பின்னருள்ள பகுதிகள் காப்பீடு நூலைக்கொண்டு சரிப்படுத்தப்பட்டவை.

941-944 வரைஉள்ள பாடல்கள் சிதைந்து காணப்படுகின்றன.

பிரமன் மாயனைக் கண்ட வத்தியாயம்

வேறு

945 முளரிநறும் பொகுட்டரசு வீற்றிருக்குஞ்
செந்துவர்வாய் முத்த மூரல்
தளரியமென் கொடிமருங்குற் ருக்கணங்கின்
மணவாள தரணி மாதர்
(தள)ருமதி நுதற்றிலக மெனுங்குட
மூக்கிடை நம்மைவந்துபூசித்து
அளறுவெம் பிணிப்பிறவிக் கடலருத்தி
யொளியுருப் பெற்ற மலமாகி 1

946 ஏழுலகும் புகழ்ந்தேத்துஞ் சுதையுருவாங்
கும்பலிங்கத் தெம்மைபூசித்து
ஆழிநெடு மாலிருப்ப வண்டமுக
டணிந்திருக்கு மந்த நாளன்
வாழிதிரு மறுமார்ப நினதுசரண்
சரணெமெனவ வழுத்தி யானும்
தாழுமிரு வினைத்தரங்கப் பவக்கடல்
கடக்கும்வகை சாற்று கென்ன 2

947 வருதியிர ணியகற்ப நினதுயிருக் குறுதியொன்று
வகுப்பன் கேட்டி
குருதியுமிழ் முத்தலைவேற் குழகனருட் குறியிடத்துக்
குலவு பூசை
தருதியெனி லிரும்பிறவி சிமிழ்ப்பொரீஇ
யிருத்தியெனத் தாழ்ந்து வேதன்
பருதியெதிர் முளரியென வகமலர
முகமலரப் பன்னு மன்றே 3

---

945 மலர்ப் பொருட்டிருஞ்சுடாசு என்று காணப்படுகின்றன.
946 வண்டமுகட மணிதிருக்கு ,,

948 குழவிமதி முடிக்கணிந்தோ னரிச்சனைமற்
றெவ்வண்ண நீகூறு கென்ன
விழைவொடு வைகறை யாமத்துயி லொருவி
நீர்படிந்து வெண்ணீ றெங்கும்
தழையவணிந் தக்கமணி புனைந்துதிரி பண்டரமுந்
தரித்த பின்னர்
வழுவு லகர்ச்சனை புரிந்தால் வினைநீங்குமெனச்
சுருதி மாதோ 4

949 மறைவிடத்துக் கடவுளரை யரிச்சிக்க நவிற்றுமெனில்
வானோர்க்கெல்லாம்
இறைவரில் மாதேவ னென்னும் பெரியவர்க்கியம்
புமவ னிறைவ னுவான்
நிறைபிரம மவனேயா மக்கடவுளடிப்பூசை
நிறைத்தல் யார்க்கும்
குறைவில வந்துறும் பொருளுமின்ப மறனோ
டவையுங் கொடுக்கு மன்னே 5

பிரமன் மாயனைக்கண்ட வத்தியாயம்

முற்றும்,

மாயன் சிவபூசை மகிமை கூறிய வத்தியாயம்

வேறு.

950 அம்புயத்தி நித்தசெந்தே னுகுத்தென
வரிதான்கூற
செம்பதுமந் தனய்யர் சிவார்ச்சனைக்
குரித்தியாவர்
இம்பரிலுரைத் தியென்ன வெவ்வுயிர்
தமக்குமாமென்று
உம்பர்கோன் சுருதிநாத் தழும்பபன்....
ததிலுமுன்சொன்ஞன் 1

951 சாற்றரு முத்திநாமம் சமமென
கூறுமப்பேர்
மேற்றருஞ் சங்கரப்பேர் விமலனுக்
காயதன்ரோ
போற்றிலங் கவனைப்போற்றிப் பொன்னடிக்
கன்புபூண்டால்
ஏற்றமு முண்டுதுன்பக் கடலையு
மேற்றலாமே 2

952 இன்னண முரைக்கும்வேதத் தியலைவிட்
டமரர்போற்றல்
கன்னல்விட் டிரும்புமென்றல் கடுக்குமிக்
கருத்தைநோக்கிப்
பன்னுமுக் கரணத்தோடும் பரனையர்ச்
சனைபண்ணுதான்
பின்னர்வா னோர்தந்தைக்குப் பிறந்தவ
னல்லனம்மா 3

---

951 நாமமசம - என்று காணப்படுகிறது.

953 அற்புதச் சைவர்சார்ந் தண்ணலையரிச்சி
யாதான்
துற் —— கன வன்றனுமந் துராசான்
ருனுமாகும்
விற்பன ரெள்ளுந்துச்சன் விபசாரிச்
சுதனுமாகும
புற்புதத் துடலம் வீழ்ந்தா னரகிடைப்
புகுவனன்றே 4

954 மாதொரு பாகன்றன்னை மனத்தெழும்
விமலனோடும்
ஓதுமர்ச்சனைசெய்யாதா னுயர்குலத்
துதித்தானென்னும்
யாதனு வுடலம்பற்றி யெரிநிரை
யத்திலாழ்ந்த
கேதமுற் றுழக்குமன்று மறைகேட்கு
மன்றே 5

955 கலாதிகள் வயத்தினானுங் கருத்துறு
மோகத்தானும்
புலாதியின் புணர்ப்பினனும் பூசனை
மறந்தானுண்டி
மலாதிநீர் பருகினனு மலத்துநீ
ரயின்றானெக்கு
அலாதிஃ தய்யமன்று சத்திய
மறைந்தாமன்றே 6

956 சனித்தநாட் டொங்கியையன் சிரத்தொடுத்
திறக்குங் காறும்
பனித்தநீர் வேணியானை யரிச்சனை
பயின்றனேல்

953 சாரத தண்ணலே என்று காணப்பெறுகின்றது.

மனித்தரே வவனெம்மன்னோர் வழுத்திய
குணக்குன் றன்னான்
நுனித்தநூ லறவோ னெல்லாத் தவங்களு
நோற்றானம்மா! 7

957 கன்னன்மென் றனையவின்சொற் கனிக்கொரு
பாகநல்கு
பின்னல் வேணியான்பாற் பத்திப்பே ரற்றவர்க்
கெய்துடம்பு
என்னின்முன் னுற்பவங்க டோறும்பஃ றவ
முயன் றவையன்
தன்னருள் கிடைத்தோற்கன் றி யடைந்திடா
சரதமாமால் 8

958 ஐம்புலன் களுமொன்றாக்கிக் கரணங்க
ளாக்கிமாயை
வெம்புறு குணமுமின்றி விழைந்தொழு
மன்பினோடு
நம்பனைப் பூசைசெய்வா னல்லனே
னரற்குக் கீழாய்
இம்பரிற் றிருவுநீங்கி நிரயத்து
ளிழிவன் மாதோ 9

959 நறவுயிர்த் தளிகண்மூசு நளினமென்
றாரோய்கேட்டி
இறையருள் கொழிக்குஞ்சைவ சீலத்தி
னியங்கான்செய்யும்
மறைநவில் கன்மமெல்லாம் பயனில
மடந்தை பாகன்
அறைகழற் கன்பிலான்செய் யறனும்வெம்
பாவமாமே 10

960 உத்தம குலத்திஞேனு முறுபொருட்
சைவசீலம்
வைத்திலா னெனிலவற்கும் வைதிகக்
கன்மம்வேண்டா
எத்துக்கென் றுரைக்கில்வேதத் தியலினுக்
கதிகாரி
தத்துநீ ருலகுக்கன்ஞேன் புற்கசன்
சரதமாமால் 11

961 எக்குலத் துறுவனேனு மிறையருட்
சைவனல்லான்
புற்கசன் குலத்துளோரு மன்றுவாய்ப்
புகுவரென்ஞச்
சக்கிரி கும்பலிங்கச் சன்னதி
யிருந்துமுக்கால்
திக்குநேர் கைகூப்பிமுக்காற் சத்தியஞ்
செப்பிஞைல் 12

862 நீரனென் றுரையதென்ஜே வேதத்தி
னெறிநின்றேஜேப்
பேசெனிற் சைவனல்லான் பிழைகன்மசண்
டாளப்பேர்
சீசியென் றிகழ்வர்கஞ்சச் செழும்பொகுட்
டிருந்து
ஏ—— னஞேன் மாசுறுமரபிற் றேன்றிவரு
பயனிழந்தோன் மாதே 13

963 முக்கணற் கன்பிலாதான் முழுமகன்
சைவனல்லான்
மக்களுட் செனித்தானேனு மலப்புழுப்
பிறவிநன்றும்

951-4வது அடி திக்குநேர் கைகமுகற்-என்று காணப்பெறுகின்றது.

அத்தகுசீவனமும் கன்மமும் முயற்றியுங்
கதியின்றும்
தக்கதே யிஃதுஞ் சத்தியம்
சாற்றினேமால் 14

964 மலப்புழுப் பிறவிநன்றென் றுரைத்ததென்?
வகுத்தியென்ன
உலக்குறுக் கிருமியேய்ந்த வுடலுட
னுழியுந்துன்பம்
மலத்தகு சீரடிக்கே யன்பனுக்
கன்பனென்றே
சொலத்தகாச் சைவனல்லான் துயர்நெடு
நாளுந்துய்க்கும் 15

965 கூற்றுயிர் குடித்தசெம்பொற் குரைகழற்
கன்புசெய்யாது
ஏற்றசை வத்தினில ரழிகுவ
ரெரிவாய்க்கும்
ஆற்றரு மிடும்பையுய்க்கு மருநிரை
யத்திலம்ம
சாற்றிடிற் கணிதமின்றென் றுரைப்பவத்
தனையென்றுழ்ந்தே. 16

மாயன் சிவபூசை மான்மிய முரைத்த வத்தியாயம்

முற்றும்.

சிவபத்தர் மகிமை கூறிய வத்தியாயம்,

966 ஆடக மணித்தகட் டுடுத்தனைய கஞ்சத்
தோடவிழ் பொகுட்டிலுறை தூமொழி மனாள
நாடக நடிக்குமிறை நல்லருள் சுரக்கும்
சேடருயர் சைவரெவ ரென்னவரி செப்பும்

967 அந்தணர் மணிக்குவ டணைத்தபுய மன்னர்
சுந்தர வணிக்கருயர் சூத்திரர்க ளாதி
நிந்தைபுரி நீசர்முடி வாகநிலன் மீதே
எந்தைபதத் தனரேனை சைவரவ ரென்பார் 2

968 முப்பவ மருந்தவ முயற்றிய திறத்தால்
இப்புவி வழுத்தவுயர் சைவரவ ரென்ப
தப்புற் றிவர்ந்துசிவ பத்தியது தாழ்வரது
எப்படியு முயர்வர்மதி மான்களிவ ணென்றான் 3

969 என்னைமதி சூடியரு ளெய்துசிவ பத்தி
முன்னியுரை செய்கென முரட்கிரி குழைத்தோன்
கன்னியம தன்றியஃதன நியம தய்ய
பன்னரிய முத்தியுள பாக்கிய மளிக்கும் 4

970 கேட்டிமறை யோய்பொது வினிக்கியருள் கிட்டும்
நாட்டுசிவ பத்தி நழுவப்பொரு ளளித்தே
ஈட்டுபரி மேதநர மேதமுதலி யாகம்
வேட்டபய னின்றுபல கூறியெவன் மெய்யே 5

971 கோதின்மறை கூறுமக தேவருள் கொழிக்கும்
ஓதுமுன் னுரைத்தசிவ பத்தியுண ரார்க்குமிலச்
சாதக மறைப்பொரு டெரிந்தவர்க டம்பால்
மாதன மளித்தடையனும் மருவி டானல் 6

---

971 வீடானலலோ

972 விடைக்குலவு கின்றமக தேவருள் விளக்கு
முடைப்பரும னநியமென பத்தியுள மில்லான்
மடைக்கட னிகர்த்தொழுகு பான்மடைய நல்லான்
கொடைக்கட னிறுத்தபய னேதடைவர் கூறில் 7

973 மத்தமலர் சூடுமக தேவருள் வளர்க்கும்
சித்தமுன் னுரைத்தசிவ பத்திதெரி யாற்குன்
நித்தமும் வயனி டளவிற் ருனம்
வித்தமொ டளித்தபய னின்றுமலர் மேலோய் 8

974 விம்முமுலை பாகன்மக தேவருள் வினைக்கும்
செம்மையுள மாயபொது நிற்குசிவ பத்தி
உண்மையில னுகநிதி யோடுமட நல்லார்
அம்மவரு டானமஃ தின்றுபய னந்தோ 9

975 வாலமதி சூடுமக தேவருள் வளர்க்கும்
சீலமுன் னுரைத்தசிவ பத்திதெரி யாதோன்
சாலியன மாறுசுவை யோடுதரை மீதே
கோலியிடு தானமெவ னுகுமிது கூறில் 10

976 மங்கையுமை பாகன்மக தேவருள் வளர்க்கும்
தங்குபொது நீரமறை காற்றுசிவ பத்தி
பொங்குத லிலா நதிகள் போய்முழுகி யென்னும்
பங்கமற நோற்ற தவமும் பயனிலாதே 11

977 ஆருமக தேவனு மென்னையரு ளாளச்
சாருமுன மாரவிப காரசிவ பத்தி
யோருமுண ராதவ னுஞற்றுதரு மங்கள்
தேருமறை யோயுதவி செய்யநினை யாதே 12

978 எந்தையென தாவிமக தேவருளை யீயும்
சிந்தையுறு தேவர் பொதுசிவ பத்தி
வந்தவ னலான்வெகுளி வாக்குமுத லாய
இந்திய மடக்கியுறு மெத்தவமு மென்னும் 13

979 என்றமது பில்குகனி வேய்ங்குழலி னிசைத்துக்
கன்றுகுணி லாகவிள வின்கனி கடிந்தோன்
மன்றன்மறை யோன்றெளிய வண்பவழம் விண்டான்
நன்றடி பணிந்தயனு மன்பொடுரை செய்வான் 14

980 எல்லையில் பயன்பெறுவ ரின்னபல தானம்
தொல்லைமறை யின்படி தொடுத்தவர்க ளன்றே
இல்லையென லையமெ னீசனரு ளின்றேல்
நெல்லுவர நிலத்திடை விதைத்துபய னேரும் 15

981 வில்வம தொன்றுவிதி யின்படி விழைந்தே
அல்லுறழ் களத்த னடித்துணையி லிட்டால்
எல்லையி லாதன மெய்துமெளி தாக
மல்லலுல கின்கணென வுன்னுமதி வல்லோய் 16

வேறு

982 குஞ்சித நடநவில் குழகற் கன்பன்
அஞ்செழுத் தொருமுறை யகங்கு ழைந்தெழு
நெஞ்சகத் தெண்ணு வானிதியோ டெண்ணிலா
வெஞ்சனல கூறலைய னெய்து மென்பவே 17

983 நலந்தரு வடிவுமை நாதன் றன்னடி
உவந்தொரு கணப்பொழு தேனு முன்னுவன்
பவந்தரு பொறியெலா மடக்கிப் பன்னரும்
தவம்பல வியற்றிய சதுர னென்பவே 18

984 ஒழுகுபொன் சுடர்விரித் துயரு மேருவின்
விழுதுவிட் டெனப்பொலி வேணியான் றனைத்
தொழுதுவெண் ணீறுமெய்த் தூளனஞ் செய்குவான்
பழுதக லறனெலா பயின்று ளானவன் 19

985 எக்குலத் துதித்தவ னெனினு மெந்தையை
நக்கனை யரிச்சனை யந்தி யற்றியான்
தக்கவன் புண்ணியன் றவத்துக் கோர்புகல்
மிக்க வனெனக் கூறும் வேதமே 20

986 பற்குனற் கருள்செயும் பாண்ட ரங்கனைப்
பொற்கழ லரிச்சனைப் புரிந்திட் டாலவன்
நற்குலத் துத்தம னவிற்று மாங்கவன்
சொற்கலை தெரிந்தவன் சுகுண னென்பவே 21

987 யா நலங் கடந்தமென் கிளவி பங்கனை
யானென தொழித்தரிச் சனையி ழைத்தவன்
மானவன் யோகிமற் றுளவில் வண்சுடர்த்
தானவ னேயருஞ் சமாதி பெற்றவன் 22

988 அளக்கருஞ் சுடர்விரித் தகண்ட பூரணம்
துளக்கருஞ் சோதியின் றூய சேவடி
திளைத்தெழு மரிச்சனை செய்திட்டா னெலாம்
உளக்கணிற் றெரிந்தவ னுயருஞ் சுத்தனே 23

989 முத்துற மூலாள் தழுவு முக்கணன்
சித்துரு வடித்தலஞ் சிற்படிச் செய்வனேல்
தத்துவ முணர்ந்தவன் சகலநன் றிக்கும்
வித்தவ னேயறன் விளைத்த நீதிமான் 24

990 அழிவுறு நிதிக்கட லழுவத் துற்றகோன்
விழியிமை யார்தொழும் வேந்தன் கண்ணுதல்
கெழுதரு பத்திவந் தெய்தும் யார்க்கெனில்
கொழுதிவா யளிமுரல் கஞ்ச! கூறுகேன் 25

991 உதித்தெழு சனனங்கள் தோறு முள்ளொளி
விதிர்ப்புறு பருதிவெண் மதியை யொவ்வார்க்
கதித்தடர் பொழுதுநற் கனக கோடிகள்
மதித்தசற் பாத்திரம் மகிழ்ந்திட் டாருக்கும் 26

992 வேள்விகள் பற்பல வேட்டும் நற்றவம்
ஆள்வினை யுடைமையி னயர்ந்து முன்னரும்
கோளகற் றிடுநதி குளித்து மும்மலக்
காள துளர்ந்தநற் கதியி னேருக்கும் 27

993 மாதொரு பாகத்து மகிழ்ந்த புண்ணியன்
நீதகல் சேவடிக் கன்பு செய்திடும்
மேதக வடையுமென் றுரைத்து விம்மினன்
போதகத் துக்கருள் பூந்துழா யினன் 28

994 என்றய னுவப்புற வெழிலி மேனியான்
குன்றவில் குனித்தறங் குடந்தை மேவியே
துன்றிய தவத்தினன் சொற்றிடா னென
மன்றன்மெல் லோதிக்கு வாய்ம லர்ந்தனன் 29

சிவபத்தர் மகிமை கூறிய சருக்கம்

முற்றும்

சிவயோகியைக் கண்ட வத்தியாயம்

995 முன்னைஞான் றின்சுவை யமுழ்து மொண்டுவார்த்(து)
அன்னதோர் சிவமறை யறைவன் கேட்டியால்
என்னையா ளுடையவ னடிய ரெய்திடு
நன்னய மெனவரி நவிற்றி னரோ. 1

996 பொய்த்தவக் களைகடிந் தகிலம் போற்றுசீர்
மெய்த்தவப் பயிர்க்கொரு வேலி யாய்வினை
எய்த்தவர்க் கின்பவி டளைய தேதமே
கைத்தது தூய்மையாற் கயிலை யொப்பது. 2

997 மதியணி சடைமுடி வள்ள லின்னருள்
குதிகொளுஞ் சலநிதிக் கொப்பு ளொப்புறத்
துதிபெறு வளனெலாந் துன்று தென்றிசைப்
பொதியிலென் றெருகிரி புகழின் மிக்கதால் 3

998 முளையுகு தாள் முளரி யானையின்
கிளைபடு தருதரள முங்கிடந் திலங்கவே
வளைகட லுலகெலாம் வளர்ந்த தன்புகழ்
விளை தரு முகிழென நிலா விரிக்குமே. 4

999 கிளக்குறு முரகநன் மணியின் கேழொளி
வளர்க்குமெய்த் தவத்தி னுற்சிவம் வழுத்துவோர்
திளைக்குநன் முத்தியின் திருமணமுயங் குமண்டபச்
சித்திர மொக்கு மக்கிரியின் செல்வமே. 5

1000 சுடர்விடு சிரமணி யோடு துன்னுவ
விடமுதமே யிரல்தரா மெய்த்த வத்தினோர்
இடனுறு வேள்வி கட்கெரி கொணர்ந்தெனத்
தடவரை யிடனெலாந் தழைந்து மல்குமே 6

1001 அறைபடு பளிங்கினிற் றலமு மண்ணிய
நறைகமழ் வாரி .... று தண்ணிய
முறைசொல விந்திரன் முதலி னோர்வரை
செறிதரு வார்க்கெலாந் தெரிய கிற்றிலர் 7

1002 வாளுகி ருளையரி மானும் யானையும்
கோளறு பகையறக் கூடி வாழ்வன
தாளுற ——— - சுகி முனிவர் தங்களின்
சோளறு மறைவிதி கேட்க வேகொலாம் 8

1003 பாகமு டயருமக் கிரியின் மாதவர்
ஓகையும் பகைமையு மொழிந்தி ருப்பின்று
ஆகம மொழியெடுத் தறையக் கேட்டவோ
நாகமுந் தோகையு நன்கி ருப்பவே 9

1004 சிலமுங் கல்வியுந் திருந்து மக்கிரி
மூலமு நாப்பணு முளைத்த தாருவின்
சாலமு முனிவரிற் றழைத்துக் கூறிய
காலமு மின்றியே கனியுங் காட்சியால் 10

1005 நாவிய லிசைய முத்தமிழ் நாடொறும்
பூவைகள் தத்தையோ டறையப் பொற்கிரி
தாவிய மந்திகள் தலைய சைப்பவான்
காவிய தருக்களுங் கனியு மென்பவே 11

1006 ஆலமுந் தமாலமு மகிலுஞ் சந்தமும்
ஏலமுஞ் சூதமு மிருப்பை யாசினிச்
சாலமுங் கதலியுங் கோங்கு சாதியும்
மேலெழுந் திருவிசும் புக்கு மேவுமே 12

1007 கமழ்நறு மலர்மணங் கரைந்த தென்றலும்
உமிழ்திரைக் கடலெலா முண்டு மிழ்ந்தவன்
அமிழ்தெடுத் திக்கரை யளித்த னன்முத்
தமிழென வுலகெலாந் தான்ம ணக்குமே 13

1008 இன்னபல வளங்களுக் கெல்லை யாகிய
பொன்னவிழ் தாழ்வரைப் பொதியி னுட்பனின்
துன்னரும் வீட்டின்ப முருக்கொண் டாலென
சொன்னவ ராமாச் சிரம மொன்றுள 14

1009 வேதமே தருக்க ளாய்விடல் லாகமங்
கோதறு மூலவையாய்க் குழைக ளங்கமாய்ப்
போதமே பூக்களாய்ப் பொலியு மானந்த
மேதகு கனிகளாய் விளங்குமற்றது 15

1010 அரியநல் லமுழ்து தானதாண்ட தன்னமா
வரியளி முரலமாங் கனிகள் தூங்குமல்
பொருவரு ஞானத்தின் சுடர் பொடித்தன
எரிமணி வயினவையி னல்கு மென்பவே 16

1011 கோழரை யரம்பையின் கனியுங் கோதில்தென்
வீழ்சுளை வருக்கையிற் கனியு மேம்பழுத்து
ஆழ்சுவை வேரியு மிமிழ்துங் கைத்துள
ஊழ்முறை யுடைத்த தான முத்தமே 17

1012 அந்தவாச் சிரமத்துக் கரச னச்சுடர்
விந்துவிற் சிவனென விளங்கு மெய்யினன்
கந்தவே ளின்னருட் கருணை பாயுநீர்ப்
புந்தியாஞ் செறுவினன் புகழும் புண்ணியன் 18

1013 மூக்குறும் பெறிந்து முக்குணங் கடிந்தெதிர்
இக்வே ளரைசழித் தேதம்வே ரறுத்து
உக்கவெவ் வினைக்கட லெற்றித் தூநெறி
மிக்கவன் சிவனருள் முளைக்கும் வித்தகன் 19

1014 தண்ணிலா வரும்ப நீரொடுந் தாழ்சடை
அண்ணல்சே வடிநினைந் தூற்று மன்புநீர்க்
கண்ணின னனந்தக் கடலனன் கமலைப்
பெண்ணலங் கவர்ந்திடும் பிரம ஞேயனன் 20

1015 உருத்திர வச...... கபாலிகையி னுள்ளொளி
விரித்தெனப் பூசுவெண் ணீற்று மேனியான்
தெரித்துமுப் பொருளெனத் திருந்து வெற்றியின்
தரித்தமுப் புண்டரன் றழைத்த வேணியான் 21

1016 முடங்கிய முரிதிரைக் கடல்கண் முற்றுமோர்
குடங்கை யாசமனமா விந்த மடங்கியோர்
பிலத்துறப் பணித்த மாதவன்முள ரியிற்குறுகும்
வண்டென வடங்குற நோக்கினுன் 22

1017 முருந்துற ழிள நகை தழுவு முக்கணுன்
வருந்தி... நமக்குநீ மானு மென்னப்போய்
இருந்தவன் பொதியவெற் பிடரில் சிந்தையான்
அருந்தவக் கொடிக்கொரு வேர்கொளு கொம்பனுன் 23

வேறு

1018 தெண்டிரைக் கரமாக் கூலவான் சாணேச்
செழுமணக் குறள்தரைத் தலரும்
கொண்டகங் குளிர்ந்து சீரடுங் குருகாபுகையாக்
குலமணித் தீபமாக் குலவா
அண்டர்நா யகருக் கன்பாற் பெருகு
மன்புபோற் காவிரி யாற்ருேர்
குண்டிகை யடக்கு முனிவரன் றலங்கள்
கும்பிடுக விருப்போகு 24

1019 கோடறத் தலரி நறவுவாய் மடுத்து
குயட்டிய வொளிகள் கோகனகத்
தோடவிழ்முத் தெழுந்து வைகலிற் குவளைத்
தூநறு வுண்டுமேற் சுழல்வ

1016– எதுகைசரியில்லே; இறுதியடி முச்சீர்

ஆடமைப் பசுந்தோண் மடநலா ரனேகருங்
கடிம ணம்புணர்ந் துழலும்
சேடரிற் பொலியும் பொங்கர்சூழ் கிடந்து
திருந்திய கோகனசஞ் சேர்ந்தான் 25

1020 நெட்டிலைச் சூல பாணிபொற் கழனேர்
பணிந்தெழுந் துநெஞ்சு ருக்கும்
சிட்டனுங் கும்ப முனிவரன் பாசத்
திருக்கறுத் துயர்சிவ பூசை
உட்டெளிந் தியற்று புவனிமேல் வழிந்த
தொப்பவெண் ணீற்றுெளி
சட்டகத் தவத்துச் சிவவிர தியனைக்
கண்டனன் கைகூப்பினன் தடக்கை 26

1021 செப்புநால் வேதக் குழவிதான் றவழ்ந்து
திருத்துசே .... ன்னை
இப்பொழு தெதிர்ந்த காட்சிமற் றெந்தை
யீசனைக் கண்ணுற லேய்க்கும்
ஒப்பெனக் கியாரென் றுவகை யூற்றெடுப்
பமுறை த்தனன் னுலா
வைப்பெனப் பொதியத் தினித்தமுத் தமிழை
மன்பதைக் கமிழ்தென வளித்தான் 27

1022 அம்முனித் தவனு மிம்மொழி (யமு)தங்
குழைந்தெ ழுந்துவேர் பறிந்து
பொம்மெனப் படிந்த தாருவிற் படிந்து
புளகமிக் குயர்சிவ யோகி
.... முழுதுருக்கித் தரும .... னமும்விரைந்
தளித்த ருக்கிய முதவி
...மனக் கொடுத்துச் சூழ்ந்து முக்காலு
மிறைஞ்சிநின் றிவையிவை யிசைக்கும்
28

1023 மாதவ விவணீ போதரப் புரிந்த
மறுவறு தவப்ப யனென்?
கோதுதீ தகன்றி ழைத்தவ ரிச்சனைக்
குவந்து சிவனருளு தவியதென் ?
கோதவமியற்று மென்குலத்து முந்தையோரி யற்று
மொள்ளிய வறன்கொலென் றுரைக்கோ
ஆதுல னௌியேற்குன் றெரிசனம் வந்தடுத்த
தெவ்வண் ணமென வறியேன் 29

1024 ஐயநிற் காட்சிக் குடையவின் ஞுணமற்றவர்
கதிர்ப்பருதி மண்டி லத்தைத்
துய்யநற் பாந்தள் தீண்டிய கால
மன்றியுஞ் சொல்லிய ....
செய்யுநற் கால மாகுமாச் சிரமந்
திவ்விய முற்ற துவென்று
உய்யு மென்றனக் கென்றுரைத் தனனென்
றுயர்கு டந்தை நண்ணினேன் 30

சிவயோகியைக் கண்ட வத்தியாயம்

முற்றும்

சிவபூசை விதி கூறிய வத்தியாயம்.

1025 பின்னுமம் முனிவன் புரிந்ததே தென்னிற்
பெருந்தவக் குறுமு னிவனை
நன்னயப் புடனே தென்புலத் தவரா
யவதரித் துங் தூர் .... டிப்
பன்ளிய பூசை புரிந்தடி பணிந்து
பகருமே லாயநல் லறங்கள்
சொன்னயந் தென்ன மதுரவா சகத்தால்
தூ நரு வார்த்ததே (யென்ன) 1

1026 அந்தணர் தமக்க ணியநற் கன்பா
யருமறைப் பொருளவாம் பறிந்த
முந்தையோய் குணக்குன் றன்னநின் றனக்
கென்குவ ... ...
எந்தைமுன் னுரைத்த வாகமத் தியங்குஞ்
சைவருக் கியம்புநல் விதியை
சிந்தையி லழுத்தி யாதரத் தொடுஞ்செ
விப்புல (ங்கொளுமா று) செப்பு 2

1027 வைகறை யாமத் துயிலொரீ இத்தவர்
வளரொளிப் படிகவெற் போர்பான்
மொய்கதிர்ப் படலை மரகதக் கொழுந்து
... ... பான்மொழிக் குயிராய்ச்
செய்கலா தானைப் புனைந்தசே கரன்றன்
சேவடி சென்னியிற் சேர்த்தி
நையக லாதிதெழுந்து வினைப்புற (ப்படத்த)டித்து
நற்சிவ தீர்த்தநீர் படிந்து 3

1028 பானிறத் தறுசுவை புனைந்துவெண் ணீறு
பரனருண் மொழிந்தது கடுப்ப
மேனிமுற் றணிந்து மனுவெ ளனி
விரிதிரி புண்டர மணிந்து

ஞானமுற் றக்க மணிபுனை ந் துரைத்த
நான்மறைச் சந்திக ணையந்து
மோனமுறத் தொழுதுஞ் சித்திரத் தடமுக்
கனுறு —— முன்னி 4

1029 அருமறைக் காயத் திரியுரைத் தன்பொடுங்
கூவிளை முதலயாவையும்
தருமுப கரணப் பொருளொடுங் கயிலைச்
சாயிதன் ருளிரிச் சித்துப்
பெருகுமஞ் செழுத்துங் குடிலையோ டெண்ணிப்
பேசுசி ருருத்திரஞ் செபித்து
மருமலர்க் கழல்க ளிறைஞ்சிமுக் காலும்
.... புரிந்தன்பொடும் வாழ்த்தி 5

1030 மூளுமா பூசைப் பயன்புனலொடு முதல்வனுக்
களிக்க வென்று ரைத்தான்
கோளிலா யோகிக் கக்கதி .. னன்
கூறினுன் கோற்றெடி மடவார்
ஆளின்மேற் பாயும் வாடக னேபோல
வம்புயக் கானகத் தேரழுந்து
வாளைபாய்ந் துழக்குங் கழனிசூழ் ... ...
வயங்கிய குடந்தையின் மாயன் 6

சிவபூசை விதி கூறிய வத்தியாயம்

முற்றும்

1030- பூளுமர்பூசை—என்று காணப்பெறுகிறது

பிரதக்கண விதி கூறிய வத்தியாயம்,

1031 பணிந்தெழுந் துருகுஞ் சிவவிர தியனும்
பரமனைப் பணியும் நல்விதியும்
தணிந்துசெ லலலுமே ...... புரிதல்
சாற்றெனப் பொதியமா தவத்தோன்
திணிந்தபுன் சடைக்காட் டாற்றுநீர் பாயச்
செழுமுளை முளைத்தெனப் பிறையை
அணிந்த .... புண்ணியப் பொருப்பாய்
முகத்தி ருக்கும்வெள் விடைக்கும் 1

1032 நாப்பணிற் பணிந்த படாமுக முரிஞ்ச
நற்கர முகிழ்ப்பவாய் வழுத்த
பாப்பணி கழற்கால் பணிகுவான் சிரந்தோன்
பகட்டெழின் மார்புசா னுசுகன்
காப்புறு கன்ன மிரண்டுட னெட்டாய்க்
கழறுவர் தண்டெ னப்பணிக்
கோப்பணி சத்த னிருபதோ டொன்று
குறைந்தவன் பஃதிறென் றெட்டாம் 2

1033 சாற்றுமிப் பணியிற் குறைந்திட லாத
தருக்கினு லிருந்தவன் றன்சருகு
மாற்றிடும் பிரேதஞ் சத்திய மிஃதும்
வாய்மையே சுருதியும் வழுத்தும்
ஏற்றமாய் வலன்கொள் விதியெவ னென்னி
லிரண்டுள வலமிட மென்னப்
போற்றுவர் சோம சூத்திரப் பெயராற்
மற்றென் றுநல் வலமே 3

1032 முதலடியில் படாங்முமுரிஞ்ச என்று காணப்பெறுகிறது.

1034 சோமசூத் திரத்தின் விதிவிடை முன்பு
தொழுது சண்டனைப் பரசி
வாமமாய்ப் பின்னும் விடையுழிச் சென்று
வலன்கொடு கோமுகை வழுத்திச்
சேமமாத் தியம்பி விடையினை வணங்கித்
திரிந்துபின் சண்டனைக் கும்பிட்டு
ஏமமாய்ச் சோம சூத்திரஞ் சண்ட
னிடபமுற் றிறைஞ்சிடல் வேண்டும் 4

1035 இப்படி யொன்பான் றிறமுறி லொன்று
மேற்றிசை தொடங்கியென் றுரைத்தல்
மைப்படி கண்டன் விடையினை நோக்கி
மகிழ்குண திசையினைத் தொடங்கித்
தப்புறல் தவிர்ந்து வலன்வரல் வேண்டுஞ்
சாற்றிய பச்சிம முகத்துக்கு
ஒப்பினும் விடையைத் தொடங்கியே புரிக
வுறைகுவானிரு தியிறுதியிற் சண்டன் 5

1036 குணதிசை யிலிங்க முற்றுவீ சானங்
குலவுழி யிருப்பர்சண் டேசன்
மணமலி சோம சூத்திரம்வடக்கு வைகியேபச்சிம
முகத்துக் கிளையறு சோமசூத்திரம்
குணக்கி லிருக்கு மற்றிஃ தரலில்லை ......
....
பணிவொடு பிடனுமவ் வலனுமாய்ச் சூழில்
பாவுமொன் பானெனப் பகரும் 6

1037 இவ்விதி சுருதி வாக்கிய மென்க
விருபிறப் பாளனே புரிக
உய்வகை யந்திக் காலமுஞ் சூழ்க
வுரைத்திடில் வைகலு மாகும்

செவ்வியன் புரிக வசத்தானே யாகிற்
செழும்பிர தோடத்திற் செய்வான்
நவ்வியங் கரத்த னுலயஞ் சூழ்க
நவையுறிற் பாபமே நணுகும் 7

1038 வலன்வரிற் சோம சூத்திர மூன்றும்
வரலெனச் சொற்றனர் ....
இலகிய வலனும் சூழ்ந்திடிற் காலை
யிறையரிச் சனைமுடித் தெழுந்து
குலவுமீ ரைந்து நடுப்பகற் சூழிற்
குணிப்ப ரிராரென வந்திப்
புலனுறப் பதினொன் றியற்றுக மறையோர்
புகரறச் சூழ்ந்திடல் வேண்டும் 8

1039 ஈசனை யுன்னிக் கரமலர், முகிழ்ப்ப
விணையடி தொடர்புற மோனத்து
ஆசையா லவன்செய் யோரடிக் கெய்து
மறுமுறை விதிப்படி யிழைக்கும்
வாசபேய்ப் போவென வியன்பயன்க ளெனமறை
வகுத்தன வன்றிப்
பேசுசா பால வுபநிட த்திலுமென்
றுரைத்தனர் பெருந்தவத் தலைவர் 9

1040 ஆர்செய வேண்டு மென்னில் வெண்ணீற்றை
யன்பி லுத்தூளம் புனைந்து
சீர்பெறு மவனே வலன்செய வருக
வல்லனேற் செய்திட லாகா
ஏர்பெறு கருப்ப கிரகமுன் னந்தி
யிருக்கிலுட் சூழ்வர வியப்பாம்
தீர்பெறு சோம சூத்திரங் கடந்தா
னிரையத்தி லளப்பிலநாள் நிலைக்கும் 10

1041 இவ்வண்ணங் கும்பமுனிவரன் வை ...... சிவயோகிக்
கிசைத்தன னென்க கயலிரண்டு
செய்வண்ணக் கமலத்துக் கண்டன்ன விழிக்குஞ்
சேயிழை மடந்தைபங் கிருப்ப
கைவ...... னவரல் விதியே தாழு
... . தாழுநீள் சடையான் 11

பிரதக்கண விதி கூறிய வத்தியாயம்

முற்றும்

1041- இப்பாடல் மூன்றடியர்க ளிருக்கின்றது

பூசைக் குபகரணங் கூறிய வத்தியாயம்

வேறு

1042 முக்குறும் பெறிந்து நோற்ற முதுக்குறை
முனிவ கேண்மோ
இக்குவே ளுடலம் வேவ வெரியழல்
பறக்குங் கண்ணன்
தக்க பூசனைக்கு வேண்டுஞ் சாதன
மிவைக ளென்ன
மிக்கரு ளுருக்கொண் டாங்குக் குறுமுனி
விளம்ப லுற்றான் 1

1043 அரிச்சனை புரிய நோக்குந் திசைகுணக்
காகு மம்பொன்
பரித்தவன் வடக்கு மாகும் பச்சிமந்
தானு மாகும்
உரைக்கிலோர் காலு மாகா தெனுதுகா
ணுடையோன் பூசை
தரித்தவன் றனையு மாகாத் தறுகணன்
றனையுஞ் சொல்க 2

1044 தெண்டிரைக் கடலந் தானை யகவையிற்
றிருவில் வீசும்
குண்டல மிலங்கு மென்றேட் கவுரிதன்
கொழுநன் றானே
கண்டுள முவகை பூத்துக் கருதுவீட்
டின்ப நல்கும்
ஒண்டவன் றானே பூசைக் குரித்தென
வுரைக்கு மன்றே 3

1045 வெண்ணிலா விரிக்கு நீற்றை மெய்முழு
தணிந்து சென்னி
அன்னமல்முப் புண்ட ரத்தோ டக்கு
மணிந்தா னியாவன்
நன்றுமர்ச் சனைகள் செய்வா னல்லனே
னவையிற் றிந்த
மண்ணெலா மெள்ளு மன்னேன் வழிபட
லாகா வாய்மை 4

1046 வள்ளல்வாய்க் கமலப் போதில் வாள்கிடந்
தனைய வுண்கண்
கள்ளவிழ் கூந்த லாள்தன் கணவனைப்
பூசை செய்வான்
தெள்ளுநீர் வடித்துக் கந்தஞ் செழுமலர்
விரைகள் சேர்த்தி
உள்ளகங் குளிர நாளு மொண்சதா
சிவத்தை யுன்னி 5

1047 நறுமணங் கமழுங் கொன்றை நாண்மலர்
வேணி மீது
மறுவில்சீ ருருத்தி ரத்தால் வண்புன
லாட. (லன்) பால்
உறுபொரு ளவையு மாட்டி யுகந்துதேங்
கலவை யாட்டி
பெறுநல வெண்டுசு தன்னூற் பிதிர்புனல்
மாற்றிப் பின்னர் 6

1048 பால் (பர) ந் தனையதூசு பிரித்திரண்
டுவந்து சார்த்தி
நூல்புரிந் திரண்டு முந்நா னுண்மணி
தோளிற் சார்த்திக்
சால்புரிந் தனைய நீறு வடித்தொளி
தயங்கச் சார்த்தி
சூல்புரிந் தெழுந்த கொண்டல் மிடற்றனைத்
தொழுது போற்றி 7

1049 மெல்லிய குழைந்து தூய்மை மேவிய
கிருமி தீண்டாப்
பல்லவம் (பறித் தெடு)த்துப் பழுதுரு
நவமதி .... ய
வில்வநற் கிளையி ரத்தின மாமெ
னவிழைந் தெடுத்துச்
செல்வமென் றுன்னி யையன் சேவடித்
தலத்திற் சார்த்தி 8

1050 அரிய தின்னண மென்றுலு மன்புட
னெருநல் கொண்டது
உரியது மாகு மின்றேற் கிருமியுண்
டதுவு மாகும்
புரைபெறு பசலை யேனும் புகலுமெவ்
வியல்பிற் றேன்றும்
சருகிலை யெனினும் வில்வப் பொடியதுஞ்
சாத்த லாமே 9

1051 எவனிவ னுரைப்ப தென்னி லீசனுக்
கிஃதொப் பாகும்
புவனியி லொன்று மில்லை வில்வத்தாற்
பூசை சாங்கம்
புவனம் மகிழ் வில்வ மின்றேற் பயனின்று
பூசை யம்ம
தவநனி தூப மாதி சாங்கபூ
சனைசெய் வார்க்கே 10

1052 சோடச வுதவியின்றேற் றுணைபெறு ....
.... சேர்த்தில்
தோடரு மன்பிற் செய்யுஞ் சாங்க
வர்ச்சனைக ளாகும்

மாடகத் திவவு நல்லியாழ் வடித்தன
மிழற்று மம்பொன்
பாடகக் காலினுள்தன் பாங்கானை
ம(ன்னி)னுற்கே. 11

1053 வத்திரம் பூணூல் கந்த மலர்கற்
றூப தீபம்
புத்தமு தனைய வன்னம் புலனடைக்
காயே யாதிபு
யத்தினி லானவில்வ மொவ்வொன் றுதவி
யொப்புக் கொள்வான்
கைத்தவெவ் விடமே யுண்டு களங்கனி
யனைய கண்டன் 12

1054 ஓடவைத் துலையிற் சேமித் துருக்கிய
வொளிகொள்
ஆடகத் தமைத்த வில்வ மஃது
மற்றது தம்மால்
ஏடவிப் புவனத் துள்ளே யெப்பொரு
ளிதற்கொப் பாகும்
நேடில்முக் காலத் துள்ளும் விது ......
.... 13

1055 ஆதிரை சோம நன்னு ளருள்விதி
பாதங் கூடி
மாதி பத்து நான்கும் வருதின
நிசியில் வில்வத்து
ஓதிமர்ச் சனைசெய் வானே லொருங்கும்
வெம்பிர மகத்தி
தீதகன் றுமையாள் கேள்வன் செம்பொனின்
ருளே சேர்வான் 14

1056 கூவிளங் குழைகொண் டம்பொற் குரைகழ
லரிசித்தான்
பாயமா விளவடி யுண்க ணுள்தன்
மணாளனை வழுத்தினோர்கள்
பூவி டையனெக் கொடிய கணிதம்
புகலும் புந்தி
மேவி விருத்தி மாவீட்டின்ப
மடைந்தா னம்மா 15

1057 அறைந்திரு நூலங் கங்கூடி னற்புத
மாகும்
நிறைந்தவவ் வற்புதங்க ளாயிர மாற்றி
நிமலன் றருளில்
உறைந்த பொனன்பி னுலே யொண்மலர்
சாத்தும் பேறு
பிறந்த கூவிள மொன்றீந்தாற் கோடிபங்
கதிக மாகும் 16

1058 கானிடை நட்ட மாடுங் கண்ணுதற்
கமலத் தாளின்
மானிடர் மாட ராசி வழங்குமர்ச்
சனையிற் கோடி
தானுவந் தளிக்கும் வில்வம தருகினை
யொன்று சாத்தில்
ஏனையர்ச் சனைகள் தானும் வில்வத்துக்
கிணையொப் பாமே 17

1059 சொல்வருஞ் சாலி ராசி தூமமென்
கூந்தற் செவ்வாய்
அல்லியம் பொருட்டின்மேய வணங்கருள்
பங்கன் றன்னை. 18

[மூலச்சுவடியில் இருபதாவது ஏடு இல்லாததால் பின்னிரண்டடி
எழுதப் பெறவில்லை]

பூசைக்கு உபகரணங் கூறிய வத்தியாயம்
முற்றும்.

[கீழ்வரும் பாடல்கள் எந்த வத்தியாத்தின் தொடர்ச்சி என்பதும் அத்தியாயத்தின் பெயரும் விளங்கவில்லை. ஆருவது பாடலிலிருந்து தொடங்கப் பெறுகிறது]

1060 உள்ளமுருகு முனிவர் ம(க)த்துதவு
மவியு முண்ணுமல்
துள்ளுங் கயற்கண்ணொரு குறத்தி துணைமென்
முலையினனை வேண்டித்
துள்ளுங் கயற்கண் ணீரமகள் மனமுஞ்
சுழல சுராதிபரும்
கள்வார் கூந்தலர மகளிருள்ளஞ் சுழலக்காளையெனத்
தெள்ளுமறையும் பின்ருெடரத் தேடும்
பொருளைச் சிந்திப்பாம் 6

வேறு.

1061 மழைநிறப் பசுந்துளப மாலயனுந் தவங்கோடி
தவம் வகுத்துங் காணுத
முழுமுதலைக் கிரிராச குமரியோர் மறைகளெல்லா
முழங்கத்தந்தை விழிகுளிர் களகற்றி
நதிப்புன லருந்தி வருந்தாமை கூர்த்து
விடைமேற் ருேன்ற வழுத்த
தழைத்த பசுங்குழவி தலையருட் காழிப்
பிள்ளை பதத்தன்பு செய்வாம் 7

வேறு

1062 யாவுக் குயர்மணி மார்பனும் வானோர்
களுமதிக்கச்
சேவுக்கு முனுயரும் மணிக்க தவங்கள்
திறக்கும்
யாவுக்குவ மிக்கும் பொருண்ம றையெனப்
பணித்த
நாவுக் கரசின் பாத நயந்தன்பொடு
பணிவாம் 8

1060- இதன் இறுதியில் சீர் மிகுதியாகக் காணப்பெறுகிறது.

வேறு

1066 உந்துநீ ராற்றி லிட்டுக் குளத்தெடுத்
தொடுநிரை யந்தரத் தேற்றி
மைந்த ருவியை முதலை வாயிற் றந்து நள்ளிருளிற்
றூதா தாணுவு மேகச் செய்து
செந்தமிழ்ப் பெருமை காட்டுஞ் செல்வனைச்
சிந்தை செய்வாம் 9

வேறு

1064 வாணிக்கு நாயகனும் வாக்கு மறை
யினொடு வானோர் தொழும்
பாணிக்க வறியாத பரஞ்சுடரினருட் கடலுட்
படிந்து மேய்ந்து
கோணிக்கு வேளுருவங் பொடித்த விழிக்கிரிமீது
கொழித்த செஞ்செல்
மாணிக்க மழை பொழியும் பசும்புயலினிருசரண
மதித்து வாழ்வாம் 10

1065 மறுவ .... ததி வ்சுவன் வயிராக்
கியத்திற்
செறுவிட்டுச் சீலவேலி யென்னுந்
தீநீர் பாய்த்து
உறுமுக் கடக்களியானந்த விளைவு
கண்ணேறு முத்தாறுபத்துக்
குறை செல்வத்தன்பர் குரைகழற்
றெடிமலர்க் கண்பூசைசெய்வாம். 11

வேறு

1066 சிந்தை செய்பவற் குடலெலாந்
தித்திக்கு மமுத
முந்தை யரணியத் திமிர்த்துக்
கரதப முக்கண்

1066- இது மூன்றடியாக வுள்ளது.

எந்தை யின்னருட் சரக்கறை
யென்ன முன்னிருக்கும்
தந்தி தேவனுக தேசிகர்க்
கோடி நளினம் 12

வேறு

1067 அவமொழித் தென்னுள்ளத் தமுத
முறுதீஞ்
சுவையெனத் தமிழ்வளஞ் சுரந்து
நல்குமே
தவமெனக் கமலையி லிருந்த
தேசிகன்
தவவணை வயித்திய நாதன்
ருள்கனே 13

1068 தவளை நிறம் படைத்தவரை
கோகனகக் கூத்தவனுமையாள்
கொழுந னெனுங் கவனிமத
களிற்றுடலந் தனதுருவாம்
சுருதியினுற .... டடிப் பாரிற்றுவளு
முயிருக்குடலெனச்
சொற் கூறும் வேறுபடச் சூழ்ந்து
நிற்கு வளமரை
பொகுட்டுறையுந் தையலிரு சரணமலர்த்
தலைமேற் கொள்வாம் 14

1067- அம்மொழித் ததென்னுளத்தமுத முறுதீஞ் சுவையெனத் தமிழ்வளஞ் சுரந்து நல்குமேகிவமெனக் கமலையிலிருந்த [தேசிகன்றன் தவ்வண ...... ததியக் கண்களே என்று காணப்பெறு கின்றது.

1068 இப்பாடலில் அடி வரையறை யில்லை

வேறு

1069 இழைமங்கை பாக ரிருந்தவ
னருளாற் பச்சைக்
கழைவளர் பெதியில் வைகுங் கடமுனி
வேத சாரம்
மொழிசிவ ரகசியத்தை மொழி பெயர்த்து
வளர்ந்தயன் றவறு
கொழிதமிழ்ச் செய்யுளாலே
காதலாற் கூறினனே 15

1070 கொண்டல் கண்டுயிலுஞ் சோலைக்
குடந்தையிற் பலருமேவத்
தண்டமிழ்ப் புலவர் வெற்றித்தாரை
வேற்றுரை மன்னன்
மண்டலம் புரக்குஞ் செங்கோன்
மனுநிகர் சகசிவாழ் நாள்
தொண்டை நாட்டரைச சொக்கன்
னரசவை சொற்றதன்றே 16

நூற்பெயர் முதனூர் பெயர் புனைந்தது
நுவலு மிந்நூல்
பாற்படு பொருளுஞ் சைவப் பாகுபா
டுணர்ந்து நோக்கல்
மேற்படு பொருளு முக்கண் வித்தகன்
சரிதம் வேட்கை
ஏற்பொடு கேட்போர் பெறு முத்தி
வீட்டின் பந்தானே 17

1072 ஆடகத் தகடு வேய்ந்தன் னபொற்
கொன்றை யோடும்
தோட ல ரெருக்கஞ் சூடுந் தொன்மையான்
சுருதி கூறும்
நாடகத் தண்ண லன்பர் குணலையு
நயக்கு நல்லோர்
பாடலோ டெளியன் புன்சொல் பாடலும்
பரிக்கு மன்றே 18

1073 வேளுடல் பொடித்த கொற்றக் கண்ணுதல்
விளம்பு நன்னூல்
தாளுழந் தரிதிற் கற்று ரவைக்களந்
தமிழ் நூல்கற்கு
நாளுநன் கறிந்திலாத ந ....னகில
கூறு மாற்றம்
கே .... கண்டு குறுநரி
குரைத்தல் போலும் 19

1074 ஏறியற்றுறைகள் விரவித் திளைத்தபுன்
கவிய தேனும்
வாரி நீருண்ணு மாவின் வடித்தகும்
பொருளைக் கொள்வர்
பூரியா மெதிபரன்ற (ன்) பொய்கையிற்
புகுந்த போலும் 20

1074 இப்பாடல் மூன்றே யடிகள் உள்ளன

வேறு

1075 நடந்த நான் மறையவர்
சுரபி நாகர்வான்
படர்ந்த சீர் மன்னவர் பலரும்
(வாழ்) கவே
மடந்தை கேள்வ னடியவர்
வாழ்க நம்
குடந்தையும் வாழ்க வாழ்க
குவலையங்களுமே 21

கும்பகோணப் புராணம்
முற்றும்

குற்றங் களைந்து குணம்பெய்து வாசித்தல்
கற்றறிந்த மாந்தர் கடன்.

அருஞ்சொற் பொருள்

அ

அக்கம்—உருத்திராக்கம்
அகடு—நடுஇடம்
அகண்டிதம்—விரிவு
அகந்தை - யான் எனது என்னும் செருக்கு
அகளம்—நிஷ்களம்
அங்கண்—அகன்றவிடம்
அங்கணம்—நீர்த்தாரை
அங்கணர்—சிவபெருமான்
அங்கி—நெருப்பு
அச்சுதன்—திருமால்
அசடர்—அறிவில்லாதவர்
அசும்பு—நீர்த்துளி
அஞ்செழுத்து—நமசிவாய
அஞர்—துன்பர்
அட்ட—சமைத்த
அட்டகம்—எட்டு
அட்டகாசம்—சிரிப்பு
அட்டித்தல்—தண்டித்தல்
அடவி—காடு
அடுவாள்—சமைக்கின்றவள்
அடைக்காய்—வெற்றிலை பாக்கு
அண்டர்—தேவர்
அண்ணல்—பெருமையிற் சிறந்தோன்
அணங்கு—தீண்டிவருத்தும் தெய்வப்பெண்

அ—தொடர்ச்சி

அணங்கு—இலக்குமி, திருமகள்
அத்தம்—அத்தநட்சத்திரம்
அதருவசிகை—அதர்வண வேதத்தின் கிளை
அதீதன்—அப்பாற்பட்டவன்
அந்தகன்—முடிவைச் செய்பவன் (நமன்)
அந்திமேனியன்—செம்மேனியன் (பரமசிவன்)
அப்பு—கங்கை
அபிமுகம்—எதிர்முகம் நோக்கியமுகம்
அம்பரம்—வானம்
அம்பு—தண்ணீர்
அம்புயத்தணங்கு—திருமகள்
அம்புயம்—தாமரை
அமர்க்களம்—போர்க்களம்
அமரபக்கம்—தேய்பிறை
அமலன்—மலமற்றவன் (சிவன்)
அமுதவசனம்—அமுதம் போன்ற பேச்சி
அயர்வு—அயற்சி, சோம்பல்
அயனம்—தெற்கிலும் வடக்கிலும் சூரியன் செல்லல்
அயிற்படை—வேலாயுதம்
அயின்று—குடித்து

அ—தொடர்ச்சி

அரணியம்—காடு, கட்டை
அரந்தை—துன்பம்
அரா—பாம்பு
அரவணையோன்—திருமால்
அரி—திருமால், சிங்கம்
அருக்கியம்—கை கழுவ நீர் தருதல், கால்கழுவ நீர் தருவல் முதலிய
அருட்கதி—நல்லகதி
அருளாழி—கருணைக்கடல்
அல்லி—அகவிதழ்
அல்லியம் அணங்கு—திருமகள்
அலம்வரும்—கவலை
அலர்—மலர்
அலரி—ஒருவகைப்பூ
அருச்சுனம்—மருதமரம்
அவ்வியம்—பொறாமை
அழல்தீர்த்தம்—அக்கினி தீர்த்தம்
அழன்று—சீறி, சினந்து
அள்ளிலை—நெருங்கிய இலை
அளகை—குபேரனுலகம்
அளி—அருள்
அளிக்கும்—காப்பாற்றும்
அறவோர்—துறந்தோர்
அறிதி—அறிவாய்
அறுசுவை—உறைப்பு, புளிப்பு, இனிப்பு கசப்பு, துவர்ப்பு, உவர்ப்பு

அ—தொடர்ச்சி

அனகம்—குற்றமற்றவன், தன்மை
அனுகதர்—வாராதவர்
அனீகம்—படைகள்

ஆ

ஆக்கினேயம்—ஒரு புராணத்தின் பெயர்
ஆசமனம்—நீர்பருகுதல்
ஆசினி—ஆசினிப்பலர
ஆசு—குற்றம்
ஆடகம்—பொன்
ஆடி—முழுகி
ஆடி—கண்ணுடி
ஆணவம்—மும்மலங்களுளொன்று
ஆதபம்—வெப்பம்
ஆதம்—அன்பு
ஆதுலர்—பற்றுக்கோடில்லாதவர்
ஆப்புண்டு—கட்டுப்பட்டு
ஆடகன்—இரணியன்
ஆர்கலி—கடல்
ஆர்ப்பு—ஆரவாரம்
ஆரமுது—நிறைந்தவமுது
ஆரியை—உமையம்மை
ஆலம்—நஞ்சு
ஆவினுழிநெய்—பசுநெய் கால்படி
ஆழி—சக்கரம், கடல்
ஆள்வினை—முயற்சி

ஆ — தொடர்ச்சி

ஆளி — சிங்கம்

ஆறிருது — கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில் முதுவேனில்

ஆறெழுத்து — நமக்குமாராய

ஆன்றமைந்து — நிறைந்து அமைந்து

ஆன்று — நிறைந்து

இ

இகந்து — கடந்து

இங்கிதம் — குறிப்பு

இட்டி — சுருங்கியவழி

இடும்பை — துன்பம்

இணர் — கொத்து

இதழி — கொன்றை

இந்தனம் — விறகு

இந்திரியநிக்கிரம் — பொறி புலன்கள்வழி மனத்தை விடாது தடுத்தல்

இந்து — சந்திரன்

இம்பர் — இவ்வுலகம்

இமவதி — இமவான்புதல்வி

இமையோர் — தேவர்

இயமம் — எண்வகை யோக உறுப்புக்கள் ஒன்று

இரதசத்தமி — தைமாதத்தில் சுக்கிலபட்சத்தில் சத்தமி திதியில் வருவது

இரண்டுநிதி — சங்கநிதி, பதுமநிதி

இ — தொடர்ச்சி

இரண்டுநீர்படிதல் — நீரில்முழுகுதல், திருநீற்றை யுத்தூளமாகப் பூசுதல்

இரணியகருப்பம் — பொன்னாற்செய்த பசுவின் வயிற்றில் புகுந்துவந்த அதனைத் தானங்கொடுப்பது.

இராசி — தொகுதி

இருக்கு — இருக்குவேதம்

இருந்துளை பூத்த — பெரிய துளைகள் மிகுதியாகவுடைய

